# சித்தர் வைத்திய ஆசான்

(வினா விடை)

578/179, 1/சித்.வை.ஆசான்,

சித்த வைத்திய ஆசான்
272 பக்கங்கள்

வித்துவான் R. கன்னியப்ப நாயக்கர்
26, முருகப்ப முதலி தெரு,
கிருஷ்ணாம்பேட்டை, சென்னை-5.

வெளியீட்டகம் :

சித்தர் ஆயுர்வேத யூனானி
குருகுல வித்யாலயம்
110, 111, டாக்டர் நடேசன் சாலை,
சென்னை-5.

# சித்தர் வைத்திய ஆசான்

(வினாவிடை)

ஆசிரியர் :

டாக்டர். **M. A.** கறீம் R. I. M. P.

*110, 111*. டாக்டர் நடேசன் சாலை

சென்னை-5.

பதிப்பாசிரியர் :

வித்துவான் **R.** கன்னியப்ப நாயக்கர்

26, முருகப்ப முதலி தெரு,

கிருஷ்ணாம்பேட்டை, சென்னை-5.

வெளியீட்டகம் :

**சித்தர் ஆயுர்வேத யூனானி**

**குருகுல வித்யாலயம்**

110, 111 டாக்டர் நடேசன் சாலை

சென்னை-5.

பதிப்புரிமை பெற்றது.

முதற் பதிப்பு 1970

விலை ரூ. 4-00

ஜீவோதயம் அச்சகம், சென்னை.

# முன்னுரை

சித்தர் வைத்திய ஆசான் என்னும் இந்நூல் பதினென்கு பகுதிகளையும் 362 வினவிடைகளையும் கொண்டு திகழ்கின்றது. பல வைத்திய நூல்களில் காணக்கூடிய வைத்தியச் செய்திகளும் மருந்து முறைகளும் இவ்வொரு நூலில் காணக் கிடைக்கும். தத்துவம், மருந்துச் சரக்குகளின் சுத்தி முறைகள், உடற் கூறுகள், நாடிகளைக் கொண்டு நோய் அறியும் முறைகள், நோய்களின் தன்மைகள், மருந்துக்குப் பயன்படும் கடைச் சரக்கு, மூலிகை இவற்றின் குணங்கள், நோய் அறியும் விதங்கள், பலவித மருந்துகள் செய்யும் முறைகள், முறிவுகள், இலகு வைத்தியம், பலவித விடம் தீர்க்கும் முறைகள் முதலியன இதில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆகவே இந்நூல் வைத்தியர்களுக்கும், வைத்தியம் கற்பவர்களுக்கும், வைத்தியத் தேர்வுக்குச் செல்லும் மாணவர்களுக்கும், குடும்ப வைத்தியமாகச் செய்து கொள்பவர்களுக்கும் பெரிதும் பயன்படும் என்று எண்ணுகிறேன். சித்தர் வைத்தியத்தின் முன்னேற்றத்திற்கெனவும், சித்தர் வைத்தியத்தைப் பரப்ப வேண்டுமென்ற நோக்கத்துடனும் இந்நூல் அல்லும் பகலும் பல நூல்களை ஆராய்ந்தும் அனுபவத்தைக் கொண்டும் இயற்றப்பட்டிருக்கிறது. இதில் சித்தர் வைத்தியமே அன்றி, ஆங்காங்கு ஆயுர்வேத முறைகளும் கூறப்பட்டுள்ளன. இந்நூல் வினு விடை வாயிலாக எழுதப்பட்டுள்ளதால் வைத்தியத்தில் தெளிவும் நினைவாற்றலும் உண்டாகும் என்பது திண்ணம்.

ஆதலால், இதனைக் கண்ணுறும் சித்தர் வைத்தியர்களும், சித்தர் வைத்தியத்தில் விருப்பமுள்ளவர்களும், சித்தர் வைத்தியம் கற்கும் மாணவர்களும் இதனை வாங்கிப் படித்துப்

பயன் பெறுவதின் மூலம் என்னை மேன்மேலும் இது போன்ற பணிகளில் ஈடுபடச் செய்வார்கள் என்று நம்பு கிறேன்.

இந்நூலை எழுதுவதற்குத் தோன்ருத் துணையாக இருந்து என்னுடன் உழைத்தவரும், இந்நூலைப் பதிப்பித்துக் கொடுத்தவருமாகிய வித்துவான் R. கன்னியப்பநாயக்கருக் கும், அச்சிட்டுதவிய சென்னை, ஜீவோதயம் அச்சகத்தாருக் கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலை விரைவில் எழுதி, விரைவில் அச்சடித்து முடிக்க வேண்டுமென்ற அவசரத்தால் இவ்வேலை நடந்தமை யின் இதில் குற்றங் குறைகளும் ஏற்பட்டிருக்கலாம். ஆகவே, குற்றங் குறைகளைக் காண்போர் அவற்றை மனதிற் கொள்ளாமல் இருக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

டாக்டர் **M. A. கறீம்** R. I. M. P.

ஆசிரியர்.

SIDDHA AYURVEDA UNANI VIDYALAYAM
MADRAS-5



டாக்டர். M. A. கறீம்

# பொருளடக்கம்


பக்கம்

விஞக்கள் 1

1. சித்தர் வைத்தியம் 33

2. உடல் தத்துவம் 53

3. பத்தியம் 82

4. சுத்தி முறைகள் 86

5. உடற் கூறுகள் 94

6. நாடிகள் 111

7. நோய்கள் 124

8. மருந்துப் பொருள்கள் 168

9. மருந்து 192

10. மருந்து கொடுக்கும்போது கவனிக்க வேண்டியவை 244

11. சோதனை 250

12. முறிவுகள் 257

13. இலகு வைத்தியம் 263

14. விடம் 268

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 39 | 5 | கஜபுடம் 100 | கஜபுடம் 1000 |
| 44 | 9 | பற்பம் | பற்பம் 100 |
| 131 | 18 | சாப்பிதல் | சாப்பிடுதல் |
| 152 | 7 | நோய்கள் மொத்தம் எத்தனை என்பதற்கு விடை 4448 | |
| 159 | 7 | துக்கமிகுதி | தூக்கமிகுதி |
| 176 | 4 | வெடியிப்பு | வெடியுப்பு |
| 215 | 22 | காலியான இடம் | கை உப்பின் |
| 222 | கடைசி | காடுக்கலாம் | கொடுக்கலாம் |
| 243 | 12 | பாலு | பாலும் |

# வினாக்கள்

## 1. சித்தர் வைத்தியம்

1. சித்தர் வைத்தியம் என்பது என்ன?

2. சித்தர்கள் எத்தனைப் பேர்? அவர்களின் பெயர்கள் யாவை?

3. சித்தர் வைத்தியத்திற்கும், ஆயுர்வேத வைத்தியத்திற்கும் தொடர்பு உண்டா? விளக்கு.

4. சித்தர் வைத்தியம் உயர்நிலை அடையாமைக்குக் காரணங்கள் எவை?

5. நீ அறிந்த சித்தர் வைத்திய நூல்களைக் கூறு.

6. சித்தர் வைத்திய மருந்துகளின் வகைகள் யாவை?

7. பலவகைப் புடங்கள் யாவை?

8. சித்தர்வைத்தியர்க்கான பலவித அளவைகள் யாவை?

9. திராவகம் வடிக்கும் முறை யாது?

10. செயநீர் என்பது என்ன? அதை எதற்குப் பயன்படுத்துவதுண்டு? ஏதாவது ஒரு செயநீர் செய்யும் முறையை விவரி.

11. சலிக்க மிடுதல், ஆக்கிராணம் செய்தல், நசியமிடுதல், சுருக்குக் கொடுத்தல் என்ருல் என்ன?

12. சித்தர் மருந்து வகைகளின் கால அளவுகள் (வய துகள்) யாவை?

13. தைலம், எண்ணெய் காய்ச்சும் முறை யாது?

14. சரியானபடி லேகியம் செய்யும் முறை யாது?

15. சூரணம் செய்வது எப்படி? அதைச் சுத்தி செய்வது எப்படி?

16. உலோக மாரணம் என்பது என்ன?

17. சித்த வைத்தியத்தின் மேன்மைகள் யாவை?

18. சீலைமண் என்பது என்ன?

19. சுடர்த்தைலம் இறக்கும் முறையை விவரி.

20. குழித்தைலம் இறக்கும் முறையை விவரி.

21. மருந்து செய்வதற்கான எரிப்புத் திட்டங்கள் யாவை?

22. நான்கு வகையான மருந்துகள் யாவை?

23. மருந்து வகையில் வடகம் எவ்வாறு செய்யப்படும்?

24. மெழுகுத் தைலம் தயாரிக்கும் முறை யாது?

25. நெய் தயாரிக்கும் முறையாது?

## 2. உடல் தத்துவம்

1. உடல் தத்துவங்கள் எத்தனை? அவை யாவை?

2. ஐம்பெரும் பூதங்கள் யாவை?

3. பூதங்கள் ஐந்திற்கும் சக்கரங்களைக் கூறு.

4. பூதங்களின் உடற்கூறுகள் யாவை?

5. பூதங்களின் தேவதைகளையும், மந்திர எழுத்துக்களையும் கூறுக.

6. ஐம்பொறிகள் யாவை? ஞானேந்திரியங்கள் யாவை?

7. ஐம்புலன்கள் யாவை? கன்மேந்திரியங்கள் யாவை?

8. கன்மேந்திரியங்களின் வேலைகள் யாவை? ஆதாரங்களுடன் கூறுக

9. தசநாடிகள் எவை? அவற்றைப் பற்றிய விவரங்கள் யாவை?

10. தச வாயுக்கள் யாவை? அவற்றைப் பற்றிய விவரங்கள் யாவை?

11. இராகங்கள் எவை? அவற்றைப் பற்றிய விவரங்களையும் கூறுக.

12. ஆதாரங்களை முறையாகக் கூறி உடலில் அவற்றின் நிலைகளைக் கூறுக.

13. ஐம்பெரும் பூதங்களுக்குரிய தலங்கள் எவை?

14. ஆசயங்களின் பெயர்களையும், அவற்றில் நடக்கும் வேலைகளையும் குறிப்பிடுக.

15. கோசங்களின் பெயர்களையும் அவற்றின் வேலைகளையும் குறிப்பிடுக.

16. அவத்தைகள் எத்தனை? அவைகளைப் பற்றிய விவரங்கள் யாவை?

17. அந்தக் கரணங்கள் யாவை? அவற்றைப் பற்றிய விவரங்கள் யாவை?

18. மண்டலங்கள் மூன்றையும் அவற்றின் நிலைகளையும் குறிப்பிடுக.

19. மும்மலங்கள் எவை? அவற்றின் வேலைகள் யாவை?

20. தோடங்கள் எவை? அவை எவற்றை ஆதாரமாகக் கொண்டுள்ளன?

21. வாத, பித்த, கபங்கள் எவற்றின் தொழில்கள்?

22. வாத, பித்த, கபங்களின் இடம், நாடி, நிறம், வாயு, குணம், தொழில், சுவை முதலியவற்றைக் கூறுக.

23. குணங்கள் எவை? அவற்றின் தன்மைகளைப் புலப்படுத்துக.

24. வேகங்கள் எத்தனை? அவை எவை? அவற்றைப் பற்றிய விவரங்கள் யாவை?

25. சப்த தாதுக்களையும் அவற்றைப் பற்றிய விவரங்களையும் குறிப்பிடுக.

26. சரக்குகளின் ஐம்பூதப் பிரிவுகள் யாவை?

27. பத்து நாடிகளும் முத்தோடங்களில் அடங்கும் முறையை விளக்குக.

## 3. பத்தியம்

1. பத்தியத்திற்கானவை எவை?
2. பத்தியத்திற்காகாதவை எவை?
3. இச்சாபத்தியம் என்பது என்ன?
4. கடும்பத்தியம் என்பது என்ன?
5. மிகக் கடும் பத்தியம் என்பது என்ன?
6. சுர நோயாளிக்கு என்ன பத்தியம் கூறுவாய்?

7. பரங்கிச் சக்கையை முக்கியமானதாகக் கொண்டு செய்யும் மருந்திற்குப் பத்தியம் யாது?

## 4. சுத்தி முறைகள்

1. கீழ்க் காண்பவற்றைச் சுத்தி செய்யும் முறை யாது?

| | |
|---|---|
| 1. வெள்ளைப்பாஷாணம் | 16. காந்தம் |
| 2. கௌரி பாஷாணம் | 17. அப்பிரகம் |
| 3. லிங்கம் | 18. நிமிளை |
| 4. இரசம் | 19. தாமிரம் |
| 5. கந்தகம் | 20. சகஸ்திர பேதி |
| 6. தாளகம் | 21. சிவதை |
| 7. மனோசிலை | 22. ஊமத்தன் விதை |
| 8. நேர்வாளம் | 23. எட்டிகொட்டை |
| 9. சேராங்கொட்டை | 24. கள்ளிப்பால் |
| 10. கொடிவேலி | 25. எவாச்சாரம் |
| 11. வசநாபி | 26. கரியபோளம் |
| 12. வீரம் | 27. திப்பிலி |
| 13. வங்கம் | 28. மிளகு |
| 14. நாகம் | 29. சுக்கு |
| 15. சிலாசத்து | 30. துருசு |

2. 64 பாஷாணங்களுக்கும் ஏக சுத்தி யாது?

## 5. உடற் கூறுகள்

1. நம் உடலில் உள்ள தசைகள் மொத்தம் எத்தனை? கை, கால்களில் உள்ள தசைகள் எத்தனை? கழுத்து, தலை இவற்றிலுள்ள தசைகள் எத்தனை?

2. இருகைகளிலும், இருகால்களிலும் உள்ள தசைகள் எத்தனை? விவரம் தருக?

3. தானாக இயங்கும் தசைகள் எவை? தானாக இயங்காத தசைகள் எவை?

4. நம் உடலில் உள்ள மொத்த எலும்புகள் எத்தனை? விவரம் கூறுக.

5, முள்ளந் தண்டு எலும்புகள் எத்தனை? அவை வளைவதற்கு ஏற்றவாறு என்ன அமைப்பைப் பெற்றிருக்கின்றன? அவற்றினுள் துளை இருக்கக் காரணமென்ன?

6, மூட்டுகள் எத்தனை வகை? அவை எவை? அவை உடலில் எங்கெங்கு இருக்கின்றன?

7. ஒரு குழந்தை கீழே விழுந்தால் எலும்பு ஒடிவதில்லை. ஏன்?

8. எலும்புகள் உறுதியாக இருப்பது எதைப் பொறுத்தது?

9: எலும்பை வளர்க்கும் பொருள்கள் எவை?

10. பந்தனிகள் என்று எதற்குப் பெயர்?

11. பெருமூளை, சிறுமூளை இவற்றின் முக்கியத் துவத்தையும், வேலைகளையும் விளக்குக.

12. மூளை பாதிக்கப்படுவதால் உண்டாகும் நோய்கள் எவை?

13. நரம்பின் வகைகளை விவரிக்க.

14. நரம்புகளின் வேலைகள் யாவை?

15. இரத்த ஓட்டம் என்பது என்ன?

16. நாடித் துடிப்பு உண்டாவதின் காரணம் என்ன?

17. சீரண உறுப்புக்களை விவரிக்க.

18. மொத்த பற்கள் எத்தனை? அவற்றுள் மூன்று விதமான பற்கள் எவை?

19. பல் சொத்தைப்பட்டிருப்பவருக்கு நீ என்ன அறிவுரை கூறுவாய்?

20. பல் நோய் உடனே நிற்க என்ன வைத்தி யம் செய்வாய்?

21. சுவாசம் என்பது என்ன?

22. சுவாசித்தல் என்றால் என்ன?

23. சுவாசம் விடுதல் என்றால் என்ன?

24. புரை யேறுதல் என்பது என்ன?

25. வயதுக்கேற்றவாறு சுவாசித்தலின் அளவைகள் யாவை?

26. நாடி அடித்தல் நிமிடத்திற்கு எத்தனைத் தடவை?

27. சிலர் விரைவாகவும், சிலர் குறுகியும் சுவாசம் விடுவதற்குக் காரணம் என்ன?

28. பிராண வாயுவில் இருக்கும் வாயுக்களின் அளவு யாது?

29. நாம் உட்கொள்ளும் காற்றுக்கு என்ன வென்று பெயர்? வெளிவிடும் காற்றுக்கு என்ன வென்று பெயர்?

30. நாடித் துடிப்புக்கும் சுவாசம் விடுதலுக்கும் உள்ள தொடர்பு யாது?

31. நம் உடலில் உள்ள ரோமத்துவாரங்கள் எத்தனை? அவற்றால் நமக்கு உண்டாகும் நன்மை யாது?

32. இரத்தக் குழாய்கள் எத்தனை விதப்படும் அவை எங்கிருக்கின்றன?

33. காதுகள் எவ்வாறு ஒலிகளை அறிகின்றன?

34. காது கேளாமைக்குக் காரணங்கள் யாவை?

35. நாக்கு ருசியறிவது எங்ஙனம்?

36. சில சமயங்களில் நாம் வாசனை அறியமுடியாமல் இருப்பதற்குக் காரணம் யாது?

37. நீர்த்தாரையில் உள்ள மூன்று பாகங்கள் எவை?

38. குண்டிக்காயின் வேலையாது?

39. கருப்பாசயம் இடம் பெயர்வது எதனால்?

## 6. நாடிகள்

1. நாடி பார்க்கும் முறை யாது?

2. நாடி பார்ப்பதற்குக் கை சிறந்ததாவதேன்?

3. வாத, பித்த, கபநாடிகள் எவற்றைப் போன்று நடக்கும்?

4. வாதம் கோழியைப் போன்று நடக்கும் என்பதால், கோழி நடையைப் பற்றி நீ அறிந்து கொண்டது யாது? இது கபத்திற்குரிய தவளையின் நடையினின்று எவ்வாறு வேறுபடும்?

5. மரணத்தை அறிவிக்கும் நாடி நடைகள் யாவை?

6. பாம்பு விஷம், வாந்தி பேதி, பயத்தால் மயக்கம் இவைகளுக்கு நாடி எவ்வாறு நடக்கும்?

7. சீதளம், சன்னி இவைகளுக்கு நாடி எவ்வாறு நடக்கும்?

8. மந்தத்திற்கும், அதன் வயிற்று வலிக்கும் நாடி எவ்வாறு நடக்கும்?

9. உஷ்ண வயிற்று வலிக்கு நாடி எவ்வாறு நடக்கும் ?

10. கிரந்திக்கு நாடி எவ்வாறு நடக்கும்?

11. நீர்ப்பாட்டுக்கும், கர்ப்பப்பாட்டுக்கும் நாடி எவ்வாறு நடக்கும்?

12. யார் யாருக்கு நாடி தெளிவாகக் காணப் படாது?

13. மூன்று நாடிகளுள் எங்தெந்த நாடி எவ் வெப்போது தெளிவாய்க் காணப்படும்?

14. சன்னி பாதத்திற்கு மூன்று நாடிகளும் எவ்வாறு நடக்கும்?

15. வாத நாடி அதிவேகமாய் நடந்தால் என்னென்ன நோய்கள் இருக்கும் என்று அறியலாம்?

16. பித்தநாடி அதிவேகமாக நடந்தால் என் னென்ன நோய்கள் இருக்குமென்று அறி யலாம்?

17. கபநாடி அதிவேகமாக நடந்தால் என் னென்ன நோய்கள் இருக்குமென்று அறி யலாம்?

18. மருந்து கொடுக்காமல் கைவிடுவதற்குரிய நாடி நடைகள் யாவை?

19. பசியின் போது நாடி எவ்வாறு ஓடும்?

20. பெண்களுக்கு வாத, பித்த, கப நாடிகள் எவ்வாறு நடக்கும்?

21. நோயில்லா நாடி எது?

22. சயம், காசத்திற்கு நாடிநடை யாது?

23. கர்ப்பிணிக்கு நாடியாது?

24. கீழ்க்காணும் நோய்களுக்கு நாடி எவ்வாறு நடக்கும்? மல சல அடைப்பு, குதிரைவலி,

பீனிசம், தலை கனப்பு, மூலம், பைத்தியம் மலபந்தம்.

25. வாத பித்தத்திற்கு நாடியாது?
26. வாத மீறல், பித்த மீறல், கப மீறல் என்பதென்ன?
27. குருநாடி என்பது என்ன? விளக்குக.
28. பூத நாடியைப் பற்றிக் குறிப்பு ஒன்று தருக.
29. நோய் தீர்ந்து வருவதை அறியும் நாடிநடை யாது?

## 7. நோய்க் குணம்

1. ஜலோதரத்திற்கும், மகோதரத்திற்குமுள்ள வேறுபாடு யாது?
2. மகோதரத்தின் பூர்வ ரூபம் யாது?
3. மகோதரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை.
4. சோகை மகோதரத்தின் குணம் யாது?
5. நீராம்பலின் குணம் யாது?
6. பாண்டு மகோதரத்தின் குணம் யாது?
7. கரு தரித்திருப்பதை அறியும் குறிகள் யாவை?
8. பிரசவ காலத்திற்கான அறிகுறிகள் யாவை?

9. கஷ்ட பிரசவத்தின் அறிகுறிகள் யாவை?

10. நாக்கின் மூலம் என்னென்ன நோய்களை அறியலாம்?

11. காமாலை நோயைக் கண்டு பிடிப்பது எப்படி?

12. குன்ம நோயைக் கண்டு பிடிப்பது எப்படி?

13. குன்ம நோய் உண்டாகக் காரணம் யாது?

14. குன்ம நோயில் கண்ணுக்குப் புலப்படக் கூடிய அம்சங்கள் யாவை?

15. பித்த குன்மத்தின் குணங்கள் யாவை?

16. பாண்டு என்னும் நோய் வரக் காரணம் யாது?

17. பாண்டு ரோகத்தின் ஆரம்பக் குறிகள் யாவை?

18. பாண்டு ரோகத்தின் பொதுவான குறிகள் யாவை?

19. உருக்கி (சயம்) என்னும் நோய் வரக் காரணம் யாது? அதன் ஆரம்பக் குறிகள் யாவை? முதிர்ந்த நிலையில் அதன் குறிகள் யாவை?

20. ஒரு நோயாளியின் எச்சில் மூலம் அவன் மரணத்தை நிச்சயிப்பது எப்படி?

21. காசநோய் ஏற்படக் காரணங்கள் யாவை?

22. காசத்திற்கும், சயத்திற்குமுள்ள வேறுபாடு யாது?

23. பட்ச வாதத்தின் குணம் யாது?

24. பீனிசம் என்பது என்ன?

25. பிரமேகம் என்பது என்ன? அது எதனால் உண்டாகிறது? அதன் ஆரம்பக் குறிகள் யாவை?

26. நிமோனியா (கபவாத சுரம்), மலேரியா சுரம் இவ்விரண்டிற்குமுள்ள வேறுபாடு யாது?

27. சன்னி பாத சுரம் என்று எவ்வாறு அறிந்து கொள்வாய்?

28. சுரத்தின் பத்துத் துன்பங்கள் (தசா்வஸ்தைகள்) யாவை?

29. துவாலை என்பது என்ன? அதற்கு நீ செய்யும் பரிகாரம் யாது?

30. நவமூலங்கள் எவை?

31. பரியாரிப் படை என்பது என்ன?

32. கணம் உண்டாவதின் காரணங்கள் யாவை? அது எத்தனை ஆண்டுகள் குழந்தையைப் பீடித்திருக்கும்?

33. கண ரோகத்தின் பொதுக் குறிகள் யாவை?

34. மாந்தம் எதனால் ஏற்படுகிறது?

35. மாந்தம் எத்தனை வகைப்படும்? எவையேனும் 10 கூறுக.

36. மாந்தத்தின் குறிகள் யாவை?

37. குழந்தைகளின் தோஷங்கள் எத்தனை? அவை யாவை?

38. கரப்பான் தோன்றக் காரணம் யாது?

39. கரப்பான் நோய்கள் எத்தனை? அவற்றுள் சிலவற்றைக் கூறுக.

40. குழந்தைகளுக்கு வரும் கிரந்தி நோயின் வகைகள் யாவை? அவற்றின் குறிகள் யாவை?

41. இளம்பிள்ளை வாதம் என்பது என்ன? அதன் குறிகள் யாவை?

42. தெற்கத்திக் கணை என்பதென்ன? அதன் குணங்கள் யாவை?

43. தேரை தோஷத்தின் குணங்கள் யாவை?

44. ஊது மாந்தத்தின் குணம் யாது?

45. சுரக்கட்டி என்பது யாது? விளக்குக.

46. எச்சிக்கணை இளநீர்க்கட்டு இவற்றின் குணங்கள் யாவை?

47. தாய்ப்பால் வற்ற வேண்டிய காரணங்கள் யாவை?

48. நோய் குணப்படுகிறது என்பதை அறியும் குறிகள் யாவை?

49. வேதனைகளைக் கொண்டு நோய் இருக்கும் இடங்களை அறிந்து கொள்வதெப்படி?

50. குன்ம ரோகத்தின் வகைகள் எத்தனை? அவை யாவை?
51. குன்மத்தின் ஆரம்பக் குறிகள் எவை?
52. சூலை ரோகத்தின் வகைகள் யாவை?
53. திரிதோடம் என்பதென்ன? திரிதோடம் என்பதற்கு வேறு பெயர் யாது?

54. மாரடைப்பால் இறந்து போவதைப் பற்றி நீ அறிந்ததை விளக்குக.
55. சர்க்கரை வியாதி எதனால் உண்டாகிறது?

## 8. நோய்கள்

1. நோய்கள் மொத்தம் எத்தனை ? அவற்றுள் கீழ்க் காணும் நோய்களின் எண்ணிகை யாது ?

1. வாதம்
2. பித்தம்
3. கபம்
4. சயம்
5. பெருவயிறு
6. பாண்டு
7. விழிநோய்
8. குன்மம்
9. சன்னி
10. சுரம்
11. காப்பான்
12. குட்டம்
13. சோகை
14. மூலம்
15. கிரகணி
16. அதிசாரம்
17. மேகம்
18. கடிதோடம்
19. கிரந்தி
20. கெண்டை

57. சுரம் எதனுல் உண்டாகிறது?

58. சுரத்தின் பொதுத் தன்மைகள் யாவை?

59. சுரத்தின் தொடக்கக் குறிகள் யாவை?

60. வாத சுரத்தின் தன்மைகள் யாவை?

61. கபசுரத்தின் தன்மைகள் யாவை?

62. வாத, பித்த சுரத்தின் தன்மைகள் யாவை?

63. வாத, கப சுரத்தின் தன்மைகள் யாவை?

64. பித்த, கப சுரத்தின் தன்மைகள் யாவை?

65. சன்னி பாத சுரத்தின் தன்மைகள் யாவை?

66. சன்னிபாத சுரத்தின் வகைகள் யாவை? அவை ஒவ்வொன்றும் எத்தனை நாட்கள் உடலில் தங்கியிருந்து நீங்கும்?

67. அபிசாங்க சுரத்தின் வகைகள் எத்தனை? அவை யாவை?

68. விஷ சுரங்களின் வகைகள் யாவை? அவற்றின் காலவரையறை யாது?

69. தாதுக சுரங்கள் ஒவ்வொன்றின் குறிகள் யாவை?

70. சுரத்தைப் பற்றிய பொதுக் குறிப்புகள் யாவை? இவற்றுள் சாத்தியமானவை எவை? அசாத்திய மானவை எவை?

71. அசாத்திய சுரத் தன்மைகள் யாவை?

72. சாத்திய சுரத் தன்மைகள் யாவை?

73. சுவாசங்களின் அளவு யாது?

74. வாதம் மீறுவதால் உண்டாகும் குணங்கள் யாவை ?

75. பித்தம் மீறுவதால் உண்டாகும் குணங்கள் யாவை ?

76. கபம் மீறுவதால் உண்டாகும் குணங்கள் யாவை ?

77. நாடி தொந்திப்பின் குணங்களை விளக்குக.

78. இரத்த பித்தம் என்றால் என்ன ? இது எதனால் உண்டாகிறது ?

79. இரத்த பித்தத்தின் ஏழு வகைகளைக் கூறுக.

80. அசாத்திய ரோக நிதானங்கள் யாவை ?

81. மரணக்குறிகள் யாவை ?

## 8. மருந்துப் பொருட்கள்

1. கடுக்காயின் குற்றம் யாது ?

2. எவ்விதக் கடுக்காய் மருந்துக்குப் பயன் படாது ?

3. எவ்விதக் காசுகட்டி மருந்துக்குப் பயன் படாது ?

4. உப்பு வகைகள் யாவை ?

5. சாரவகைகள் யாவை ?

6. வேறு எந்த வைத்தியத்திலும் இல்லாமல் சித்த வைத்தியத்தில் மட்டும் கையாளும் பாஷாணம் எது ? அது எந்த நோய்க்குக்

கொடுக்கப்படுகிறது ?

7. பிறவிப் பாஷாணங்களுள் பத்து கூறுக.

8. வைப்புப் பாஷாணங்களுள் பத்து கூறுக,

9. கீழ்க் காண்பவற்றுள் பிறவிப் பாஷாணம் எது ? வைப்புப் பாஷாணம் எது ?

| | |
|---|---|
| சவ்வீரம் | வெள்ளை |
| சாதிலிங்கம் | லிங்கம் |
| அப்பிரகம் | அமரசிலைகந்தகம் |
| கௌரி | கந்தகம் |
| கோழித்தலை கந்தகம் | சங்கு பாஷாணம் |
| மனோசிலை | தாளகம் |
| செப்புத் தொட்டி | அரிதாரம். |
| துத்தம் | இரத்தபாஷாணம் |
| பூரம் | மிருதார் சிங்கி |

10. சர்க்கரைச் சத்துள்ளவை எவை ?

11. இரும்புச் சத்துள்ளவை எவை ?

12. உத்தாமணி, வெற்றிலை —இவற்றில் என்னென்ன சத்துக்கள் உள்ளன ?

13. எப்படிப்பட்ட அப்பிரகம் மருந்துக்கு உதவும் ?

14. வல்லாரை இலையின் சிறப்பு யாது ?

15. காதில் உள்ள சீழைப் போக்கப் பயன்படும் மூலிகைகள் யாவை ?

16. குழந்தைகளின் நெஞ்சிலுள்ள கோழையைப் போக்க உதவும் மூலிகைகள் யாவை ?

17. அவுரி யிலையின் மகத்துவம் யாது?

18. பாஷாண வேகத்தைத் தீர்க்கும் மூலிகைகள் யாவை?

19. சப்பாத்தி பூ, தூதுளம் பூ, முருங்கைப் பூ, நந்தியாவட்டம் பூ இவற்றின் மகத்துவம் யாது?

20. உஷ்ணத்தை உண்டாக்கும் பொருட்கள் எவை?

21. குளிர்ச்சியை உண்டாக்கும் பொருட்கள் எவை?

22. உள் ரணம் ஆற்றும் பொருட்கள் எவை?

23. சுரத்தைத் தணிக்கும் பொருட்கள் எவை?

24. சிறுநீரைப் பெருக்கும் பொருட்கள் எவை?

25. மலத்தை இளக்கும் பொருட்கள் எவை?

26. மலத்தைக் கட்டும் பொருட்கள்எவை?

27. பேதியுண்டாக்கும் பொருட்கள் எவை?

28. இரத்தப் போக்கை நிறுத்தும் பொருட்கள் எவை?

29. கிருமிகளைக் கொல்லும் பொருட்கள் எவை?

30. விஷத்தை நீக்கும் பொருட்கள் எவை?

31. ஜீரண சக்தியைப் பெருக்கும் பொருட்கள் எவை?

32. கீழ்க்காணும் பொருள்களின் குணங்களைக் கூறு.

| | | |
|---|---|---|
| சுக்கு | தான்றிக்காய் | பெருங்காயம் |
| மிளகு | ஓமம் | பூண்டு |
| திப்பிலி | சித்தரத்தை | பரங்கிச்சக்கை |
| கடுக்காய் | வசம்பு | அதிமதுரம் |
| நெல்லிக்காய் | ஏலக்காய் | மாசிக்காய் |

33. கீழ்க்காண்பவை எவற்றைக் குறிக்கும் ?

| | |
|---|---|
| அட்டவருக்கம் | பஞ்சலவணம் |
| அஷ்டலோகம் | பஞ்ச பாஷாணம் |
| தசமூலம் | பஞ்ச மூலம் |
| திரிகடுகு | நவலோகம் |
| திரிபலை | பஞ்சலோகம் |
| திரிமஞ்சள் | பஞ்சவாசம் |
| திரிநிம்பம் | நவஉப்பு |
| முக்கனி | அஷ்டமூலம் |
| முக்கூட்டு எண்ணெய் | அஞ்செண்ணெய் |
| பஞ்ச கவியம் | திரிமூலம் |
| பஞ்சரசம் | சதுர்சாதம் |
| ஐங்காயம் | திரிபத்திரி |

34. கீழ்க் காணும் மூலிகைகளின் குணங்கள் யாவை ?

| | | |
|---|---|---|
| ஆடாதோடை | முட்காவேளை | ஆடுதீண் |
| துத்தி | பொடுதலை | டாப்பாளை |
| கஞ்சாங்கோரை | ஆவாரையிலை | கீழ்க்காய் |
| நொச்சி | விழுதி | நெல்லி |
| வல்லாரை | அவுரியிலை. | கரிசலாங்க |
| வேலிபருத்தி | சீந்தில் | ண்ணி |

முடக்கொற்ருன் நிலவேம்பு பொன்னுங்
நல்வேளை மேனி கண்ணி
முசுமுசுக்கை துளசி சிறுபீளை

35. அரிதாரம் எத்தனை வகைப்படும்? அவை எவை?

36. கந்தகம் எத்தனை வகைப்படும்? அவை எவை?

## 9. மருந்து

1, அஷ்ட சூரணம் செய்யும் முறையாது? அது என்னென்ன நோய்களைத் தீர்க்கும்?

2, பெரும்பாட்டுக்கு என்ன மருந்து கொடுப்பாய்? அதைச் செய்முறை யாது?

3. பேதி மாத்திரை செய்யும் முறை யாது?

4. சுரத்திற்குக் கொடுக்கும் செந்தூரம், குளிகை யாவை? அவற்றைச் செய்முறை யாது?

5. சுரத்திற்கு நீ கொடுக்கும் கியாழம் ஒன்று கூறுக,

6. வாயின் இரு ஓரங்களிலும் உண்டாகும் புண் எதனுல் உண்டாகிறது? அதற்குப் பரிகாரம் யாது?

7. பல்நோய் உடனே நிற்க அவசரச் சிகிச்சை ஒன்று கூறுக.

8. டான்சில் என்பது என்ன ? அதற்குத் தமிழில் என்னவென்று பெயர் ? இதற்குப் பரிகாரம் யாது ?

9. மண்டையிடியை உடனே நிறுத்த நீ செய்யும் பரிகாரம் யாது ?

10. ஒற்றைத் தலைவலிக்கு அவசரச் சிகிச்சை யாது ?

11. நாள் பட்ட ஒற்றைத் தலைவலிக்குப் பரிகாரம் யாது ?

12. வெப்ப சுரத்தின் தன்மை யாது ? அதற்குப் பரிகாரம் யாது ?

13. தாய்ப்பாலை வற்ற வைக்க என்ன செய்வாய் ?

14. தாய்ப்பால் சுரக்கச் செய்ய என்ன செய்வாய் ?

15. முடி உதிர்தலைத் தடுக்க என்ன மருத்துவம் செய்வாய் ?

16. முடி நன்ருக வளர நீ செய்யும் பரிகாரம் யாது ?

17. காது நோய்க்குச் செய்யும் பரிகாரம் யாது ?

18. ஒருவருக்குச் சிறுநீர் வராமல் தடைபட்டிருந்தால், அதை வெளிப்படுத்த என்ன பரிகாரம் செய்வாய் ?

19. கர்ப்பிணியின் வாந்தியை நிறுத்த நீர்செய்யும் பரிகாரம் யாது ?

20. ஜலோதரத்தினுல் ஒருவருக்கு வயிறு வெடிப் பது போல இருந்தால் நீ என்ன பரிகாரம் செய்வாய்?

21. வயிற்றிலுள்ள கிருமிகளை வெளியேற்ற என்ன பரிகாரம் செய்வாய்?

22. கர்மாலை, நோய்க்கு மூலிகை மருத்துவம் யாது? விளக்குக.

23. கரிசாலை, கொடுப்பை இவற்றை எந்நோய்க்கு எவ்வாறு பயன்படுத்துவாய்?

24. உப்பிலாங் கொடியைக் குழந்தைகளின் எந் நோய்க்குப் பயன்படுத்துவாய்?

25. சய நோய்க்கு மருந்துகள் யாவை?

26. வாயுவுக்கு நீர் செய்யும் பரிகாரம் யாது! விளக்கு.

27. பட்ச வாதத்திற்குப் பரிகாரம் யாது?

28. கண்ணீர் வடிதல், எரிதல் இவற்றைப் போக்க என்ன பரிகாரம் செய்வாய்?

29. கண் குத்தல், சிவப்பு இவற்றிற்குப் பரிகாரம் யாது?

30. நீரழிவிற்குத் தக்க மருந்து யாது?

31. பீனிசத்திற்குத் தக்க பரிகாரம் யாது?

32. மூன்று தோடங்களையும் சமனப்படுத்தும் சுவைகள் யாவை?

33. பித்தத்தை அதிகரிக்கச் செய்யும் புளிப்புச் சுவையுள்ள நெல்லிக்காய், எலுமிச்சம்

பழம், புளிப்பு மாதுளை முதலியன பித்தத்தைச் சமனப் படுத்துவது எவ்விதம்?

34. நெல்லிக்காய் எவ்வெச் சுவையால் மூன்று தோடங்களையும் நீக்குகிறது?

35. சன்னிக்குத் தரும் மருந்துகள் யாவை? அவற்றுள் ஒன்றைச் செய்யும் முறையைக் கூறுக?

36. டைபாயிடு என்ற சுரம் தமிழில் எவ்வாறு வழங்கப்படுகிறது? அச்சுரத்திற்கு நீ கொடுக்கும் மருந்தும், நடத்தும் விதமும் யாவை?

37. கபரோக நிவாரணிகள் யாவை?

38. நேர்வாள மருந்து கொடுத்துப் பேதி நிற்கவில்லையென்றால் என்ன பரிகாரம் செய்வாய்?

39. நவ மூலங்களுக்குப் பொதுவான பரிகாரம் யாது?

40. மூல நோய் உள்ளவர்களுக்கு மலச்சிக்கல் ஏற்பட்டால் மலத்தை வெளிப்படுத்த என்ன மருந்து தருவாய்?

41. மூல எரிச்சலுக்கும், ஆசனக் கடுப்புக்கும் வெளிமருந்து யாது?

42. படைகளுக்குப் பரிகாரம் யாது?

43. பரியாரிப் படைக்கு மருந்து யாது?

44. குட்ட நோய்க்கு மருந்துகள் யாவை? அவற்றுள் ஒன்றின் செய்முறையை விளக்குக.

45. கணத்திற்குத் தக்க மருந்து யாது?

46. மாந்தத்திற்குக் கியாழம் ஒன்றும் குளிகை ஒன்றும் கூறி அவற்றின் செய்முறைகளைக் கூறுக.

47. ஆண்தோஷக் குறியாது? அதற்குப் பரிகாரம் யாது?

48. கரப்பானுக்குப் பொதுமருந்து யாது?

49. குழந்தைகளுக்கு வரும் செங்கிரந்தி, கருங் கிரந்திகளுக்கு என்ன வைத்தியம் செய்வாய்?

50. கக்குவான் நோய்க்குக் காரணங்கள் யாவை? அதற்கு என்ன வைத்தியம் செய்வாய்?

51. இளம்பிள்ளை வாதத்திற்குப் பரிகாரம் யாது?

52. தெற்கத்திக் கணைக்குப் பரிகாரம் யாது?

53. அசீரண வாயுவுக்குப் பரிகாரம் யாது?

54. புருஷதனம் நீங்க என்ன பரிகாரம் செய்வாய்?

55. பிரசவ கால வலிப்புகளுக்குச் செய்யும் பரிகாரம் யாது?

56. கர்ப்பிணியின் விக்கலுக்கு மருந்து யாது?

57. கர்ப்பிணியின் சுரத்திற்கு மருந்து யாது?

58. கர்ப்பிணியின் வாந்திக்கு மருந்து யாது?

59. கர்ப்பிணியின் வயிற்று வலிக்கு மருந்து யாது?

60: கர்ப்பிணிக்குப் பேதியாக என்ன மருந்து கொடுப்பாய் ?

61. சூதகச் சிக்கலைப் போக்க என்ன மருந்து தருவாய் ?

62. சூதகம் அதிகம் போவதை நிறுத்த என்ன செய்வாய் ?

63. இறந்த பிண்டத்தை வெளிவரச் செய்யும் பரிகாரம் யாது ?

64. கர்ப்பப்பாட்டுக்குச் சாதகமாக என்ன செய் வாய் ?

65. தலைப்பேன் போகச் செய்யும் பரிகாரம் யாது ?

66. அபானவாயுவை நிறுத்த என்ன செய்வாய் ?

67. சன்னிக்கு இலகு வைத்தியம் யாது ?

68. ஆசனக் கருப்பிற்கு மருந்து யாது ?

69. சிறுநீர் இரத்தம் போல் இறங்குவதற்கு என்ன பரிகாரம் செய்வாய் ?

70. இரத்த மூலத்திற்கு நீ கொடுக்கும் மருந்து யாது ?

## 10. மருந்து கொடுக்கும்போது கவனிக்க வேண்டியவை:

1. ஒரு கர்ப்பிணிக்கு மருந்து கொடுப்பதில் கவனிக்க வேண்டுவன யாவை ?

2. பேதி மருந்து கொடுப்பதில் கவனிக்க வேண்டுவன யாவை ?
3. மருந்தின் ஆற்றலை அனுசரித்து மருந்துகள் கொடுப்பதில் அளவைகளைப் பற்றி அறிய வேண்டுவன யாவை ’
4. அபினியைக் குழந்தைகளுக்குக் கொடுப்பதில் கவனிக்க வேண்டியது யாது ?
5. நோயாளிக்கு மருந்து கொடுக்குமுன் வைத்தியன் எதில் தெளிவடைய வேண்டும் ? ஏன் ?
6. எந்த நாளில் மருந்து உட்கொள்ளத் தொடங்கலாம் ? எந்த நாளில் தொடங்கக் கூடாது ?

## 11. சோதனை

1. அயச்செந்தூரம், வங்கபற்பம், தாமிர பற்பம்—இவை உலோகச் சத்தில்லாமல் முடிந்துள்ளதை அறியச் செய்யும் சோதனை யாது ?
2. அஷ்ட பரீட்சைகள் யாவை ? விவரம் கூறு ?
3. சிறுநீரின் நிறச் சோதனையை விளக்குக.
4. சிறுநீரின் நெய்க்குறிச் சோதனையை விளக்குக.
5. நாக்கின் பலவிதச் சோதனைகளை விளக்குக.
6. மஞ்சள் காமாலை நோயை அறிவது எப்படி ?

## 12. முறிவுகள்

1. ரசம் சம்பந்தப்பட்ட மருந்துகளால் உண்டாகும் கோளாறுகள் யாவை? அவற்றிற்கு முறிவு யாது?
2. வீரத்தால் உண்டாகும் கோளாற்றையும் அதன் முறிவையும் கூறுக.
3. பூரத்தால் உண்டாகும் கோளாற்றையும் முறிவையும் கூறுக.
4. துருசினால் உண்டாகும் கோளாறுகளையும் அதன் முறிவையும் கூறுக.
5. சத்து மடியாத தாளக மருந்தினால் உண்டாகும் தீங்குகளையும் முறிவையும் கூறுக.
6. வெள்ளைப் பாஷாணத்தால் உண்டாகும் கோளாறுகளையும், அதன் முறிவையும் கூறுக.
7. சத்து மடியாத தாமிர மருந்தால் உண்டாகும் கோளாறுகள் யாவை? முறிவுயாது?
8. சத்து மடியாத வங்க மருந்துகளால் உண்டாகும் தோடங்கள் யாவை? முறிவு யாது?
9. கல் சுண்ணும்பால் உண்டாகும் கோளாறு யாது? அதன் முறிவு யாது?
10. நேர்வாளத்தால் உண்டாகும் கோளாறுகளையும், முறிவையும் கூறுக.
11. சேராங்கொட்டையால் உண்டாகும் கோளாறுகளையும் முறிவையும் கூறுக.

12. வசநாபியால் உண்டாகும் தீங்கையும் முறிவையும் கூறுக.

13. கள்ளி வகைகளால் உண்டாகும் கோளாறுகளையும் முறிவையும் கூறுக.

14. அலறி, எட்டி, ஊமத்தம் இவற்றால் உண்டாகும் கோளாறுகளையும் முறிவையும் கூறுக.

15. அபினியால் உண்டாகும் கோளாறுகளையும் முறிவையும் கூறுக.

16, பாஷாணவேகந் தீர என்ன கொடுக்க வேண்டும் ?

17. மருந்து சாப்பிட்டதால் உண்டான தீமையைக் குறைக்க என்ன செய்ய வேண்டும் ?

18. அவபத்தியம் செய்துகை, கால் வீங்கியதற்கு என்ன பரிகாரம் செய்வாய் ?

## 13. இலகு வைத்தியம்

1. இலகு வைத்தியத்தின் அவசியம் யாது ?
2. மூக்கிலிருந்து வரும் இரத்தத்தை நிறுத்த என்ன செய்வாய் ?
3. கையில் வெட்டுப்பட்ட இடத்திலிருந்து வரும் இரத்தத்தை நிறுத்த என்ன செய்வாய் ?

4. கீழ்க்காண்பவற்றிற்கு என்ன இலகு வைத்தியம் செய்வாய்?

1. நீரில் மூழ்கிச் சுவாசமில்லாமல் போதல்
2. மயக்கம்.
3. இரத்தம் தலையிலேறுதல்.
4. காக்காய் வலி.
5. வாந்தி பேதி.
6. தேள் கொட்டு.
7. இரத்தம் பீறிட்டு வருதல்.
8. இரத்த வாந்தி.
9. தீப்புண்.
10. உடைகளில் தீப் பிடித்தல்.

## 14. விடம்

1. பாம்பு விடங்களுக்குப் பயன்படும் மூலிகைகள் எவை? அவற்றை எவ்வாறு பயன்படுத்துவாய்?

2. கொல்லும் விடங்கள் யாவை? அவற்றுக்குப் பொதுவான பரிகாரம் எது?

3. தேள் கொட்டுக்குப் பரிகாரம் யாது?

4. தேனீ கொட்டுக்குப் பரிகாரம் யாது?

5. பூச்சி கடிகளால் உண்டாகும் தடிப்புக்குப் பரிகாரம் யாது?

6. பூரான் செய்யான் கடிகளுக்குப் பரிகாரம் யாது ?

7. அக்கினித் திராவகம் (நைட்டர் காசிட்) சாப் பிட்டதற்குப் பரிகாரம் யாது ?

8. எரிமருந்து சாப்பிட்டதற்குப் பரிகாரம் யாது ?

9. கார உப்புக்கள் சாப்பிட்டதற்குப் பரிகாரம் யாது ?

10. பிராந்தி மயக்கத்திற்குப் பரிகாரம் யாது ?

11. நவாச்சாரம் உட்கொண்டதால் உண்டாகும் தீங்கு யாது ? பரிகாரம் யாது ?

12. வாந்தி உப்பு உண்டாக்கும் தீங்கு யாது ? பரி காரம் யாது ?

13. சிறுபாம்பு கடிக்குச் செய்யும் பரிகாரம் யாது ?

# சித்தர் வைத்திய ஆசான்

## வினு விடை

### 1. சித்தர் வைத்தியம்

1. சித்தர் வைத்தியம் என்பது என்ன ?

முற்காலத்தில் தமிழ் நாட்டில் சித்தர்களால் செய்யப்பட்டு வந்த வைத்தியம் சித்தர் வைத்தியம் எனப்படும்.

2. சித்தர்கள் எத்தனைப் பேர்? அவர்களின் பெயர்கள் யாவை?

சித்தர்கள் பதினெட்டுப் பேர்கள். பிற்காலத்துச் சித்தர்களும்உண்டு, ஆயினும், 18 பேர்கள் என்றே வழக்கமாகச் சொல்லப் பட்டு வருகின்றது.

சித்தர்களின் பெயர்கள்

(1) (பதினெண் சித்தர் நாடி சாத்திரத்தின்படி)

1. அகத்தியர்
2. நந்தீசர்
3. திருமூலர்
4. சட்டநாதர்
5. இடைக்காடர்
10. கோரக்கர்
11. புண்ணாக்கீசர்
12. மச்சமுனி
13. பூனைக்கண்ணர்
14. யூகிமுனி

6. சண்டிகேசர்
7. இராமதேவர்
8. போகர்
9. சிவவாக்கியர்
15. கொங்கணர்
16. புலிப்பாணி
17. வரரிஷி
18. தேரையர்

(கலைக் களஞ்சியத்தில் உள்ளபடி)

1. அகத்தியர்
2. போகர்
3. கோரக்கர்
4. கைலாசநாதர்
5. சட்டைமுனி
6. திருமூலர்
7. நந்தி
8. கூன் கண்ணர்
9. கொங்கணர்
10. மச்சமுனி
11. வாசமுனி
12. கூர்மமுனி
13. கமலமுனி
14. இடைக்காடா
15. புண்ணுக்கீசர்
16. சுந்தரானந்தர்
17. உரோமரிஷி
18. பிரமமுனி

(2) பதினெண் சித்தர் நாடி சாத்திரத்தில் குறிப் பிடப் படாத ஏனைய சித்தர்கள்.

1. தன் வந்திரி
2. வான் மீகர்
3. கமலமுனி
4. பதஞ்சலி
5. சுந்தரானந்தர்
6. குதம்பை சித்தர்
7. கருவூரார்

3. சித்தர் வைத்தியத்திற்கும் ஆயுர் வேத வைத்தியத்திற்கும் தொடர்பு உண்டா ? விளக்கு.

உண்டு. 1, சித்தர்களுள் முதன்மை பெற்ற வர் அகத்தியர். அவர் பாடியதாக உள்ள

வைத்தியங்கள் சித்தர் வைத்திய நூல்களி லும் உண்டு; ஆயுர்வேதத்திலும் உண்டு.

2. சில மூலிகைகள், சில தாதுக்கள் நீங்கலாக மற்றவை யனைத்தும் இவ்விரு முறைகளுக்கும் பொதுவாக இருக்கின்றன. தசமூலம், திரிகடுகு, திரிபலை, பஞ்சகோலம் முதலிய வடமொழி வைத்திய பரிபாஷைச் சொற்கள், தமிழ் வைத்திய நூல்களில் பல இடங்களில் காணப்படுகின்றன,

3. அபினி, கசகசா, கோஷ்டம் முதலி யன வடநாட்டுச் சரக்குகள் ஆயினும், அவை தென்நாட்டுச் சித்த வைத்தியங்களில் சேர்க் கப்படுகின்றன.

4. கிராணி, அதிசாரம், பிரமேகம் பவுத்திரம் முதலிய சொற்கள் வடமொழிச் சொற்களாயினும், தமிழ் வைத்திய நூல் களில் காணப்படுகின்றன.

5. சில மருந்து செய்முறைகளும் இரு வைத்தியங்களிலும் ஒத்திருக்கின்றன.

இவற்றின் மூலம் சித்த வைத்தியத்திற் கும் ஆயுர்வேதத்திற்கும் தொடர்பு உண்டு என்பது அறியப்படும்.

### 4. சித்தர் வைத்தியம் உயர்வடையாமல் இருப்பதற்குக் காரணங்கள் எவை?

1. சித்தர் வைத்தியத்திலுள்ள மருந்து செய்யும் பல சிறந்த முறைகள் எழுதப்படா

மல், செவிவழிச் செய்திகளாகவே இருந்து வந்தன. அவற்றைத் தெரிந்தவர்கள், அவற்றை விரும்பும் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தே அறிவிக்க வேண்டியிருந்தது.

2. மருந்து முறைகளைத் தெரிந்தவர்கள் அவற்றைப் பிறர்க்குத் தெரிவிக்காமலும், எழுதிவைக்காமலும் இருந்து இறந்து விட்டனர். ஆதலால், அம்முறை அவர்களோடு மறைந்து விட்டன.

3. பல வைத்திய முறைகள் எல்லோரும் புரிந்துகொள்ள முடியாதபடி மறைமொழிகளால் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றை நன்கு தெரிந்தவர்கள் விளக்கினுலல்லாமல் அவற்றைப் புரிந்துகொள்ள முடியாது.

இக்காரணங்களால் சித்தர் வைத்தியம், பரவி உயர்வடையாமல் இருந்து விட்டது.

5. நீ அறிந்த சித்தர் வைத்திய நூல்களைக் கூறு.

சித்தர் நூல்கள்

போகர் 7000
அகஸ்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம்
புலிப்பாணி வைத்தியம் 500
தேரையர் தைல வருக்கச் சுருக்கம்,

தேரையர் வைத்தியம் 500
பதினெண் சித்தர்கள் நாடி சாத்திரம்
கருவூரார் நொண்டி
அகத்தியர் கற்ப முப்புக் குருநூல்
அகத்தியர் பூஜாவிதி 200
மணி மந்திர வைத்திய சேகரம்
அகத்திய முனிவர் பூரண சூத்திரம்
பால வாகடம்
ஊர்வசி வைத்திய சிட்கா
தன்வந்திரி கருக்கிடை
திருமூலர் வைத்திய காவியம்
புலத்தியர் ஞான கற்பம்

## தற்காலத்திய நூல்கள்

பார்த்த குண விளக்கம்
கண்ணுசாமியம்
வைத்திய சிந்தாமணி
அனுபோக வைத்திய பிரம்ம ரகசியம்
பரம்பரை வைத்தியம்
சிகிச்சா ரத்தின தீபம்
தஞ்சை வைத்திய ராஜ சிந்தாமணி
மூலிகை ஜாலரத்தினம்
மூலிகை மர்மம்

6. சித்தர் வைத்திய மருந்துகளின் வகைகள் யாவை ?

| | |
|---|---|
| சூரணம் | இரசாயனம் |
| கியாழம் | திராவகம் |
| கல்கம் | பதங்கம் |
| லேகியம் | நெய் |
| தைலம் | மாத்திரை |
| மனபாகு | குடிகை |
| எண்ணெய் | மெழுகு |
| சுண்ணம் | மை |
| பற்பம் | குழம்பு |
| ரசம் | காரம் |
| செந்தூரம் | கருப்பு |
| கட்டு | குடிநீர் |
| வடகம் | களிம்பு |

7. பலவகைப் புடங்கள் யாவை ?

1. காடைப்புடம்—1 வரட்டி கொண்டது (காடை யுயரம் போடுவது)
2. கவுதாரிப் புடம்—3 வரட்டி கொண்டது.
3. குக்குடப் புடம் [அ] கோழிப் புடம் } - 10 ,,

(சாண் உயரத்திற்குட் பட்ட புடம்)

4 வராகப் புடம் — 50 வரட்டி
கொண்டது.

5. மணல்மறைவுப் — 90 ,,
புடம்

6. கஜபுடம் — 100 ,,
(2 முழ சதுரம் 2 முழ ஆழம் குழி
வெட்டிப் போடுவது.)

7. உமிப்புடம் — உமியால் மூடி
எரிப்பது

8. சூரிய புடம் — வெயிலில் வைப்பது

9. சந்திரபுடம் — நிலவில் வைப்பது

10. பனிப்புடம் — பனியில் வைப்பது

11. தானியபுடம் — தானியத்திற்குள்
வைப்பது

12. லகுபுடம்–1 முழ சதுரம் 1 முழ ஆழம்
குழிவெட்டிப் போடுவது.

8. சித்தர் வைத்தியர்க்கான பலவித அள
வைகள் யாவை?

| | | |
|---|---|---|
| 32 குன்றிமணி | = | 1 வராகனெடை |
| 40 ,, | = | 1 கழஞ்சு |
| $1\frac{1}{4}$ வராக னெடை | = | 1 ,, |
| $10\frac{1}{4}$ ,, | = | 1 பலம் |
| 1 ரூபாய் எடை | = | 1 தோலா |
| 3 தோலா | = | 1 பலம் |

| | |
|---|---|
| 8 பலம் | = 1 சேர் |
| 5 சேர் | = 1 வீசை |
| ½ குன்றிமணி எடை | = 1 கிரெயின் |
| 3¾ குன்றிமணி | = ½ பணவெடை |
| 1 துலாம் | = 1 ரூபா எடை |
| 2½ ரூபாய் எடை | = 1 அவுன்ஸ் |
| 24 அவுன்ஸ் | = 1 புட்டி |
| 6 ,, | = 1 ஆழாக்கு |
| 1000 கிராம் | = 1 கிலோகிராம் |
| 1400 கிராம் | = 1 வீசை |
| 700 ,, | = ½ வீசை |
| 350 ,, | = ¼ வீசை |
| 35 ,, | = 1 பலம் |

திரிகடிப் பிரமாணம் = மூன்று விரல்களால் எடுப்பது

வெருகடிப் பிரமாணம் = 5 விரல்களால் எடுப்பது.

| | |
|---|---|
| 60 துளி | = 1 தேக்கரண்டி |
| 8 தேக்கரண்டி | = 4 அவுன்ஸ் |
| 16 அவுன்ஸ் | = 1 பவுண்டு |
| 1 மணி | = 2½ நாழிகை |
| 3 மணி | = 1 ஜாமம் |

## 9. திராவகம் வடிக்கும் முறை யாது ?

ஒரு மண் குடத்தின் வாய்க்குச் சரியான வாயையுடைய வேறொரு மண்குடம் வாங்க வேண்டும். ஒன்று மற்றொன்றைக் காட்டிலும் சிறியதாக இருக்கலாம். சிறியதாக

உள்ள குடத்தின் பக்கத்தில் ஒரு சிறு துளை செய்யவேண்டும். பெரிய குடத்தில் மருந்துச் சரக்குகளைப் போட்டு இரண்டு குடங்களின் வாய்களையும் பொருந்த வைத்து ஐந்து சீலைமண் செய்து, காயவைத்து, குடங்கள் பிரியாமல் இருக்கக் கயிற்றால் கட்ட வேண்டும். பின்பு மருந்துச் சரக்குப் போட்டுள்ள குடம் அடுப்பின்மீது இருக்கும்படியும், சிறுகுடத்தின் துளை பூமியை நோக்கி இருக்கும் படியும் படுக்க வைக்கவேண்டும். துளைக்கு நேரே தரையில் ஒரு பீங்கான் பாத்திரம் வைக்கவேண்டும. பிறகு தீ அளவுப்படி அடுப்பில் எரித்தால் பெரிய குடத்திலுள்ள மருந்துச் சரக்குகள் வெந்து ஆவியாகிச் சிறு குடத்தை அடையும். அச்சமயத்தில் ஒரு துணியை எட்டாக மடித்து நீரில் நனைத்துச் சிறிய குடத்தின் மீது போட்டுச் சிறுகச்சிறுகத் தண்ணீர் விட்டுக்கொண்டே இருக்கவேண்டும். துணி சூடு அடைந்தால் எடுத்துத் தண்ணீரில் நனைத்துப் போடவேண்டும். இப்படிச் செய்து வந்தால், ஆவி நீராக மாறிச் சிறு குடத்திலுள்ள துளையின் வழியாகச் சொட்டுச் சொட்டாகத் தரையில் உள்ள பீங்கான் பாத்திரத்தில் விழும். இதுவே திராவகம் வடிக்கும் முறையாகும்.

இருகுடங்களை மேற்கூறியவாறு சீலை மண்ணால் இணைத்துத் திராவகம் இறக்குக்

வதற்குப் பதிலாக வர்லேயில் திராவகம் வடித்தலும் உண்டு.

10. செயநீர் என்பது என்ன? அதை எதற்குப் பயன் படுத்துவதுண்டு? ஏதாவது ஒரு செயநீர் செய்யும் முறையை விவரி?

செயநீர் என்பது ஒரு வகை மருந்து நீர்.

புடமிடும் போது எரிந்து உருகி உருவில்லாமல் ஓடிப்போகும் பாஷாணங் களுமுண்டு. அவை அவ்விதம் போகாமல் இருக்க ஒருவித மருந்து நீர் பூசி அல்லது கவசம் செய்து புடமிடுவதுண்டு; சுருக்குக் கொடுத்துப் புடமிடுதலும்உண்டு. இந்த மருந்து நீருக்குச் செயநீர் என்றுபெயர்.

படிகாரம், நவாச்சாரம், கம்பியுப்பு, மனேசிலே இந்நான்கையும் அரைத்து ஓர் அகலமா்ன பீங்கான் பாத்திரத்தில் போட்டு மாசி அல்லது பங்குனி மாதத்தில் பனியில் வைத்தால் நீராகியிருக்கும். இதற்குச் செயநீர் என்று பெயர்.

வெடியுப்பு, பழம்புளி இவற்றைச் சமன் கொண்டு இடித்துக் கொளுத்திச் சாம்ப லாக்கிப் பனியில் வைத்தால் செய நீரா கும். செயநீர் வேறு பல முறைகளிலும் செய்

யப்படுவதுண்டு. மிகுந்த காரமுள்ளதாய் இருப்பது கடுங்கார செயநீர் எனப்படும்

11. கலிக்க மிடுதல், ஆக்கிராணம் செய்தல், நசியமிடுதல், சுருக்குக் கொடுத்தல் என்ருல் என்ன ?

தலைநோய், சளி பிடித்தல், சன்னி, பாம்புவிடம் இவைகளுக்குக் கண்ணில் மருந்திடுவதுண்டு. இதற்குக் கலிக்கமிடுதல் என்று பெயா.

தலைவலி, மயக்கம், மூளைக் கோளாறு முதலியவைகளுக்கு மூக்குப் பொடி போடுவதுபோல் மருந்தைப் போடுவதுண்டு, அல்லது முகர்வதுண்டு. இதற்கு ஆக்கிராணம் என்று பெயர்.

பீனிசம், தலைவலி முதலியவற்றிற்கு மூக்கில் மருந்து விடுவதுண்டு. இதற்கு நசியமிடுதல் என்று பெயர்.

ஒரு ஓட்டை அடுப்பின் மீது வைத்து அதன் மீது மருந்துப் பொருளை வைத்துத் தீ எரிக்கவேண்டும். அப்போது செயநீர், அல்லது மூலிகைச் சாற்றை மருந்துப் பொருளின் மீது விட்டுப் புகையாமல் அதைப் புரட்டிக் கொடுக்கவேண்டும். இதற்குச் சுருக்குக் கொடுத்தல் என்று பெயர்.

## 12. சித்தர் மருந்து வகைகளின் கால அளவுகள் (வயதுகள்) யாவை?

கியாழம், குடிநீர், சாறு— 3 மணி நேரம்
சூரணம், வடகம், பிட்டு, வெண்ணெய்— 3 மாத காலம்
லேகியம், நெய், மனபாகு, தைலம்—8 ,,
எண்ணெய், மாத்திரை — 1 ஆண்டு ,,
ரச பதங்கம் 10 ,,
பற்பம் 1 ,,
செந்தூரம், கட்டு, கற்பம், ரசமணி 100 ஆண்டுக்கு மேலும்
திராவகம் 50 ஆண்டுக்காலம் வரை

## 13. தைலம், எண்ணெய் காய்ச்சும் முறை யாது?

சேர்க்க வேண்டிய மருந்துச் சரக்குகளை அரைத்தோ, கியாழமிட்டோ எண்ணெயில் சேர்த்துக் காய்ச்சுவதுண்டு. இதற்குத் தைலம் என்று பெயர். எண்ணெயும் இவ்வாறே காய்ச்சப்படுவதுண்டு. இவற்றுள் தைலம் பெரும்பாலும் மேற்பூச்சாகப் பயன்படுத்தப்படும். எண்ணெய் பெரும்பாலும் உள்ளுக்குக் கொடுப்பதுண்டு.

காய்ச்சும்போது சரக்குகளும் எண்ணெயும் ஒன்றுபட்டுச் சிட சிட என்று ஒலி ஏற்படும். அவ்வொலி அடங்கி விட்டால் தைலம் அல்லது எண்ணெய் பதமாகும் நிலைக்கு வந்துவிட்டது என்று கருதவேண்டும். ஆயினும், கல்கம் (அடியில் தங்கியிருக்கும் சரக்கு) சற்றுத் தண்ணீருடன் இருக்கலாம். ஆதலால், ஒரு கொம்பினால் கல்கத்தைக் கலக்கி நெருப்பில் எண்ணெயை விட்டால், சிடசிடப்பின்றி திக்கென்று எண்ணெய் பற்றி எரிந்தால் தைலம் அல்லது எண்ணெய் பதமாகக் காய்ந்துவிட்டது என்று கருதவேண்டும். மற்றும் இச்சமயத்தில் கல்கம்கொம்பால் எடுக்க மொத்தையாக வாராது. பெருமணல் போலாகி ஒன்றோடொன்று ஒட்டாமல் இருக்கும். விரலால் பிடித்துப் பாத்தால் இது தெரியும்.

தைலம் அல்லது எண்ணெய் பதமாகக் காயாமல் கல்கத்தில் ஈரம் இருக்குமானால், தைலம் அல்லது எண்ணெயிலும் ஈரம் இருந்து பூஞ்சக்காளான் உண்டாகும். இப்படிப்பட்ட தைலம் அல்லது எண்ணெயில் காரல் உண்டாகிக் குணம் கெடும்.

கல்கத்தின் பாகத்திற்கேற்பத் தைலத்தை மிருது பாகம், மத்திய பாகம், கரபாகம் என மூன்று தரமாகத் தயாரிக்கின்

றனர். கல்கத்தை விரலால் அழுத்திப் பார்த்துத் தரப்படுத்துவர். மிருது பாகம் உட்கொள்வதற்கும், மத்திய பாகம் வெளி உபயோகத்திற்கும்; கரபாகம் தலைக்குத் தேய்த்துக்கொள்ளவும் பயன்படுத்தப் படும்.

## 14. சரியானபடி லேகியம் செய்யும் முறை யாது?

பனைவெல்லம் அல்லது நல்லவெல்லம் அல்லது சர்க்கரையில் பாகு எடுத்து, அதில் இடித்த மருந்துப் பொருள்களின் தூளைக் கொட்டிக் கிண்டி லேகியம் செய்வதுண்டு. பாகு சரியான பதத்தில் இல்லாவிட்டால் லேகியம் சரியாக அமையாது: லேகியத்தில் பூஞ்சக்காளான் உண்டாகிக் காரல் ஏற் பட்டு விடும். பாகு முதிர்ந்து விட்டால் லேகியம் இளக்காக இல்லாமல் கல்போல் ஆகிவிடும்; அல்லது சில லேகியங்கள் மணல் போலாகிவிடும். இதனால் லேகியத்தின் தன்மை கெடும்.

லேகியத்திற்குச் சரக்குகளை இடித்து வஸ்திரகாயம் செய்வது நல்லது. இவ்விதம் செய்வது கடினமாகையால் சிறுங்கண் சல்ல டையில் சல்லித்துக் கொள்ளலாம்.

## பாகு எடுக்கும்போது கவனிக்க வேண்டுபவை.

பாகு வரும்போது துடுப்பு அல்லது கொம்பால் அதைத் தூக்கி விடும்போது கடைசித் துளிகூட மெல்லிய இழைபோன்று கீழே ஒழுகினுல் சரியான பாகு என்று அறிய வேண்டும். இழைபோன்று விழுவதை விரல்களால் பிடித்தால் இரு விரல்களையும் பிணைத்து நிற்கும். விரல்களைப் பிரித்தால் உண்டாகும் இழைக்க ஏற்றவாறு ஏழுவகையான பாகுகளை மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் விரல்களைப் பிரிக்கும் போது வெகு விரைவிலோ தாமதித்தோ பிரியாமல் இருப்பதே சரியான பாகாகும். மேலும் பாகு எடுக்கும்போது ஓர் அகலமான தட்டில் நீர் ஊற்றி அதில் பாகை விட்டால் அது தண்ணீரில் அமிழ்ந்து கரையாமலும் சிதருமலும் இருப்பதே சரியான லேகியப் பாகாகும். சரியான பாகு வந்தவுடன் இறக்கிக் கீழே வைத்துச் சூரணத்தைக் கொட்டிக் கிளறவேண்டும்.

பாலில் சர்க்கரை அல்லது வெல்லத்தை இட்டுப் பாகு எடுத்து லேகியம் செய்வது கடினம். ஏனெனில் பாலில் பாகு அறிவது கடினம். ஆதலால், இவ்வாறு செய்யும் லேகியத்தில் ஈரம் இருக்குமென்று தோன்றினால், சில நாட்கள் வரை சூரியபுடம் வைத்து எடுத்துக்கொண்டால் சரியாகிவிடும். பஞ்ச தீபாக்கினி லேகியம் இவ்வகையைச் சேர்ந்ததாகும்.

## 15. சூரணம் செய்வது எப்படி?

அதைச் சுத்தி செய்வது எப்படி?

சூரணத்திற்குச் சேர்க்க வேண்டிய மருந்துப் பொருள்களைத் தனித்தனியாக இடித்துச்சல்லித்துஅளவுபடி ஒன்று சேர்த்து அதை மறுபடியும் சல்லித்துக் கொள்ள வேண்டும். இதனால் மருந்துப் பொருள்கள் ஒன்றுக்கொன்று நன்றாய்க் கலக்கும்.

மேற்கண்டபடி சூரணம் செய்தாலும் பொருள்கள் ஒன்றோடொன்று சரியாகக் கலவாமலும் இருக்கலாம் அதனால் சூரணத்தைப் பாலில் பிட்டவியல் செய்து காய வைத்து, இடித்துச் சல்லித்துக் கொள்வது நல்லது.

ஒரு மண் பாத்திரத்தில் பாலை ஊற்றி வாய்க்குத் துணிகட்டி அதன் மீது சூர

ணத்தைக் கொட்டி வேருெரு மண் பாத்தி ரத்தால் மூடிப் பால் சுண்டும் வரை எரித்து எடுத்துக்கொள்வது பிட்டவியல் எனப்படும். இதனுல், சூரணம் பாலாவியில் வெந்து மருந்துப் பொருள்களின் சத்து ஒன்ருே டொன்று கலக்கும்.

16. உலோக மாரணம் என்பது என்ன ?

உலோகங்களைப் புடமிட்டு நீருக்கு வதற்கு உலோக மாரணம் என்று பெயர்.

சூதம், கெந்தி, சாரம், வெடியுப்பு, வெள்ளைப்பாஷாணம், பூரம், வீரம் இவற் றைச் சமனெடை எடுத்துப் பழச்சாற்ருல் ஆட்டி உலோகத் தகடுகளின்மேல் பூசிச் சீலைமண் செய்து கஜபுடமிட உலோகங்கள் நீறும்.

17. சித்தர் வைத்தியத்தின் மேன்மைகள் யாவை ?

1. மேல்நாட்டு வைத்தியர்களால் தீரா தென்று கைவிடப்பட்ட வியாதிகளைச் சித்த வைத்தியர்கள் குணப்படுத்தி யிருக்கின் றனர்.

2. சத்திர சிகிச்சை (ஆபரேஷன்) செய்து நீக்க வேண்டிய வியாதிகளைச் சித்த வைத்தியர்கள் உள்ளுக்கு மருந்து கொடுத் துக் குணப்படுத்தி யிருக்கின்றனர்.

3. சித்தர்கள், உடலில் நோய் அணுகாமல் ஆயுளை வளர்க்கும் மருந்துகளைக் கண்டு பிடித்திருக்கின்றனர். அவை கற்ப மருந்துகள் எனப்படும்.

4. மேல் நாட்டு முறையில் மிகுந்த செலவில் தீர்க்கக்கூடிய வியாதிகளைச் சித்த வைத்தியத்தின் மூலம் குறைந்த செலவில் தீர்க்கலாம்.

## 18. சீலமண் என்பது என்ன?

புடம் போடுவதற்கு அகல்கள் குடுவைகள் முதலியன பயன்படுத்தப்படும். மருந்திட்ட அகல் அல்லது குடுவையின் வாய்ப் புறத்தை அகல் அல்லது ஓட்டால் பொருந்த மூடி, ஒரு துணியில் கல், மண் இல்லாத களிமண்ணைப் பூசிப் பொருந்த மூடின வாய்ப் புறத்தைச் சுற்றிப் பிகுவாகச் சுற்ற வேண்டும். இவ்வாறு 5 அல்லது 7 தடவை சுற்றிக் காயவைப்பதுண்டு. இதற்குச் சீலமண் என்று பெயர்.

## 19. சுடர்த் தைலம் இறக்கும் முறையை விவரி.

மருந்துப் பொருள்களை அரைத்து ஒரு துணியில் பூசி ஒரு கம்பியில் சுற்றிக் கொளுத்தினால் சொட்டுசொட்டாக எண்ணெய் விழும். இதை ஒரு பாத்திரத்தில் விழும்

படிச் செய்ய வேண்டும். இவ்வாறு சேக ரிக்கும் தைலத்திற்கு 'சுடர்த்தைலம்' என்று பெயர். கொளுத்தும் போது மருந்திற்குத் தொடர்பான எண்ணெய் விட்டு எரிவது நிற் காமல்படிக்குச் செய்யவேண்டும்.

**20.** குழித்தைலம் இறக்கும் முறையை விவரி.

மருந்துப் பொருள்களை ஒரு மண் பாத் திரத்தில் இட்டு, அப்பாத்திரத்தின் அடியில் துளைகள் செய்து மேலோடு மூடி சீலை மண் செய்யவேண்டும். பூமியில் குழி தோண்டி அதில்ஒரு பாத்திரத்தை வைத்து அதன் மேல் மருந்துச் சரக்குள்ள பாத்திரத்தை வைத்து இரண்டும் பொருந்துமிடத்தில் சீலைமண் சுற்ற வேண்டும். குழி அவ்விரண்டு பாத்திரங்களின் உயரத்திற்கு ஆழ மாக இருக்கவேண்டும். பிறகு மேல் பாத்தி ரத்தின் உச்சியிலும் பக்கத்திலும் தேவை யான வரட்டிகளை அடுக்கித் தீ வைத்தால் மேல் பாத்திரத்தில் உள்ள மருந்து சூட் டால் உருகி எண்ணெய் கக்கும். அவ்வெண் ணெய் மேல் பாத்திரத்தின் துளை வழியாகக் கீழ்ப்பாத்திரத்தினுள் விழும். இந்த எண் ணெய்க்குக் குழித்தைலம் என்று பெயர்.

21. மருந்து செய்வதற்கான எரிப்புத் திட்டங்கள் யாவை ?

தீபாக்கினி — 2 விரல் கனமுள்ள ஒரு விரகால் எரிப்பது.

சடராக்கினி — 2 விரல் கனமுள்ள 4, 5 விர கால் எரிப்பது.

கமலாக்கினி — 2 விரல் கனமுள்ள இரண்டு விரகால் எரிப்பது.

காடாக்கினி — அதிக தீயால் எரிப்பது

22. நான்கு வகையான மருந்துகள் யாவை ?

1. லேகியம் — நக்கிச் சாப்பிடும் மருந்து
2. கோஷியம் — உறிஞ்சி விழுங்கும் மருந்து
3. பேபம் — குடிக்கும் மருந்து
4. காதிபம் — மென்று தின்னும் மருந்து

23. மருந்து வகையில் வடகம் எவ்வாறு செய்யப்படும் ?

வடகம் மாத்திரை செய்வது போன்றே செய்யப்படும். ஆனல், மாத்திரைகளை விடச் சற்றுப் பெரியவைகளாகச் செய்யப்பட வேண்டும். சரக்குகளைத் தண்ணீராலோ வெல்லத்தாலோ அரைத்து அல்லது பாகு செய்து அதில் சூரணத்தைக் கலந்து உருட்டிச் செய்யப்படும்.

24. மெழுகு தைலம் தயாரிக்கும் முறை யாது?

திராவகம் வடிப்பதைப் போன்றே மெழுகுதைலம் தயாரிக்கப்படும். தொடர் எண் 9 இல் பார்க்கவும்.

25 நெய் தயாரிக்கும் முறை யாது?

இது எண்ணெய் தயாரிப்பதைப் போன்றே தயாரிக்கப்படும். ஆனால், ஈயம் பூசிய பாத்திரத்தில் காய்ச்ச வேண்டும். நெய்யின்மேல் நுரை கிளம்பும் போது கல்கத்தை எடுத்து விரலால் உருட்ட அது விரலில் பற்றாது. இதுவே நெய்க்குப் பக்குவம். இது மிருது பாகத்தில் தயாரிக்கப்படுகிறது.

## 2. உடல் தத்துவம்

1. உடல் தத்துவங்கள் எத்தனை? அவை யாவை?

உடல் தத்துவங்கள் 96. அவை:
முதல் தத்துவங்கள்: 30

| | |
|---|---|
| பூதம் | — 5 |
| பொறி | — 5 |
| புலன் | — 5 |
| ஞானேந்திரியம் | — 5 |
| கர்மேந்திரியம் | — 5 |
| கரணம் | — 4 |
| அறிவு | — 1 |
| ஆக | 30 |

## இரண்டாம் தத்துவங்கள்: 30

| | |
|---|---|
| நாடி | — 10 |
| வாயு | — 10 |
| ஆசயம் | — 5 |
| கோசம் | — 5 |
| ஆக | 30 |

## மூன்றும் தத்துவங்கள் 36

| | |
|---|---|
| ஆதாரம் | - 6 |
| மண்டலம் | - 3 |
| மலம் | - 3 |
| தோடம் | - 3 |
| ஏடணை | - 3 |
| குணம் | - 3 |
| இராகம் | - 8 |
| வினை | - 2 |
| அவஸ்தை | - 5 |
| ஆக | 36 |

2. ஐம்பெரும் பூதங்கள் யாவை?

| | |
|---|---|
| பிருதிவி | (மண்) |
| அப்பு | (நீர்) |
| தேயு | (அனல்) |
| வாயு | (வளி) |
| ஆகாயம் | (வான்) |

3. பூதங்கள் ஐந்திற்கும் சக்கரங்களைக் கூறு.

| | | |
|---|---|---|
| பிருதிவி | – | நாற்கோணம் |
| அப்பு | – | மூன்றும் பிறைக்கோணம் |
| தேயு | – | மூக்கோணம் |
| வாயு | – | அறுகோணம் |
| ஆகாயம் | – | வட்டம் |

4. பூதங்களின் உடற் கூறுகள் யாவை?

பிருதிவி – எலும்பு, தோல், மாமிசம், மயிர், நாடி முதலியன.

அப்பு – உதிரம். மச்சை. சுக்கிலம், நீர். மூளை முதலியன.

தேயு – அகங்காரம், சோம்பல், மைதுனம், பயம், நித்திரை முதலியன.

வாயு — ஓடல், இருத்தல். நடத்தல் கிடத்தல், நிற்றல் முதலியன.

ஆகாயம் — காமம். குரோதம், உலோபம். மதம், மோகம் முதலியன.

---

5. பூதங்களின் தேவதைகளையும் மந்திர எழுத்துக்களையும் கூறுக.

| | | | | |
|---|---|---|---|---|
| பிருதுவி | — | பிரமா | — | ந |
| அப்பு | — | விஷ்ணு | — | ம |
| தேயு | — | ருத்திரன் | — | சி |
| வாயு | — | மகேச்வரன் | — | வ |
| ஆகாயம் | — | சதாசிவன் | — | ய |

6. ஐம்பொறிகள் யாவை? ஞானேந்தி ரியங்கள் யாவை?

ஐம்பொறிகள்

| | |
|---|---|
| மெய் | மூக்கு |
| வாய் | செவி |
| கண் | |

ஞானேந்திரியங்கள்

| | | |
|---|---|---|
| சோத்திரம் | — | செவி |
| தொக்கு | — | உடம்பு |
| சட்சு | — | கண் |
| சிங்குவை | — | நாக்கு |
| ஆக்கிராணம் | — | மூக்கு |

குறிப்பு: ஐம்பொறிகளும். ஞானேந்திரியங்களும் ஒன்று எனக் கூறுவர்.

7. ஐம்புலன்கள் யாவை? கன்மேந்திரியங்கள் யாவை?

ஐம்புலன்கள் (இந்திரிய உணர்ச்சி)

| | | |
|---|---|---|
| சத்தம் | -- | (ஓசை) |
| பரிசம் | -- | (ஊறு) |
| ரூபம் | -- | (ஒளி) |
| ரசம் | -- | (சுவை) |
| கந்தம் | -- | (நாற்றம்) |

கன்மேந்திரியங்கள்

வாக்கு — (வாய்)
பாதம் — (கால்)
பாணி — (கை)
பாயுரு — (குதம்)
உபத்தம் — (பாற்குறி)

குறிப்பு: ஐம்புலன்களும் கன்மேந்திரியங்களும் ஒன்று என்பாரும் உண்டு. அது ஆராய்தற்குரியதாகும்.

8. கன்மேந்திரியங்களின் வேலைகள் யாவை? ஆதாரங்களுடன் கூறுக?

வாக்கு – வாய். பேச ஆகாசம் என்ற பூதம் ஆதாரம்.

பாதம் – கால். நடக்கவும், தூலவுடம்பைச் சுமக்கவும் தேயு என்ற பூதம் ஆதாரம்

பாணி - கை. தானம் செய்ய வாயு என்ற பூதம் ஆதாரம்.

பாயுரு– குதம். சக்கைப் பொருளை வெளியேற்ற அப்பு என்ற பூதம் ஆதாரம்.

உபத்தம் -- பாற்குறி. ஆனந்த மயத்தை உண்டாக்கப் பிருதிவி என்ற பூதம் ஆதாரம்.

9. தச நாடிகள் எவை? அவற்றைப் பற்றிய விவரங்கள் யாவை?

தச நாடிகள்

1. இடகலை 6. சிங்குவை
2. பிங்கலை 7. அலம்புடை

3. சுழிமுனை 8. புருடன்
4. காந்தாரி 9. குகு
5. அத்தி 10. சங்கினி

(1) இடகலை : இது வலக்கால் பெரு விரலினின்று மேலெழும்பி மூலாதாரத்தின் வழியாய் இருதயத்திற்கு இடப்பக்கமாய் ஓடி, கத்தரிக்கோல் மாறலாக மாறிச் சிரசிலுள்ள சந்திர மணடலத்தை அடைந்து, இடது நாசித் துளையின் மூலம் பதினாறு அங்குலம் பாய்ந்து இயங்குவது. இதனை வாத நாடி என்பர்.

(2) பிங்கலை : இது இடக்கால் பெருவிரலிலிருந்து மேலெழும்பி மூலாதாரத்தின் வழியாய் இருதயத்திற்கு இடப் பக்கமாய் ஓடி, கத்தரிக்கோல் மாறலாக மாறிச் சிரசிலுள்ள அக்கினி மண்டலத்தை அடைந்து வலது நாசித் துளையின் வழியாகப் பன்னிரண்டு அங்குலம் பாய்ந்து இயங்குவதாகும். இதனைப் பித்த நாடி என்பர்.

(3) சுழிமுனை : இது இடகலை, பிங்கலை இவற்றுக்கிடையே மூலாதாரத்திலிருந்து உச்சி வரை ஓடி, வலது இடது நாசித்துளைகளிடையே இயங்குவதாகும் இதனைக் கபநாடி என்பர்.

(4) காந்தாரி : இது, இடக்கண்ணில் வியாபிக்கும் என்பர்.

(5) அத்தி : இது. வலக்கண்ணில் வியாபிக்கும் என்பர்.

(6) சிங்குவை : இது, இடக்கையில் வியாபிக்கும் என்பர்.

(7) அலம்புடை : இது, நாவில் வியாபிக்கும் என்பர்.

(8) புருடன் : இது, பாற்குறியில் வியாபிக்கும் என்பர்.

(9) குகு அல்லது குகுவை : இது, வலக்கையில் வியாபிக்கும் என்பர்.

(10) சங்கினி : இது, சிரத்தில் வியாபிக்கும் என்பர்.

இந்தப் பத்து நாடிகளும் மூன்று தோடங்களாகிய வாத, பித்த, கபங்களுக்கு உதவியாக இயங்குகின்றன. வாத, பித்த, கபங்களே முறையே இடகலை, பிங்கலை, சுழிமுனை நாடிகள் என்று வழங்கப்படுகின்றன.

இவற்றை முறையே, பிரமா, விஷ்ணு ருத்திரன் என்று கூறுவார்கள்.

உலகத் தோற்றத்திற்கு அடிப்படையான பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்

என்ற ஐம்பெரும் பூதங்களுள் பிருதிவியும் ஆகாயமும் மாறுதலற்றவை. மற்ற மூன்று பூதங்களும் காரண சரீரத்தில் கூடுதல், குறைதல் என்னும் மாறுபாடு அடையும் தன்மையுள்ளவை. இவற்றுள் வாயு வாத நாடியாகவும், தேயு பித்த நாடியாகவும், அப்பு கபநாடியாகவும் விளங்குகின்றன.

அப்புவாகிய பூதமானது, அது உட்கொள்ளப்பட்டிருக்கும் இடத்தின் அளவே பரவி நிற்கும்' ஆனால். தேயுவானது வாயுவின் அடிப்படையால் அப்புவை விட மிகுந்த அளவு பரவி நிற்கும். ஆனால், வாயுவானது திடதிரவ பதார்த்தங்களிலும் ஆகாயத்திலும் பரவி நிற்கும். ஆகவே, பித்தமும் கபமும் வாதத்தில் அடங்கும் என்பர்.

10. தச வாயுக்கள் யாவை? அவற்றைப் பற்றிய விவரங்கள் யாவை?

தசவாயுக்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பிராணன் | 6. | நாகன் |
| 2. | அபானன் | 7. | கூர்மன் |
| 3. | வியானன் | 8. | கிருகரன் |
| 4. | உதானன் | 9. | தேவதத்தன் |
| 5. | சமானன் | 10. | தனஞ்செயன் |

மூன்று தோடங்களாகிய வாதம், பித்தம், கபம் இவை ஒவ்வொன்றின் கூடுதல் குறைதல்களினால் சப்த தாதுக்கள் மாறுபடு

கின்றன. இதனால் பலவித வியாதிகள் தோன்றுகின்றன. ஆகவே, அந்தந்த இடத்திற்கும் செயலுக்கும் தகுந்தாற் போல் பத்து வாயுக்களும் செயல் புரிகின்றன.

(1) பிராணன் :- இது லலாட மத்தியில் தோன்றி, மூலாதாரத்தில் குதித்து, நாபித்தானத்தில் முட்டிச் சிரசில் உள்ள சந்திர மண்டலத்தை இருப்பிடமாகக் கொண்டு முக்கியமாக உயிரும் உடலும் இயக்கமடையச் சுவாசித்தலுக்குக் காரணமாய் உள்ளது. இது நாசியில் 12 அங்குலம் புறப்பட்டு, 4 அங்குலம் வெளியே சென்று, 8 அங்குலம் உள்ளே அடங்கும்.

(2) அபானன் :- இது மூலாதாரத்தில் நின்று கீழ்நோக்கிக் குதத்திற்கும் குய்யத்திற்கும் நடுவே நின்று மலம், மூத்திரம், வியர்வை, விந்து முதலியவைகளைக் கழியச் செய்யும்.

(3) வியானன் .- இது இதயத்தை இருப்பிடமாக்கிக் கொண்டு, உடல் முழுதும் பரவி நீட்டல், மடக்கல், உணர்தல் போன்ற செய்கைகளுக்குக் காரணமாக நின்று, உண்ட அன்னத்தின் சாரத்தை உரிய இடங்களில் நிரப்பும்.

(4) உதானன் :- இது மார்பை இடமாகக் கொண்டு வயிற்றில் வெப்பத்தை எழுப்பி, உண்ட உணவைச் சீரணிக்கச் செய்து அதன்

சக்தியை அதனதன் நாடி நரம்புகளின் மூலம் செலுத்தி உடலை வளர்க்கக் காரணமாக உள்ளது.

(5) சமானன் :- இது நாபியை இருப்பிடமாகக் கொண்டு உடலில் வாயுக்களைக் கூடுதலாகவோ குறைவாகவோ செல்லவொட்டாமல் சமப்படுத்தி, தண்ணீர் முதலியவற்றிலுள்ள குற்றம் குறைகளை நீக்கி உடலைக் காத்து வரும்.

(6) நாகன் :- இது எல்லாக் கலைகளுக்கும் ஆதாரமாக நின்று உணர்தல், பார்த்தல் மயிர்க் கூச்செறிதல் போன்ற செய்கைகளுக்குக் காரணமாய் நிற்கும்.

(7) கூர்மன் : இது வாய்மூடல்; திறத்தல், சிரித்தல், கொட்டாவி, கண் இமைத்தல் போன்ற செய்கைகளுக்குக் காரணமாய் நிற்கும்.

(8) கிருகரன் : இது நாக்கு, நாசி இவைகளீல் நின்று இருமல், தும்மல் போன்ற செய்கைகளுக்குக் காரணமாய் நிற்கும்.

(9) தேவதத்தன் :- இது கோபம், மோகம், சோம்பல் போன்ற செய்கைகளுக்குக் காரணமாய் நிற்கும்.

(10) தனஞ்செயன் :- இது உடல் முழுதும் பரவி அந்திய காலத்தில் உடல் வீங்கச்

செய்து, பிராணன் சென்ற பின்பு எல்லா வாயுக்களும் உடலை விட்டு நீங்கிய பின் கடைசியாய்ச் சிரசின் உச்சியிலிருந்து வெடித்து வெளிப்படும்.

11. இராகங்கள் எவை? அவற்றைப் பற்றிய விவரங்களைக் கூறுக.

இராகங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | காமம். | 5. | மதம் |
| 2. | குரோதம் | 6. | மாற்சரியம் |
| 3. | லோபம் | 7. | இடும்பை |
| 4. | மோகம் | 8. | அசூயை |

விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | காமம் | – | அளவு கடந்த ஆசை |
| 2. | குரோதம் | – | கோபம் |
| 3. | லோபம் | – | ஈயாமை(கஞ்சத்தனம்) |
| 4. | மோகம் | – | பிறமாதர் இச்சை |
| 5. | மதம் | – | செருக்கு |
| 6. | மாச்சரியம் | – | பொறாமையின் காரணமாக மனதில் பகைமை கொண்டு நேசிப்பது போல் பேசி கெடுத்தல்; உறவாடிக் கெடுத்தல். |
| 7. | இடும்பை | — | துன்பம் |
| 8. | அசூயை | — | பொறாமை |

12. ஆதாரங்களை முறையாகக் கூறி, உடலில் அவற்றின் நிலைகளைக் கூறுக.

1. மூலாதாரம் 4. அனாகதம்
2. சுவாதிட்டானம் 5. விசுத்தி
3. மணிபூரகம் 6. ஆக்ஞை - என
ஆதாரங்கள் ஆறு ஆகும்.

1. மூலாதாரம் :- இது காலெலும்பு இரண்டும் கதிர் எலும்பும் கூடும் இடமாகிய குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவில் வட்டமாயும் நாலிதழ் மலர் போலவும் அமைந்து 'ஓம்' என்னும் எழுத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கும்.

2. சுவாதிட்டானம் :- இது மூலாதாரத்திற்கு 2 விரற்கடைக்கு மேல், நாபிக்கும் லிங்கத்திற்கும் நடுவில் நடுவீணாந்தண்டின் நடுவில் நாற்கோண வடிவமாகவும் ஆறு இதழ் மலர் போலவும் அமைந்து ந என்னும் எழுத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கும்.

3. மணிபூரகம் :- இது சுவாதிட்டானதிற்கு எட்டு விரற்கடைக்கு. மேல் கோழி முட்டை வடிவத்தில் ஆயிரத்தெட்டு நரம்பு நாளங்களால் சூழப்பட்டிருக்கும் இதற்கு உந்திக் கமலம் என்று மற்றொரு பெயரும் உண்டு. உந்திக்கு நேரே 7 ஆம் பிறைச்

சந்திரனின் வடிவமாகவும் நடுவில் 10 இதழ் மலர் போலவும் அமைந்து 'ம' என்னும் எழுத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கும்.

4. அனாகதம் :- இது மணிபூரகத்திற்குப் பத்து விரற்கடைக்கு மேல், இதயஸ்தானத்தில் முக்கோண வடிவமாகவும், அதன் நடுவில் பத்து இதழ் மலர் போலவும் அமையப் பெற்று 'சி' என்னும் எழுத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கும்.

5. விசுத்தி :- இது அனாகதத்திற்குப் பத்து விரற்கடைக்கு மேல், கண்டஸ்தானத்தில் அறுகோண வடிவமாயும், அதன் நடுவில் பதினாறு இதழ் மலர்போலவும் அமையப் பெற்று, 'வ' என்னும் எழுத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கும்.

6. ஆக்ஞை :- இது விசுத்திக்கு 12 விரற்கடைக்கு மேல், நடுவீணாந்தண்டின் முடிவில் நெற்றி புருவம் இவைகளின் வெளியாய் ஆகாய ஸ்தானத்தில் மூன்று இதழ் மலர் போல் அமையப்பெற்று. 'ய' என்னும் எழுத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கும்.

இந்த ஆறு ஆதாரங்களும், 'ஓம் நமசிவய' என்னும் தத்துவத்தில் இயங்குகின்றன,

13. ஐம்பெரும் பூதங்களுக்குரிய தலங்கள் எவை ?

ஐம்பெரும் பூதங்கள்—தலங்கள்

1. பிருதிவி — காஞ்சீபுரம்
2. அப்பு — திருவானைக்காவல்
3. தேயு -- திருவண்ணுமலை
4. வாயு -- காளா ஸ்திரி
5. ஆகாயம் -- சிதம்பரம்

14. ஆசயங்களின் பெயர்களையும் அவற்றில் நடக்கும் வேலைகளையும் குறிப்பிடுக.

ஆசயங்களின் பெயர்கள்.

1. ஆமாசயம்
2. சலாசயம்
3. மலாசயம்
4. சலாஞ்சாசயம்
5. சுக்கிலாசயம்

ஆசயங்களில் நடக்கும் வேலைகள்

1. நாம் உண்ணும் உணவும் அருந்தும் நீரும் சேருமிடம் ஆமாசயம்.

2. நாம் உண்ட உணவிலிருந்து நீர் பிரிந்து இறங்குமிடம் சலாசயம்.

3. நாம் உண்ட உணவிலிருந்தும் நீரிலிருந்தும் சத்தை உறிஞ்சிக் கொண்டு எஞ்சிய

கழிவுப் பொருள்களைச் சேர்க்குமிடம் மலாசயம்.

4. நாம் உண்ட உணவிலிருந்தும் நீரிலிருந்தும் கழிவுப்பொருள்களாக வெளியேறிய சிறுநீர் தங்குமிடம் சலாஞ்சாசயம்.

5. கரு உற்பத்திக்கு மூலப் பொருளாகிய சுக்கிலம் தங்கும் இடம் சுக்கிலாசயம்.

15. கோசங்களின் பெயர்களையும் அவற்றின் வேலைகளையும் குறிப்பிடுக.

கோசங்களின் பெயர்

1. அன்ன மய கோசம்
2. பிராண மய கோசம்
3. மனோ மய கோசம்
4. விஞ்ஞான மய கோசம்
5. ஆனந்த மய கோசம்

வேலைகள்

1. அன்ன மயம் :- நாம் உண்ட உணவிலிருந்தும் நீரிலிருந்தும் சேகரித்த சத்தானது நம் உடலை நிலைக்கச் செய்கிறது.

2. பிராண மயம் :- பிராண வாயுவும் கன்மேந்திரியங்களும் சேர்ந்து கனவில் சூட்சும சரீரத்துடன் தொடர்பு கொள்ளச் செய்கிறது.

3. மனோமயம் :- மனமும் கன்மேந்திரியங்களும் சேர்ந்து கனவில் சூட்சும சரீரத்துடன் தொடர்புகொள்ளச் செய்கிறது.

4. விஞ்ஞான மயம் :- புத்தியும் ஐம்பொறிகளும் சேர்ந்து கனவில் சூட்சும சரீரத்துடன் தொடர்புகொள்ளச் செய்கிறது.

5. ஆனந்த மயம் :- இனவிருத்திக்கும் காரண சரீரத்திற்கும் ஆதாரமாக இருக்கும்.

16. அவஸ்தைகள் எத்தனை? அவைகளைப்பற்றிய விவரங்கள் யாவை?

அவத்தைகள்-5

சாக்கிரம் துரியம்
சொப்பனம் துரியாதீதம்
சுழுத்தி

இவற்றுள்

சாக்கிரம், லலாட ஸ்தானத்தில் இயங்குகிறது.

சொப்பனம், கண்ட ஸ்தானத்தில் இயங்குகிறது.

சுழுத்தி, இதயஸ்தானத்தில் இயங்குகிறது.
துரியம், நாபி ஸ்தானத்தில் இயங்குகிறது.
துரியாதீதம், குதஸ்தானத்தில் நின்று இயங்குகிறது.

17. அந்தக் கரணங்கள் யாவை? அவற்றைப் பற்றிய விவரங்கள் யாவை?

அந்தக் கரணங்கள்

1. மனம் 3. புத்தி
2. சித்தம் 4. அகங்காரம்

விவரம்

1. மனம், தன் செயலாகிய நினைத்தலை வாயு என்னும் பூதத்தின் ஆதாரத்தால் இயக்குகிறது.

2. சித்தம், தன் செயலாகிய உறுதிபடுத்துதலை அப்பு என்னும் பூதத்தின் ஆதாரத்தால் இயக்குகிறது

3. புத்தி, தன் செயலாகிய நிச்சயித்தலைத் தேயு என்னும் பூதத்தின் ஆதாரத்தால் இயக்குகிறது.

4. அகங்காரம், தன் செயலாகிய செயல் படுத்துதலைப் பிருதிவி என்ற பூதத்தின் ஆதாரத்தால் இயக்குகிறது.

18. மண்டலங்கள் மூன்றையும் அவற்றின் நிலைகளையும் குறிப்பிடுக.

மண்டலங்கள்

1. அக்கினி மண்டலம்
2. சூரிய மண்டலம்
3. சந்திர மண்டலம்

நிலைகள்

1. அக்கினி மண்டலமானது, மூலாதாரத் திற்கு 2 விரற்கடைக்கு மேலேயும் சுவாதிஷ் டானத்திற்குக் கீழேயும் நாற்சதுரமாய் நடுவில் முக்கோண வடிவாகவும் 4 இதழ் மலர் போலவும் இருக்கும்.

2. சூரிய மண்டலம், மணிபூரகத்திற்கும் அநாகதத்திற்கும் இடையில் உந்திக்கு நான்கு விரற்கடைக்குமேல் அறுகோணமாய் இதயகமலத்தில் எட்டு இதழ் மலர்போல ஸ்தானத்தைக் கீழ்நோக்கி இருக்கும்

3. சந்திரமண்டலம், விசுக்திக்கு மேலேயும் ஆக்ஞைக்குக் கீழேயும் சிரசின் மத்திய பாகத்தில் மிகவும் பிரகாசமாய்த்தோன்றும். இதனை அமுத கலை என்பர். இதன் நடுவே பராசத்தி சுந்தரானந்த வாலையாக இருப்பாள்.

19. மும்மலங்கள் எவை? அவற்றின் வேலை கள் யாவை ?

மும்மலங்கள்

ஆணவம், மாயை, காமியம்.

வேலைகள்

ஆணவம், பூரண சுத்தமாகிய ஆத்மாவிற்கு 'யான்' என்ற அறியாமையைக் கற்பித்

துத் 'தனது தன்னுடையது' என்று உலகச் சூழ்நிலையில் உழலச் செய்கிறது.

மாயை, தனக்குச் சொந்தமில்லாததைத் தனது என்று கற்பித்துப் பஞ்ச பூதங்களால் உண்டாகிய மற்ற ஜீவிகளுக்கும் இடையூறு உண்டாக்குகிறது.

காமியம், கண்ணால் கண்டவற்றையெல்லாம் விரும்பி ஆசையுற்று இவ்வுலகில் பாவ புண்ணியங்களை உண்டாக்குகிறது.

20. தோடங்கள் எவை ? அவை எவற்றை ஆதாரமாகக் கொண்டுள்ளன ?

தோடங்கள்

வாதம், பித்தம், கபம் என மூன்று.

வாதம் : இது வாயு என்ற பூதத்தை ஆதாரமாகக் கொண்டு அப்பு, தேயு என்ற பூதங்களின் சேர்க்கையினால் உண்டானதாகும்.

பித்தம் : இது தேயு என்ற பூதத்தை ஆதாரமாகக் கொண்டு அப்பு, வாயு என்ற பூதங்களின் சேர்க்கையினால் உண்டானதாகும்.

கபம் : இது அப்பு என்ற பூதத்தை ஆதாரமாகக் கொண்டு தேயு, வாயு என்ற பூதங்களின் சேர்க்கையினால் உண்டானதாகும்.

21. வாத, பித்த, கபங்கள் எவற்றின் தொழில்கள் ?

வாதம், பித்தம், கபம் – இம்மூன்றும் முறையே வாயு, தேயு, அப்பு என்னும் மூன்று பூதங்களால் இயக்கப்படும் தொழில் களாகும்.

22. வாத, பித்த, கபங்களின் இடம், நாடி, நிறம், வாயு, குணம், தொழில், சுவை-முதலியவற்றைக் கூறுக.

1. வாதம் :

இடம்—பாதம் முதல் நாபி வரை
நாடி— இடகலை.
நிறம்—கருமை, நீலநிறம்.
வாயு—அபானன்.
குணம்—லகு, உற்சாகம். வாசித்தல், அசைவு, சுறுசுறுப்பு, வெப்பம், சொரசொரப்பு,
தொழில்–மலம், மூத்திரம், வியர்வை, விந்து முதலியவைகளை வெளியேற்றல்.
சுவை :– புளிப்பு.

2. பித்தம்:

இடம் —நாபியிலிருந்து கண்டம் வரை
நாடி —பிங்கலை.
நிறம் — மஞ்சள், சிவப்பு, சிவப்பு அடங்கிய பச்சை.

வாயு —பிராணன்

குணம் ---அதிக உஷ்ணம், படபடப்பு, நீர் சுரத்தல்.

தொழில்—இரத்த தாது, வியர்வை, உமிழ் நீர், தோல், கண், வயிறு-முதலிய இடங்களில் நின்று பசி, தாகம், சுவை, சீரணம், புத்தி, ஞாபகம், பார்வை முதலியவைகளை இயங்கச் செய்வதாகும்.

சுவை :– கசப்பு

3. கபம்.

இடம் ---கண்டத்திலிருந்து சிரசின் உச்சி வரை.

நாடி ---சுழிமுனை.

நிறம் ---வெண்மை.

வாயு ---சமானன்.

குணம் ---சீதளம், வழவழப்பு, மினுமினுப்பு, கனத்தல், மந்தத்துவம், ஸ்திரத்தன்மை, நாற்றம் முதலியன.

தொழில் – உடலின் வெப்பத்தைச் சமனப்படுத்தி மிதமாக வைத்திருப்பதுடன், உடலுக்குப் பளபளப்பும் கீல்களுக்கு உறுதியும் தருவதாகும்.

சுவை – இனிப்பு.

23. குணங்கள் எவை? அவற்றின் தன்மைகளைப் புலப்படுத்துக.

சாத்வீகம், ராஜசம், தாமசம், என்பன குணங்களாகும்.

### தன்மைகள்

1. சாத்வீகம்–அருள், ஐம்பொறி அடக்கல், ஞானம், தவம், பொறை, மேன்மை, வாய்மை, மௌனம் இவற்றைக் கொண்டிருத்தல்.

2. ராஜசம் – ஊக்கம், வீரம், ஞானம், தருமம், தவம், தானம், கல்வி, கேள்வி இவற்றைக் கொண்டிருத்தல்.

3. தாமசம் – ஒழுக்கமின்மை, நீதிவழி நில்லாமை, கொலை, களவு, கோபம், காமம், சோம்பல், நெடுந்துயில் பெருண்டி, பொய், மறதி, வஞ்சம் இவைகளைக் கொண்டிருத்தல்.

24. வேகங்கள் எத்தனை ? அவை எவை? அவற்றைப் பற்றிய விவரங்கள் யாவை ?

வேகங்கள் 14, அவை :

| | |
|---|---|
| 1, வாதம் | 8. விழிநீர் |
| 2. தும்மல் | 9. காசம் |
| 3 சிறுநீர் | 10. இளைப்பு |
| 4 மலம் | 11. நித்திரை |
| 5. கொட்டாவி | 12. சத்தி |
| 6. தீபனம் | 13. சுக்கிலம் |
| 7. தாகம் | 14. சுவாசம் |

### விவரம்

வேகங்கள் பதினன்கும் வாதத்தின் அடிப்படையில், ஒவ்வொரு இடத்திற்கும் தகுந்தாற்போல் வாயுவின் கூடுதல் அல்லது குறைவினுல், அதற்கேற்ப

பித்தமும் கபமும் மாறுபாடு அடைவதால் உடலுக்கு வேண்டிய லகுத்தன்மையைக் கொடுத்து உயிர் வாழ் வதற்கு ஆதாரமாகவே இயங்குகின்றன.

1. வாதம்- வாயுவை அடக்குவதால் மார்பு நோதல், குன்மம, உதரவாதம், அக்னி மந்தம், மலசலம் கட்டுப்படுதல், உடல் முழுதும் வலித்தல் போன்ற நோய்கள் உண்டாகும்.

2. தும்மல்- இது அப்பு வாயுவின் கூடுதல் குறைவினுல் உண்டாவதாகும். இதை அடக்குவதால் சிரசிற்குச் சம்பந்தப்பட்ட, மூளை, கண், காது, தொண்டை போன்ற பாகங்களில் வியாதிகள் தோன் றும். மேலும் முகம் இழுத்தல், அதிக உஷ்ணத்தினுல் வாய்வு உண்டாதல் போன்றவை உண்டாகும்,

3. சிறுநீர் —கபமும் வாயுவும் சேர்ந்து மாறுபாடு அடைவதால் நீர்க்கட்டு ஏற்படுகிறது. இதனுல் கீல் சந்துகளில் உள்ள பூந்தசைகளில் நோக்காடு உண்டா கும்.அடிவயிறு பருத்து மகோதரம்போன்ற நோய்கள் உண்டாகும் மற்ற பூந்தசைகளில் அபான வாயு சேர்ந்து வீங்கி வலிக்கும்.

4. மலம்—மலக்கட்டு ஏற்படுவதால் அங்குச் சேர்ந்திருக்கும் அபான வாயுவானது வெளிப்பட்டு விடும். இதனுல் சலதோஷம் உண்டாகும், தொடை, எலும்பு முதலியவைகளிலும் முழங்கால் கீல்களிலும் இயக்கம் தடைப்பட்டு நோக்காடு உண்டாகும். நுரை யீரல், ஈரல், இருதயம் போன்ற மார்பினுள் அடங்கிய

உறுப்புக்களில் வாய்வு சம்பந்தப்பட்ட நோய்கள் உண்டாகும். மலக்குடல் மேலும் சுருங்கி அபான வாயு சேர்ந் துவிடும்.

5. கொட்டாவி- இதை அடக்குவதால் முகம் சுருங்கும்; அன்னம் செரித்திடாமல் மேகநோய். வெட்டை, வெள்ளை, புத்தி பேதலிக்கும் தன்மை போன்ற நோய்கள் உண்டாகும்.

6, 7. தீபனம், தாகம்— இவை ஒன்றுக் கொன்று சம்பந்தப்பட்டவை. இவைகளினுல் உடல் மெலிவு, சப்த தாதுக்கள் ஒடுங்குதல், இதன் காரண மாக உஷ்ண மேலீட்டால் சூலை, மயக்கம், முகம் வாடு தல், இடுப்புநோய் முதலியவை உண்டாகும்.

8. விழிநீர் -இதைத் தடுத்தால் முக எரிவு உண்டாகும். முகம் வீங்குதல், மூக்கு சம்பந்தப்பட்ட நோய்கள், கண்நோய்கள், சிரசில் அழுகிய நாற்றம், களைப்பு முதலிய கபசம்பந்தமான நோய்கள் ஏற் படும்.

9, 10. காசம், இளைப்பு—இவைகளினுல் இரு மல், சுவாசம் மிகுதல், மாரடைப்பு, மேகம், குன்மம் போன்ற நோய்கள் உண்டாகும். மூச்சை வதைக் கும்; தும்மலை உண்டாக்கும்.

11. நித்திரை— இது தேயுவின் கூறு. இதை அடக்குவதால் தலைகனத்தல். கண்நோய், சித்தம் மயங்குதல், நாக்குழறல் போன்ற நோய்கள் உண்டா கும்.

12. சத்தி அல்லது கக்கல்- இதை அடக்குவதால் குஷ்டங்கள், தினவு, பாண்டு, கண்ரோகங்கள், பித்தத்திலுல் உண்டாகும் விஷம், சுவாசகாசம போன்ற நோய்களுண்டாகும்.

13. சுக்கிலம்- இது அப்புவின் கூறு. இதை அடக்குவதால் சுரம், நீர்க்கட்டு, கை கால் சந்துகளில் வலி, மார்பு நோய், பிரமேகம் போன்ற நோய்கள் உண்டாகும்.

14. சுவாசம்- இதை அடக்குவதால் இருமல் நோய், வயிறு பொருமல். அரோசிகம், குலேயிடிப்பு, வெட்டை, வெள்ளே போன்ற நோய்களுண்டாகும.

25. சப்த தாதுக்களேயும் அவற்றைப் பற்றிய விவரங்களேயும் குறிப்பிடுக.

சப்த தாதுக்கள் 7. அவை:

1. ரசம்
2. இரத்தம்
3. தசை
4. கொழுப்பு
5. எலும்பு
6. மச்சை
7. சுக்கிலம்

விவரம் :

1. ரசதாது : ஆமாசயத்தில் குழம்பு பதமாயுள்ள ஆகாரத் துணுக்குகள் பக்குவாசயத்திற்குள் நுழைவதற்குள்ளாக அனல பித்தத்தால சீரணிக்கப்பட்டு, பக்குவாசயத்தின் வழியாக ஊடுருவிச் செல்லக் கூடியதாகவும் இரத்த மயமாகக் கூடியதாகவும் உள்ள சத்துதான் அன்னப்பால் அல்லது ரசதாது

எனப்படும். ஆகாரத்திலிருந்து ரசதாது பிரிந்த பிறகு எஞ்சிய கழிவுப் பொருளே மலமாக வெளியேற்றப் படுகிறது.

2. இரத்ததாது : இது அப்புவின் கூறு. பக்குவாசயத்திலிருந்து வெளிப்பட்ட ரசதாது, சமான வாயுவால் இதயத்திற்குள் செலுத்தப்பட்டு, அங்கு இரஞ்சகம் என்னும் பித்தத்தால் செந்நிறமடைந்து சுத்த இரத்தமாகிறது. இந்த இரத்த தாதுவே நாடிகளின் வழியாக உடல் முழுவதும் பரவுகிறது. ரச தாதுவிலிருந்து இரத்ததாது பிரிந்த பிறகு எஞ்சிய கழிவுப் பொருளே சிறுநீராகச் சலாசயத்தை அடைகிறது. இந்தச் சிறுநீரிலுள்ள சர்க்கரைச் சத்தானது பிரிந்து இரத்தத்துடன் கலந்து விடுகிறது. இரத்தமானது பிராசக பித்தத்தின் தன்மையால் மினுமினுப்புத் தன்மையை அடைகிறகிது; பசையுள்ளதாகவும் இடைவிடாது அசைந்தோடும் தன்மை உடையதாகவும் ஆகிறது. இரத்தத்திற்குச் சிறிது இனிப்பு ருசி உண்டு. இரத்தம் முறிவு ஏற்பட்டால் செந்நிறம் மாறி பசுமை நிறம் அடைந்துவிடும். இரத்தத்தின் மலம், நீர், தோல், ரோமம்.

3. தசை : இது பிருதிவியின் கூறு. இரத்தமானது வாய்வு, பித்தத்தின் சேர்க்கையினல் சிறுசிறு அணுக்களாக மாற்றம் அடைந்து, அவை ஒன்ருேடு ஒன்று சேர்ந்து, நீண்டு, விரிந்து, சுருங்கும் தன்மையுடைய நார்களாகப் பக்குவப்படுகின்றன. இந் நார்கள் உடலிலுள்ள உறுப்புகளுக்குத் தகுந்தாற்

போல் கடினமாகவும் பூந்தசைகளாகவும். பஞ்சு போன்றும் மாறுபாடு அடைகின்றன. இந்நார்களின் சேர்க்கையே தசைகளாகும். ஒரு மனித சரீரத்தில் 555 தசைப் பாகங்கள் உண்டு. தசை, அதன் நீண்டு, விரிந்து சுருங்கும் தன்மையால் உடலுக்கு அசைவைக் கொடுக்கிறது. மேலும், உடலுக்கு வேண்டிய உழைப்பு, கடினத்துவம், உஷ்ணத்தை நிலைத்துக் கிரகிக்கக்கூடிய சக்தி இவை இதற்கு உண்டு. இரத்தத்திலிருந்து தசை நார்கள் தோன்றுவதால் ஏற்படும் கழிவுப் பொருளே குரும்பியும் பீளையும் ஆகும்.

4. கொழுப்பு: இது அப்புவின் கூறு, அப்புவும் கரிப்பொருளும் சேர்ந்த பொருளே கொழுப்பு. இது, உடலின் மற்ற பாகங்களில் புறத்தில் சவ்வுபோல் மூடிக்கொண்டிருக்கும். மேலும் தோலுக்கும் தசைக்கும் இடையில்தான் கொழுப்பிருக்கும், இது இவ்வாறு இருப்பதால், உடல் உட்டினத்தைப் பாதுகாத்து, ஒருவித எண்ணெய்ப் பசையுடன் ஒவ்வொரு பாகத்தையும் மிருதுவாக்கவும், அசையும்பொழுது உறுப்புக்கள் தேய்வு பெறாமல் பாதுகாக்கவும் முடிகிறது. கொழுப்பின் மலம் பித்தமாகும்.

5. எலும்பு: இது பிருதிவியின் கூறு. இவை சிறிதாகவும் பெரிதாகவும் உருண்டையாகவும் தட்டையாகவும் அமையப் பெற்றுள்ளன. முக்கியமாக 208 எலும்புகள் உடலில் உள்ளன. எலும்புகள் உடலுக்கு

அமைப்பைத் தருகின்றன. ஒவ்வொரு எலும்பும் வெளியில் வழுவழுப்புத் தன்மையுடனும் வெண்மை யாகவும் இருக்கும். இது சுண்ணும்புச் சத்தாலும் 'ஒளிரி' என்ற சத்தாலும் ஆக்கப்பட்டது. இவ் விரண்டு சத்துக்களும் ஒருவித ஊன் பசையினுல் ஒன்ருேடு ஒன்று கலந்து எலும்பின் அமைப்பை அடைகின்றன. எலும்புகள் உறுதியானவை. இவை, சிறுவயது முதல் நடுத்தர வயது முடியும்வரை வயதிற்குத் தகுந்தாற்போல் வளரும் தன்மை உடையவை. இக்கட்டத்தில் இதை வளைக்கலாம். நடுத்தர வயதிற்குப் பிறகு எலும்புகள் மிகக் கெட்டியாகி அதன் உள்ளே இருக்கும் புரசலான தாது குறைந்தவுடன் ஓடியும் தன்மை அடையும். எலும்பின் உள்பகுதி சிவப்பு நிறமாய் இருக்கும். எலும்பின் மலம் அழுக்கு.

6. மச்சை: இது அப்புவின் கூறு, எலும்பு தாதுவின் உட்பகுதியில் புரசலாக இருப்பதே மச்சை யாகும், சிறுவயதில் இதுமாவு போன்று அடர்த்தி யாக இருக்கும். இந்தத் தாது வயது ஆகஆகக் கட்டியாகிப் பொறு பொறு என்னும் தன்மையை அடையும். எலும்பின் உறுதி மச்சையின் அடர்த்தி யைப் பொறுத்தது. மச்சையின் மலம் சேத்துமநீர்.

7. சுக்கிலம்: இது அப்புவின் கூறு. மச்சை யிலிருந்துதான் சுக்கிலமும் சுரோணிதமும் உண் டாகின்றன. சுக்கிலத்தில் 'ஒளிரி' என்ற சத்து அடங்கியுள்ளது. 'கரு' என்னும் சீவ அணுக்களும்

நிறைந்திருக்கும். இவை வெண்மை நிறமாயும் பிசு பிசுப்புடனும் குழம்பு போன்று கட்டியாகவும் இருக்கும். சுக்கிலம் சிறிது இனிப்பு ருசி உடையது. சுரோணிதம் புளிப்பு ருசி உடையது. இதன் மலம் தோல், நரம்பு.

26. சரக்குகளின் ஐம்பூதப் பிரிவுகள் யாவை?

1. பிருதிவி — மிருதார்சிங்கி, காந்தம்.
2. அப்பு — வெள்ளை, கவுரி.
3. தேயு — தாளகம், வீரம், பூரம், காந்தம்,
4. வாயு — இலிங்கம், இரசச் செந்தூரம்.
5. ஆகாயம் — சாம்பிராணி, கற்பூரம், அபின், இரசம்.

27. பத்து நாடிகளும் முத்தோடங்களில் அடங்கும் முறையை விளக்குக.

பத்து நாடிகளுள் இடகலை, பிங்கலை, சுழிமுனை மூன்றும் வாதத்தில் அடங்கும். காந்தாரி, அத்தி, சிங்குவை, அலம்புடை ஆகிய இந்நான்கும் பித்தத்தில் அடங்கும். குரு, சங்கினி, புருடன்இம்மூன்றும் கபத்தில் அடங்கும்.

## 3. பத்தியம்

1. பத்தியத்திற் கானவை எவை?

கத்திரிப் பிஞ்சு
முருங்கைப் பிஞ்சு
வாழைப் பிஞ்சு
அவரைப் பிஞ்சு
அத்திப் பிஞ்சு
முள்ளிப் பிஞ்சு
கண்டங் கத்திரிப் பிஞ்சு
வழுதலம் பிஞ்சு
புடலங்காய்
பீர்க்கங்காய்
சுண்டைக்காய்
முளைக்கீரை
அறுகீரை
பொன்னாங்கண்ணிக் கீரை

பரட்டைக்கீரை
புளியாரை
ஆவின்பால்
ஆவின்மோர்
ஆவின் நெய்
சிறுபயறு
துவரை
முயல் இறைச்சி
காடை இறைச்சி
வெள்ளாட்டிறைச்சி
மான் இறைச்சி
சுறாமீன்
சுதும்பு மீன்
வரால்

முதலியன பத்தியத்திற்காகும்.

2. பத்தியத்திற் காகாதவை எவை?

சுரைக்காய்
பாகற்காய்

| | |
|---|---|
| பூசனிக்காய் | கிழங்கு வகைகள் |
| பயிற்றங்காய் | நல்லெண்ணெய் |
| மாங்காய் | உளுவை |
| வாழைக்காய் | விலாங்கு |
| தேங்காய் | கூளிக்கெண்டை |
| அகத்திக் கீரை | கோழி |
| முருங்கைக் கீரை | பன்றி |
| எள்ளு | புகை |
| கொள்ளு | புகையிலை |
| கடலை | கருவாடு |
| அவரை | மதுபானம் |
| புளி | முட்டை மஞ்சள் கரு |
| கடுகு | இச்சை |
| மாவுப் பண்டம் | போகம் |

முதலியன பத்தியத்திற் காகா.

3. இச்சாபத்தியம் என்பது என்ன ?

மருந்தை முறிக்கும் பொருள்களான கடுகு, நல்லெண்ணெய், மீன், கருவாடு முதலியவற்றை நீக்கிப் பத்தியமுள்ள காய்கறிகளைப் பயன்படுத்தலாம். நெய்யில் சீரகமிட்டுத் தாளிதம் செய்து கொள்ளலாம். புகை, பொடி, மது இவற்றை நீக்கியிருப்பது நலம். இதற்கு இச்சாபத்தியம் என்று பெயர்.

4. கடும்பத்தியம் என்பது என்ன?

உப்பு, புளி நீக்கிச் சாப்பிடுவது கடும்பத்தியமாகும். கடும்பத்தியம் இருந்தால் மறுபத்தியம் இருக்கவேண்டும். மருந்து சாப்பிட்டு முடிந்த பிறகு சில நாட்கள் வரைக்கும் பத்தியமாக இருப்பது மறுபத்தியம் எனப்படும். மறுபத்தியத்தின் போது உப்பை வறுத்தும், புளியைச் சுட்டும் பயன்படுத்தலாம். பத்தியத்திற்கான காய்கறிகளை மட்டும் பயன்படுத்தலாம். மற்றும் நெய் சீரகம் தாளிதமிட்டுக் கொள்ளலாம்.

சில மருந்துகளுக்கு வறுத்த உப்பும், சுட்ட புளியும், சேர்த்துக் கடும்பத்தியம் வைப்பதுண்டு.

5. மிகக் கடும் பத்தியம் என்பதென்ன?

புதுக்குடுவையில் சோறு வடித்து உப்பில்லாமல் வெறும் வெந்நீர் மட்டும் சேர்த்துச் சாப்பிடுதல் மிகக் கடும்பத்தியம் எனப்படும்.

மிகக் கடும்பத்தியமுள்ள மருந்துகளைச் சாப்பிடும் போது பத்தியம் தவறினால் கை கால் வீங்குதல் முதலிய தீமைகள் உண்டாகும். நோய்க்கும் மருந்துக்கும் தக்கபடி பத்தியம் வைப்பது முறையாதலால் வைத்தியன் பத்தியத்தை வகைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

6. சுர நோயாளிக்கு என்ன பத்தியம் கூறுவாய்?

சுரத்தின் போது சோறு உண்ணக்கூடாது. நோய்க்குத் தக்கவாறு புனர்ப்பாகக் கஞ்சி அல்லது பார்லி கஞ்சி, அல்லது காப்பி ரொட்டி முதலிய

வற்றைப் பத்தியமாக வைக்கலாம். சுரம் நின்ற குறி ஏற்படும் வரையில் இப்பத்தியம் வைப்பது நலம். ஏனெனில், சில சுரங்கள் அற நீங்காததற்கு முன்பு சோறு சாப்பிட்டால் மீண்டும் வருதலுமுண்டு.

சன்னியோடு கூடிய சுரமானுல் நெற்பொறியை வேகவைத்து அதன் நீரைக் குடிக்கச் செய்ய வேண்டும். மருந்தோடு தக்க பத்தியமும் இருந்தால் சுரம் எளிதில் நீங்கும். ஆதலால், சுரத்தின் தன்மைக்கு ஏற்றவாறு பத்தியம் வைத்து நோயாளியை அதன்படி நடக்கச் செய்வேன். மற்றும் பால் குடிக்கும் குழந்தைக்குச் சுரமிருந்தால் தாயைப் பத்தியமிருக்கச் செய்வேன். தாய்க்குச் சுரமிருந்தால் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடாதிருக்கும்படி அறிவுரை கூறுவேன்.

7. பரங்கிச் சக்கையை முக்கியமானதாகக் கொண்டு செய்யும் மருந்திற்குப் பத்தியம் யாது?

பரங்கிச் சக்கை முக்கியமாகச் சேர்ந்த மருந்துக்குக் கறி மஞ்சள், களிப்பாக்கு, இஞ்சி, மாமிசம், புளிப்பு, கசப்பு, உறைப்பு, இலவணம், கடுகு, நல்லெண்ணெய் முதலியவைகளும் மீன்களும் ஆகா. இவைகள் சேர்ந்தால் மருந்தின் குணங்கெடும்.

## 4. சுத்தி முறைகள்

1. கீழ்க் காண்பவற்றைச் சுத்தி செய்யும் முறையாது?

1. வெள்ளைப்பாஷாணம்
2. கௌரி பாஷாணம்
3. லிங்கம்
4. இரசம்
5. கந்தகம்
6. தாளகம்
7. மனோசிலை
8. நேர்வாளம்
9. சேராங்கொட்டை
10. கொடிவேலி
11. வசநாபி
12. வீரம்
13. வங்கம்
14. நாகம்
15. சிலாசத்து
16. காந்தம்
17. அப்பிரகம்
18. நிமிளை
19. தாமிரம்
20. சகஸ்திரபேதி
21. சிவதை
22. ஊமத்தன் விதை
23. எட்டிக் கொட்டை
24. கள்ளிப்பால்
25. எவாச்சாரம்
26. கரியபோளம்
27. திப்பிலி
28. மிளகு
29. சுக்கு
30. துருசு

### 1. வெள்ளைப் பாஷாணம்?

உழமண்ணைக் கரைத்துச் சீலையில் நனைத்து ஒரு பலம் பாஷாணத்தின்மேல் தேங்காய்ப் பிரமாணத்திற்குக் கனமாகச் சுற்றிக் காயவைத்து ஒரு பெரிய பானையில் முக்கால் பாகம் தண்ணீர் விட்டுத் தொலாந்திரம் கட்டி மூன்று சாமம் எரிக்கச் சுத்தியாகும்.

2. கௌரி பாஷாணம் :

தாய்தந்தையர்களுக்கு மேகநோய் இல்லாத சிறுவர்களின் சிறுநீரில் கௌரி பாஷாணத்தை மூன்று நாள் ஊறப்போட்டு எடுத்துப் பிறகு நீரில் அலம்பி உலர்த்தச் சுத்தியாகும்.

3. லிங்கம் :

முலைப்பாலில் 30 நாழிகை ஊறப் போட்டு எடுத்துக் கழுவி எடுக்க வேண்டும். இவ்விதம் மூன்று முறை செய்யச் சுத்தியாகும்.

4. இரசம் :

ஓட்டடை, வெல்லம், திரிகடுகு, மஞ்சள், கடுகு, செங்கல் தூள், உப்பு இவை ஒவ்வொன்றிலும் இதை அரைத்துக் கழுவி எடுக்கவேண்டும். ஊமத்தன் சாறு, தயிர், கல்சுண்ணும்பின் தெளிந்த நீர் இவைகளிலும் தனித்தனியாக அரைத்து எடுக்கவேண்டும்.

5. கந்தகம் :

இதைக் சிளி கட்டிச்சந்தனக் கியாழம், கோவையிலைச் சாறு, சோற்றுக் கற்றாழைச் சாறு, புளியாரைச் சாறு இவைகள் ஒவ்வொன்றிலும் போட்டு ஒவ்வொரு சாமம் எரித்துப் பிறகு நெய் விட்டுத் தீப்பற்றாமல் உருக்கிப் பசும் பாலில் சாய்க்கவேண்டும். இப்படி ஏழு முறை பாலில் சாய்த்து எடுக்க வேண்டும்.

6. தாளகம்

தாளகத்தைச் சிறுசிறு துண்டுகளாக்கிக் கற்சுண்ணும்பின் மத்தியில் வைத்துப் பணங்கள் (அ)

பனங்கள் காடி விட்டுத் தாளித்துக் குழம்பாக இருக்கும் பதத்தில் கலக்கி ஒரு சாமம் எரித்து எடுக்கவேண்டும். இதைப் போல் மூன்று முறை செய்யச் சுத்தியாகும்,

7. மனோசிலை :

இஞ்சிச் சாற்றில் ஒரு சாமம் அரைத்து மாத்திரைகளாகச் செய்து உலர்த்திக்கொள்க.

8. நேர்வாளம் :

வாளம் 5 பலம் எடுத்து ஒருபடி எருமைச் சாணிக் கரைசலில் ஒருநாள் ஊற வைத்துக் கழுவி, ஆற்று மணலில் நீர்தெளித்துக் கிளறி அதில் மேற்படி வாளத்தைப் போட்டு நன்ருய்க் கலந்து ஒரு நாள் வைக்கவேண்டும். பிறகு கழுவிச் சுத்தம் செய்து மேலோடு நீக்கி, நாக்கு (முளை) எடுத்து அலம்பிக் காய வைத்துப் புளியிலைச் சாறும். பழம் புளியும் சேர்த்துக் கரைத்து அதில் வாளத்தைப் போட்டுக் கொதிக்க வைத்துக் கழுவி உலர்த்த வேண்டும். பிறகு புளியரணைச் சாற்றில் கொதிக்க வைத்துக் கழுவிக் காய வைக்கவேண்டும். இவ்விதம் தேங்காய்ப் பாலிலும், மோரிலும், வெற்றிலைச் சாற்றிலும். திரிபலாக் கஷாயத்திலும் தனித்தனியாகப் போட்டுக் கொதிக்க வைத்து நீரில் கழுவி உலர்த்திக் கொள்ளவேண்டும். பின் நெய்யில் அல்லது ஆமணக்கெண்ணெயில் வறுத்துப் பதனப் படுத்தவேண்டும், இது சிறந்த முறை.

9. சேராங் கொட்டை :

சேராங்கொட்டையின் மூக்கை (முளைவரும் பாகத்தை) வெட்டி எருமைச் சாணிக் கரைசலில்

மூழ்கும்படி போட்டு 24 மணி நேரம் ஊறவைத்து அச்சாணியை நீக்கிச் சுத்தம் செய்து, வேறு சாணிக் கரைசலில் இட்டு வேகவைத்துக் கழுவிச் சுத்தம் செய்து காயவைக்க வேண்டும். இம்மாதிரி 5 நாள் 5 முறை வேகவைத்துச் சுத்தம் செய்ய வேண்டும் பிறகு பால், மோர், புளியிலைச்சாறு, புளியம்பழம், புளியங் கரணைக் கிழங்கின் சாறு, கற்சுண்ணும்பு நீர் இவற்றில் முறையே ஒவ்வொரு நாள் வேகவைத்துக் கழுவிச் சுத்தம் செய்து காய வைத்து நெய்யில் வறுத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

## 10. கொடிவேலி :

கொடிவேலி என்பது சித்திரமூலம். இதன் மேல்தோல் நீக்கிச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கிச் சுண்ணும்புநீரில் போட்டு ஏழு முறை சுத்திசெய்ய வேண்டும். இவ்விதம் செய்யும் பொழுது சுண்ணும்பு நீரின் வெண்மை நிறம் மாருமல் இருக்கும்வரை செய்யவேண்டும். பிறகு ஒரு பானையில் பால் விட்டு அதன்மேல் வேடு கட்டி அதன் மேல் சித்திரமூலத்தை வைத்து மேல் சட்டி மூடி எரித்து எடுக்கச் சுத்தியாகும்.

## 11. வசநாபி :

நாபியைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி வெள்ளாட்டு மூத்திரம் (அ) பசுங்கோமயத்தில் மூன்று நாள் ஊறப்போட்டு உலர்த்திப் பிறகு ஒரு துணியில் கட்டி இளநீரில் போட்டு அவ்விளநீர்க்காயை 30 வரட்டியில் வேகவைத்தால் சுத்தியாகும்.

12. வீரம் :

கற்சுண்ணும்பை இளநீர் விட்டு அரைத்து, அதைத் துணியில் தடவி, இத்துணியை வீரத்தின் மேல் கவசம் செய்து, நூல்கொண்டு இறுகக் கட்ட வேண்டும். ஒரு குடுவையில் கழுதை மூத்திரம் அல்லது வெள்ளாட்டு மூத்திரம் அல்லது இளநீர் விட்டு தொலா எந்திரமாகக் கட்டிச் சுற்றிலும் வரட்டி வைத்து நீர் வற்றும்வரை புடம் வைக்கவேண்டும். பிறகு இதுபோன்று மூன்றுமுறை செய்ய வேண்டும். இம்முறையே சிறந்த சுத்தி முறையாகும்.

13. வங்கம் :

இலுப்பை எண்ணெயிலாகிலும், தேங்காய் எண்ணெயிலாகிலும் நவாசாரத்தைத் தூள் செய்து தூவி வங்கத்தை உருக்கி அதில் சாய்க்கச் சுத்தியாகும்.

14. நாகம் :

நாகத்தை நல்லெண்ணெயில் ஒருநாள் முழுதும் ஊறப்போட்டு எடுத்து மறுபடியும் எலுமிச்சம் பழச் சாற்றில் அறுபது நாழிகை ஊறப்போட்டு எடுக்கச் சுத்தியாகும்.

15. சிலாசத்து.

சிலாசத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் போட்டுக் காய்ச்சி உலர்த்திப் பின்பு இரண்டு நாள் எருக்கன் பாலில் ஊறப்போட்டுக் கழுவி உலர்த்திக்கொள்ளச் சுத்தியாகும்.

16. காந்தம் :

காந்தத்தைக் காய்ச்சிக் கொள்ளுக் குடிநீரில் ஏழு தரம் தோய்த்துக் கழுவச் சுத்தியாகும்.

17. அப்பிரகம் :

அப்பிரகத்தைப் பத்துநாள் காடியில் ஊறப் போட்டு எடுக்கச் சுத்தியாகும்.

18. நிமிளை :

நிமிளையை மூன்றுநாள் காடியில் போட்டுக் காய்ச்சச் சுத்தியாகும்.

19. தாமிரம்:

அமுரி ஒரு பங்கு, பழச்சாறு ஒரு பங்கு எடுத்து அதில் சாரமும், தாளகமும் கூட்டிக் கலக்கிப் பத்துநாள் வெயிலில் வைத்து நீரில் கழுவச் சுத்தியாகும்.

20. சகஸ்திர பேதி :

சகஸ்திர பேதியை நாரத்தங்காய்ச் சாற்றில் ஊறப்போட்டுக் கழுவி எடுத்துக்கொள்ளச் சுத்தியாகும்.

21. சிவதை :

சிவதையைப் பாலில் அவித்துஎடுத்துக்கொள்ளச் சுத்தியாகும்.

22. ஊமத்தன் விதை

ஊமத்தன் விதையை ஒரு சாமம் சுத்த நீரில் ஊறவைக்கச் சுத்தியாகும்,

23. எட்டிக்கொட்டை:

எட்டிக்கொட்டையை நெல்லில் அவித்துச் சிறு கீரை ரசத்தில் ஊறியபின் தேத்தான் கொட்டை ரசத்தில் வேக வைத்து எடுத்துக்கொள்ளச் சுத்தியாகும்.

24. கள்ளிப் பால் :

வரகு அரிசித் தவிட்டைப் போட்டுக் கலக்கி வெயிலில் வைக்கச் சுத்தியாகும்.

25. எவாச்சாரம் :

எவாச்சாரத்தைக் கழுநீரால் ஒரு நாழிகை அரைத்து உலர்த்திஞல் சுத்தியாகும்.

26. கரியபோளம் :

ஒரு பலம் கரியபோளத்தைக் காடி நீரால் அரைத்து ஒரு சாமம் வெயிலில் உலர்த்தச் சுத்தியாகும்.

27. திப்பிலி :

திப்பிலியை மண், தூசு இவைகள் இல்லாமல் சுத்தம் செய்து, பழச் சாற்றில் ஒருநாள் ஊற வைத்து எடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

28. மிளகு :

புளித்த மோரில் மூன்று நாள் ஊற வைத்துப் பின் காய வைத்துச் சிறுவறுப்பாக வறுத்துக் கொள்ளவும்.

29. சுக்கு :

சுக்கின் மேல்தோலைச் சீவிச்சுண்ணாம்புபூசி உலர்த்திக் கழுவி உலர்த்தி எடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

30. துருசு :

இதை இரும்புக் கடாயில் போட்டு வெளுக்கும்படி வறுத்து எடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

2. 64 பாஷாணங்களுக்கும் ஏகசுத்தி யாது?

சுத்தி செய்யவேண்டிய பாஷாணத்தைப் பாக்குப் போல் உடைத்து ஒரு துணியில் முடிந்து வைத்துக் கொள்ளவேண்டும். ஒரு சட்டியில் ஒரு படி சிறுகீரைச் சாறுவிட்டு அதில் ஒருபலம் மிளகைப் பொடித்துப் போட்டுக் கலக்கவேண்டும். சட்டியின் வாயில் குறுக்காக ஒரு கம்பு கட்டி, மேற்படி பாஷாண முடிப்பைக் கயிற்றால் கட்டி, கயிற்றின் மற்றொரு முனையை முடிப்பு சாற்றில் படாமல் இருக்கும்படி கட்டிச் சாறு முழுவதும் சுண்டும்படி எரித்து எடுக்க வேண்டும். பிறகு பாஷாணத்தை வெந்நீரில் கழுவி எடுத்துக்கொள்ளச் சிறந்த சுத்தியாகும்.

## 5. உடற் கூறுகள்

1. நம் உடலில் உள்ள தசைகள் மொத்தம் எத்தனை? கை கால்களில் உள்ள தசைகள் எத்தனை? கழுத்து, தலை, மற்றவற்றிலுள்ள தசைகள் எத்தனை?

| | |
|---|---|
| உடலில் உள்ள தசைகள் மொத்தம் | — 500 |
| கை கால்களில் உள்ள தசைகள் | -- 400 |
| கழுத்தில் உள்ள தசைகள் | -- 14 |
| தலையில் உள்ள தசைகள் | — 20 |
| மற்ற பாகங்களில் உள்ள தசைகள் | — 66 |

2. இரு கைகளிலும் இரு கால்களிலும் உள்ள தசைகள் எத்தனை? விவரம் தருக.

கை கால்களில் உள்ள தசைகள்—400

விவரம் :

| | |
|---|---|
| கால் விரலில் | — 15 |
| முன் பாதம் | — 10 |
| புறங்கால் | — 10 |
| குதிகால் முழங்கால் | — 20 |
| முழங்கால் | — 5 |
| குதிகால் உள்ளங்கால் | — 10 |
| தொடை சந்தி | — 10 |
| தொடை | — 20 |
| ஆக ஒரு காலுக்கு | 100 |

கைகளுக்கும் இப்படியே. ஆகவே இரு கைகளுக்கும் இருகால்களுக்கும் 400 தசைகள் ஆகும்.

3. தானாக இயங்கும் தசைகள் எவை? தானாக இயங்காத தசைகள் எவை?

அன்னகோசம், இருதயம், குடல் முதலியவற்றை நம் விருப்பப்படி இயக்கமுடியாது. அவை தாமாகவே இயங்கும். ஆதலால் அவை தாமாக இயங்கும் தசைகள் ஆகும்.

கை, கால், முகம் இவற்றிலுள்ள தசைகளை நாம் நம் விருப்பப்படி இயக்கலாம். ஆகவே, இவை தாமாக இயங்காத தசைகள் ஆகும்

4. நம் உடலில் உள்ள மொத்த எலும்புகள் எத்தனை? விவரம் கூறுக.

நம் உடலில் உள்ள மொத்த எலும்புகள் — 360.

விவரம்

| | | | |
|---|---|---|---|
| மார்பில் | — 17 | முகவாய்க் கட்டையில் இணைப்பு | — 2 |
| தலை ஓட்டில் | — 4 | முகவாய்க் கட்டை எலும்பு | — 1 |
| பொட்டெலும்பு | — 2 | கழுத்தில் | — 15 |
| விலா எலும்புகள் | 24 | முதுகுத்தண்டில் | — 36 |
| மார்புக் கூண்டில் | 48 | ஆசனத்தில் | — 1 |
| மூக்கில் — | 1 | குறியில் | — 1 |
| தாடையில் ... | 2 | தோள்பட்டையில் | ... 2 |

| | | | |
|---|---|---|---|
| கண்ணில் ... | 2 | பின்புறப் பட்டையில் | ... 2 |
| மேல்வாய் தாடையில் | 2 | காரை எலும்பு | ... 2 |
| நெற்றியில் ... | 2 | தோள் எலும்பைச் சேர்க்கும் எலும்பு | ... 2 |
| புஜத்தில் ... | 2 | கணுக்காலில் | ... 4 |
| தொடையில் ... | 2 | கை மணிக்கட்டு முன் பாகத்தில் | ... 2 |
| முழங்கால் சில்லு | 2 | குதிக்காலில் | ... 2 |
| முழங்கைச் சில்லு | 2 | கை கால் விரல் எலும்புகள் | 60 |
| முழங்கையில் ... | 4 | கால் கை தலாகைகள் | 20 |
| முழங்காலில் .. | 4 | நகங்கள் | ... 20 |
| மணிக்கட்டில்... | 4 | பற்கள் | ... 32 |
| | | பல் உரல்கள் | ... 32 |
| | | ஆகமொத்தம் | 360 |

5. முள்ளந்தண்டு எலும்புகள் எத்தனை ? அவை வளைவதற்கு ஏற்றவாறு என்ன அமைப்பைப் பெற்றிருக்கின்றன ? அவற்றினுள் துளையிருக்கக் காரண மென்ன ?

முள்ளந்தண்டு எலும்புகள் – 33. இவைகள் துண்டு எலும்புகள், ஒன்றின் மீது ஒன்று அடுக்கி வைத்தாற்போன்ற அமைப்பை யுடையது. இவைகள் ஒருவித ஜவ்வால் இணைக்கப்பட்டிருக்கின்றன. அதனால்தான் நாம் குனியவும் நிமிரவும் முடிகிறது.

இவ்வெலும்புகளுக்கு இடையில் துளைகள் உண்டு. இதனுள் மூளையிலிருந்து ஒரு நரம்பு செல்லுகின்றது. இதனை ஆங்கிலத்தில் ஸ்பைனல் கார்டு என்பார்கள். இது உணர்ச்சிக்குக் காரணமானது.

### 6. மூட்டுகள் எத்தனை வகை? அவை உடலில் எங்கெங்கு இருக்கின்றன ?

மூட்டுகள் 3 வகைப்படும்.

அவை : 1. அசையும் மூட்டுகள்
2. நாதாங்கி மூட்டுகள்
3. பந்துக்கிண்ண மூட்டுகள்

மணிக்கட்டு எலும்புகள் அசையும் மூட்டுக்களாகும். இவை முன்னும் பின்னும் அசையும்.

முழங்கை, முழங்கால் கால்விரல். கைவிரல், மூட்டுக்கள் நாதாங்கி மூட்டுக்களாகும். இவை ஒரு பக்கம் மட்டும் அசையக் கூடியவை.

இடுப்பு, புஜம் இவற்றில் உள்ள மூட்டுக்கள் பந்துக்கிண்ண மூட்டுக்களாகும். தோள்பட்டை எலும்பிலும் இடுப்பு எலும்பிலும் கிண்ணம் போலுள்ள அமைப்பில் பந்துபோன்ற எலும்பு மாட்டப்பட்டிருக்கும். இதனால் இம்மூட்டு பந்துக் கிண்ணமூட்டு எனப்பட்டது. இது நாலா பக்கங்களிலும் அசையக் கூடியது.

### 7. ஒரு குழந்தை கீழே விழுந்தால் எலும்பு ஒடிவதில்லை. ஏன் ?

குழந்தையின் எலும்பு முதிர்ச்சி யடையாதது. அது வளையக்கூடியது. அதனால் குழந்தை கீழே விழுந்தாலும் எலும்பு ஒடிவதில்லை.

8. எலும்புகள் உறுதியாக இருப்பது எதைப் பொறுத்தது?

எலும்புகள் உறுதியாக இருப்பது எலும்பினுள் இருக்கும் மஜ்ஜையைப் பொறுத்தது.

9. எலும்பை வளர்க்கும் பொருள்கள் எவை?

கீரைகள், மோர் முதலியன எலும்பை வளர்க்கும் பொருள்களாகும்.

10, பந்தனிகள் என்று எதற்குப் பெயர்?

பந்தனி என்பது ஒருவித வெள்ளைத் தசைநார், இவை நீளவும் சுருங்கவும் கூடியவை. மூட்டுக்களி லிருக்கும் தசைகளை நீக்கிவிட்டுப் பார்த்தால் இவை நம் கண்ணுக்குத் தெரியும். இவை மூட்டிலுள்ள எலும்புகள் நழுவாதபடி காக்கின்றன.

11. பெருமூளை, சிறு மூளை இவற்றின் முக்கியத்துவத்தையும், வேலைகளையும் விளக்குக.

பெருமூளை: நமது மூளை நமது கபாலத்தினுள் இருக்கிறது. அதன்மேல் ஒன்றின்மேல் ஒன்றாக மூன்று தசை மூடிகள் உள்ளன. மூளைக்கு அடுத்தாற் போலுள்ள தசை மூடியில் அநேக இரத்தக் குழாய் கள் இருக்கின்றன. இத்தசை மூடிகளுக்குள் அநேக சுருள்களுடன் இருப்பதுதான் பெருமூளை. இது

உருண்டை வடிவானது. இம்மூளையால்தான் யோசனை, நினைவு, அபிப்பிராயம், நடத்தை தீர்மானித்தல் முதலிய செயல்கள் நடக்கின்றன. இம்மூளையுடன் பல நரம்புகள் தொடர்பு கொண்டிருக்கின்றன. அவற்றின் மூலம் இம்மூளை நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் அறிகிறது. அறியும்போது அவை மூளையில் பதிவாகின்றன. பதிவுகள் அழிந்து போகாமல் அவ்வாறே இருத்தலைத்தான், நினைவுகள் எனச் சொல்லுகிறோம். பதிவுகளை அறிவதே சிந்தனையாகும். இவ்வாறு சிந்தனை செய்து 'இன்னது செய்' என்று ஆணையிடுவதும் இதனுடைய வேலையே யாகும். சுருங்கக் கூறினால், நமது செய்கைகளுக் கெல்லாம் மூல காரணமாய் இருப்பது பெருமூளையே யாகும். நரம்புகள் மூலம் செயல்களை அறிந்து, அவற்றின் மூலம் மற்ற உறுப்புக்களுக்கு ஆணையை அனுப்புவதால் இம்மூளையை அஞ்சலகத்திற்கு ஒப்பிடலாம்.

சிறுமூளை: பெரு மூளைக்குச் சற்றுக் கீழாகப் பின்பக்கத்தில் சிறுமூளை இருக்கிறது. உடல் நிமிர்ச்சி, சமமான நிலை இவற்றைக் கவனிப்பது சிறுமூளையின் வேலை.

## 12. மூளை பாதிக்கப் படுவதால் உண்டாகும் நோய்கள் எவை?

மூளை பாதிக்கப்பட்டால் உறுப்புக்களுக்கு நரம்புகள் மூலம் ஆணையை அனுப்புவதற்கு இயலாமல் போய்விடும். ஆகவே, அவ்வுறுப்புக்கள்வேலை செய்யா. மூளையின் பாதிப்பால் பேச முடியாமல் போவதும் உண்டு.

## 13. நரம்பின் வகைகளை விவரிக்க

பொதுவாக நரம்புகளை உணர்ச்சி நரம்புகள் (உட்செல் நரம்புகள்) என்றும்,மோட்டார் நரம்புகள் (வெளிச்செல் நரம்புகள்) என்றும் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

காலில் ஊசி தைத்ததை உணர்ச்சியின் வாயிலாக அறிபவை உணர்ச்சி நரம்புகள் எனப்படும்.

மூளை அல்லது தண்டு வடத்தின் கட்டளைகளை உடல் உறுப்புக்களுக்குத் தெரிவிக்கும் நரம்புகள் மோட்டார் நரம்புகள் எனப்படும்.

இவையன்றி நமது தோலின் சில பகுதிகளில் தொட்டுணர்வு நரம்பு நார்கள், சூடுணர்வு நரம்பு நார்கள், குளிருணர்வு நரம்பு நார்கள், சுவை யறியும் நரம்பு நார்கள் முதலியன உள்ளன. இவற்ருல் அந்த அந்த உணர்ச்சிகளைப் பெறுகிருேம்.

## 14. நரம்புகளின் வேலைகள் யாவை ?

உடலில் நடைபெற வேண்டிய முக்கிய அலுவல்களாகிய சீரணம், இரத்த ஓட்டம், தானுகே இயங்காத தசைகளை இயக்கல் முதலிய வேலைகள் நரம்புகளால் தான் நடைபெறுகின்றன. உடலின் எல்லா உறுப்புக்களுக்கும் நரம்புகள் கட்டளைகளைக் கொண்டு செல்கின்றன. தந்திக் கம்பிகள் செய்திகளைக் கொண்டு செல்வதைப்போல் நரம்புகள் உடலில் வேலை செய்வதால் நரம்பு மண்டலத்தைத் தந்தி அலுவலகத்திற்கு ஒப்பிடலாம்.

## 15. இரத்த ஓட்டம் என்பது என்ன?

மார்புக் கூட்டினுள் இருதயம் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. இருதயத்தைச் சுற்றிலும் மடிப்புள்ள மெல்லிய பைபோன்று ஒரு மூடி உண்டு. இப்பை ஒரு வகையான பசையை ஒத்த நீரைப் பெருக்கச் செய்துகொண்டு இருதயத்தை எப்போதும் ஈரப்பசை உள்ளதாகவே வைத்திருக்கும். இதனுல் இருதயம் அசைந்து கொடுக்கும் தன்மையை உடைய தாகிறது. இருதயம் மேலே இரண்டு அறைகளேயும் கீழே இரண்டு அறைகளேயும் கொண்டது. இருதயத்தின் மூலம் இரத்தம் நுரையீரலுக்குச் சென்று சுத்தமடைந்து இரத்தக்குழாய்கள் வழியாக உடலெங்கும் பரவுகிறது. மேலே இருக்கும் அறைகள் சுருங்கும் போது இரத்தம் கீழேயுள்ள அறைகளுக்குள் செல்லுகிறது. கீழேயுள்ள அறைகள் சுருங்கும்போது இரத்தம். இரத்தக் குழாய்கள் மூலம் உடலெங்கும் பாய்கிறது. இதற்குத்தான் இரத்த ஓட்டம் என்று பெயர்.

## 16. நாடித்துடிப்பு உண்டாவதின் காரணமென்ன?

சுத்தம்செய்யப்பட்ட இரத்தம் இடது கீழறையிலிருந்து இரத்தக்குழாய் மூலம் உடலெங்கும் செலுத்தப்படுகிறது. இரத்தம் இரத்தக்குழாய் வழியாக ஓடுவதால் அசைவு உண்டாகிறது. அதனுல் நாடித்துடிப்பு உண்டாகிறது.

## 17. சீரண உறுப்புக்களை விவரிக்க.

நாம் உண்ணும் உணவு பற்களினால் அரைக்கப் படுகிறது. அரைக்கப்பட்ட உணவுடன் தாடையின் இரு பக்கங்களிலும் உண்டாகும் உமிழ்நீர் கலக்கிறது. இவ்வாறு உமிழ் நீருடன் கலந்த உணவு ஏறத்தாழ 10 அங்குல நீளமுள்ள அன்னக் குழாயின் வழியாக அன்னப்பையை (இரைப்பை) அடைகிறது, உணவு அங்கு மேலும் குழம்பாகச் செய்யப்பட்டுச் சிறுகுடல் கல்லீரல், பித்தநீர் இவைகளால் சீரணமடைகிறது. அன்னகோசத்தில் சீரணிக்கப்படாத ஊன்செய் பதார்த்தத்தை மதுரசம் சீரணிக்கச் செய்கிறது. பித்தநீர், கொழுப்புப் பதார்த்தத்தைச் சீரணிக்கச் செய்கிறது. இவ்வாறு சீரணமான உணவு பின்பு இரத்தமாகி அன்னகோசத்தின் உட்புறத் தோலிலுள்ள இரத்தக் குழாய்கள் மூலம் இருதயத்திற்குச் செல்கிறது.

## 18. மொத்த பற்கள் எத்தனை? அவற்றுள் மூன்று விதமான பற்கள் எவை?

20 வயதிற்குப் பிறகு மனிதனின் பற்கள் மொத்தம் 32. இவற்றுள் அரைக்கும் பற்கள், கிழிக்கும் பற்கள், வெட்டும் பற்கள் என மூன்று வகைகள் உண்டு. கடைவாய்ப் பற்கள் அரைக்கும் பற்கள். முன்வாயில் உள்ள பற்கள் வெட்டும் பற்கள். கடைவாய்ப் பல்லுக்கும் வெட்டும் பற்களுக்கும் இடையில் உள்ள பற்கள் கிழிக்கும் பற்கள் எனப்படும்.

## 19. பல் சொத்தைப் பட்டிருப்பவருக்கு நீ என்ன அறிவுரை கூறுவாய் ?

பல்லின் மேல் பாகம் உறுதியான சிமெண்ட் போன்ற பொருளால் ஆனது. அதற்குள் தசைப்பாகம் உண்டு. பல்லின் உறுதியான பாகம் தேய்ந்து போனால் நாம் உண்ணும் உணவின் ரசம் அல்லது துணுக்குகள் பல்லுக்குள் உள்ள தசைப் பாகத்தில் தங்குவதற்கு ஏதுவாகும். அவ்வாறு தங்கினால் உணவு அழுகும். அதனால் பல் சொத்தை படும்; பல் நோய் உண்டாகும். அதனால் பல்லின் உறுதிப்பாகம் தேய்ந்துபோகாமல் இருக்கக் குச்சி, பற்பொடி இவற்றால் பல் தேய்க்க வேண்டுமென்றும், பல் தேய்வதற்குக் காரணமான செங்கல் பொடி சாம்பல், இவற்றால் பல் தேய்க்கக் கூடாது என்றும் அறிவுரை கூறுவேன்.

## 20. பல் நோய் உடனே நிற்க என்ன வைத்தியம் செய்வாய் ?

10 கிராம் நன்னாரி வேர் எடுத்து, நன்றாய்ச் சிதைத்து, அரைப்படி தண்ணீருடன் அதைச் சேர்த்துக்கொதிக்க வைத்து, பாதியாகச் சுண்டவைத்து, வடிகட்டி அதனுடன் ஓர் அவுன்ஸ் சீமைக்காடி சேர்த்துக் கலக்கி வாய் கொப்புளித்தால் பல்நோய் உடனே நீங்கும்.

## 21, சுவாசம் என்பது என்ன ?

மூக்கின் வழியாகக் காற்று உள்ளே போவதும் வெளியே வருவதும் இயல்பாகவே நடைபெறுகிறது. இதைத்தான் சுவாசம் என்கிறோம்.

22. சுவாசித்தல் என்றால் என்ன ?

இருதயத்தின் தசைப் படுதாவானது சுருங்கும் போது நம் விலா எலும்புகளுக்கிடையேயுள்ள தசைகளும் சுருங்குகின்றன. இவ்வாறு சுருங்கும்போது விலா எலும்புகள் மேற்புறமாக இழுத்துக் கொள்வதுடன் மார்பெலும்பு முன்புறத்தில் அமுங்கித் தள்ளும் சக்தி பெற்றுத் தள்ளப்படுகின்றது, மேற்கூறிய இரண்டு விதமான சுருக்கங்களினால் மார்பினுள் காலியிடம் அதிகமாகிறது. அக்காலியிடத்தை நிரப்ப அதே சமயத்தில் வெளிக் காற்று விரைவாக உள்ளே போகின்றது. இதையே நாம் சுவாசித்தல் அல்லது சுவாசம் இழுத்தல் என்கிறோம்.

23. சுவாசம் விடுதல் என்றால் என்ன ?

சுவாசம் உள்ளே இழுக்கப் பட்டதும் மார்புத் தசையும், தசைப்படுதாவும் தளர்ந்துமுன்னிருந்தநிலைமையை அடைகின்றன. அதனால் சுவாச கோசம் அழுத்தப்பட்டு அதனுள் இருக்கும் காற்று வெளியேறும். இதுவே சுவாசம் விடுதல் எனப்படுகிறது.

24. புரையேறுதல் என்பது என்ன ?

தொண்டையில் இரைப்பைக்கு உணவு செல்லும் குழல் வேறாகவும், சுவாச கோசத்திற்குக் காற்று செல்லும் குழல் வேறாகவும் உள்ளன. நாம் உணவு உண்ணும் போது உணவுக் குழலில் செல்லும் உணவு காற்றுக்குழலில் சென்றால், உடனே இருமல் உண்டாகி

அவ்வுணவு காற்றுக் குழலை விட்டு வெளியேற்றப்படுகிறது. இதைத்தான் புரையேறுதல் என்கிறோம்.

25. வயதுக் கேற்றவாறு சுவாசித்தலின் அளவைகள் யாவை?

குழந்தை பிறந்தது முதல் ஒருவயது வரை இயற்கையாகவே 35 தடவை சுவாசம் விடப்படுகிறது.

1 முதல் 2 வயது வரை இயற்கையாகவே 25 தடவை சுவாசம் விடப்படுகிறது.

2 வயது முதல் 3 வயது வரை 18 முதல் 20 தடவை வரை இயற்கையாகவே சுவாசம் விடப்படுகிறது. மனிதரின் சராசரி சுவாசம் 18.

26. நாடி அடித்தல் நிமிடத்திற்கு எத்தனைத் தடவை?

1 நிமிடத்திற்கு நாடி 75 தடவை அடித்துக் கொள்ளும்.

27. சிலர் விரைவாகவும், சிலர் குறுகியும் சுவாசம் விடுவதற்குக் காரணம் என்ன?

பலவீனமான நிலையில் சுவாசம் குறுகி விடப்படுகிறது.

ஈரல் வியாதிகளில் சுவாசம் விரைவாக விடப்படுகிறது.

ஆரோக்கியமான நிலையில் சுவாசம் ஆயாசமின்றி விடப்படுகிறது.

28. பிராண வாயுவில் இருக்கும் வாயுக்களின் அளவு யாது?

உட்செல் வாயுவில் 7900 பாகம் உப்பு வாயுவும், 2096 பாகம் பிராண வாயுவும், 4 பாகம் கரியமில வாயுவும் இருக்கும். ஆக 10,000 பாகம் கொண்டது.

29. நாம் உட்கொள்ளும் காற்றுக்கு என்னவென்று பெயர்? வெளிவிடும் காற்றுக்கு என்னவென்று பெயர்?

நாம் உட்கொள்ளும் காற்றுக்குப் பிராண வாயு என்று பெயர்; வெளிவிடும் காற்றுக்குக் கரியமில வாயு என்று பெயர்.

30. நாடித் துடிப்புக்கும் சுவாசம் விடுதலுக்கும் உள்ள தொடர்பு யாது?

சுவாசம் விடுதல் நிமிடத்திற்கு 20 தடவையும், நாடி அடித்துக் கொள்ளுதல் நிமிடத்திற்கு 75 தடவையுமாகும். அதாவது ஏறத்தாழ 7 தடவை நாடித் துடித்தலுக்கு 2 தடவை சுவாசம் விடப்படுகிறது.

ஒரு மனிதனின் உடல் வெப்பம் 98.4டிகிரியாகும். உடல் வெப்பம் 1டிகிரி அதிகமானால், நாடி 10 தடவை கூடுதலாகவும், சுவாசம் விடுதல் 2 தடவை அதிகமாகவும் இருக்கும்.

31. நம் உடலில் உள்ள ரோமத் துவாரங்கள் எத்தனை? அவற்றால் நமக்கு உண்டாகும் நன்மை யாது ?

நம் உடலில் $3\frac{1}{2}$ கோடி ரோமத் துவாரங்கள் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இவற்றின் மூலம் உடலின் கழிவுநீர்ப் பொருளாகிய வியர்வை வெளியேற்றப்படுகிறது. வியர்வையால் நம் உடல் நிலை (தட்பவெப்பம்) சமநிலையில் வைக்கப்படுகின்றது. கடுமையான சூரிய வெப்பத்தினாலும், கடுமையான உழைப்பினாலும் நம் உடல் அதிக வெப்பமடையும் பொழுது வியர்வை உண்டாவதால்தான் உடலின் வெப்பம் குறைந்து சமநிலைக்குக் கொண்டு வரப் படுகிறது.

32. இரத்தக் குழாய்கள் எத்தனை விதப் படும் ? அவை எங்கிருக்கின்றன ?

இரத்தக் குழாய்கள் மூன்று வகைப்படும். அவை:

1. தமனிகள்
2. சிரைகள்
3. தந்துகிகள்

தமனிகள் : இவை இருதயத்திலுள்ள இரத்தத்தை உடலெங்கும் எடுத்துச் செல்லும் இரத்தக் குழாய்கள். இவற்றில் இரத்தம் துள்ளித் துள்ளி அலைஅலையாய்ப் பாயும். இவை

மணிக்கட்டு, தொடை, நெற்றிப் பொட்டுப் போன்ற இடங்களில் தோலுக்கு மிக அருகில் இருக்கும். மற்ற இடங்களில் தோலுக்குச் சற்று ஆழத்தில் இருக்கும்.

சிரைகள் : இவை உடலின் பல பாகங்களிலுள்ள அசுத்த இரத்தத்தை இருதயத்திற்குக் கொண்டு வரும்.

தந்துகிகள் : இவை தமனிகள் முடியுமிடத்திலும் சிரைகள் தொடங்குமிடத்திலும் உள்ள மிக நுண்ணிய இரத்தக் குழாய்கள். இவை, தமனியையும் சிரையையும் இணைக்கின்றன. இவை, உடலில் உள்ள திசுக்களைச் சுற்றிப் பின்னிக்கொண்டிருக்கும்.

## 33. காதுகள் எவ்வாறு ஒலிகளை அறிகின்றன?

வெளிக்காற்றில் ஏற்படும் ஒலி அலைகளைக் காது மடல் ஒருங்கு திரட்டிச் செவிக்குழாய் வழியாக உள்ளே அனுப்புகிறது. இந்த ஒலி அலைகள் மெல்லிய சவ்வினால் ஆன செவிப் பறையைத் தாக்கி அதை அதிரும்படி செய்யும். இதனால் செவிப்பறையுடன் இணைந்துள்ள செவிச் சிற்றெலும்புகள் அசையும். அவ்வசைவுகள் செவியில் உள்ள நிணநீரில் சிறு அலைகளை உண்டாக்கும். இதனால் உண்டாகும் உணர்ச்சி செவி நரம்பின் வழியே மூளைக்குச் செல்ல மூளை நமக்கு ஒலியை உணர்த்துகிறது.

**34. காது கேளாமைக்குக் காரணங்கள் யாவை ?**

செவிக் குழாய்களில் அடைப்பு, இரணம், உட் காதின் கோளாறு, செவிச் சவ்வு கிழிதல், சப்த நரம்பு களின் கோளாறு முதலியவற்ருல் காது கேளாமல் இருப்பதுண்டு.

**35. நாக்கு ருசியறிவது எங்ஙனம் ?**

நாக்கில் பாபில்லே எனப்படும் முளேகள் அதிக மாக இருக்கின்றன. இதனுல்தான் நாக்கு சொர சொரப்பாக இருக்கிறது. பாபில்லேயின் அடியிலும் உள்ளேயும் ருசி (சுவை) மொக்குகள் இருக்கின்றன. இந்த ருசி மொக்குகள் அறுவகைச் சுவைகளேயும் நன் ருக உணருகின்றன. தொண்டைக்குள் ருசி மொக்கு கள் இல்லாமையால் உணவு நாக்கை விட்டுச் சென்ற தும் சுவை தெரிவதில்லே.

**36. சில சமயங்களில் நாம் வாசனே அறிய முடியாமல் இருப்பதற்குக் காரணம் யாது ?**

நாசித்துளேயின் மேல்பாகத்தில் வாசனே அறிவிக் கும் நரம்புகள் இருக்கின்றன. இதனுல்தான் வாசனே அறிய முடிகிறது. கடுமையாகச் சளிபிடித்திருக்கும் போது நாசியில் உள்ள மெல்லிய பூந்தசைகள் வீங்கித் தடித்து விடுவதால் காற்று நாசியின் மேல்பாகத்திற் குச் செல்லத் தடை உண்டாகிறது. அதனுல்தான்

நாம் சில சமயங்களில் வாசனை அறியமுடியாமற் போகிறது.

## 37. நீர்த்தாரையில் உள்ள மூன்று பாகங்கள் எவை?

சிறுநீர்க் குழாயின் நீளம் 8 அல்லது 9 அங்குலம் இருக்கும். இந்நீர்த்தாரை சுக்கில பாகம், பஞ்சு பாகம், சவ்வுபாகம் என்று மூன்று வகைப்படும். இவற்றின் வழியாகத்தான் மூத்திரப்பையிலுள்ள சிறுநீர் வெளியேறும்.

## 38. குண்டிக்காயின் வேலை யாது?

இது கடைசி விலா எலும்பின் முன்பக்கத்தில் இருக்கிறது. இதனோடு சுத்தஇரத்தக்குழாயும் அசுத்த இரத்தக் குழாயும் இணைக்கப்பட்டிருக்கின்றன. அசுத்தக் குழாய் மூலம் கொண்டு வரப்படும் இரத்தத்திலுள்ள கசடுகளைக் குண்டிக்காய் நீக்குவதுடன், இரத்தத்திலுள்ள உப்புக்களையும் நீரையும் சீராக இருக்குமாறு செய்கிறது. இது இரத்தத்திலிருந்து நீக்கும் கசடு, நீர் மிக்க கரையமாக இருக்கும். அக்கரையம் இதனோடு இணைந்துள்ள மூத்திரக் குழாய் மூலம் மூத்திரப் பைக்குள் போய்ச் சேரும். சுத்தமாக்கப்பட்ட இரத்தம் சுத்த இரத்தக் குழாய்மூலம் கொண்டு செல்லப்படும். குண்டிக்காய் தன் வேலையைச் செய்யாமல் நின்றுவிட்டால் உயிர் நீங்கிவிடும்.

குண்டிக்காய் இரத்தத்திலுள்ள புரொட்டீன்கள், சர்க்கரை, உப்பு இவற்றை அதிகமாக நீக்காமல் அசுத்

தங்களை மட்டும் நீக்கும் என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

39. கருப்பாசயம் இடம் பெயர்வது எதனுல் ?

நீடித்த மலச் சிக்கலினுலும், சிறுநீர்ப்பையில் சிறு நீர் அதிகமிருந்து அது பெரிதாவதாலும் கருப்பாசயம் அது இருக்கும் இடத்திலிருந்து பின்புறத்திலோ, பக்க வாட்டிலோ தள்ளப்பட்டு இடம்பெயர்தல் ஏற்படும்.

## 6. நாடிகள்

1. நாடி பார்க்கும் முறை யாது ?

ஆண்களுக்கு வலக்கையிலும் பெண்களுக்கு இடக் கையிலும் நாடி பார்க்கவேண்டும். நோயாளியின் முன்கையை நீட்டிப் பிடித்து விரல்களை நெட்டை வாங்கிச் சற்று உயரத் தூக்கிப் பிடித்து வைத்தியன் நோயாளியின் இடக்கையைத் தன் வலக்கையாலும், வலக்கையைத் தன் இடக்கையாலும் நாடியறிய வேண்டும். மணிக்கட்டிலிருந்து ஓர் அங்குலத்திற்கப் பால் வைத்தியன் தனது ஆள்காட்டிவிரல், நடுவிரல், மோதிரவிரல் இம் மூன்றினுலும் அழுத்திப் பார்க்க வேண்டும். இவ்வாறு பார்க்கும்போது அம்மூன்று விரல்களுக்கிடையே ஒரு நெல்மணி இடை வெளி இருக்க வேண்டும். ஏனெனில் ஒரு விரலில் தோன் றும் துடிப்பு அடுத்த விரலுக்கும் பாயுமாதலால் இவ்வாறு செய்யவேண்டும், தொட்டுத் தொட்

டுப் பார்ப்பதுபோல் விரல்களை இலேசாக அழுத்தியும் தளர்த்தியும் முன், பின், இடம், வலமாக விரல்களை இலேசாக அசைத்தும் பார்க்க வேண்டும். இவ்வாறு சில வினாடிகள் செய்த பின்புதான் நாடி நடை நன்ருகப் புலப்படும். இதுவே நாடி பார்க்கும் முறையாகும்.

2. நாடி பார்ப்பதற்குக் கை சிறந்ததாவதேன்?

நாடி நடையை அறிவதற்காக விரல்களை அழுத்தியும், தளர்த்தியும், முன், பின், வலம், இடம் இவ்விடங்களில் விரல்களை அசைத்தும் நாடி பார்க்க வேண்டியிருக்கிறது. இதற்குத் தக்கவாறு உள்ள இடம் கையே யாகும். மேலும் கையின் மணிக்கட்டில் நரம்புகள் நீண்டும், எலும்புக்கு மேலும், தோலுக்கு அருகிலும் அமைந்திருப்பதால் நாடிகளைக் கையின் மூலம் எளிதில் அறிய முடியும். அதனல் நாடி பார்ப்பதற்குக் கையே சிறந்ததாகும்

3. வாத, பித்த, கபநாடிகள் எவற்றைப் போன்று நடக்கும்?

வாத நாடி அன்னம், கோழி, மயில் இவற்றின் நடையைப் போல நடக்கும்.

பித்த நாடி ஆமை, அட்டை இவற்றின் நடையைப் போல நடக்கும்.

கபநாடி பாம்பு, தவளை இவற்றின் நடையைப் போல நடக்கும்.

4. வாதம் கோழியைப் போன்று நடக்கும் என்பதால், கோழி நடையைப் பற்றி நீ அறிந்து கொண்டது யாது? இது கபத்திற்குரிய தவளையின் நடையினின்று எவ்வாறு வேறுபடும்?

தவளை செல்லும்போது தத்தித் தத்திச் செல்லும். அது ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் குதித்ததும் சற்றுத் தாமதித்தே மீண்டும் தத்திக் குதிக்கத் தொடங்கும். ஆனால், கோழி ஒரு காலைத் தரையில் பாய்ச்சியதும், மற்றொரு காலை எடுக்கத் தொடங்கும். ஆகவே, கபநாடி ஒருமுறை அடித்துச் சற்றுத் தாமதித்தே அடுத்த முறை அடிப்பது தெரியும். ஆனால், வாதநாடி ஓரே சீராக அடிப்பது தெரியும். இவையே இவ்வீரண்டுக்குமுள்ள வேறுபாடு.

5. மரணத்தை அறிவிக்கும் நாடி நடைகள் யாவை?

(1) வாத பித்த சேத்துமம் மூன்றும் விட்டிலைப் போல் துடிக்கும்.

(2) சேத்தும நாடி வெள்ளம் போல மடமடவென ஓடினல் மறுநாள் மரணமுண்டாகும்.

(3) மூன்று நாடிகளும் அரணை வால்போல் துடித்தாலும் மரணம்.

(4) வாத பித்தம் பம்பரம் போல் சுற்றி விட்டிலைப் போல் விழுந்தால் மரணம்.

(5) பித்தம் அடங்கிக் கபம் வாதத்தை நாடினுல் ஒரு நாழிகையில் மரணம்.

(6) பித்த நாடி மடமடவென ஓடினுல் மூன்ருவது நாளில் மரணமுண்டாகும்.

வாதநாடி அவ்வாறு ஓடினுல் எட்டாவது நாள் மரணம்.

(7) மூன்று நாடிகளும் நிலைதப்பி ஓடினுல் ஒரு மண்டலத்தில் மரணம்.

(8) மூன்று நாடிகளும் தேள் கொடுக்கு போல் ஆடி ஓடம்போல் ஓடினுல் ஒரு மாதத்தில் மரணம்.

(9) வாத நாடி வலிமை குறைந்து தோன்றினு லும், முற்றும் அடங்கினுலும் மரணத்தைக் குறிக்கும்.

(10) பித்த நாடியும் கபநாடியும் அடங்கிவிட்டா லும், வாதநாடி குறையாமல் இருந்தால் நோய் சாத்திய நிலைக்கு வரலாம் என்று பரிகாரம் செய்யலாம்.

(11) வாத பித்த கபநாடிகள் சமமாக இயங்கி னுல் சன்னிவாதம். இது அசாத்திய மானதாகும்.

(12) வாத பித்த கப நாடிகள் மீறி ஓடினுல் 15 நாளில் மரணம்.

(13) மூன்று நாடிகளும் கீழ்நோக்கிப் பாயுமா னுல் உடனே மரணம்.

(14) காலையில் வாதநாடி வன்மை குறைந்தால் மாலைக்குள் (12 மணி நேரத்திற்குள்) மரணம். நடுப்

பகலில் பித்த நாடி வலிமை குறைந்தால் சூரியன் மறைவதற்குள் (6 மணி நேரத்திற்குள்) மரணம். ஆனால், மாலையில் கபநாடி வன்மை குறைந்தால் மரண மில்லை; வலிமை பெற்றால் மரணம்.

(15) காலையில் மூன்று நாடிகளும் மீறியோடினால் மரணம்.

காலையில் வாதநாடியும் பித்த நாடியும் மீறுவது தவறில்லை. ஆனால், கபம் மிகவும் அடங்கி யிருக்க வேண்டிய காலை நேரத்தில் மீறி நடப்பது அசாத்தியமானது. ஆதலால், காலையில் மூன்று நாடி களும் மீறி யோடினால் மரணம் என்று கூறப் பட்டது.

(16) பித்தம் அடங்கினால் கபம் வலுக்கும். தன் ஆதிக்கக் காலமாகிய நடுப்பகலில் துரிதமாய் இருக்க வேண்டிய பித்தநாடி அடங்கித் தோன்றுவது மரணக் குறியாகும்.

### 6. பாம்பு விஷம், வாந்தி பேதி, பயத் தால் மயக்கம் இவைகளுக்கு நாடி எவ்வாறு நடக்கும்?

பாம்பு விஷத்திற்கு நாடிகள் ஏற்படா. வாந்தி பேதிக்கும், பயத்தால் ஏற்படும் மயக்கத்திற்கும் நாடி கள் அடங்கி யிருக்கும்.

### 7. சீதளம், சன்னி இவைகளுக்கு நாடி எவ்வாறு நடக்கும்?

சீதளத்திற்கு நாடி தூங்கி ஓடும். சன்னிக்கு மூன்று நாடிகளும் படபடவென்று ஓடும்; அல்லது

மூன்று நாடிகளும் சுழல் வண்டானது தண்ணீர்மீது ஓடி வருவதைப்போல் நடக்கும்.

8. மந்தத்திற்கும், அதன் வயிற்று வலிக்கும் நாடி எவ்வாறு நடக்கும்?

மந்தத்தில் நாடி மதயானைபோல் அசைந்து நடக்கும்.

9. உஷ்ண வயிற்று வலிக்கு நாடி எவ்வாறு நடக்கும்?

நாடிகள் உள்ளுக்கு வாங்கி ஓடும்.

10. கிரந்திக்கு நாடி எவ்வாறு நடக்கும்?

நாடிகள் கரை உடைந்த அருவி போலோடும்.

11. நீர்ப்பாட்டுக்கும், கர்ப்பப் பாட்டுக்கும் நாடி எவ்வாறு நடக்கும்?

மூன்று நாடிகளும் தளர்ந்து காணும்.

12. யார் யாருக்கு நாடி தெளிவாகக் காணப்படாது?

பெண் போகம் செய்தவர்
அதிக நோயாளி
வாகனங்களின் மீது ஏறி அலுத்தவர்
வயிறு நிறையச் சாப்பிட்டவர்கள்
நீர்ப்பாடு வ்யாதியுள்ளவர்
பெரு வியாதியாளர்
முறையாக வீக்கமுள்ளவர்கள்

பயமடைந்தவர்கள்
விஷமருந்தி இருப்பவர்கள்
விசனம் கொண்டவர்கள்
அதிக பசியுள்ளவர்கள்
வீட்டுத் தூரமான பெண்கள்
பெரும்பாடு உள்ள பெண்கள்
எண்ணெய் நீராடியவர்கள்
அதிக கோபம் கொண்டவர்கள்
சிறு வயதில் இளைத்தவர்கள்
மோட்டாத்துமாக்கள்
சோகை கொண்டவர்கள்
கை முறிந்தவர்கள்
வாந்தி யெடுத்தவர்கள்
விக்கல் கொண்டவர்கள்
விரதங் கொண்டவர்கள்
மழையில் நனைந்தவர்கள்
சங்கீதக் கச்சேரி நடத்தினவர்கள்
நாட்டிய மாடியவர்கள்
சுவாசத்தை அடக்கியவர்கள்

ஆகியவர்களுக்கு நாடிகள் தெளிவாகக் காணப்படா.

13. மூன்று நாடிகளுள் எந்தெந்த நாடி எவ்வெப்போது தெளிவாய்க் காணப்படும்?

காலை 10 நாழிகை வரை வாதமும், அதற்கு மேல் 10 நாழிகைவரை பித்தமும், அதற்குமேல் 10நாழிகை வரை கபமும் தெளிவாய்க் காணப்படும், இரவு 30 நாழிகைக்கும் இவ்வாறே கொள்ளவேண்டும்.

14. சன்னி பாதத்திற்கு மூன்று நாடிகளும் எவ்வாறு நடக்கும்?

மூவிரல்களிலும் நாடிகள் படபடவென்று ஓடும்; அல்லது சுழல் வண்டு தண்ணீர்மீது ஓடிவருவதைப் போல நடக்கும்.

15. வாதநாடி அதிவேகமாய் நடந்தால் என்னென்ன நோய்கள் இருக்குமென்று அறியலாம்?

வாத நாடி அதிவேகமாய் நடந்தால் 15 நாளில மரணம் உண்டாகும்; வெள்ளம் போல் மடமடவென்று ஓடினல் 8 நாளைக்குள் மரணம்; அடங்காமல் எழும்பி நிற்பது மலே சுரத்தைக் குறிக்கும். வாதம் இரண்டு மாத்திரையானல் அதாவது இரட்டித்து வேகமாய் நடந்தால் வாதத்தில் வாதமாகும்.

16. பித்த நாடி அதிவேகமாக நடந்தால் என்னென்ன நோய்கள் இருக்குமென்று அறியலாம்?

பித்தம் புலிபோல் துடித்து நின்றால் கிறுகிறுப்பு இருக்கும்; பலமாகத் தனித்து நின்றால் பைத்தியம் இருக்கும்; வெள்ளம்போல் மடமடவென்று ஓடினல் 3 நாளில் மரணம்.

17. கபநாடி அதிகவேகமாக நடந்தால் என்னென்ன நோய்கள் இருக்குமென அறியலாம்?

கபம் மீறினல் ஈளை, காசம் இருக்குமென்று அறியலாம்; வெள்ளம் போல் ஓடினல் ஒருநாளில் மரணம்.

## 18. மருந்து கொடுக்காமல் கைவிடுவதற்குரிய நாடி நடைகள் யாவை?

சேத்தும நாடி வெள்ளம்போல் மடமடவென்று ஓடினலும், பித்தத்தை அணைத்தேறினலும். ஒரு நாளில் மரணம்.

காலையில் சேத்துமநாடி துடித்து, உச்சியில் பித்த நாடி துடித்தால் வாதநாடி மடிந்து மாலையில் மரண முண்டாகும். சேத்துமநாடி கொடிப்பின்னலைப் போல் நடந்தால் மரணம் நிச்சயம்.

நாடிகள் மூன்றும் மயிரிழை போன்று நடந்தால் ஆறு நாழிகையில் மரணம்.

வாத பித்தம் இரண்டும் பம்பரம்போல் ஆடிப் பின்னி விட்டிலைப்போல் விழுந்தால் சில நாழிகையில் மரணம்.

நோய் நிலைமுற்றி இருப்பவர்களுக்கு மேற்கண்டவாறு நாடி ஓடினல் மரணம் நிச்சயம் என்று அறிந்து மருந்து கொடுக்காமல் இருப்பது நலமாகும்.

## 19. பசியின்போது நாடி எவ்வாறு ஓடும்?

பசியின்போது நாடி காக்கை தூங்குதல் போல நடக்கும்.

20. பெண்களுக்கு வாத, பித்த, கப நாடிகள் எவ்வாறு நடக்கும்?

பெண்களுக்கு வாதநாடி பாம்பு போலவும், பித்த நாடி தவளையைப் போலவும், கபநாடி கோழியைப் போலவும் நடக்கும்.

21, நோயில்லா நாடி எது?

வாதம் ஒண்ணுகவும், பித்தம் அரையாகவும், கபம் காலாகவும் ஓடும். மற்றும் விளக்கின் சுடரைப் போல அசைந்து ஓடும்.

22. சயம், காசத்திற்கு நாடி நடையாது?

சயம், காசத்திற்குச் சேத்தும நாடி மீறி ஓடும்.

23. கர்ப்பிணிக்கு நாடி யாது?

வாதநாடி எறும்பு ஊர்வதைப் போல நடக்கும் அல்லது ஆமை அசைவதைப் போல நடக்கும் அல்லது பஞ்சியைப் போல மெத்தென்று இருக்கும். மற்றும் வாதநாடி குண்டலப் புழுப்போல் ஊரும் என்பர்.

24. கீழ்க்காணும் நோய்களுக்கு நாடி எவ்வாறு நடக்கும்?

மலசல அடைப்பு, குதிரை வலி, பீனிசம், தலை கனப்பு, மூலம், பைத்தியம், மல பந்தம்.

மலசல அடைப்பு:- வாத நாடியும், பித்த நாடியும் தம் நிலையினின்று பிசகி நடந்தால் மலசலம் கட்டும்.

குதிரைவலி:- வாத நாடி குதிரை பாய்ந்து ஓடுவதைப்போல் ஓடும். இவ்வாறு ஓடினால் தொண்ணூறு நாழிகையில் மரணம். இதற்குள் மரணமாகாவிட்டால் வேப்ப எண்ணெயும், விஷ முஷ்டித் தைலமும் தேய்க்க நோய் நீங்கும்.

பீனிசம், தலை கனப்பு:- இவைகளுக்குக் கப நாடி பதறி நிற்கும்.

மூலம்:- மூன்று நாடிகளும் மந்தமாய் ஓடும்.

பைத்தியம்:- பித்த நாடி கதித்துத் துடித்து நிற்கும்.

குறிப்பு:- பித்தம் எழும்பினால் வாய் பிதற்றும். பித்த நாடி மடங்கித் துடித்தால் பேச்சு ஒடுங்கி வாய் குழறும். பித்தம் பலமாகத் தனித்து நின்றால் பைத்தியம் பலக்கும்.

மலபந்தம்:- வாதநாடி மடங்கித் துடித்து நிற்கும்.

## 25. வாத பித்தத்திற்கு நாடி யாது?

வாதம் இரண்டு மாத்திரையாகவும், பித்தம் ஒரு மாத்திரையாகவும் நடப்பது வாத பித்தமாகும். வாத கபம், பித்த வாதம் இவைகளுக்கும் இவ்வாறே கொள்ளவேண்டும்

26. வாத மீறல், பித்த மீறல், கபமீறல் என்பதென்ன?

வாதம் தனித்து இரண்டு மாத்திரையளவில் நடந்தால் வாத மீறலாகும். இது வாதத்தில் வாதம் எனப்படும்.

பித்தம் தனித்து இரண்டு மாத்திரையளவில் நடந்தால் பித்த மீறலாகும். இது பித்தத்தில் பித்தம் எனப்படும்.

கபம் தனித்து இரண்டு மாத்திரையளவில் நடப்பது கப மீறலாகும். இது கபத்தில் கபம் எனப்படும்.

27. குருநாடி என்பது என்பது என்ன? விளக்குக.

குருநாடி என்று தனியாக ஒரு நாடியில்லை. உடலின் உயிர்நாடி யாகவும், எழுபத்தீராயிரம் நாடிகளுக்கெல்லாம் உறுதியான நாடியாகவும், நாடிகள் யாவற்றிலும் ஊடுருவி நின்று, மூன்று தோடங்களின் நிலைகளை யுணர்த்தும் நாடிக்குக் குருநாடி என்று பெயர் வைத்துள்ளனர். இதற்கெனத் தனியாக விரல் வைத்துப் பார்க்க வேண்டியதில்லை. வாதநாடியின் நிலையிலேயே ஆள்காட்டி விரலின் மூலம் இந்நாடிக்குரிய சூட்சும விதிகளை நுண்ணறிவுடன் அறியலாம் என்று நூல்களில் கூறப்பட்டுள்ளது. மற்றும் வாத பித்த கபங்களுக்குரிய மூன்று விரல்களிலும் இது ஊடுருவி நிற்கும் என்றும், இதன் சூட்சும விதியால்

ஒவ்வொரு விரலிலும் மூன்று தோடங்களையும் அறிய லாம் என்றும் நூல்கள் கூறுகின்றன. வாத பித்த கப நிலைகளை மூன்று விரல்களால் அறிவதே அரிதாக இருக்கும் போது ஒவ்வொரு விரலிலும் மூன்று தோடங்களையும் அறிவது சாத்தியமாகாது. இது சாத் தியமாகக் கைகூட வேண்டுமெனில் குருவின் மூலமா கவே இதன் சூட்சுமத்தை அறியவேண்டும். இதனால் தான் இதற்குக் குருநாடி என்று பெயர் வைத்தார் களோ என்னவோ என்று எண்ண வேண்டி யுள்ளது.

## 28. பூத நாடியைப் பற்றிக் குறிப் பொன்று தருக.

புத்தி மாறுபாடு, பைத்தியம் போன்றவைகட்கு மூலமான பித்தநாடி வேறுபட்ட நாடிகளைத் தோற்று விக்கு மாதலால், பித்த நாடியின் வேறுபட்ட போக்கே பூதநாடி என்று சித்தர் நூலில் கூறப்பட்டி ருக்கிறது.

பித்த நாடி கல்லெறிதலைப்போலவும், ஆட்டுக் கடாவின் பாய்ச்சலைப் போலவும், செக்கின் திருகலைப் போலவும், மூஞ்சூறு ஓடுவதைப் போலவும், அடிக்கப் பட்ட பந்து எழும்புவதைப்போலவும், ஏற்றம் மேலே சென்று தாழ்வதைப் போலவும் தோன்றினால் அது பூத நாடி எனப்படும்.

## 29. நோய் தீர்ந்து வருவதை அறியும் நாடி நடை யாது?

நாடிகள் பஞ்சு போன்று காணப்படினும், மேல் நோக்கி வருவதைப்போல் நடக்கினும் நோய் தீர்ந்து வருவதின் குறியாகும்.

## 7. நோய்கள்

### 1. ஜலோதரத்திற்கும் மகோதரத்திற்கு முள்ள வேறுபாடு யாது?

வயிற்றில் இருக்கின்ற சவ்வுக்குள் நீர் மிகுதி யாகச் சேர்ந்து வயிறு பருத்துக் காணப்படுவது ஜலோதரமாகும்.

குண்டிக்காய், ஈரல், இருதயம் முதலிய உள்ளு றுப்புக்களில் நீர் மிகுதியாகச் சேர்ந்து வயிறு பருத் துக்காணப்படுவது மகோதரமாகும்.

### 2. மகோதரத்தின் பூர்வ ரூபம் யாது?

உணவு உண்டு வெகு நேரம் கழித்துத் தாகமுண் டாகித் தண்ணீர் குடித்த பிறகு சீரணமாயிற்று இல்லையா என்று அறிய முடியாமை, பசியே இல்லா மல் இருத்தல், அடிக்கடி பலக்குறைவு எற்படல், சிறிய வேலை செய்தாலும் பெருமூச்சு வாங்குதல், மிகுதியாக மலம் சேர்ந்து பேதியாதல், கால்களில் வீக்கம், அடி வயிற்றுச் சந்துகளில் வலி, வயிற்றின் மடிப்புகள் மறைதல், வயிற்றின் மீது இரத்தக் குழாய்கள் கொடி கொடியாகக் காணப்படல் முதலியன மகோதரத்தின் பூர்வ ரூபங்களாகும்.

3, மகோதரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

மகோதரம் 12 வகைப்படும்.

(1) வாத மகோதரம்
(2) பித்த மகோதரம்
(3) சேத்தும மகோதரம்
(4) தொந்த மகோதரம்
(5) நீராம்பல் மகோதரம்
(6) கவிசை மகோதரம்
(7) பெருவயிற்று மகோதரம்
(8) பாண்டு மகோதரம்
(9) சோகை மகோதரம்
(10) காமாலை மகோதரம்
(11) சல மகோதரம்
(12) பீலிகை மகோதரம்

முதலியன வாகும்.

4. சோகை மகோதரத்தின் குணம் யாது?

அடி வயிறு குறைந்து பருத்தல், இருமல், மேல் வயிறு பிகுவாக இருத்தல், தாகம். மேல்மூச்சு, விக்கல், பீஜம் கைகால் வீக்கம், உடல் குளிர்தல், மல சலம் சுருக்க மடைதல் முதலியன சோகை மகோதரத் தின் குணங்களாகும்.

5. நீராம்பலின் குணம் யாது?

அடி வயிறு கனத்திருத்தல், புறங்கால்களில் வீக் கம், நாவறண்டிருத்தல், மூர்ச்சையுண்டாதல், மயக்க

முண்டாதல், மலம் தளர்ச்சியாக இருத்தல், முகம் மாறுபடல், கண்கள் வெளுத்துக் காணல், கை கால்களை முடக்க முடியாமல் இருத்தல், இருமல் முதலியன நீராம்பலின் குணங்களாகும்.

## 6. பாண்டு மகோதரத்தின் குணம் யாது?

அடி வயிறு வீங்குதல்
புறங்கால்கள் வீங்குதல்
உடல் வாடி ஊதல்
முகக் கலை மாறுபடுதல்
முகம் ஊதல்
மயிர்கள் செந்நிற மாதல்
நடக்க முடியாமல் இருத்தல்
மேல் மூச்சு வாங்கல்
இரத்தக் குறைவு

முதலியன பாண்டு மகோதரத்தின் குணங்களாகும்.

## 7. கரு தரித்திருப்பதை அறியும் குறிகள் யாவை?

அடி வயிற்றில் துடிப்பு இருக்கும். தாகம். ஆயாசம். சோம்பல், மயிர்க் கூச்செரிதல், தொடைகளில் வலி, நடுக்கம் முதலியன உண்டாகும்.

மாதாந்திரம் வாராமல் இருக்கும். நாபிக்கு அடியில் ரோமராஜி நன்ருகத் தெரியும்.

காரணமின்றி வாந்தியுண்டாகும். பாலுறுப்பு பருமன் அடைந்துவரும். பாலுறுப்புக்களின் நுனி கருநிறமடைந்து, முழு வெண்மை இல்லாத பால் வெளிப்படும்.

உடல் இளைக்கும். கண்ணில் இமைகளைச் சுற்றிக் கருவளையம் உண்டாகும். காலில் வியர்க்கும். வாயில் நீர் ஊறும்.

இவைகள் கருப்பம் அடைந்திருப்பதின் குறிகளாகும்.

### 8. பிரசவ காலத்திற்கான அறிகுறிகள் யாவை?

முகம் வாட்ட மடையும்; இருதயத்தில் கட்டுவிட்டதுபோல் தோன்றும்; உடலில் அசதியுண்டாகும்; வயிறும் கண்களும் தளர்ந்து காணும்; வாயில் உமிழ் நீர் சுரக்கும்; அடிவயிறு கனக்கும்; இருதயம், வயிறு. தொடையிடுக்கு, மூத்திரப்பை உள்ள இடம் இவ்விடங்களில் துடிப்பு உண்டாகும்: குறியில் நீர் கசியும்; உணவில் வெறுப்பு உண்டாகும்; பிரசவ வலி அடிக்கடி தோன்றி மிகுதிப்படும்.

இவைகள் பிரசவ காலத்திற்கான அறிகுறிகளாகும்.

### 9. கஷ்ட பிரசவத்தின் அறிகுறிகள் யாவை?

தலை தொங்கிப் போகும்; உடல் குளிர்ச்சி யடையும்; வயிற்றின் சிரைகள் நீலநிற மடையும். மேலெ

முந்து தோன்றும். இக்குறிகள் கஷ்ட பிரசவத்தை அறிவிப்பனவாகும்.

### 10. நாக்கின் மூலம் என்னென்ன நோய்களை அறியலாம்?

நாக்கு கருநிறமாயும், முள்போன்றும், வெடித்தும் இருந்தால் வாதநோய்; மஞ்சள் அல்லது சிவப்பு நிறத்துடன் இருந்தால் பித்த நோய்; வெண்மையாகவும் தடித்தும் வழுவழுப்பாகவும் இருந்தால் கப நோய்.

நாக்கில் புண்கள் இருந்தால் சீரணக் கோளாறு.

மாவுபோல் வெண்மை படர்ந்திருந்தால் மலச் சிக்கல்.

நாக்கின் ஓரங்கள் காய்ந்திருந்தால் பித்த ஈரல் சம்பந்தமான நோய்; பித்த சுரம்.

நாக்கு நீல நிறமாக இருந்தால் இரத்த ஓட்டம் சரிவர இல்லாமை; சாம்பல் நிறமாக இருந்தால் பலவீனம்; உலர்ந்திருந்தால் சன்னிபாத சுரம்.

### 11. காமாலை நோயைக் கண்டு பிடிப்பது எப்படி?

1. உடம்பில் அதிக வியர்வை தோன்றும்.
2. உடம்பு இளைக்கும்,
3. பசியில்லாதிருக்கும்.

4. வெயிலில் உட்கார விருப்ப முண்டாகும்,

5. சாம்பல், மண் இவற்றைத் தின்னப் பிரிய முண்டாகும்.

6. சிறுநீர் மஞ்சள் நிறமாய் இறங்கும்; சிவப்பு நிறமாய் இறங்கலும் உண்டு. சிறுநீரில் சோறு போட்டால் சோறெல்லாம் மஞ்சள் நிறமாகும்.

7. சிறிது சுரம் இருக்கும்.

8. முதலில் கண்ணில் மஞ்சள் நிறமுண்டாகும். பிறகு முகம், நகம், தோல் இவற்றில் மஞ்சள் நிறங் காணும்.

9. கை, கால், முகம் வீங்கும்.

10. உடல் வீக்கம் கொண்டு நாவறட்சி, தாகம் இவைகள் உண்டாகும்.

11. சில சமயங்களில் முகம் வீங்கிக் கண்கள் வெளுக்கும்.

12. நாடி மெலிந்து காணும்.

இக்குறிகளைக் கண்டால் காமாலை நோய் என்று அறியவேண்டும்.

## 12. குன்ம நோயைக் கண்டுபிடிப்பது எப்படி?

(1) பித்தம் அதிகரித்ததினால் அதிக ஏப்பம்.

(2) மல பந்தம்,

(3) சாப்பிடாவிட்டாலும் வயிறு நிறைந்தது போலிருத்தல்.

(4) குடலில் இரைச்சல்.

(5) வயிற்றிலும் அற்பக் கூச்சலோடு உப்பிசம் இருக்கும்.

(6) வயிற்று வலி.

(7) சாப்பிட்டபின் வாந்தி.

(8) உடல் மெலிதல்.

(9) வயிற்றில் கட்டியிருப்பது போல் தோன்றுதலும், அது புரளுதலும்.

இக்குறிகளுள் பலவற்றைக் காணின் குன்ம நோயென்று அறியவேண்டும்.

13. குன்ம நோய் உண்டாகக் காரணம் யாது?

(1) வறண்ட உணவுகளை அடிக்கடி உண்ணுதல்.

(2) நெய்,எண்ணெய், கொழுப்பு இவைகள் கலக்காத உணவுகளை உண்ணுதல்,

(3) பசியை அடக்கல்.

(4) உடலுக்கு வறட்சியைத் தரும் வேலைகளைச் செய்தல்.

(5) உடலுக்கு நைப்பு உண்டாக்கும் எண்ணெய் நீராடலைத் தவிர்த்தல்.

(6) உடல் பலவீனமாய் இருக்கும்போது வாயுப் பண்டங்களை உண்ணுதல்.

(7) மிகுதியாகப் பேதியாகும் மருந்துகளைச் சாப்பிடுதல்.

(8) மல மூத்திரங்களை அடக்குதல் முதலியன வாகும். இந்நோய்க்கு முக்கிய காரணம் வயிறு முத லிய உறுப்புக்களின் உள்பாகம் வறண்டு போதல், இதனால் வயிற்றில் வலியும் புண்களும் உண்டாதல்.

14. குன்ம நோயில் கண்ணுக்குப் புலப் படக் கூடிய அம்சங்கள் யாவை ?

இரைப்பைச் சுரப்பு, வயிற்றுக்குள் கட்டி, வாந்தி உடல் மெலிதல் முதலியன கண்ணுக்குப் புலப்படக் கூடிய அம்சங்களாகும்,

15. பித்த குன்மத்தின் குணங்கள் யாவை?

மஞ்சள் நிறமுள்ள முகம், மயக்கம், கைகால் உளைச்சல், பெருமூச்சு. மலம் முக்கிவிழுதல், வாந்தி. நெஞ்சில் கபம் கட்டல், தாகம். கடும் வெயிலில் தலை சுற்றல், மூத்திரம் சிவந்து காணல் முதலியன பித்த குன்மத்தின் குணங்களாகும்.

16. பாண்டு என்னும் நோய் வரக் கார ணம் யாது ?

(1) புளிப்புப் பொருள்களை மிகுதியாகச் சாப்பி தல்.

(2) மண், சாம்பல் இவற்றைத் தின்னல்.

(3) கள், சாராயம் முதலியன குடித்தல்,

(4) சாப்பிட்டவுடன் பகலில் மிகுதியாகத் தூங் கல்.

(5) மிதமிஞ்சிய பெண்போகம்,

இவற்ருல் இரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்கள் குறைந்து கண், உதடு, நகம் முதலியன வெளுத்து இந் நோய் உண்டாகிறது.

17. பாண்டு ரோகத்தின் ஆரம்பக் குறிகள் யாவை?

(1) தோல் வெடிப்பு

(2) உடம்பு மெலிதல்

(3) அடிக்கடி காறி உமிழ்தல்

(4) சாம்பல். மண் தின்பதில் விருப்பம்.

(5) மலம், மூத்திரம் இவை மஞ்சள் நிறமடைதல்.

(6) கண்களைச்சுற்றி வீங்குதல்

இவை ஆரம்பக் குறிகளாகும்.

18. பாண்டு ரோகத்தின் பொதுவான குறிகள் யாவை ?

| | |
|---|---|
| காதிரைச்சல் | தாதுக்கள் பலங்குன்றல் |
| சுரம் | ஒளி குன்றல் |
| பெரு மூச்சு | பலம் குன்றல் |
| மயக்கம் | நைப்பு குன்றல் |
| உறுப்புகள் செயலறுதல் | உணவில் வெறுப்பு |
| கண்ணைச் சுற்றி வீக்கம் | காறி உமிழ்தல் |
| பேச முடியாமை | மயிர் உதிர்தல் |

முதலியன பொதுவான குறிகளாகும்.

19. உருக்கி (சயம்) என்னும் நோய் வரக் காரணம் யாது ? அதன் ஆரம்பக் குறிகள் யாவை ? முதிர்ந்த நிலையில் அதன் குறிகள் யாவை?

காரணம்

இது பரம்பரையை ஒட்டி வரக்கூடியது. சுவாச கோசங்களில் சயக்கிருமிகள் உண்டாகி அதனால் ஏற்படும் நோயே சயம் எனப்படுகிறது.

ஆரம்பக் குறிகள்

ஆரம்பத்தில் சற்று இருமல் இருக்கும். சீரணக் கோளாறினால் பசியில்லாமல் இருக்கும். வாந்தியாகும். தொண்டை கம்மும். நாளுக்கு நாள் உடல் இளைத்து வரும். பேச சக்தி குறையும். மார்பில் வலி, அசதி, மார்பில் படபடப்பு, சிலசமயங்களில் சுரம் முதலியன உண்டாகும். பெருமூச்சு வாங்கும். நாக்கு சிறிது மாசுபடிந்த சிவப்பு நிறமாய் இருக்கும். இவை ஆரம்பத்தில் சிறிதளவாக இருந்தாலும் நாள் ஆக ஆகப்பெருகிக் கொண்டே வரும்.

முதிர்ந்த நிலைக் குறிகள்

சுரத்தோடு கபம் மிகுதியாகும். வியர்வை மிகுதியாக உண்டாகும். இரத்த வாந்தி உண்டாகும், உடல் மிகவும் மெலிந்து இளைப்பும் ஆயாசமும் உண்டாகும். விலாச்சந்து நடுமுதுகு இவற்றில் வலியுண்டாகும்.

சயரோகத்தில் வீக்கமுண்டானாலும், உடல் குளிர்ச்சியடைந்தாலும், விலாச்சந்தும் நடுமுதுகும் அதிகமாக வலித்தாலும் மரணம் உறுதியென்று அறியவேண்டும். மருந்து பயனில்லாமல் போகும்.

இது உடலை க்ஷீணிக்கச் செய்து கொண்டே இருப்பதால் க்ஷயம் அதாவது உருக்கி எனப்படுகிறது போலும்.

20. ஒரு நோயாளியின் எச்சில் மூலம் அவன் மரணத்தை நிச்சயிப்பது எப்படி?

நீண்ட நாள் நோயாளியாக இருப்பவரை எச்சிலைத் துப்பச் சொன்னால், எச்சில் கோழையோடு உதட்டிலேயே ஒட்டிக் கொண்டால் அவர் பிழைப்பது அரிதென்று உணரலாம்.

21. காச நோய் ஏற்படக் காரணங்கள் யாவை?

பழைய உணவுகளைப் புசிப்பதாலும், தூசுகள் மிகுதியாக மூக்கின் வழியாக உட்செல்லுவதாலும், அளவுக்கு மீறிய உடற்பயிற்சி அல்லது உழைப்பினாலும், விரைவாக உணவை உட்கொள்ளுவதாலும், சீரணிக்கப் படாத உணவின் ரசம் வாயுவால் மேல் நோக்கித் தள்ளப்படுவதாலும், தும்மல் முதலிய வேகங்களை அடக்குவதாலும், புகை முதலியன மூக்கினுள் மிகுதியாகப் புகுவதினாலும் பிராணவாயு உதான வாயுவுடன் சேர்ந்து இருமலை ஏற்படுத்துகின்றது.

இவ்வியாதி உள்ளவர்களின் எச்சில் முதலியவற்ரு லும் பரம்பரையாலும் இந்நோய் ஏற்படுகின்றது

22. காசத்திற்கும் சயத்திற்குமுள்ள வேறு பாடு யாது?

| காசம் | சயம் |
| --- | --- |
| 1. இருமலோடு வரும் | 1. இருமல் இல்லாமலும் இருக்கும் |
| 2. இருமிக் கோழையை வெளிப்படுத்திய பின் சற்றுச் சுகமுண்டாகும். | 2. இருமிக் கோழையை வெளிப்படுத்திலும் சுகம் உண்டான தாகத்தெரியாது. |
| 3. உடல் நாளுக்கு நாள் விரைவில் மெலியாது. | 3. உடல் நாளுக்கு நாள் மெலிவது குறையாது. |

23. பட்சவாதத்தின் குணம் யாது?

இது பொதுவாக வயது, பழக்க வழக்கங்கள், உணவு விதிகள் முதலியவற்றைப் பொறுத்துள்ளது. வாயுவின் மிகுதியினல் உடலில்உள்ள நரம்புகள் இயங் கும் ஆற்றல் இழந்து விடும். இது பெரும்பாலும் கை கால்களிலேயே நிகழ்வது உண்டு. எந்தப் பக்கத்துக் கை அல்லது கால் அல்லது உறுப்பின் நரம்பு பாதிக் கப் படுகிறதோ அந்தக் கை, அந்தக் கால், அந்த உறுப்பு இயங்கும் ஆற்றல் இழந்து விடும். அதனுல் இதனைப் பக்க வாதம் அல்லது பாரிச வாய்வு என்பர். இதனுல் இசிவு உண்டாவதும், கை கால் கோணு தலும், வியர்வை உண்டாதலும் உண்டு. வாய்வு

முதிர்வடைந்தால் கால்கள் கோணித் தரையில் நடக்க முடியாதனவாகி விடும். கைகளும் எதையும் பிடிக்க முடியாதனவாகி விடும். இதனால் வாய் கோணுதலும் உண்டு.

இந்நோய் தனியான வாதத்தினால் மட்டும் ஏற்பட்டிருந்தால் மருந்துக்குக் கட்டுப்படுவது அரிது. கபத்தினுடனோ பித்தத்துடனோ சேர்ந்து உண்டாகியிருந்தால் மருந்துக்குக் கட்டுப்பட்டுக் குணமடையும்.

## 24. பீனிசம் என்பது யாது ?

நீண்ட நேரம் தூங்குதல், தூக்கமில்லாதிருத்தல், பனிக் காற்றில் இருத்தல், நாசியில் தூசி அடைந்திருத்தல், கண்ணீரை அடக்குதல், ஓயாமல் அல்லது உரக்கப் பேசுதல், நாள்தோறும் குளிர்ந்த நீரில் மூழ்கல், மேடு பள்ளமுள்ள இடத்தில் படுத்தல், அதிகஉயரம் அல்லது தாழ்வான தலையணைகளைப் பயன்படுத்தல், அளவுக்கு மீறி நீர் பருகல், வேறிடத்து நீர் பருகல் நீராடல், மிதமிஞ்சிய போகம், வாந்தியை யடக்கல் முதலியவற்றால் திரிதோடங்கள் அதிகரித்து நாசியில் சேர்வதால் வலிய சுவாசித்தல், அதிக தும்மல், நாசியில் துர்நாற்றம், தலைநோய், நாசியில் நீர் வடிதல், சளி வடிதல், மூக்கால் பேசுவதுபோல் பேசல் முதலியன உண்டாகும். இதற்குப் பீனிசம் என்று பெயர்.

## 25. பிரமேகம் என்பது என்ன? அது எதனால் உண்டாகிறது? அதன் ஆரம்பக் குறிகள் யாவை ?

பிரமேகம் என்பது நீரிழிவு வியாதியாகும். காரம் துவர்ப்பு, உப்பு இவற்றை மிகுதியாகப் புசித்தல், மோகத்துடன் பட்டினி, எப்போதும் பெண் போகம், மன நோய், அளவுக்கு மீறிய உழைப்பு, மல மூத்திரங்களை யடக்கல், வெயிலில் வாடுதல், தூக்கம் கெடுதல், இனிப்புப் பொருள்களை மிகுதியாக உண்டல், இரத்தம் வெளியேறுதல் முதலியவற்றால் பிரமேகம் உண்டாகிறது.

## ஆரம்பக் குறிகள்

கைகால் உளைச்சல், உறுப்புக்கள் மறத்தல், உடல் எரிதல், மிகுந்த நீர் வேட்கை, வாய் தொண்டை மேல் வாய் உலர்ந்து போதல், மிகுதியாக வியர்த்தல், சோம்பல், வாயில் தித்திப்பு உண்டாதல், தலைமயிர் சடை விழுதல், உடம்பு கனத்தல், குளிர்ச்சியில் மிகுவிருப்பம் உண்டாதல், மயிர் நகம் இவை வெகுசீக்கிரமாக வளர்தல், சிறுநீர்பலவிதமாக மாறுபடல், உடம்பிலும், சிறுநீரிலும் எறும்பு மொய்த்தல் ஆகியவை பிரமேகத்தின் ஆரம்பக் குறிகளாகும்.

26. நிமோனியா (கப வாத சுரம்) மலேரியா சுரம் இவ்விரண்டிற்குமுள்ள வேறுபாடு யாது?

## நிமோனியா (கபவாத சுரம்)

இது கபவாத சன்னி சுரம் எனப்படும். வடமொழியில் அபின்யாச சந்நிபாதசுரம் எனப்படுகிறது. இந்நோயின் துவக்கத்தில் சுரம் காணும்; மார்பு வலி

யும், மார்பினுள்ளே அமுக்கப்படுவதுபோன்ற வலியும் இருக்கும். சுவாசக் குழலில் கபம் சேர்வதால் கஷ்ட சுவாசமுண்டாகும். மஞ்சள் கபங் காணும். உடல் முழுவதும் வலியுண்டாகும். இருமல் காணும். சிறு நீர் குறைந்து காணும். நாசித் துளைகளும் கண்களும் உலர்ந்திருக்கும். வியாதியில்லாத மனிதனின் மார்பைத் தட்டினால் 'தும் தும்' என்ற சத்தம் கேட்பதுபோல் இச்சுரமுள்ளவனுக்குச் சத்தம் கேட்காது.

### மலேரியா சுரம் :

இது சித்தர் வைத்தியத்தில் விஷம சுரம் எனப் படும். இதுவே முறை சுரமாக மாறுகிறது. குளிர் சுரம் என்றும் இதைக்கூறுகிறார்கள். இது குறிப்பிட்ட நேரத்தில் வரும். அப்போது தலைவலியுடன் குளிர் மிகுதியாக உண்டாகும். காலக்கிரமம் தவறியும் வரும். சுரத்தின் வேகம் அடிக்கடி மாறி வேறுபடுதலும் உண்டு.

### 27. சன்னிபாத சுரம் என்று எவ்வாறு அறிந்து கொள்வாய்?

இச்சுரம் நீங்க 21 நாள் செல்லுமென்று கூறுவர். இச்சுரம் விடாமல் இருந்து கொண்டிருக்கும்.

முதல் வாரத்தில் நாளுக்கு நாள் சுரம் மிகுதிப் படும். உடல வெப்பத்திற்கு ஏற்ற நாடி இராது. தலைகனமுண்டாகும். நினைவு தடுமாறல் பிதற்றல் முதலியன உண்டாகும். மார்பு, வயிறு முதலிய இடங்

களில் ரோஜாப் பூவின் நிறத்தையுடைய தடிப்புகள் தோன்றுதலுமுண்டு.

இரண்டாவது வாரத்தில் வயிற்றுப் போக்கு உண்டாகும். மலம் தண்ணீர் போன்றும், அழுகியதாகவும், நாற்றமுடையதாகவும் இருக்கும். பலவீனமாகி உடல் இளைக்கும். சிறுநீர் குறையும். சிலருக்கு மலச் சிக்கல் இருக்கும்.

மூன்ருவது வாரத்தில் பலவீனம் அதிகமாகும். படுக்கையில் தன் விருப்பப்படி புரள முடியாது. பற்களில் அழுக்குப் படியும். மலம் தன்னையறியாது செல்லும். காது கேளாது. பிதற்றலுண்டாகும். மூன்ருவது வாரத்திற்குள் சுரம் நீங்காவிடில் மரணமுண்டாகும்.

## 28. சுரத்தின் பத்துத் துன்பங்கள் (தசாவஸ்தைகள்) யாவை ?

1. முன் இறந்தவர்களைக் கனவில் காணல்.
2. நினைவாற்றல் இல்லாமை
3. சித்தப் பிரமை
4. மேல் மூச்சு வாங்கல்
5. விழித்தப்படியே இருத்தல்.
6. குரல் மாறுதல்.
7. உடல் முழுவதும் எரிச்சல்.
8. அடக்கடி முகத்தைக் கையால் தடவிக் கொள்ளுதல்.

9. குளிர்ந்த வியர்வை.

10. உயிர் நீங்குதல்

முதலியன சுரத்தின் பத்துத் துன்பங்களாகும்.

## 29. துவாலை என்பது என்ன? அதற்கு நீ செய்யும் பரிகாரம் யாது?

துவாலை என்பது பெரும்பாடு,

உடல் நல்ல நிலையில் உள்ள பெண்களுக்கு 28 நாள்களுக்கு ஒரு முறை யாத விடாய் (சூதகக் கழிவு) உண்டாகும், முதல் 5 நாள்வரை வெளிப்படும். இதுவே முறையானது. ஆனால் உடல் நல்ல நிலையில் இல்லாதவர்களுக்கு எப்போதும் சூதகம் சிறிது சிறிதாக அல்லது மிகுதியாக செவ்விளநீரைப் போன்றும், இறைச்சி கழுவிய நீரைப் போன்றும், நீடித்து ஒழுகிக் கொண்டிருக்கும். இதற்குப் பெரும்பாடு என்று பெயர்.

இதனால் பலக்குறைவு, மயக்கம், நாவறட்சி, தலை சுற்றல், தாகம் சோம்பல்முதலியன உண்டாகும். இது அதிக புணர்ச்சி, அடிக்கடி கருவழிவு, கருப்பையில் இரத்தம் அதிகமாகக் ஊறுதல், நாள்பட்ட அதிசாரம் முதலிய காரணங்களால் உண்டாகும்.

### பரிகாரம்

சிற்றிலைப் பாலாடை என்னும் சிறு அம்மான் பச்சரிசி மூலிகையைப் பாலில் வேக வைத்து உலர்த்தித் தூள்செய்து வாழைப் பூச்சாற்றில் திரிகடிபிரமாணம் போட்டுக் கொடுக்கக் குணமாகும்.

நாவல் பட்டையை இடித்துச் சாறெடுத்துக் காலையில் ஆழாக்குச் சாறு விகிதம் ஒன்று அல்லது இரண்டு நாள் கொடுத்தாலும் குணமாகும்.

30. நவமூலங்கள் எவை?

1. வாத மூலம்
2. பித்த மூலம்
3. கப மூலம்
4. தொந்த மூலம்
5. இரத்த மூலம்.
6. முளை மூலம்
7. பவுத்திர மூலம்
8. உள்மூலம்
9. புற மூலம்

31. பரியாரிப்படை என்பது என்ன?

மீசை, தாடி முதலான இடங்களில் உள்ள மயிர்க் கோளங்களில் உண்டாகும் அழற்சியினுல் ஏற்படும் படைக்கும் பரியாரிப்படை என்று பெயர்.

32. கணம் உண்டாவதின் காரணங்கள் யாவை? அது எத்தனை ஆண்டுகள் குழந்தையைப் பீடித்திருக்கும்?

கர்ப்ப காலத்தில் தாய் சாப்பிடும் கெட்டுப் போன உணவு, அசுத்தமான உணவு, அசுத்தமான நீர், தூக்கம் கெடுதல், பட்டினியிருத்தல், கோபம் கொள்ளு முதல் தலியவற்ருலும், மிக்க கவலை கொள்வதாலும் வயிற்றில் வெப்ப முண்டாகி அது சிசுவைத் தாக்கும். இதற்கே கணம் என்று பெயர். ஆகவே, கணம் கர்ப் பத்தின் வெப்ப ரோக மென்பது புலனுகிறது. கணம் தாய் தந்தைகளின் நாதவிந்துகளின் வெப்பத்தினு

லும் சிசுவுக்கு உண்டாவதுண்டு. சிசுவின் சப்ததாதுக் களும் வன்மையடையும் காலத்து இந்நோய் விருத்திய டையும்.

இதனல் சுரம் இருமலுடன் வயிற்ருேட்டம் உண்டாகும். வெப்பம் எலும்பைப் பற்றி உள்ளும் வெளியும் வீசும். குழந்தை இளைக்கும்.

இந்நோய் மூன்ருண்டு முதல் ஏழாம் ஆண்டுவரை இருக்கும். பன்னிரண்டு ஆண்டுகள் வரை இருக்கும் என்றும் கூறுவர்.

## 33. கண ரோகத்தின் பொதுக் குறிகள் யாவை ?

உடல் எப்போதும் கதகதப்பாக இருக்கும். சுர மிருக்கும். கைகால்கள் குச்சி போலாகும், கெட்டுப் போன பால் திரிந்து இருப்பது போல் தண்ணீர் வேருகவும் மலம் வேருகவும் கழியும். கண் குழிவிழும், தாக முண்டாகும். நாக்கிலும், மூக்கிலும் வேக்காடு உண்டா கும். இருமலும் இருக்கும்.

## 34. மாந்தம் எதனல் உண்டாகும்?

இந்நோய் குழந்தைகளுக்கு ஏற்படும் மந்தத்தால் உண்டாகிறது. மாம்பழம், பலாப்பழம், தேங்காய், கிழங்குவகைகள், செம்மறியாடு மீன், கோழி, பன்றி இவற்றின் ஊன், சுரைக்காய், வாழைப்பூ, துவரம் பருப்பு, வெல்லம், ஊசறகறி, புளித்தமோர், எரு மைப்பால், மந்தப் பொருள் முதலியவற்றைத் தின மும் சாப்பிடும் தாயின் பாலைக்குடிக்கும் குழந்தைக்கு

மந்தம் உண்டாகி மாந்தம் என்னும் நோய் உண்டாகிறது. ஆதலால், தாயின் தீய பழக்கவழக்கங்களினுலேயே இந்நோய் உண்டாகிறது என்னலாம்.

### 35. மாந்தம் எத்தனை வகைப்படும்? எவையேனும் 10 கூறுக.

மாந்தம் 20 வகைப்படும். சில நூல்கள் 20 க்கு மேற்பட்ட வகைகள் கூறும். சில நூல்கள் 8 வகையென்று கூறும்.

சிலவற்றின் பெயர்கள்

1. வாத மாந்தம்
2. நீர் மாந்தம்
3. போர் மாந்தம்
4. செறியா மாந்தம்
5. உள மாந்தம்
6. கண மாந்தம்
7. முக்கு மாந்தம்
8. கழி மாந்தம்
9. உப்புச மாந்தம்
10. கட்டு மாந்தம்.

### 36. மாந்தத்தின் குறிகள் யாவை?

குழந்தை முலைப்பால் அருந்ாது. உடல் வெதும்பி வியர்க்கும். பால் கொடுத்தாலும் வாந்தி யெடுத்துச் சோர்ந்து மயங்கி விழும், பலவிதமாய்க் கழியும். கண்கள் சிவக்கும் நாவறட்சி யுண்டாகும். கைகால் குளிர்ச்சியடையும், கால்கள் பின்னிக் கொள்ளும், குரல் தாழும், கண் குழி விழும்; சுழலும், முகம் வெளுக்கும், குழந்தை கையில் தங்காது.

37. குழந்தைகளின் தோடங்கள் (தோஷங்கள்) எத்தனை? அவை யாவை?

குழந்தைகளின் தோடங்கள் ஒன்பது.

அவையாவன :

1. நாய் முள்தோடம்
2. குளிசதோடம்
3. தேரை தோடம்
4. எச்சில் தோடம்
5. தூர தோடம்
6. அளி தோடம்
7. போக ஆண்தோடம்
8. போகப்பெண் தோடம்
9. குளித்த பெண் எடுத்த தோடம்

இவையே யன்றிப் பாலகிரக தோடம், பட்சி தோடம் முதலியனவும் உண்டு.

38. கரப்பான் தோன்றக் காரணம் யாது?

கம்பு, கேழ்வரகு, சோளம், மொச்சை, பச்சைக் கடலை, பாகற்காய், வாழைக்காய், கெளுத்திமீன் இவற்றைத் தாய் அதிகம் சாப்பிடுவதால் கரப்பான் தோன்றும்.

39. கரப்பான் நோய்கள் எத்தனை? அவற்றுள் சிலவற்றைக் கூறுக.

கரப்பான் நோய்கள் 90 என்று கூறுவர். அவற்றுள் சில.

1. சொறி கரப்பான்-அரிப்பெடுத்துச் சொரிந்து கொண்டே இருப்பது.

2. ஊது கரப்பான் - உடல் முழுவதும் வீங்குவது.

3. வெடிகரப்பான் - உடலில் பாளம் பாளமாக வெடிப்பது.

4. செங்கரப்பான் - உடலில் சிவந்த நிறம் காண்பது.

5, மண்டை கரப்பான்-மண்டையில் புண்ணாகிப் பக்குக் கட்டி இருப்பது.

6. அக்கிக் கரப்பான் - உடலில் புண்ணாகி நீர் கசிந்து, அந்நீர் பட்டவிடமெல்லாம் ஒருவித நீர்ப்புண் ஏற்படுவது.

## 40. குழந்தைகளுக்கு வரும் கிரந்தி நோயின் வகைகள் யாவை? அவற்றின் குறிகள் யாவை?

கிரந்தி நோயின் வகைகள் இரண்டு. அவை: 1 செங்கிரந்தி, 2 கருங்கிரந்தி.

செங்கிரந்தி: குழந்தை பிறந்தவுடன் பூனைக் குரல் போல் அழும்; உடம்பை அசைக்காது; நன்றாகப் பார்க்காது; மல சலம் விடாது; உள்ளங்கை, உள்ளங்கால், உதடு இவற்றில் தடித்த சிவப்பு உண்டாகும்; நெற்றி உயர்ந்து வீங்கும்.

கருங்கிரந்தி: குழந்தை பிறந்தவுடன் சீறி அழும்; பால் குடிக்காது, உடலை முறுக்கிக் கொள்ளும்; கண் திறக்காது. வயிறு ஊதும், நாவறளும்; முகம் வாடும்; குரல் நெரிந்து காணும்; உள்ளங்கை, உள்ளங்கால்,

உதடு இவற்றில் கருநிறங்காணும். உடலிலும் காணப்படுண்டு. வயிற்றில் வேதனை உண்டாகும்.

## 41. இளம்பிள்ளை வாதம் என்பது என்ன? அதன் குறிகள் யாவை?

குழந்தையின் இடுப்புக்குக் கீழே கால்கள் மூதலியன துவண்டு போகும். இதை இளம்பிள்ளை வாதம் என்பர். இது நரம்பு பலவீனத்தால் உண்டாவது. மற்றும் விடசுரம், விட மாந்தம், வலிப்பு, ஈரல் குலைக் கட்டி, வைசூரி, வயிற்றுக் கடுப்பு முதலிய நோய்களுக்குப் பின்னும் உண்டாகும்.

### குறிகள்

கால்கள் துவண்டு சில்லிட்டுப் போகும். கால்களை நீட்டவும் முடக்கவும் முடியாது; நடக்கவும் முடியாது, ஆயினும் தள்ளாடி நடத்தலும் உண்டு; முட்டி போட்டு நடத்தலும் உண்டு.

## 42. தெற்கத்திக் கணை என்பதென்ன ? அதன் குணங்கள் யாவை?

தெற்கத்திக்கணை என்பது அமாவாசை, முழு மதி நாள் (பௌர்ணமி) தோறும் வரும் ஒரு வகைச் சுரநோய்.

இது சொற்ப சளியோடும் சுரத்தோடும் வரும். உணவு, மந்தத்தினால் புளிப்பேறுவதால் இந்நோய் உண்டாவதாகச் சொல்லப்படுகிறது. இது எதிர் பாராத விதமாய்க் கொல்லக்கூடியது.

43. தேரை தோடத்தின் குணங்கள் யாவை?

கை கால் முடங்கி மெலியும். வயிறு பருத்துக் காணும். வாய் உலரும். மலச்சிக்கல் உண்டாகும், மார்புக் கூடு பின்னும். உடல் மெலியும். கண்கள் குறுகும். தாய்ப்பால் எவ்வளவு குடித்தாலும் உடல் தேருமல் இருக்கும். இது குழந்தைகளுக்கே வரும்.

44. ஊது மாந்தத்தின் குணம் யாது?

இது குழந்தைகளுக்கு உண்டாகும் நோய். உடல் ஊதும். வயிற்றிரைச்சலுடன் பேதியாகும். வாந்தியாகும். சுரம், வயிற்றுக் கடுப்பு, தொண்டை வலி முதலியனவும் உண்டாகும்,

45. சுரக்கட்டி என்பது யாது? விளக்குக.

சுரத்தின் நீட்டிப்பாலும், மிகுதியான சுரத்தாலும் ஈரல் பருப்பதுண்டு. இதனைக் சுரக் கட்டி என்பர்.

46. எச்சிக் கணை. இளநீர்க் கட்டு இவற்றின் குணங்கள் யாவை?

அமாவாசை முழுமதி நாள்களில் குழந்தையின் மேல்வாய் அண்ணத்தில் (உட்புறத்தில்) சேவல் பூப் போலத் தடித்திருக்கும். தாடையின் இருபக்கங்களிலும் உருண்டையாய்த் தடித்திருக்கும். இவ்வாறு உண்டானல் பிடரியும் தலையும் மிகுதியாய்ச் சுடும். வாயில் ஓயாமல் எச்சில் ஒழுகிக் கொண்டேயிருக்கும்;

குழந்தை பாலுண்ணுது; அடிக்கடி தரையில் குப்புறப் படுத்துக்கொள்ளும். மலங்கட்டுவதுமுண்டு.

47. தாய்ப்பால் வற்ற வேண்டிய காரணங்கள் யாவை?

இரவில் கண்விழித்தல், பட்டினி, மனத்துயர், கோபம் இவற்றினுலும் ஆயாசத்தினுலும், பலவீனத்தினுலும் தாய்ப்பால் வற்றும்.

48. நோய் குணப்படுகிறது என்பதை அறியும் குறிகள் யாவை?

உடல் இலகுவாய் இருத்தல், மனச் சாந்தி, பொறிகள் சுபாவமாய் இயங்கல், தும்மல், தலையில்நமைச்சல், வியர்வை உண்டாதல், பசி, ஆகாரத்தில் இச்சை இவை உண்டானல் சுரம் நீங்கியது என்று அறிய வேண்டும்.

நோயாளிக்கு நல்லதூக்கம், தும்மல், கொட்டாவி, வியர்வை, காலத்தில் மலங்கழித்தல், பசி இவை உண்டானல் நோய் நீங்குகிறது என்று அறியலாம்.

நாடி மேலெழும்பி பஞ்சு போல் இருப்பின் நோய் நீங்குகிறது என்று அறியலாம்.

49. வேதனைகளைக் கொண்டு நோய் இருக்கும் இடங்களை அறிந்துகொள்வது எப்படி?

இருதய வியாதியானல் இடது புஜத்திலும், மூத்திரப்பை வியாதியானல் குறியிலும், இடுப்புச் சேர்ப்

பில் வியாதியானல் முழங்காலிலும் வேதனையுண்டாகும்.

ஓரிடத்தில் வேதனையும், சூடும், அமுக்கினல் வருத்தமும் உண்டானல் வீக்கம் இருக்கிறதென்று உணரவேண்டும்

அசையும்போது வேதனையுண்டானல் தசைத் தொடர்பான வியாதி என்று உணரவேண்டும்.

## குழந்தைகளின் நோயை அறிதல்

குழந்தை அழுகிறதைக் கொண்டே நோயை அறிந்துகொள்வது பொதுவானதாகும்.

குழந்தை எந்த இடத்தை அடிக்கடி தொட்டு அழுகிறதோ, எந்த இடத்தில் தொட்டால் அழுகிறதோ அந்த இடத்தில் நோய் உண்டென்று அறியவேண்டும்.

பல தடவை கண்களை மூடிக்கொண்டால் தலையில் நோய் உண்டென்று அறியவேண்டும்.

மலசலக் கட்டு, பாலுறுப்பைக் கடித்தல், கக்கல், வயிறூதல், குடலில் இரைச்சல், முதுகை வளைத்தல், பக்கங்கள் எடுத்துப் போடுதல் இவைகளைக் கொண்டு வயிற்றில் நோய் உண்டென்று அறியலாம்.

திசைகளைப் பல தடவை பார்த்தால் அடிவயிறு, குய்யம் இவைகளில் நோய் உண்டென்று அறியவேண்டும்.

## 50. குன்மரோகத்தின் வகைகள் எத்தனை? அவை யாவை?

குன்மத்தின் வகைகள் : 8. அவை:

| | |
|---|---|
| 1. வாயு குன்மம் | 5. சன்னி குன்மம் |
| 2. வாத குன்மம் | 6. எரி குன்மம் |
| 3. பித்த குன்மம் | 7. சத்தி குன்மம் |
| 4. கப குன்மம் | 8. வலி குன்மம். |

## 51. குன்மத்தின் ஆரம்பக் குறிகள் எவை?

பசியின்மை, சாப்பிட்டபின் அல்லது சில மணி நேரம் கழித்து வாந்தி, உடல் மெலிவு, குறைந்த அளவு சாப்பிட்டாலும் வயிறு நிறைந்ததைப் போலிருத்தல், அசீரணம், வயிறு நோதல் முதலியன குன்மத்தின் ஆரம்பக் குறிகளாகும்.

## 52. சூலை ரோகத்தின் வகைகள் யாவை?

சூலை நோய்கள் 200 என்றும், 18 என்றும். 8 என்றும் நூல்கள் கூறுகின்றன. சூலத்தால் குத்துவது போல் வயிற்றில் குத்துவதால் சூலை நோய் எனப் பட்டது போலும். இதன் முக்கிய குணம். மலக்கட்டு உண்டாகும்; வயிற்று நோய் உண்டாகும்.

சூலை வகைகள் எட்டாவன.

| | |
|---|---|
| 1. வாத சூலை | 5. ஆம சூலை |
| 2. பித்த சூலை | 6. சர்க்கரா சூலை |
| 3. சேத்தும சூலை | 7. மேக சூலை |
| 4. திரிதோட சூலை | 8. குன்ம சூலை |

53. திரிதோடம் என்பது என்ன? திரி தோடம் என்பதற்கு வேறு பெயர் யாது?

வாத, பித்த, கபங்களாகிய மூன்று தோடங்களும் மீறி இரட்டித்துக் காண்பது திரிதோடம் எனப் படும்.

திரிதோடம் என்பதற்குச் சன்னியென்றும் வேறு பெயர் உண்டு.

54. மாரடைப்பால் இறந்து போவதைப் பற்றி விளக்குக.

இருதயத்தின் தசை நார்களிலுள்ள இரத்தக் குழாய்கள் தடிப்பாகி விடுவதாலும், புதிய இரத்தக் குழாய்கள் உடனடியாகச் செயல் படாமல் இருப்ப தாலும் இருதய வேலை நின்று விடுகிறது. இதுதான் மாரடைப்பு எனப்படும். இதனால் திடீர் என்று மரணம் உண்டாகும். மரணத்தைத் தவிர இதற்கு வேறு சிகிச்சை இல்லை

55. சர்க்கரை வியாதி எதனால் உண்டா கிறது?

உணவில் மாவுப் பொருள்களை அதிகமாகச் சேர்த்துக் கொள்வதால் சர்க்கரை வியாதி உண்டா கிறது. ஆதலால். மாவுப் பொருள்களால் செய்யப் படும் பலகாரங்களை மிதமாக உண்டு வந்தால் இவ் வியாதி உண்டாகாது. கல்லீரலில் சேர்த்து வைக்கப்

படும் சர்க்கரைதான் அதிகப்படியாக இரத்தத்தில் கலந்து பிறகு சிறு நீரிலும் கலந்து விடுகிறது. பருப்பு, தோசை, இட்டிலி, ஆப்பம் இவைகள் மாவுப் பொருள் பண்டங்களாகும். இவ்வியாதி 30 வயதிற்கு மேல் 60 வயதிற்குள்ளானவர்களுக்குத்தான் அதிகமாக உண்டாகிறதென்று கூறப்படுகிறது.

## 56. நோய்கள் மொத்தம் எத்தனை? அவற்றுள் கீழ்க்காணும் நோய்களின் எண்ணிக்கை யாது?

[கேட்டுள்ள நோய்களை அறியப் பக்கம் 16 நோக்குக.]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | வாதம் | — 84 | 11. | கரப்பான் | — 90 |
| 2. | பித்தம் | — 48 | 12. | குட்டம் | 18(அ)20 |
| 3. | கபம் | — 96 | 13. | சோபை | — 16 |
| 4. | சயம் | — 7 | 14. | மூலம் | — 9 |
| 5. | பெரு வயிறு | — 8 | 15. | கிராணி | — 25 |
| 6. | பாண்டு | — 10 | 16. | அதிசாரம் | — 25 |
| 7. | விழி நோய் | — 96 | 17. | மேகம் | — 21 |
| 8. | குன்மம் | — 8 | 18. | கடிதோடம் | —500 |
| 9. | சன்னி | — 76 | 19. | கிரந்தி | — 48 |
| 10. | சுரம் | — 85 | 20. | கெண்டை | — 10 |

## 57. சுரம் எதனுல் உண்டாகிறது?

உணவு வேறுபாடுகளால் வாத, பித்த, கபம் முதலிய தோடங்கள் ஆமாசயத்தில் உள்ள இரச தாது

வுடன் கலந்து, குடலில் உள்ள வெப்பத்தை வெளியே கொண்டு வந்து, விகாரமடைவதால் இரச தாது வியர் வைக் குழாய்களை அடைத்துவிடும். அதனால் உடலில் ஏற்படும் மாற்றமே சுரம் எனப்படும்.

அகாலஉணவு, மிதமிஞ்சிய உணவு, ஊசல்உணவு, பழக்கமற்ற நீர், பருவ வேறுபாடு, மழையில் நனைதல், வெயிலில் காய்தல், பகல் தூக்கம், தூக்கமின்மை, மிகு போகம், பதினான்கு வேகங்களை அடக்கல், மலச்சிக்கல், சீதளம், கோபம், தாபம், பயம், விடம், அடிபடுதல் இவைகளும் சுரம் உண்டாகக் காரணங்களாகும்.

## 58. சுரத்தின் பொதுத் தன்மைகள் யாவை ?

வியர்வை இல்லாமை, மனம் இந்திரியங்கள் முதலி யன தாபமடைதல், உடல் முழுவதும் வலித்தல், சுர மடித்தல் முதலியன சுரத்தின் பொதுத் தன்மைகளா கும்.

## 59. சுரத்தின் தொடக்கக் குறிகள் யாவை?

சோம்பல், களைப்பு, நிறம் மாறுதல், அரோசகம், விழிநீர் ததும்பல், கொட்டாவி, உடல் வலி, உடல் பாரம், மயிர்க் கூச்செறிதல், குளிர்காற்று இவை களால் வெறுப்புண்டாதல் முதலியன சுரத்தின் தொ டக்கக் குறிகளாகும். வாதசுரத்தில் அடிக்கடி கொட் டாவி உண்டாகும். பித்த சுரத்தில் கண் எரிச்சல் ஏற் படும். கப சுரத்தில் ருசியின்மை ஏற்படும்.

60. வாத சுரத்தின் தன்மைகள் யாவை?

சுரம் மாறி மாறி அதிகமாகவோ குறைவாகவோ இருத்தல், கழுத்து உதடு இவைகளில் வறட்சி தோன்றல், உடல்நடுக்கம், தும்மல்இல்லாமை, தூக்கமின்மை, கண்ணில் நீர் வடிதல், மலச்சிக்கல், அடிக்கடி கொட்டாவி விடுதல், இதயத்தில் வலி, முகம் மினுமினுப்பாய்க் காணல், நாபுளித்தல் முதலியன வாத சுரத்தின் தன்மைகளாகும்.

61. கப சுரத்தின் தன்மைகள் யாவை?

கண்டத்தில் கோழை கட்டல், நாக்கு வழு வழுப்பாய் இருத்தல், இனிப்புச் சுவை உண்டாதல், கண்களில் நீர்வடிதல், இருமல், விக்கல், பெருமூச்சு, தாகம், அரோசிகம், இளைப்பு இவைகள் உண்டாதல், சிறுநீர் வெண்மையாய் அதிகமாய்க் கழிதல், கண்கள் வெளுத்துக் காணல், சந்துகளில் வலியுண்டாதல், உணவில் விருப்பமில்லாமை, வியர்வை இல்லாமை முதலியன கபசுரத்தின் தன்மைகளாகும்.

62. வாதபித்த சுரத்தின் தன்மைகள் யாவை?

தலை வலி, வாந்தி, பெருமூச்சு, தாகம், வறட்சி முதலியன உண்டாகும். கண், கண்டம், மார்பு இவைகளில் எரிச்சல் உண்டாகும். நாவில் சுவைதெரியாது; வாய் கசப்பாயும் புளிப்பாயும் இருக்கும். சிறுநீர் நீல நிறமாகவோ, சாம்பல் நிறமாகவோ இருக்கும். வயிற்றுப் பொருமலும், கை கால் உளைச்சலும் உண்டாகும்.

63. வாத கபசுரத்தின் தன்மைகள் யாவை?

தலை வலி, உடல் முழுவதும் குத்தல், குடைச்சல், விழிகளில் நீர் வடிதல், நாசியில் நீர் வடிதல் முதலியன உண்டாகும். வாயில் உப்புச் சுவை தோன்றும். உடலில் பிசுபிசுப்புத் தன்மை உண்டாகும். அதிக தாகமிருக்கும். பெருமூச்சு வாங்கும். தூக்கமிராது. இருமல் இருக்கும். சிறுநீர் நுரைத்து இருக்கும். தாடையில் சயித்தியம் ண்டாகும். கீல்களில் வலி யுண்டாகும்.

64. பித்த கப சுரத்தின் தன்மைகள் யாவை?

உடல் திமிர் உண்டாதல், வியர்வை குறைவு, அயர்ச்சி, நாவறட்சி, இருமல், கபம்வெளியாதல், வாய் கசப்பாயும் உப்புச் சுவையாயும் இருத்தல், அருசி உண்டாதல், மார்பிலும் பிடரியிலும் வலியுண்டாதல், தூக்கமில்லாமை, பிதற்றல், கை கால்களில் எரிச்சல், வாந்தியெடுத்தல், வாந்தி வெண்மையாயும் சிவப்பாயும் இருத்தல் முதலியனவாம்.

65. சன்னிபாத சுரத்தின் தன்மைகள் யாவை?

உடலில் ஓரிடத்தில் வெப்பமாயும் ஓரிடத்தில் குளிர்ச்சியாயும் இருத்தல், காரணமின்றிப் பாடல் சிரித்தல் எழுந்து ஓடல், அடிக்கடி நாவறட்சி உண் டாதல், தூக்கமில்லாமல் இருத்தல் அல்லது அதிக

தூக்கம் கொள்ளுதல், கண்ணில் கலக்கமுண்டாதல், விலாவிலும் தலையிலும் மூட்டுக்களிலும் வலியுண்டாதல், இமைகள் படபடத்தல், காதுகளில் இரைச்சல் உண்டாதல், மயக்கமுண்டாதல், சில சமயங்களில் உணர்வுண்டாதல், நாவில்மொறமொறப்பும் வேக்காளமுமாய் இருத்தல், இரத்தம் பித்தம் கோழை இவை வெளியாதல், வாயில் குழகுழப்பு ஏற்படல், உடலில் சிவப்பும் கறுப்பும் கலந்த தடிப்பு ஏற்படல், கழுத்தில் ஒரு வித சத்தமுண்டாதல் முதலியனவாம்.

66. சன்னிபாத சுரத்தின்வகைகள்யாவை? அவை ஒவ்வொன்றும் எத்தனை நாட்கள் உடலில் தங்கியிருந்து நீங்கும் ?

| சன்னி வகை | தங்கியிருக்கும் நாள் |
|---|---|
| 1. சந்திக சன்னி | 7 நாள் |
| 2. அந்தக " | 10 " |
| 3. ருத்தாக " | 20 " |
| 4. சித்த விப்ரம " | 18 " |
| 5. ஜிம்மக " | 16 " |
| 6. பிரலாப " | 14 " |
| 7. ரத்தீங்டிவி " | 10 " |
| 8. தாந்திரீக " | 25 " |
| 9. சீதாங்க " | 15 " |
| 10. கர்ணிக " | 60 " |
| 11. அபின்யாச " | 15 " |

| | | |
|---|---|---|
| 12. | புக்ன நேத்திர சன்னி | 8 நாள் |
| 13. | கண்டகுப்ச ” | 13 ” |

67. அபிசாங்க சுரத்தின் வகைகள் எத்தனை? அவை யாவை?

அபிசாங்க சுரம் 7 வகைப் படும். அவையாவன:

1. ஊதாவேச சுரம்
2. விஷ சுரம்
3. கோப சுரம்
4. ஔஷத கந்தக சுரம்
5. துக்க சுரம்
6. பய சுரம்
7. காம சுரம்

68. விஷ சுரங்களின் வகைகள் யாவை? அவற்றின் காலவரையறை யாது?

| விஷசுரத்தின் வகைகள் | | | காலவரையறை |
|---|---|---|---|
| 1. இரச தாதுகத சுரம் | | | 7 நாள் |
| 2. ரத்த | ” | ” | 21 ” |
| 3. மாமிச | ” | ” | 2 மாதம் |
| 4. மேதோ | ” | ” | 5 ” |
| 5. அஸ்தி | ” | ” | 2 ஆண்டு |
| 6. மஜ்ஜை | ” | ” | 3 ” |
| 7. சுக்கில | ” | ” | |
| 8. சரும | ” | ” | |

69. தாதுக சுரங்கள் ஒவ்வொன்றின் குறிகள் யாவை?

1. இரச தாதுக சுரம் :

அரோசகம், வாந்தி. வாயில் நீர் ஊறல், உடல் கனத்து நோதல், கொட்டாவி, உரோம சிலிர்ப்பு முத லியனவாம்.

2. இரத்ததாதுக சுரம்.

மேற்கண்ட குணங்களுடன் தாகம், சிவந்த தடிப்பு. இரத்தம் விழுதல், நெற்றியில் இடிப்பு கீல் களில் நோய், நாக்கு மஞ்சளித்தல், நெஞ்சில் கபம் கட் டல், மலபந்தம். சீதக் கழிச்சல் முதலியன உண்டா கும்.

3. மாமிச தாதுக சுரம்:

வாந்தி, வாய்நாற்றம், கண்ணிருண்டு நீர்வடி தல்; உடல் வறட்சி, வயிறு உப்புசம், மினுமினுப்பு முதலியவற்றோடு சுரங்களுக்குரிய குணங்களும் இருக் கும்.

4. மேதோ தாதுக சுரம்

மேற்கூறிய குணங்களுடன் தலைபுரட்டல், தலை வேதனை, வாசனையில் விருப்பமில்லாமை, கண்நோயு டன் நீர் வடிதல், அக்கினி மந்தம், சீரண மின்மை, நடுக்கல் முதலியன உண்டாகும்.

5. அஸ்தி தாதுக சுரம்:

கீல் நரம்பு எலும்பு இவைகளில் நோய், உடல் வெளுத்துப் பஞ்சுபோல் மெலிதல், சீதளம், அடிவயிற் றில் நோய் முதலியனவாம்.

6. மஜ்ஜை தாதுக சுரம்:

உடலில் எரிச்சல், உடல் மேல் குளிர்ச்சி, கண்டத்தில் குறுகுறுப்பு, மேல் மூச்சு வாங்கல், உடல் வலி, அபான வாயு தம்பித்தல். முழங்கை, முழங்கால், தொடைகளில் வேதனை முதலியனவாகும்.

7. சுக்கில தாதுக சுரம்:

துக்கமிகுதி, மறதி, ஆண்குறி சுருங்கி விந்து நட்டமாதலுடன் கண் புருவம், உச்சி, கண்டம், தோல், மார்பு, உந்தி, உதடு, பீஜம், முழங்கால், கணுக்கால் இடுப்பு, காலின் பெருவிரல், சுண்டு விரல் ஆகிய 14 இடங்களிலும் வேதனையுண்டாகுதல் முதலியன வாகும்.

70. சுரத்தைப் பற்றிய பொதுக் குறிப்புக்கள் யாவை? இவற்றுள் சாத்திய மானவை எவை? அசாத்தியமானவை எவை?

பொதுக் குறிப்புக்கள்

1. அற்ப நினைவு
2. இறந்தவர்களிடம் பேசுவது போல் பேசல்
3. சித்தப் பிரமை
4. மேல்மூச்சு வாங்கல்
5. விழித்தபடியே இருத்தல்
6. குரல் மாறுதல்

7. உடல் முழுவதும் எரிச்சல்

8. அடிக்கடி முகத்தைக் கையால் தடவி கொள்ளுதல்.

9. சீதள வியர்வை

10. உயிர் நீங்குதல்

இவற்றுள் முதல் மூன்றும் சாத்தியமானவை; ஏனையவை அசாத்தியமானவை.

71. அசாத்திய சுரத் தன்மைகள் யாவை?

கபநாடி அதிக வேகமாய் நடத்தல், மேல்மூச்சு வாங்கல், மூர்ச்சையுண்டாதல், கண்ணில் குத்துதல். அடிக்கடி களைப்புண்டாதல், நடுக்கமுண்டாதல். கழுத்து நீளுதல் அல்லது குறுகுதல், நா கருத்து அல்லதுசிவந்திருத்தல், இரவில் எரிச்சலும் பகலில் குளிர்ச்சியாயும் இருத்தல், மார்பிலும் மூக்கிலும் உந்தியிலும் குளிர்ச்சியாய் இருத்தல், ஆனல் தலை மட்டும் வெப்பமாய் இருத்தல்; படுக்கையைக் காலினல் உதைத்துத் தள்ளுதல், பிதற்றல் முதலினவாகும்.

72. சாத்திய சுரத்தன்மைகள் யாவை?

உள்ளங்கை உள்ளங்கால் சூடாக இருத்தல், இளைப்பு இல்லாதிருத்தல், பொறிகள் இயல்பாய் இருத்தல், உடல் இலகுவாய் இருத்தல், இரவில் நல்ல தூக்க முண்டாதல் முதலியனவாம்.

## 73. சுவாசங்களின் அளவு யாது?

2½ நாழிகை = 1 மணி  1 நாழிகை = 24 நிமிடம்

மனித உடலில் நாழிகை ஒன்றுக்கு 360 சுவாசம் வீதம் நாள் ஒன்றுக்கு 21,600 சுவாசங்கள் வெளிப் படுகின்றன. இவற்றுள் 14,400 வரை இயல்பாய் உண் டாவன இதற்குக் குறைந்தால் உடல் இயல்பான சுவாசத்தை இழந்துவிட்டது என்று அறியவேண்டும்.

## 74. வாதம் மீறுவதால் உண்டாகும் குணங் கள் யாவை?

1. உடல் முழுதும் குத்தல் குடைச்சல் உண்டா கும்.
2. கால் கை சந்துகளிலும் மூட்டுக்களிலும் உளையும்.
3. குனிந்தால் நிமிர முடியாது.
4. கால்கை ஏதாவதொரு பக்கத்தில் முடங்கும்.
5. வயிறு மந்தித்துப் பொருமும்.
6. குடல் புரட்டும்.
7. அன்னம் செல்லாது.
8. நாவில் புளிப்புச் சுவை தோன்றும்.
9. மலசலம் கட்டுப்படும்.
10. விந்து போக்குண்டாகும்.
11. அபானம் சுருங்கும்.
12. உடலில் திமிருண்டாகும்.

## 75. பித்தம் மீறுவதால் உண்டாகும் குணங்கள் யாவை?

| | |
|---|---|
| மண்டை குடைச்சல் | வாந்தி |
| காந்தல் | விக்கல் |
| எரிவு | மூர்ச்சை |

| | |
|---|---|
| வறட்சி | கிறுகிறுப்பு |
| நடுக்கம் | காதடைப்பு |
| தாகம் | நெஞ்செரிவு |
| அரோசிகம் | அக்கினி மந்தம் |
| அயர்வு | குளிர்சுரம் |
| அஸ்திசுரம் | பாண்டு |
| விஷசுரம் | பிரமேகம் |
| சோகை | பித்தவெட்டை |
| காமாலை | கண்சுழிதல் |
| பார்வை குறைவு | கசப்பு ருசி |

இவை உண்டாகும். சிறுநீர் மஞ்சளாய்ப் போகும்.

76. கபம் மீறுவதால் உண்டாகும் குணங்கள் யாவை?

விக்கல், வாந்தி, இருமல். மேல் மூச்சு, திகைப்பு சயம், வியர்வை, இரத்தம் கக்குதல் முதலியவை உண்டாகும். உடல் காயும்; வெளுக்கும்; குளிருடன் நடுக்க முண்டாகும். அன்னம் செல்லாது. நா வழு வழுத்து இனிக்கும் வாய் நீரூறும். நீர் சிறுத்து இரங்கும்; அதிகமாகவும் போகும்.

77. நாடித் தொந்திப்பின் குணங்களை விளக்குக.

முத்தோடங்கள் மீறுதலும் நாடிகள் ஒன்றுடன் ஒன்று சேர்தலும் நாடித் தொந்திப்பு எனப்படும்.

வாதத்தில் வாதமானால் உடல்நொந்து, நெகிழ்ந்து சுருங்கும்; ஒங்கும்; பதறும்; அன்னம் செல்லாது.

வாதத்தில் பித்தமானல் வாய் குளறிப் பேசும்; கால்களில் குளிர்ச்சியும் வீக்கமும் உண்டாகும்.

வாதத்தில் கபம் சேர்ந்தால் உடல் வீங்கி வலிக்கும்; தலை இடிக்கும்; குணங்கள் வெவ்வேருய்த் தோன்றும்; மெய் வெளுக்கும்; நாளுக்கு நாள் உடல் வீக்கம் மிகுதிப்படும்; அன்னம் செல்லாது.

பித்தத்தில் பித்தமானல் வாய் பிதற்றும்; தலைகிறுகிறுக்கும்; வாந்தியுண்டாகும்; உடல் இளைக்கும்; உடல் உலர்ந்து வெளுக்கும்: இளைப்புண்டாகும்; வீக்கமுண்டாகும்.

பித்தத்தில் வாதமானல் பிடரி, கால், கைகளில் குத்தும்; உடல் சிறுத்துக் காணும்; பதறும்; சுரம் காயும்; கோபமுண்டாகும்.

பித்தத்தில் கபமானல் வாய் குளறும்; பிதற்றலுண்டாகும்; வாந்தியுண்டாகும்; தலை சுற்றும்; வாயில் நீரூறும்' பிடர் வலிக்கும்; வயிறு நோவும்.

கபத்தில் வாதமானல் நரம்பெல்லாம் வலிக்கும்; விழி இமையோரங்கள் துடிக்கும்; வாய் குளறும்; பிடரியில் வலி தோன்றும்.

கபத்தில் கபமானல் விழி வட்டம் கொள்ளும்; உயிர் பிரியும்.

## 78. இரத்த பித்தம் என்றல் என்ன? இது எதனல் உண்டாகிறது?

கண் காது, வாய், மூக்கு, மயிர்க்கால், சிறுநீர் வழி, மலவழியாகிய ஏழின மூலம் இரத்தம் வெளிப்படுதலாகும்.

இது இரத்த தாணமாகிய இருதயத்திலிருந்தாவது, கல்லீரல் மண்ணீரல்களிலிருந்தாவது இரத்தாதிக்கம் அல்லது இரத்தக் கெடுதியினால் வாதாதிகளின் செய்கைகளால் உண்டாகிறது. துர்நாற்றத்துடனாவது இயற்கை நாற்றத்துடனாவது சில சமயம் அற்பமாகவும் சில சமயம் மிகுதியாகி ஆபத்துடனும் காணும்.

79. இரத்த பித்தத்தின் ஏழு வகைகளைக் கூறுக.

(1) வாத ரத்தபித்தம் (நுரையுடன் சிவந்த இரத்தம் வெளியாவது. இது அசாத்தியமானது)

(2) பித்த ரத்தபித்தம் (கோமய நிறமாகவும், கியாழத்தின் நிறமாகவும், குழம்பாகவும் இரத்தம் வெளிப்படுவது.)

(3) சிலேத்தும ரத்தபித்தம்(வெண்மையாகவும், தேய்த்துக் கழுவினாலும் வழுவழுத் திருப்பதாகவும் இருக்கின்ற இரத்தத்தை வெளிப்படுத்துவது.)

(4) வாத பித்த ரத்த பித்தம்

(5) வாத கப ரத்தபித்தம்

(6) பித்த கப ரத்த பித்தம்

(7) திரிதோட ரத்த பித்தம்

குறிப்பு :-- கடைசி நான்கிற்கும், மேற் கூறிய மூன்றுக்கு முரிய குணங்கள் கலந்து காணப்படும்.

80. அசாத்திய ரோக நிதானங்கள் யாவை?

| | |
|---|---|
| மேகத்தில் நீரிழிவு | குன்மத்தில் பேதி |
| இளைப்பில் சுவாசம் | பேதியில் பொருமல் |
| சுரத்தில் விடம் | சீதபேதியில் கபம் |
| விடத்தில் வீக்கம் | விடத்தில் தோடம் |
| வீக்கத்தில் கபம் | தோடத்தில் சன்னி |
| சயத்தில் கபம் | கபத்தில் மயக்கம் |
| சயத்தில் இரத்தம் | வாய்வில் பாண்டு |
| நீரிழிவில் பிளவை | வரட்சியில் உஷ்ணம் |
| வாய்வில் குன்மம் | உளைச்சலில் வீக்கம் |

இவைகள் ஆகா. இவ்வாறு உண்டானல் நோய் தீர்வது அசாத்தியம்.

மற்றும்

புக்ன நேத்திர சன்னி, ருத்தாக சன்னி, பிரலாப சன்னி, அந்தக சன்னி, சீதாங்க சன்னி.

குறிப்பிட்ட நாட்களில் தீராத சுரங்கள்.

இருமல், இரைப்பு, சுரம், வாந்தி, தாகம், பேதி முதலிய குணங்களையுடைய காசம்.

பக்க நோய், வயிற்றுப்பிசம், ரத்த வாந்தி, சீழ் வாந்தி, இரைப்பு மிகுதி, குரலோசை குறைவு, வீக்கம் முதலிய குணங்களையுடைய சயம்.

கிருமி மார்பு நோய்.

தொண்டைக்குள் நீர் இறங்காத போது உண்டாகும் தாகநோய்.

கை, கால், உந்தி, குதம், பீஜம். முகம் முதலியன வீக்கம் கொண்ட மூலரோகம்.

நீங்காத உடல் எரிச்சல், சிறுநீர் மிகுதியாகப் போதல்,அடங்காத தாகம், மிகுந்த பேதியுடைய மேக ரோகம்.

திரிதோட குன்மம், பீலி மகோதரம்,குட்டநோய், இரத்த பித்தம் முதலியன.

அதிக நடுக்கல்,வீக்கம், உடல் முழுதும் திமிர் முதலிய குணங்களையுடைய வாதரோகம்.

பித்த ரோகத்தில் வாதம், சேத்துமம் இரண்டும் சேர்ந்திருத்தல்.

இடு மருந்து முதலியவைகளால் முகம் கருகல், பஞ்சேந்திரியங்கள் நசித்தல், திகைத்தல் முதலியன உள்ள ரோகம்.

திரிதோடத்தால் பிறக்கும் குமர கண்டவலி
வைசூரியினுல் கருவிழியில் ஆணி உண்டாதல்
முதலியனவும் அசாத்திய ரோகங்களாகும்.

81. மரணக் குறிகள் யாவை?

(1) சன்னி தோடம், விடம். சோகை, கிராணி. அதிசாரம், குன்மம், அஸ்திசுரம், வயிற்றுப்போக்கு, பிரமேகம், நீரிழிவு, சுவாச காசம், சயம் இந்நோய்களோடு வீக்கம் உண்டானுல் மரணம்.

(2) நீரிழிவு, மேகசூலை, சுரம், சன்னிவலி, கிராணி, அதிசாரம், பாண்டு, சோகை, காமாலை, பெரும்பாடு, இரத்த பித்தம் இந்நோய்களோடு இளைப்பு, மேல் சுவாசம், விக்கல் இம்மூன்றும் தோன்றினுல் மரணம்.

(3) விஷம், வீக்கம், சோகை,சூலை, வாதநீரிழிவு, இளைப்பிருமல், சயம், சன்னி, கபரோகம், குன்மம், அஸ்திசுரம், காமாலை இவற்றுடன் வயிற்றுப் போக்கு உண்டானால் மரணம்.

(4) மிகுந்த நோயாளிகளுக்கு மார்பு, கை, கால் முதலியன சீதளமாயும், தலைமட்டும் மிகஉஷ்ணமாயும் இருந்தால் மரணம்.

(5) மிகுந்த நோயாளிகளுக்குக் கஷ்ட சுவாசத்துடன் விக்கல், வாந்தி முதலியவைகளும் உடலில் ஒருவித நாற்றமும் இருந்தால் மரணம்.

(6) தும்மலுடன் மலம் மூத்திரம் வெளிப்படல், நா உதடு கறுப்பேறல், காதில் 'ஓ' வென்ற ஓசை உண்டாதல், கண்டபடி பிதற்றல் முதலியன மிகுந்த நோயாளிக்கு இருந்தால் மரணம்.

(7) கண்ணும்பல்லும் தான்கறுத்துக்
கருதுமூச்சு வாய்திறந்து
உண்ணும் வயிற்றில் சேத்துமமும் மிகவேஓடி
தானடந்தால்
பண்ணு மருந்து பலியாது பண்பாய் சுவாசம்
மேல்வாங்கும்
மண்ணும் விண்ணுந் தானறிய மரண மாவார்
கண்டிடரே.

(8) எடுக்கும் படுக்கும் எழுந்திருக்கும்
இளைத்தே மூச்சு தனைவாங்கும்
வடுக்கணொத்த விழியிரண்டும் மலர விழிக்கும்
வழிபார்க்கும்

தொடுக்கும் தொடுத்த சேத்துமமும் தொண்டை
தன்னை யடைப்பிக்கும்.

அடுத்து வருவ திதுகண்டால் அறிவீர் மரணம்
நிச்சயமே.

(9) ஊசிபோல் முகமும் நீண்டு உடம்பெலாம்
நரம்பு தோன்றி

பாசிபோல் கண்டஞ் சிட்டுப் பரந்திருள் மூடு
மாகில்.

பேசுநா வறண்டு பேசிப் பித்தது பிதற்று மாகில்

காசினி யறியச் சொன்னேம் கண்டுகொள் மரண
மென்றே.

குறிப்பு: இம்மூன்று பாடல்களும் அகத்தியர் நாடி சாத்திரத்தில் உள்ளவை.

## 8. மருந்துப் பொருள்கள்

1. கடுக்காயின் குற்றம் யாது?

கடுக்காயின் குற்றம் அதன் உள்ளிருக்கும் கொட்டை ஆகும்.

2. எவ்விதக் கடுக்காய் மருந்துக்குப் பயன் படாது?

இரட்டைக் காயுடையது, நீரில் வெந்தது, சுக்கான் கல் நிலத்தில் இருந்தது, சேற்றில் இருந்தது, நெருப்பில் சுட்டது, முரடாய் இருப்பது இவை மருந்துக்குப் பயன்படா.

3. எவ்விதக் காசுகட்டி மருந்துக்குப் பயன் படாது?

காசுகட்டி துப்புரவாயும், கரு நிறமாயும், எளிதாய் உடையத்தக்கதாயும் இருக்க வேண்டும். இவ்வாறு இல்லாதது மருந்துக்குப் பயன்படாது.

4. உப்பு வகைகள் யாவை?

1. அமுரியுப்பு
2. கரியுப்பு
3. கந்தக உப்பு
4. கம்பியுப்பு
5. கல்லுப்பு
6. வெடியுப்பு
7. இந்துப்பு
8. மர உப்பு
9. வழலை உப்பு

ஆகிய ஒன்பது வகை உப்புக்கள்உள்ளன. மற்றும் மூங்கிலுப்பு முதலினவும் உள்ளன.

5. சார வகைகள் யாவை?

நவாச்சாரம்

எவாச்சாரம்

சத்திச்சாரம்

சவுக்காரம்

சீனக்காரம்

வெங்காரம்

முதலியன சாரங்களாகும்.

6. வேறு எந்த வைத்தியத்திலும் இல்லாமல் சித்த வைத்தியத்தில் மட்டும் கையாளும் பாஷாணம் எது? அது எந்த நோய்க்குக் கொடுக்கப்படுகிறது?

சித்த மருத்துவத்தில் மட்டும் கையாளப்படும் பாஷாணம் வீரம். இது சயம், சன்னி, சைத்தியங்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

7. பிறவிப் பாஷாணங்களுள் பத்து கூறுக.

பிறவிப் பாஷாணங்கள் 32

அவற்றுள்

1. காந்த பாஷாணம்
2. சாலாங்க பாஷாணம்
3. அஞ்சன பாஷாணம்
4. கற்கடக பாஷாணம்
5. கற்பரி பாஷாணம்
6. தகட்டுத் தாளகம்
7. சீதாங்க பாஷாணம்
8. கோளக பாஷாணம்
9. குதிரைப்பல் பாஷாணம்
10. சாலாமதம்

ஆகியவையாகும்.

8. வைப்புப் பாஷாணங்களுள் பத்து கூறுக.

வைப்புப் பாஷாணங்கள் 32

அவற்றுள்

1. இந்திர பாஷாணம்
2. எருமைநாத தொட்டி
3. அயத்தொட்டி
4. கருமுகில்
5. கோடாசொரி
6. தீமுறுகல்
7. பவழப்புற்று
8. வைப்பரிதாரம்
9. வாண கந்தகம்
10. நீலம்

ஆகிய பத்தாகும்

9. கீழ்க்காண்பவற்றுள் பிறவிப் பாஷாணம் எது? வைப்புப் பாஷாணம் எது?

(வினவுக் குரிய பாஷாணங்களைப் பக்கம் 19 இல் காண்க)

| பிறவிப் பாஷாணம் | வைப்புப் பாஷாணம் |
| --- | --- |
| அப்பிரகம் | சாதிலிங்கம் |
| கௌரி | கோழித்தலை கந்தகம் |
| லிங்கம் | அமரசிலை கந்தகம் |
| சங்குபாஷாணம் | செப்புத் தொட்டி |

கந்தகம் — இரத்த பாஷாணம்
தாளகம் — பூரம்
மனோசிலை — சவ்வீரம்
வெள்ளை — துத்தம்
அரிதாரம்
மிருதார்சிங்கி

## 10. சர்க்கரைச் சத்துள்ளவை எவை?

கரும்பு, சீந்தில், சதாவேரி, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, அசுவகெந்திக் கிழங்கு முதலியன சர்க்கரைச் சத்துள்ளவை.

## 11. இரும்புச் சத்துள்ளவை எவை?

கரிசாலை, கீழாநெல்லி, பொன்னாங்கண்ணி முதலியன இரும்புச் சத்துள்ளவை.

## 12. உத்தாமணி, வெற்றிலை—இவற்றில் என்னென்ன சத்துக்கள் உண்டு?

உத்தாமணியில் (வேலிப் பருத்தியில்) இரும்பு வெள்ளி, ஈயம் முதலிய சத்துக்கள் உள்ளன. வெற்றிலையில் எல்லாச்சத்துக்களும் உண்டு.

## 13. எப்படிப்பட்ட அப்பிரகம் மருந்துக்கு உதவும்?

நெருப்பில் போட்டால் அசையாதிருக்கும் அப்பிரகமே மருந்துக்கு உதவும்; மற்றவை கெடுதி செய்யும்.

**14.** வல்லாரை இலையின் சிறப்பு யாது?

இதைப் பாலில் அரைத்து நெல்லிக்காய் அளவு மாதக்கணக்காகச் சாப்பிட்டுவந்தால் நரைதிரை மாறும். உருக்கி (சயம்), காசம், ஈளை, மேகநீர் இவை போகும். யானைக்கால் வீக்கத்திற்கு இதைக்கட்டுவதுண்டு.

**15.** காதில் உள்ள சீழைப்போக்கப் பயன் படும் மூலிகைகள் யாவை?

மருள் மட்டையை நெருப்பில் வாட்டிச் சாற்றை இளஞ்சூடாகக் காதில்விடச் சீழ் நீங்கும்.

முடக்கொற்றான் இலைச் சாற்றைக் காதில் விடச் சீழ்வடிதல், வலி ஆகியவை நீங்கும்.

**16.** குழந்தைகளின் நெஞ்சிலுள்ள கோழையைப் போக்க உதவும் மூலிகைகள் யாவை?

குப்பைமேனிச் சாற்றை அரைச்சங்கு அளவு கொடுக்க வாந்தியில் கோழை வெளிப்படும். கற்பூரவள்ளிச்சாறும் திருநீற்றுப் பச்சைச்சாறும் கூட குழந்தைகளின் கபத்தைப் போக்கும். தும்பைப்பூச்சாறும் கபத்தைப் போக்கும்.

**17.** அவுரி இலையின் மகத்துவம் யாது?

இதை நெடுநாள்வரை உட்கொண்டு வந்தால் உடல் பொன்னிறமடையும். இதனால் கீல்வாதம், சன்னிவாதம், சீதளம், காமாலை, மாந்தம், சில்விடங்

கள், பாம்பு விஷங்கள், தாவரகந்த மூல விஷங்கள் யாவும் நீங்கும். பித்தத்தையும், வாதத்தையும் குறைக்கும் பாஷாணத் தீமையைப் போக்கும்.

18. பாஷாண வேகத்தைத் தீர்க்கும் முலிகைகள் யாவை?

கருவேலங் கொழுந்தை தயிரில் அரைத்துக் கொடுக்கவேண்டும். அல்லது அறுகன்வேரும், மிளகும் கஷாய மிட்டுக் கொடுத்தாலும் வேகம் தீரும். அவுரிவேர்க் கஷாயம் கொடுத்தாலும் தீரும்.

19. சப்பாத்திப்பூ, தூதுளம்பூ, முருங்கைப்பூ, நந்தியாவட்டம் பூ இவற்றின் மகத்துவம் யாது?

சப்பாத்திப் பூ:– இதைக்கழுவிக் கட்டிகளின் மீது போடக்கட்டிகள் விரைவில் கரைந்து போகும்; அல்லது உடைந்து போகும்.

தூதுளம் பூ — தேக புஷ்டி உண்டாக்கும்; சுக்கிலத்தை விருத்தி செய்து உடல்பலம் உண்டாக்கும். இது பெண்கள் வசிய மூலிகை.

முருங்கைப் பூ:-இத்துடன் தேங்காய்த்திருகின பூவும், பச்சரிசி மாவும் கலந்து, பிட்டு போல் வேக வைத்து இளம் சூடாக இருக்கும்போது சாப்பிட்டால் மார்புவலி தீரும். பாலில் போட்டுக்காய்ச்சிச் சாப்பிட்டு வந்தால் சுக்கிலம் கட்டும்.

நந்தியா வட்டம் பூ:– இதைத்தாய்ப் பாலில் ஊற வைத்துக் கசக்கிச் சாற்றைக் கண்ணில் விட்டு வந்தால் சில கண் வியாதிகள் நீங்கும்.

20. உஷ்ணத்தை உண்டாக்கும் பொருள்கள் எவை?

எள், மிளகாய், வெண்கடுகு, சாபத்திரி, குங்குமப்பூ, குங்குலியம், சித்திரமூலம், கஸ்தூரி மஞ்சள், இலவங்கம், கஸ்தூரி, அம்பர் முதலியன.

21. குளிர்ச்சியை உண்டாக்கும் பொருட்கள் எவை?

அகத்தி, பொன்னாங்கண்ணி, வெந்தயக்கீரை, கீழாநெல்லி, தாமரை, செம்பருத்தி, சந்தனம், அம்மான் பச்சரிசி, வெடியுப்பு, சிவாசத்து முதலியன.

22. உள்ரணம் ஆற்றும் பொருட்கள் எவை?

அதிமதுரம், வெந்தயம், வெங்காயம், கசகசா, வாதுமைப் பருப்பு, திராட்சை, துத்தி, பருத்தி, சிலாசத்து, தேன் முதலியன.

23. சுரத்தைத் தணிக்கும் பொருட்கள் எவை?

நிலவேம்பு, சீந்தில், பற்பாடகம், வெப்பாலை, கழற்சிக்கொட்டை, அதிவிடயம், கழற்சிக்கொட்டை, அதிவிடயம், எருக்கு, நொச்சி, லிங்கம், தாளகம் முதலியன.

**24.** சிறுநீரைப் பெருக்கும் பொருள்கள் எவை?

நெருஞ்சில், சுரைக்கொடி, சிறுகீரை, வாழைத் தண்டு, முள்ளங்கி, வெடியுப்பு, நவாச்சாரம் முத லியன.

**25.** மலத்தை இளக்கும் பொருள்கள் எவை?

சிற்றாமணக்கெண்ணெய், அகத்தி, துத்தி, வேர்க் கடலை, வாழைப்பழம், முடக்கொற்றான், கந்தகம், சரக் கொன்றை, கடுக்காய், நிலாவாரை முதலியன.

**26.** மலத்தைக் கட்டும் பொருள்கள் எவை?

துவர்ப்பு ருசி உள்ளபொருள்கள், அத்தி, இத்தி ஆல். அரசு, நாவல், ஓதியம் பட்டை, அசோகு, சாதிக்காய், மாசிக்காய், காசுகட்டி, தாளிசபத்திரி, மாதுளைஓடு, லிங்கம், நாகம், பவளம், அன்னபேதி படிகாரம், ஆமை ஓடு முதலியன.

**27.** பேதியுண்டாக்கும் பொருட்கள் எவை?

நேர்வாளம், நிலாவரை, சின்னி, கடுகுரோகணி, சிவதை வேர், கரியபோளம், இந்துப்பு, பூரம் முதலி யன.

**28.** இரத்தப் போக்கை நிறுத்தும் பொருள் கள் எவை?

ஓதியம்பட்டை, வேங்கைப்பிசின், அபின், படி காரம், காவிக்கல், மான் கொம்பு, கற்சுண்ணம் முதலியன.

29. கிருமிகளைக் கொல்லும் பொருட்கள் எவை?

வாய் விளங்கம், பலாசம் வித்து, கருஞ்சீரகம், குப்பைமேனி, பூவரசு, ஆடு தீண்டாப்பாளை, சோற்றுப்பு, சிறுகீரை, முருங்கைவேர் முதலியன.

30. விடத்தை நீக்கும் பொருட்கள் எவை?

வெற்றிலை, மிளகு, அவுரி, தேங்காய்ப்பால், பச்சை நெல்லிக்காய், கோழிமுட்டையின் வெண்கரு முதலியன.

31. சீரண சக்தியைப் பெருக்கும் பொருட்கள் யாவை?

சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சீரகம், இஞ்சி, மல்லி, புதினா, முள்ளங்கி, சோற்றுப்பு, இந்துப்பு, பூநீறு, ஓமம், துளசி, வெற்றிலை, எலுமிச்சம் பழம், திராட்சைப்பழம், அரத்தை, அதிமதுரம், பெருங்காயம், கடுகு, பூண்டு, கறிவேப்பிலை முதலியன.

32. கீழ்க்காணும் பொருள்களின் குணங்களைக் கூறு.

சுக்கு
மிளகு
திப்பிலி
கடுக்காய்
நெல்லிக்காய்
தான்றிக்காய்
ஓமம்
சித்தரத்தை
வசம்பு
ஏலக்காய்
பெருங்காயம்
பூண்டு
பரங்கிச் சக்கை
அதிமதுரம்
மாசிக்காய்

சுக்கின் குணம்:- சுக்கு வாயுவை அகற்றும்; பசியைத் தூண்டும்; வயிற்று வலி, வயிறு பொருமல், அஜீரணம், குன்மம், முதலியவைகளைக் கண்டிக்கும்.

மிளகின் குணம்:- மிளகு முறைசுரம், வாதம் முதலியவைகளைக் கண்டிக்கும்; குளிர் சுரத்தையும் குணமாக்கும்.

இருமல், தொண்டை இரணம், வாய்வு, வயிற்று வலி முதலியவைகளைக் குணமாக்கும். இதற்கு வாத சுரகாரி, முறை சுரகாரி என்னும் பெயர்கள் உண்டு.

திப்பிலியின் குணம்:

திப்பிலிக்கு வாதகாரி, கபகாரி என்று வேறு பெயர்களும் உண்டு. சீரண சக்தியை உண்டாக்கி வாயுவை அகற்றும்; கபக்கட்டு, தொண்டைநோய் இருமல், இரைப்பு, அஜீரணம், விக்கல், அரோசிகம், பசியின்மை முதலியவைகளைக் குணமாக்கும்.

கடுக்காயின் குணம்:

மலத்தைப் போக்கும்; வாதகபநோய்கள், காமாலை, பெருவயிறு, குன்மம், இரணம் முதலியவற்றைக் குணமாக்கும். மேலும் இதன் குடிநீர் இரத்தமூலம், வாய் நாற்றம், வாய் ரணம், பெரும்பாடு, வயிற்று ரணம், வலி குன்மம், மூலம் முதலானநோய்களைக் குணமாக்கும். இதன் சூரணம் 1/2 வராகனெடை எடுத்துத் தண்ணீருடன் அருந்த பேதியாகும். இதன் கஷாயத்

தால் இரணங்களைக் கழுவ விரைவில் இரணம் ஆறும்.

நெல்லிக்காயின் குணம்:-

பச்சை நெல்லிக்காய் குளிர்ச்சியைத் தரும். இதற்குப் பெரும்பாலும் துவர்ப்புக் குணம் உண்டு; புளிப்பு இனிப்பும் உண்டு. மலமிளக்கும் சக்தியை உடையது. அரோசிகம், இரத்த பித்தம், நீர்ச்சுருக்கு, பித்தசம்பந்தமான நோய்கள், உட்சூடு முதலிய வியாதிகளைக் குணமாக்கும். வாத பித்த கபங்களைச் சமப் படுத்தும்.

தான்றிக்காயின் குணம்:-

கோழையை அகற்றும்; மலமிளக்கும். சுவாச காசம், இரத்த பித்தம், சீழ்மேகம், உஷ்ண இருமல், கப்க்கட்டு, தொண்டை இரணம், வாய்நாற்றம் இரணம் போன்ற வியாதிகளைக் குணமாக்கும். இதன் கஷாயத்தால் வாய் கொப்புளிக்க வாய்ரணம், பல்வலி இவை குணமாகும்.

ஓமத்தின் குணம்:-

இது சற்று வெப்ப குணமுள்ளது. சீதசுரம், செரியாமந்தம், காசம், பொருமல், அசீரணபேதி. குடல் இரைச்சல், ஆசனக் கடுப்பு முதலியவற்றைப் போக்கும். கபத்தையும், வாதத்தையும் குறைக்கும்.

சித்தரத்தையின் குணம்.-

கோழை, ஈளை, இருமல் இவற்றைப் போக்கும்; பசியை உண்டாக்கும்; கபத்தையும் வாதத்தையும்

குறைக்கும்; வெப்பத்தைக் கொடுக்கும்; சுரத்தை நீக்கும்.

வசம்பின் குணம்:-

இதன் கரியைத் தேனில் இழைத்துக் கொடுக்க வாந்தி நிற்கும்; தாய்ப்பாலில் கொடுக்க குழந்தைகளின் வயிற்று நோய் நீங்கும்; சன்னி சுரம், வயிற்றுக்கிருமி மாந்தக் கழிச்சல் இவற்றைப் போக்கும்; பசியைத் தூண்டும்; வெப்பத்தைத் தரும்.

ஏலக்காயின் குணம்:- இது பசியைத் தூண்டும்; வயிற்றிலுள்ள வாயுவை அகற்றும்; வாந்தியை நிறுத்தும்; அதிதாகத்தைப் போக்கும். இதன் தோலை நீரிலிட்டுக் காய்ச்சி அருந்த வாந்தியை நிறுத்தும்.

பெருங்காயத்தின் குணம்:-

வயிற்றிலுள்ள வாயுவைக் கண்டிக்கும்; வயிற்றுப் புசம், அசீரணம், சூதகச் சிக்கல், செவிநோய் முதலியவற்றைப் போக்கும்; ருதுவை உண்டாக்கும்; இசிவைப் போக்கும். இதை நல்லெண்ணெயோடு சேர்த்துக் காய்ச்சிக் காதிலிடக் காதுவலி குணமாகும். நெய் விட்டுப் பொரித்து 2 குன்றி எடை வெல்லத்துடன் சாப்பிட வயிற்றுப்புசம் நீங்கும்.

பூண்டின் குணம் (வெள்ளுள்ளி):-

இது கபத்தையும் வாதத்தையும் போக்கும்; நாள்பட்ட இருமல், செவிடு, சுவாசகாசம், சன்னி, கபதலை வலி, வாதரோகம் இவற்றைப் போக்கும்.

சுவாசகாசத்தால் நெஞ்சில் கோழை கட்டி சுவாசிக்க முடியாமல் இருக்கும்போது ஐந்து பெரிய வெள்ளைப் பூண்டின் திரியை எடுத்து உமிக்காந்தலில் வேகவைத்துச் சாப்பிட உடனே கஷ்டசுவாசம் நீங்கும்; ஒடிந்த எலும்பை ஒட்ட வைக்கும்; வெப்ப குணம் உடையது.

பரங்கிச் சக்கையின் குணம்:-

இதனுடைய சூரணம் பசியைத் தூண்டும். கடிவிஷம், மேகம், நீரிழிவு, குஷ்டம், சருமநோய், தாகம் இவற்றைப் போக்கும். இதனைச்சுத்தி செய்யாமல் மருந்துக்குப் பயன்படுத்தக்கூடாது. இதன் தோலை நீக்கிச் சிறுதுண்டுகளாக நறுக்கி மூழ்கும்படி வல்லாரைச் சாறுவிட்டு உலர்த்தி இடித்துச்சூரணம் செய்து சாப்பிட மேற்கண்ட நோய்கள் நீங்கும்.

அதிமதுரத்தின் குணம்:-

இதனால் இருமல், தாகம், தொண்டை ரணம், வயிற்று வெப்பம், உடல் வெப்பம் முதலியன குணமாகும்; கோழையை அகற்றும். இதன் சூரணம் 5 குன்றி எடையுடன் கற்கண்டு சேர்த்துப் பாலில் போட்டுக் காய்ச்சிச் சாப்பிட உஷ்ண இருமலுடன் மேற்கண்ட நோய்கள் நீங்கும்.

மாசிக்காயின் குணம்:-

இது மலத்தைக் கட்டும்; உடலுக்கு உரந்தரும், உட்சூடு, சீதபேதி, இரத்தபேதி, இரணம். அதிசாரம்,

உட்சூடு இவற்றைப் போக்கும். இதை நீர்விட்டு இழைத்து மூலரணம், தீப்புண், வாய்ரணம், மூக்கு ரணம் இவற்றின் மீது பூச ஆறும். இதன் தனிச் சூர ணம் 5 குன்றி எடைவீதம் இருவேளையும் கொடுத்து வந்தால் இரத்த வாந்தி இரத்தம்போல் நீர் இறங்கல்; இரத்தபேதி, இரத்தகாசம் முதலியன குணமாகும்.

33. கீழ்க்காண்பவை எவற்றைக் குறிக்கும்?

கீழ்க்காண்பவை என்பவற்றைப் பக்கம் 21, தொடர் எண் 33இல் காண்க)

அட்டவருக்கம்:-

சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, பெருங்காயம், ஓமம்.

அஷ்டலோகம்:-

பொன், வெள்ளி, நிமிளை, இரும்பு, காந்தம் துத்தநாகம், மண்டூரம், தாமிரம்.

தசமூலம்:- கண்டங்கத்திரி, சிறு வழுதுணை; சிற்றுமல்லி, பேராமல்லி, நெருஞ்சில், கூவிளை, பெருங் குமிழ், தழுதாழை, பாதிரி, வாகை.

திரிகடுகு:- சுக்கு, மிளகு, திப்பிலி.

திரிபலை:- கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக் காய்.

திரி மஞ்சள்:- கஸ்தூரி, மஞ்சள்; சாற்று மஞ்சள், மர மஞ்சள்.

திரி நிம்பம் :- வேம்பு, கருவேம்பு, நில வேப்பு.

முக்கனி:- மா, பலா, வாழை,

முக்கூட்டு எண்ணெய்:- எள்ளெண்ணெய், பசு நெய், ஆமணக்கெண்ணெய்.

பஞ்ச கவியம்:- பால், வெண்ணெய், தயிர், கோமயம், சாணம்.

பஞ்ச ரசம்:- ரசம், லிங்கம், வீரம், ரசச் செந்தூரம், பூரம்.

ஐங்காயம்:- வெள்ளுள்ளி, காயம், கடுகு ஓமம், வெந்தயம்.

பஞ்சலவணம்:- அமரியுப்பு, கரியுப்பு, கந்தக உப்பு, கல்லுப்பு, வழலையுப்பு.

பஞ்சபாஷாணம்:- லிங்கம், அரிதாரம், வெள்ளைப் பாஷாணம், கௌரி, தொட்டிப் பாஷாணம்.

பஞ்சமூலம்:- பெருமருந்து, சிறு குறிஞ்சான் சுக்கு, சிறு தேக்கு, பேரரத்தை.

நவலோகம்:- தங்கம், வெள்ளி, இரும்பு, ஈயம், செம்பு, பித்தளை, தரா, வெண்கலம், நாகம்.

பஞ்சலோகம்:- தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்.

பஞ்சவாசம்:- சாதிக்காய், கிராம்பு, தக்கோலம், ஏலம், கற்பூரம்.

நவ உப்புக்கள்:- அமுரியுப்பு, காயுப்பு வளை யலுப்பு, கல்லுப்பு, மூங்கிலுப்பு, வெடியுப்பு, இந்துப்பு, பாறையுப்பு, பூநீறு.

அஷ்டமூலம்;- முத்தக்காசு, விஷ்ணு கிரந்தி, பேய்ப்புடல் வேர், சீந்தில் கிழங்கு, கஞ்சாங்கோரை, ஆடாதோடைவேர், கருந்துளசி, பற்பாடகம்.

அஞ்செண்ணெய்:- வேப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய், எள்ளெண்ணெய், புங்கன் எண்ணெய், இலுப்பை எண்ணெய்.

திரிமூலம்:- திப்பிலி மூலம், சித்திரமூலம், சிறு தேக்கு மூலம்.

சதுர்சாதம்:- சாதிக்காய், சாதிபத்திரி, இலவங்கம், ஏலம்.

திரிபத்திரி: இலவங்கப் பத்திரி, சாதிட்பத்திரி தாளிசப்பத்திரி.

## 34. கீழ்க்காணும் மூலிகைகளின் குணங்கள் யாவை?

கீழ்க்காணும் மூலிகைகள் ஏன்பதைப் பக்கம் 21, தொடர் எண் 34 இல் காண்க,)

ஆடாதோடை: கோழை, இசிவு, காசம், இருமல், இரைப்பு, இரத்த பித்தம், சுரம் இவற்றை அகற்றும். இதன் இலை ரசத்தைத் தேனுடன் கலந்து கொடுக்க இரத்தக் கொதிப்பு, இருமல், இளைப்பு, சுரம், காமாலை இவைகள் தீரும்.

துத்தி:- மலத்தை இளக்கும்; உள் வெப்பத்தை ஆற்றும்.இதன் இலையைக் குடிநீர் செய்தாவது சமைத்தாவது உண்டால் மலக்கட்டு நீங்கும்; மூலச்சூடு ஆறும். இதன் இலையை மிகச் சூடுள்ள சோற்றின் மீது போட்டு நெய்விட்டு, உப்பும் சேர்த்துப்பிசைந்து முதலில் 4. 5, கவளம் சாப்பிட ஆசன எரிச்சல் நீங்கும்.

கஞ்சாங்கோரை:- இவ்விலையின்சாறு குழந்தைகளின் சலதோடத்தை நீக்கும்; இருமல், கோழையையும் நீக்கும்.

நொச்சி:- இதனால் குளிர் சுரம், முறை சுரம், வாதநோய், வாதசுரம் இவைகள் தீரும். இதன் இலையை மணலுடன் கலந்து வறுத்துப் பிடரி வலிக்கு ஒற்றடம் கொடுப்பதுண்டு; வெந்நீரில் இட்டு வேது பிடித்தால் சுரம், தலைவலி நீங்கும். இவ்விலைச் சாற்றுடன் எண்ணெய் சேர்த்துக் காய்ச்சித் தலைக்குப் பூசி வந்தால் பீனிசம், தலைபாரம், நீர்க்கோவை முதலியன நீங்கும்.

வல்லாரை: இது இளைத்த உடலைத் தேற்றும். உடலுக்குப் பலம் தருவதில் சிறந்தது. இதன் இலையை அரைத்து நெல்லிக்காய் அளவு பாலில்போட்டுக் காய்ச்சி இரவில் சாப்பிட்டு வந்தால் மிகுந்த உடல் பலம் ஏற்படுவதுடன் எளிதில் நரை, திரை உண்டாகாமல் செய்யும். சயம், காசம், ஈளை இவற்றைப் போக்கும். இது மேகநோய், குட்டம், மூளை நரம்பு

பலவீனம், நினைவாற்றல் குறைவு இவற்றை நீக்கும் இதன் இலைச் சூரணத்தில் 3 குன்றி எடை அளவு சர்க்கரையுடன் ஒரு மண்டலம்வரை சாப்பிட்டு வந்தால் பைத்தியம், தோல் வியாதிகள், குட்டம் இவைகள் நீங்கும்.

வேலி பருத்தி:- இதற்கு உத்தாமணி என்ற வேறு பெயர் உண்டு. இது அக்கினி மந்தம், குத்தல், குடைச்சல், சன்னி, வாதம், வாத குன்மம், நடுக்கல் முதலியவற்றை நீக்கும்; பசியை உண்டாக்கும். இதன் இலையைக் கியாழமிட்டுச் சிறுவர்களுக்குக் கொடுத்தால் வயிற்றிலுள்ள புழு வெளியேறும். இதன் சாற்றை ஒரு சங்களவு உள்ளுக்குக் கொடுத்தால் கோழை வெளிப்படும்; இருமல் குணமாகும்.

முட்காவேளை:- இதன் சமூலத்தை இடித்துப் புளி மிளகாய் சேர்த்துக் குழம்பு செய்து உணவு கொள்ள வாதத்தைக் கண்டிக்கும். இது குன்மம், வயிற்று நோய், சுவாசகாசம், மார்பு நோய், கோழை, வீக்கம், நெறிகட்டி முதலியவற்றை நீக்கும்.

பொடுதலை:- இதன் சமூலத்தைப் பிட்டவியல் செய்து கசக்கிச் சாறு பிழிந்து குழந்தைகளுக்குக் கொடுக்க அசிரண்பேதி, மாந்தபேதி முதயவை நீங்கும். அச்சாற்றுடன் வறுத்த ஓமக் குடிநீர் சேர்த்துக் கொள்ளுவதும் உண்டு. இதன் இலையை அரைத்து நல்லெண்ணெயுடன் கலந்து சூரியபுடம் வைத்துத்

தலைக்குத் தடவிவரப் பொடுகு, புழுவெட்டு, நீங்கும்; மயிர் உதிர்தல் நிற்கும்.

ஆவாரை இலை:- இது வெள்ளை, வெட்டை, கிரகணி, உட்சூடு, நீரிழிவு, வெகு மூத்திரம், அஸ்தி சுரம், குறி எரிச்சல் முதலியவற்றை நீக்கும். இதன் பூவை உலர்த்திக் குடிநீரிட்டுக் குடிக்க நீர்ச்சுருக்கு, நீரிழிவு, உடல் வெப்பம், பெரும்பாடு முதலிய நீங்கும். இதன் பஞ்சாங்கத்தை (இலை, வேர், பட்டை, பூ, காய்) உலர்த்திச் சூரணித்து வேளைக்கு அரைக்கழஞ்சு வீதம் சாப்பிட்டுவர மதுமேகம், வெகுமூத்திரம் நீங்கும்.

விழுதி:- இது வாதத்தைப் போக்கும். இதன்; இலையை இடித்துக் குடிநீரிட்டு அதனுடன் ஆமணக் கெண்ணெய் சேர்த்துச் சாப்பிடப் பேதியாகி வாத நீரை வெளிப்படுத்தி வாதத்தைப் போக்கும். சமைத்து உணவாக உண்டு வந்தால் உடல் இறுகும்.

அவுரியிலை:- இது கிருமிகளை நாசம் செய்யும்; பாஷாண நஞ்சுகளையும் சில் விஷங்களின் நஞ்சுகளை யும் அகற்றும். இலை அல்லது வேரைக் குடிநீரிட்டு நஞ்சு முறிக்கக் கொடுப்பதுண்டு. இக்குடி நீருடன் மிளகு சேர்த்துக் கொடுத்தால் சுரம், சன்னி சுரம் முதலியன நீங்கும்.

சிந்தில் :- இதனால் சுரம், சாபம், கபம், இருமல், நீரிழிவு, மண்ணீரல் வீக்கம், பித்தம், பித்த நோய்

முதலியன நீங்கும். இதைச் சுரக் குடிநீரில் சேர்ப்ப துண்டு. இதன் கொடியினின்று சர்க்கரை செய்வ துண்டு. அது சீந்தில் சர்க்கரை எனப்படும்.

ஆடு தீண்டாப்பாளை :- இதன் குடிநீர் சுரப் பான், குஷ்டம்; பாம்புவிடம் முதலியவற்றை நீக்கும். இது புழுக்கொல்லியாகவும் பயன்படுகிறது. இதன் இலையை அரைத்துப் புழுத்த புண்களின்மீது போட் டால் புழுக்கள் இறந்துவிடும்.

கீழ்க்காய் நெல்லி :- இது நீரிழிவு, இரத்தக் கழிச்சல், காமாலை, வெப்பு நோய், மேகநோய், தாது வெப்பம் முதலியவற்றைப் போக்க வல்லது.

இதன் சமூலத்தை அரைத்து நெல்லிக்காய் அளவு பாலில் கலந்து கொடுத்தால் இரத்தம் போல் நீர் இறங்குவது குணமாகும். இதன் சமூலத்தை நீர் விடாமல்அரைத்து நெல்லிக்காய் அளவு பசும் மோரில் கொடுத்து உப்பில்லாத பத்தியம் இருந்து வரக் காமாலை நோய் தீரும். இது காமாலை நோயைத் தீர்ப் பதில் நிகரற்றது. இதை அரைத்து நல்லெண்ணெ யில் இட்டுக் காய்ச்சித் தலைமுழுகி வரப் பித்தம் சாந்தி யாகும்; விழிநோய் தீரும்.

கரிசலாங்கண்ணி :- இது கரிசாலை, கையாந் தகரை எனவும் படும். இது காமாலை, பாண்டு, வீக் கம், குட்டம், சோகை முதலியவற்றை நீக்கும். மஞ்சள் கரிசாலையின் இலையை மிளகுடன் சேர்த்த ரைத்துச் சுண்டைக்காய் அளவு பசும் மோரில்

கொடுத்து, உப்பில்லாத பத்தியமாக இருந்துவர மஞ்சள் காமாலை நோய்தீரும். இதன் சாற்றுடன் நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி ஒரு தேக்கரண்டி அளவு சாப்பிட்டுவரக் காசம் நீங்கும். இதன் கற்கத்தை உடலில் பூசிக் குளித்துவரப் பொன்சாயலேற்படும். இதனால் செய்யப்படும் தைலம் நரைத்த மயிரைக் கறுப்பாக்கும். இதன் கற்கம் காய கற்பமாகவும் பயன்படும்.

முடக்கொற்றான் :- இதனால் மலக்கட்டு, குதிகால் வாதம் கீல் வாய்வு, கரப்பான் முதலியன நீங்கும்; இதன் சமூலத்தை இடித்துச் சாறெடுத்துக் குழம்புசெய்து சாப்பிடப் பேதியாகி வாதத்தால் உண்டான நோய்கள் மலர்ந்து பின்னடங்கும். இதன் இலைச் சாறு காதுவலி, காதில் சீழ்வடிதல் முதலியவற்றை நீக்கும்.

நல்வேளை :- இதன் இலைச்சாற்றைக் காதிலிடக் காது நோய் நீங்கும். இதை உணவாக உட்கொண்டாலும், இதன் கற்கத்தைச் சாப்பிட்டாலும், குடிநீரைச் சாப்பிட்டாலும் வாத நோய்கள் குணமாகும். இதன் இலைச்சாற்றுடன் நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி வாத நோய் உள்ள இடத்தில் தேய்க்க வாதக் குடைச்சல் பிடிப்பு முதலியன நீங்கும்.

முசுமுசுக்கை :- இது கோழையை அகற்ற வல்லது. இதன் இலைச்சாற்றில் சிறிது கோரோசனை சேர்த்துக் கொடுக்கச் சலதோடம், கோழை, கபக்

கட்டு, காசம், இருமல், நெஞ்சில் புகைதல், மார்பு நோய், வாந்தி முதலியன நீங்கும்.

நிலவேம்பு :- இதன் சமூலத்தை மருந்துக்குப் பயன்படுத்துவதுண்டு. இது கபசுரம், வாதசுரம். பித்த மயக்கம், சுரம் முதலியவற்றை நீக்கும். சுரக் குடிநீரில்இதைச் சேர்த்தால் எவ்விதச் சுரமும் நீங்கும்.

மேனி :- (குப்பை மேனி) இதற்குப் பூனை வ்ணக்கி என்றொரு பெயர் உண்டு. அதாவது இதன் இலையைக் கசக்கிப் பூனையின் முன் எறிந்தால் பூனை மயங்கும் என்பர். இது ஆராய்ச்சிக் குரியது: இதன் சாற்றைச் சங்களவு உள்ளுக்குக் கொடுக்க வாந்தியாகிக் கோழை வெளிப்படும்; குடல் கிருமிகள் சாகும். பொதுவாக இது கபத்தைப் போக்கடிப் பதில் சிறந்தது; சில விஷங்களை நீக்க வல்லது. சில விடங்களால் (பூரான், வண்டு, குளவி, செய்யான், தேனீ, மரவட்டை. சிலந்தி இவற்றின் விடங்களால்) உடலில் தடிப்புக் கண்டால், இதன் இலைச் சாற்றில் சுண்ணும்பு சேர்த்துப் பூச ஒன்றிரண்டு வேளைகளில் குணமாகும். இதன் இலைச் சூரணம் 5 குன்றி எடை எடுத்துத் தேனில் கொடுத்துவர இருமல், இரைப்பு முதலியன நீங்கும். இதன் இலையை மஞ்சளுடன் சேர்த்தரைத்துப் புண், சொறி. சிரங்கு உள்ள இடத்தில் பூசினுல் குணமாகும்.

துளசி :- பொதுவாக இது கபரோகங்களை நீக்க வல்லது. கோழையை அகற்றும்; சீதள இருமல்,

இரைப்பு, சலதோஷம், மார்புச்சளி, கபம், சுரம், சன்னி இவற்றை நீக்கும்; விடத்தையும் போக்கும். இதன் குடி நீரில் ஒரு தேக்கரண்டி எடுத்துத் தேன்விட்டுக் கொடுத்தால் மேற்கண்ட நோய்கள் நீங்கும். குழந்தைகளுக்கும் வயதுக்கேற்றபடி அளவைக் குறைத்துக் கொடுக்கலாம். இது வாதத்தையும் கபத்தையும் குறைத்துப் பித்தத்தை மிகுதிப்படுத்தும்.

பொன்னுங்கண்ணி.- இதை உணவில் சேர்த்து உட்கொண்டு வந்தால் உடல் பொன்னிறமடையும். இது மூலம், உடல்வெப்பம், கண் எரிவு, கண் புகைச்சல், கண்ணில் நீர் வடிதல் முதலியவற்றை நீக்கும்; கண்ணுக்குக் குளிர்ச்சியைத் தரும். காலையில் ஒரு பிடி பொன்னுங்கண்ணி இலையை ஒரு மண்டலம் வரை சாப்பிட்டு வந்தால், உடல்வெப்பம் தணிவதுடன், கண்ணுக்குக் குளிர்ச்சியுண்டாகும்; விந்து உற்பத்தியாகும். இதன் இலையை நெய்யில் வதக்கிச் சிறிது மிளகும் உப்பும் சேர்த்துத் துவையல் செய்து உண்டால் அன்று ஆண்மை பெருகும்; பல நாட்கள் வரை சாப்பிட்டு வந்தால் உடல் பொன்மயமாகும்.

சிறுபீளை: இதன் இலைச்சாறு நீரடைப்பு, கல்லடைப்பு முதலிய நீர் வியாதிகளை நீக்கும்; பெரும்பாட்டையும் போக்கும்.

---

35. அரிதாரம் எத்தனை வகைப்படும்? அவை எவை?

அரிதாரம் 8 வகைப்படும். அவையாவன:

(1) பொன்னரிதாரம் (5) தகட்டரிதாரம்
(2) தாளகம் (6) மடலரிதாரம்
(3) கட்டியரிதாரம் (7) வைப்பரிதாரம்
(4) கரட்டரிதாரம் (8) கனத்தீ

36. கந்தகம் எத்தனை வகைப்படும்? அவை எவை?

(1) கந்தக உப்பு (6) நெல்லிக்காய் கந்தகம்
(2) கோழித்தலை கந்தகம் (7) புல்லிய கந்தகம்
(3) சிவப்புக் கந்தகம் (8) நீலகந்தகம்
(4) சுணைக் கந்தகம் (9) வாணகந்தகம்
(5) பருப்புக் கந்தகம்

# 9. மருந்து

1. அஷ்ட சூரணம் செய்யும் முறை யாது? அது என்னென்ன நோய்களைத் தீர்க்கும்

சுக்கு கடுஞ்சீரகம்
மிளகு இந்துப்பு

திப்பிலி பெருங்காயம்
சீரகம் ஓமம்

இவற்றைச் சமன் எடுத்துத் தனித்தனியாக இடித்து வஸ்திரகாயம் செய்து, பின்பு அதில் சமன் எடுத்து ஒன்ருய்க் கலந்து சலித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அளவு: பெரியவர்களுக்குத் திரிகடி அளவு. சிறியவர்களுக்கு அளவை வயதுக் கேற்றவாறு குறைத்துக் கொள்ளவேண்டும்.

தேனில் சாப்பிடப் பசி உண்டாகும்; உணவு எளிதில் சீரணமாகி உடம்பில் ஒட்டும்; அசீரணபேதி நீற்கும்.

வெந்நீரில் சாப்பிட வயிற்று வலியுடன் கூடிய அசீரணம் போகும்.

மோரில் சாப்பிடப் பேதியுடன் கூடிய வலி நிற்கும்,

சோற்றில் போட்டு நெய்விட்டுப் பிசைந்து சில கவளங்கள் முதலில் சாப்பிட்டால் வயிற்றில் பந்து உருளுவதுபோல் இருந்து, ஏப்பம் விட்டால் சற்றுக் குறையும் நோய் நீங்கும்.

2. பெரும்பாட்டுக்கு என்ன மருந்து கொடுப்பாய்? அதைச் செய்முறை யாது?

சிறு பாலாடை இலையைப் (சிறுஅம்மான் பச்சரிசி) பாலில் வேக வைத்து உலர்த்திப் பொடி

செய்து சல்லித்து வாழைப்பூச் சாற்றில் திரிகடி அளவு போட்டுக் காலைமாலை கொடுக்கவேண்டும்.

நாவற்பட்டைச் சாற்றையும் கொடுக்கலாம்.

அசோக மரத்தின் பட்டைக் குடிநீருடன் பால் சேர்த்துக் கொடுத்தால் மிகுதியாக இரத்தம் போதல் நிற்கும்.

3. பேதி மாத்திரை செய்யும் முறை யாது?

| | |
|---|---|
| சுத்தி செய்த நேர்வாளம் | 70 கிராம் |
| சுக்குத்தூள் | 35 கிராம் |
| சுத்தி செய்த லிங்கம் | 35 கிராம் |
| பொரித்த படிகாரம் | 35 கிராம் |
| பொரித்த வெண்காரம் | 35 கிராம். |

இம்மூன்றையும் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறுவிட்டு 3 சாமம் அரைக்கவேண்டும். அரைக்கும்போது மோர் சாதம் சாப்பிட்டு அரைக்கவேண்டும். மிளகு அளவு மாத்திரை உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவேண்டும்.

பேதிக்குச் சாப்பிட.—

வெப்பமுள்ள தேகம் உடையவர்கள் மோரில் கலந்து சாப்பிடவேண்டும். வாத தேகம் உள்ளவர்கள் சுக்குக் குடிநீரில் சாப்பிடவேண்டும். சீதள தேகம் உள்ளவர்கள் இஞ்சிக் குடிநீரில் சாப்பிடவேண்டும்.

பேதிக்குச் சாப்பிடுகிறவர்கள் 2 முதல் 4 மாத்திரை வரை தேக திடப்படிச் சாப்பிடலாம். பேதி

ஆகாமல் இருந்தால் வெந்நீர் அல்லது ரசம் (மிளகு நீர்) சாப்பிடலாம்.

மாலையில் குளித்துத் தனியா குடிநீரிட்டு அதில் பனங்கற்கண்டைக் கலந்து சாப்பிடவேண்டும்.

சுரங்களுக்கு:

வாத சுரத்திற்குச் சுக்குக் குடிநீர் அல்லது சித்தரத்தைக் குடிநீரிலும், பித்த சுரத்திற்கு இஞ்சிக் குடிநீரிலும் இரண்டு மாத்திரை இழைத்துக் கொடுக்கலாம். பொதுவாக எல்லாச் சுரத்திற்கும் தேனில் இழைத்துக் கொடுக்கலாம். ஒன்றிரண்டு தடவை பேதியாகிச் சுரம் நீங்கும்: இதற்குப் பத்தியம் கஞ்சி சாப்பிடவேண்டும்.

4. சுரத்திற்குக் கொடுக்கும் செந்தூரம், குளிகை யாவை? அவற்றைச் செய்முறை யாது?

செந்தூரம்:

சுத்தி செய்த லிங்கம் 35 கிராம்
(ஒரே கட்டியாக இருக்கவேண்டும்)

தலைமயிர் 35 கிராம்

தலைமயிரைச் சீயக்காய்த் தூள் போட்டுக் கசக்கி எண்ணெய் இல்லாமற்படிக்குச் செய்து சிக்கெடுத்து லிங்கக்கட்டி தெரியாமல் அதன் மீது அழுத்தமாகச் சுற்றிவைத்துக் கொள்ள வேண்டும்.

பிறகு தாளகம் 2 வராகன் எடை, கற்பூரம் 2 வராகன் எடை எடுத்து இரண்டையும் கல்வத்தி

விட்டுக் கோழி முட்டையின் வெண்கருவால் நன்றாக அரைத்து மேற்படி மயிரால் சுற்றப்பட்ட லிங்கத்தின் மேல் ஓர் ஓலை கனத்திற்குச் சமமாகப் பூசிக் காய வைத்து அகலில் வைத்து மேலே அகல் மூடி, நான்கு சீலைமண் செய்து உலர்த்தி மேற்படி அகல் கலசத்திற்கு இரண்டு பங்கு எடை வரட்டியில் புடமிடவும். ஆறின பின்பு எடுத்து லிங்கத்தின் மீதுள்ள கருக்கையெல்லாம் கத்தியால் சுரண்டிவிட்டு முன் செய்த மாதிரியே ஐந்து புடமிட்டால் லிங்கம் கட்டிவிடும். அதை நன்றாய்க் கல்வத்தில் அரைத்துப் புட்டியில் பதனப்படுத்தவும்.

அனுபானம்: தேன் அல்லது இஞ்சிச் சாறு. அளவு: ஒரு குன்றிமணி எடை.

தீரும் நோய்: விடாதசுரம், கபவாத சுரம், நாள்பட்ட சுரம், சன்னி முதலியவை நீங்கும்.

## குளிகை

(1) லிங்கம் (4) பூங்காவி
(2) இரசச் செந்தூரம் (5) ஓமம்
(3) இரசச் கற்பூரம் (6) லவங்கம்

இவற்றுள் சுத்தம் செய்ய வேண்டியவற்றைச் சுத்தம் செய்து வகைக்குச் சமன் எடை எடுத்து நல்ல நீர் விட்டு நான்கு சாமம் அரைத்துப் பச்சைப் பயறு அளவு குளிகை உருட்டி நிழலில் காய வைத்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு: 1 முதல் 3 குளிகை. காலையும் மாலையும் கொடுக்கவேண்டும்.

அனுபானம்: தேன் (அ) இஞ்சிச் சாறு (அ) தாய்ப்பால்.

தீரும் நோய்: எல்லாவகைச் சுரங்களும் நீங்கும்; வயிற்றுக் கிருமிகள் வெளிப்படும்.

5. சுரத்திற்கு நீ கொடுக்கும் கியாழம் ஒன்று கூறுக.

1. விஷ்ணுகிராந்தி
2. சித்தரத்தை
3. ஆடாதோடை
4. பப்படாப்புல்
5. சுக்கு
6. மிளகு
7. திப்பிலி.
8. நிலவேம்பு
9. சிற்ருமுட்டி
10. பேருமுட்டி
11. கடுக்காய்

இவற்றில் ஒவ்வொன்றிலும் அரை ரூபாய் எடை எடுத்து, அரைப்படி தண்ணீர்விட்டு, அரைக்கால் படியாக வற்றவைத்து மேற்படி கஷாயத்தை மூன்றிலொரு பங்கு வீதம் நாளொன்றுக்கு மூன்று வேளை கொடுக்கவும்.

தீரும் சுரங்கள்:- தீராத நாட்பட்டசுரம், குளிர்சுரம், வாதசுரம், நிமோனியா, மலேரியா முதலியன.

பத்தியம்: பால்கஞ்சி அல்லது உப்பிட்ட கஞ்சி.

நீங்காத சுரத்திற்கு 20 கிராம் நிலவேம்பில் தேன் வார்த்து இடித்துக் கியாழம் செய்து அதில் தாளிசபத்திரி, கிராம்பு, கருஞ்சீரகம் இவை வகைக்கு 5 கிராம் எடுத்து வறுத்துப் பொடி செய்து கலக்கி வடித்துக் காலை மாலையாக 3 வேளை சாப்பிடவேண்டும்.

6. வாயின் இரு ஓரங்களிலும் உண்டாகும் புண் எதனால் உண்டாகிறது? அதற்குப் பரிகாரம் யாது?

இந்நோய் மூலச்சூட்டினால் உண்டாகிறது.

### பரிகாரம்

ஆவின்பால் 1 லிட்டர், சிற்றாமணக் கெண்ணெய் 1 லிட்டர் எடுத்து ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொள்ளவேண்டும். அதில் வெந்தயம், வெங்காயம், மயிர் மாணிக்கம் வகைக்கு 10 கிராம் எடுத்து அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு காலையில் ஓர் உச்சிக்கரண்டி வீதம் சாப்பிட்டுவர மூலச்சூடு தணிந்து புண்கள் ஆறும்.

7. பல்நோய் உடனே நிற்க அவசரச் சிகிச்சை ஒன்றைக் கூறுக.

1. சோற்றுப்பைத் தூள் செய்து வலியுள்ள இடத்தில் வைத்துச் சற்று நேரம் வரை உப்பு விழா மல் இருக்கும்படிச் செய்தால் பல்நோய் உடனே தீரும்.

2. மூக்குத்திச் செடியின் இலையை வாயிலிட்டுச் சற்றுமென்று நோயுள்ள இடத்தில் அடக்கிக் கொண்டிருந்தால் பல்வலியும், அசைவும் போகும்.

3. நன்னாரிவேர்க் கியாழத்தில் சிறிது சீமைக் காடி (Table Vinagar) கலந்து வாய்க் கொப்புளிக்கத் தீராத பல்வலியும் உடனே போகும்.

## 8. டான்சில் என்பது என்ன? அதற்குத் தமிழில் என்னவென்று பெயர்? இதற்குப் பரிகாரம் யாது?

நாக்கின் அடிப்பாகத்தில் தொண்டையை அடைக்கவல்ல மாமிசமுளைகள் உண்டாகும். இதற்கு டான்சில் என்று பெயர். தமிழில் இதற்குத் தொண்டைச் சதை வளருதல் என்று பெயர்.

இது கணைச்சூடு காரணமாகத் தோன்றுவதாகக் கருதப்படுகிறது. தொண்டைச் சிரங்கு அடிக்கடி உண்டாவதால் தொண்டையில் சதை வளர்ந்து நீடித்து இருக்கும். இதனால் தாங்கமுடியாத வேதனை, உணவை விழுங்க முடியாமை, தொண்டை வாய் முதலிய இடங்களில் வறட்சி, முகவாய்க்கட்டை காது முதலான இடங்களில் வலி ஏற்படும்.

### மருந்து

கரிசலாங்கண்ணியை இடித்து 2 ஆழாக்குச் சாறெடுத்து அதில் $\frac{1}{4}$ ஆழாக்கு நல்லெண்ணெயும் 1 ஆழாக்கு பசுவின் பாலும் கலந்து வைத்துக் கொள்ளவேண்

டும். கரிசலாங்கண்ணித் தழையை அரைத்து எலுமிச் சம்பழம் அளவு உருட்டி மேற்படி கலப்பிலிட்டு மணல் பாகத்தில் காய்ச்சி வைத்துக் கொள்ளவேண்டும்.

பிறகு மறுபடியும் இதில் கரிசலாங்கண்ணிச் சாறு, பசுவின்பால், கரிசலாங்கண்ணித் தழை கல்கம் இம்மூன்றையும் மேற்கூறிய அளவில் எடுத்துச் சேர்த்து முன்போலவே காய்ச்சவேண்டும். இப்படி 3 தடவை காய்ச்சிய பின் தைலத்தைக் கண்ணாடிப் புட்டியில் பத்திரப் படுத்தவேண்டும்.

ஒரு குச்சியின் நுனியில் பஞ்சைச் சுற்றி அப் பஞ்சைத் தைலத்தில் நனைத்துத் தொண்டையில் வளர்ந்துள்ள தசைமேல் நன்ருகத் தடவினல் வளர்ந்த தசை சுருங்கும்; புண் வீக்கம், வலி இவைகள் படிப் படியாகக் குறையும்.

9. மண்டையிடியை உடனே நிறுத்த நீ செய்யும் பரிகாரம் யாது?

நவாச்சாரத்தின் தூளும், சிறிதளவு சுண்ணும்பும் எடுத்து உள்ளங்கையில் வைத்து ஒரு பூண்டுப்பல்லைச் சிதைத்து அதனுடன் சேர்த்து மூன்றையும் நன்ருய்க் கலக்கச் செய்து மோந்தால் மண்டையிடி உடனே நிற்கும். தலையில் ஒரு பக்கம் மட்டும் வலி இருந்தால் அந்தப் பக்கத்து நாசித்துவாரத்தில் மோந்து பார்க்க உடனே நிற்கும்.

## தைலம்

(1) புளியிலைச்சாறு 2 லிட்டர்

நல்லெண்ணெய் 1 லிட்டர்

இவற்றை ஒன்ருய்க் கலந்து கஸ்தூரி மஞ்சள். சந்தனம், வெள்ளை மிளகு இவைகள் வகைக்கு 40 கிராம் எடுத்து அரைத்துக் கலந்து மெழுகு பதத்தில் காய்ச்சித் தலைக்குத் தேய்த்து முழுக மண்டையிடி உடனே நிற்கும்.

(2) 35 கிராம் கொடிவேலி வேர்ப்பட்டையை (சித்திரமூல வேர்ப்பட்டை) பசுவின் பால்விட்டு மைபோல் அரைத்து, 1 லிட்டர் நல்லெண்ணயி லிட்டுக் கலக்கி மெழுகு பதத்தில் காய்ச்சித் தலைக்குத் தேய்த்து முழுக உடனே மண்டையிடி நீங்கி விடும்.

10. ஒற்றைத் தலைவலிக்கு அவசரச் சிகிச்சை யாது?

(1) மேலே 9 ஆம் எண்ணில் கூறியுள்ள நவாச் சாரம் கலந்த கலப்பை மோந்தால் உடனே நின்று விடும்.

(2) அகத்தியிலை, அவரை இலை, குப்பை மேனி யிலை, வெங்காயம், ஒரு சிறு துண்டு வசம்பு இவற் றைப் பஞ்சுபோல் இடித்துத் துணியில் கட்டித் தாய்ப்பாலில் துவைத்து மூக்கில் பிழிந்தால் தீரும்.

11. நாள்பட்ட ஒற்றைத் தலைவலிக்குப் பரிகாரம் யாது?

1. கொடுப்பை (பொன்னாங்கண்ணி)
2. கரிசலாங்கண்ணி
3. கீழ்க்காய் நெல்லி
4. இஞ்சி

இவற்றின் சாறு வகைக்கு ஓர் ஆழாக்கு எடுத்துக் கொண்டு

1. சித்தகத்திப்பூ
2. மிளகு
3. பூலாங்கிழங்கு
4. சாம்பிராணி
5. கஸ்தூரி மஞ்சள்
6. இஞ்சி

இவற்றில் வகைக்கு 10 கிராம் எடுத்து அரைத்து மேற்கூறிய சாற்றில் கலக்கி இவற்றின் எடைக்குச் சமமாக நல்லெண்ணெய் சேர்த்து மெழுகு பதமாகக் காய்ச்சி, பால் சாம்பிராணி 10 கிராம் எடுத்துத் தூள் செய்து அதில் போட்டுக் கலக்கி வடி கட்டிக் காலையில் தலைக்குத் தேய்த்து முழுகி வரவேண்டும்.

தீரும்நோய்கள்:- நாட்பட்ட ஒற்றைத் தலைவலி, பீனிசம், தலை கிறு கிறுப்பு முதலியன தீரும்.

பததியம்:- புளியில்லாத ரசம் சோறு.

12. வெப்ப சுரத்தின் தன்மை யாது? அதற்குப் பரிகாரம் யாது?

தன்மை: உடல் சில வேளைகளில் கதகதப்பாக இருக்கும். சிலருக்கு இவ்வாறு எப்போதும் இருப்ப

துண்டு. நாடி சற்றுத் துடிப்பாக இருக்கும். ஆனால், மற்ற சுரங்களினால் அடையும் வேதனை யிராது.

### பரிகாரம்

(1) சிலாசத்து பற்பத்தை நெய்யில் அல்லது வெந்நீரில் கொடுத்துவரத் தீரும்.

(2) வெந்தயம், மிளகு இவற்றில் வகைக்கு 1 காசு எடை எடுத்து இடித்துக் குடிநீரிட்டுக் காலை மாலை 5 வேளை கொடுக்கத் தீரும்.

(3) தொடர் எண் 23 பொன்னாங்கண்ணி உட்பிரிவு 4 இல் காணும் தைலத்தால் தலைமுழுகி வந்தாலும் தீரும்.

## 13. தாய்ப்பாலை வற்றவைக்க என்ன செய்வாய்?

மல்லிகைப் பூவை 2 அல்லது 3 நாட்கள் வரை தொடர்ந்து தனங்களின் மீது வைத்துக் கட்டி வந்தால் பால் வற்றிப்போகும்; மயக்கமும் உடல் வெப்பமும் நீங்கும்.

பால் புரண்டி இலையைத் தனங்களின் மீது கட்டி வைத்தால் பாலை வற்ற வைத்துவிடும்.

## 14. தாய்ப்பால் சுரக்கச் செய்ய என்ன செய்வாய்?

காட்டாமணக்கு இலையைத் தனங்களின் மீது கட்டி வைத்தால் பால் சுரக்கும்.

ஓரிதழ் தாமரையை அரைத்து எலுமிச்சங் காய ளவு எடுத்துப் பசுவின் பாலில் கரைத்துச் சாப்பிட் டால் பால் சுரக்கும்.

15. முடி உதிர்தலைத் தடுக்க என்ன மருத் துவம் செய்வாய்?

கரிசலாங்கண்ணி, முடக்கொத்தான், அவுரி, பச் சைநெல்லிக்காய் இவற்றைத் தனித்தனி இடித்துப் பிழிந்த சாறு வகைக்கு ஒரு லிட்டர் எடுத்துவைத்துக் கொள்ளவேண்டும்.

வெள்ளாட்டுப்பால், பசுவின் பால் எருமைப் பால், தேங்காய்ப்பால் இவை வகைக்கு ஒரு லிட்டர் எடுத்துக்கொள்ளவேண்டும். நல்லெண்ணெல் 3 கிலோ கிராம் எடுத்துக் கொள்ளவேண்டும். பிறகு யாவற் றையும் ஒன்றாய்க் கலந்து கொண்டு, இதில் அதிம துரம், குன்றிமணிப் பருப்பு, சுருமாக்கல் ஆகியவை வகைக்கு 35 கிராம் எடுத்துப் பால்விட்டரைத்துக் கலந்து காய்ச்சி மணல்பாகத்தில் இறக்கி வடித்துக் கொள்ளவேண்டும்.

இந்தத் தைலத்தைத் தலைக்குப் பூசி வந்தால் தலைமயிர் உதிர்வது நின்று நீண்டு வளரும்.

16. முடி நன்றாக வளர நீ செய்யும் பரி காரம் யாது?

சவரிக் கொத்து இலையை இடித்துச் சாறு எடுத் துச் சமன்எடை கலப்பில்லாத நல்லெண்ணெய் சேர்த்

துக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வைத்து அதில் மயிர்மாணிக்கம் இரண்டு பிடி அறுத்துப் போட்டுச் சூரியபுடம் வைத்து (வெயிலில் காய வைத்து) தலைக் குத் தேய்த்து முழுகி வரவேண்டும். மற்றும் தலைமுழு காத நாளில் தலையில் தைலம் ஊறும்படிப் பூசி வர வேண்டும். இப்படிச் செய்துவந்தால் முடி நன்றாக வளரும்.

17. காது நோய்க்குச் செய்யும் பரிகாரம் யாது?

முடக்கொற்றான் இலைச் சாற்றைக் காதில் விட்டு வந்தால் காதுவலி, காதில் சீழ் வருதல் நீங்கும்.

மருள் மட்டையை அனலில் வாட்டிக் காது பொறுக்கும் அளவு சூடான பதத்தில் காதில் 2, 3 வேளைவிடக் காது நோய் நீங்கும்.

கற்பூரம், ஓம உப்பு, மெந்தால் இம்மூன்றிலும் சமன் எடை எடுத்து ஒரு புட்டியில் போட்டுக் குலுக்கினால் தண்ணீர் போன்று ஆகிவிடும். அதில் 2 அல்லது 3 துளி காதில் விடக் காது வலி, குத்து, சீழ் வருதல் முதலியன நீங்கும். இம்மருந்தை வயிற்று வலிக்கு நீரில் 3 அல்லது 4 துளி விட்டுக் கொடுக்கலாம்.

18. ஒருவருக்குச் சிறுநீர் வாராமல் தடைபட்டிருந்தால், அதை வெளிப்படுத்த என்ன பரிகாரம் செய்வாய்?

1. சிறுகீரை வேரைக் குடிநீரிட்டுக் கொடுக்கச் சிறுநீர் வெளிப்படும்.

2. வெடியுப்பு 20 கிராம், வெங்காரம் 20 கிராம் எடுத்து ஒரு மண் குடுவையில் போட்டு மூன்று மண் சீலை செய்து 7 வரட்டியில் புடமிட்டால் கண்ணாடி போல் உருகியிருக்கும். இது சுண்ணம் எனப்படும். இதைச் சிறிதளவு எடுத்து மஞ்சளில் போட்டால் சிவக்கும். இவ்வாறு சிவந்தால்தான் சுண்ணம் எனப் படும். இச்சுண்ணத்தை நன்றாய் அரைத்து வைத் துக் கொள்ளவும். ஒரு சோடாவை உடைத்து ஒரு கண்ணாடி டம்பளரில் ஊற்றிக்கொண்டு அதில் ஒரு சிட்டிகை சுண்ணம் போட்டால் பொங்கும். அதைக் குடித்தால் சிறுநீர் வெளியாகி நீர்க்கடுப்பு, நீர்ச்சுருக்கு இவைகள் உடனே நீங்கும். பத்தியம் கிடையாது. இம்மருந்திற்கு வெடியுப்புச் சுண்ணம் என்று பெயர்.

பிள்ளைகட்குச் சிறுநீர் இறங்காவிட்டால் எலிப்பு ழுக்கை 2, அவ்வளவு வெள்ளரி விதை, அவ்வளவு வெடியுப்பு எடுத்து நீர்விட்டு அரைத்து அடிவயிற் றில் பூசி வைக்கச் சிறுநீர் வெளிப்படும்.

19. கர்ப்பிணியின் வாந்தியை நிறுத்த நீர் செய்யும் பரிகாரம் யாது?

வெந்நீர் 60 அவுன்சில் 8 இலவங்கம் நசுக்கிப் போட்டுக் கொதிக்கவைத்துக் குளிர்ந்த பிறகு வடி கட்டி வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு அவுன்சு வீதம் காலை மாலை கொடுத்துவரக் குணமாகும்.

20. ஜலோதரத்தினால் ஒருவருக்கு வயிறு வெடிப்பது போல இருந்தால் நீ என்ன பரிகாரம் செய்வாய்?

இந்நோய்க்கு நீர்ப்பேதி கொடுத்தால்தான் உடனே நீங்கும். 2 லிட்டர் மோரில் ½ லிட்டர் பிரம தண்டிச் சாற்றைச் சேர்த்துக் காலை 6 மணி முதல் 10 மணிவரை அடிக்கடி ஒரு வேளைக்கு ஓர் அவுன்சு வீதம் குடிக்கக் கொடுத்துக் கொண்டு வந்தால் நீர் பேதியாகிக் குணமாகும்.

21. வயிற்றிலுள்ள கிருமிகளை வெளியேற்ற என்ன பரிகாரம் செய்வாய்?

வாய் விளங்கத்தைப் பொடி செய்து ஒன்று முதல் மூன்று திரிகடி அளவு காலை 6 மணிக்கு நீராகாரத் தண்ணீரோடு கலந்து சாப்பிடவேண்டும். பிறகு காலை 8 மணிக்குச் சிற்றாமணக்கெண்ணெயை வயதுக்கேற்ற அளவு கொடுக்கப் பேதியாகி அதில் கிருமிகள் கூண்டோடு வெளிப்படும்.

பலாசம் வித்தையும் இவ்வாறே கொடுக்கலாம்

எலிக்காது இலையின் சாற்றைக் கொடுத்தால் குழந்தைகளின் வயிற்றிலிருக்கும் கிருமி அழியும்.

22 காமாலை நோய்க்கு மூலிகை மருத்துவம் யாது? விளக்குக.

காமாலைக்கு மருந்து கொடுக்கு முன் காமாலை நோய்தானா என்று அறிய வேண்டும்.

பலக்குறைவு, உணவு செரியாமை ருசியின்மை, கைகால் அசதி, உடம்பு எரிச்சல், கண் மஞ்சள் நிற மடைதல், சிறுநீர் மஞ்சள் அல்லது மஞ்சளும் சிவப்பும் கலந்த நிறமாய் போதல், மலபந்தம், நடந்தால் பெருமூச்சு வாங்குதல் ஆகிய இக்குறிகள் கண்டால் மஞ்சள் காமாலை என்றறிந்து மருத்துவம் செய்ய வேண்டும். மேற்கண்டவற்றுள் முக்கிய குறிகள் சிறுநீர் மஞ்சளாய்ப் போதலும், கண் மஞ்சளாதலுமாகும். சிறுநீரில் சோறிட்டால் மஞ்சள் நிறமடையும்.

கீழாநெல்லி சமூலத்தைநீர்விட்டரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்து மோரில் அல்லது தயிரில் கலக்கிக், கொடுக்கவேண்டும். அல்லது மஞ்சள் கரிசலாங்கண்ணி இலையை அரைத்து மேற்கண்டவாறு கொடுக்கலாம்.

பத்தியம்: உப்பு புளி நீக்கவேண்டும். மோரும் சோறும் சாப்பிடவேண்டும். இளநீர், சாத்துகுடி முதலியவற்றை மிகுதியாகப் பயன்படுத்தவேண்டும், மலக்கட்டு உண்டானால் காய்ந்த திராட்சைப்பழத்தை இரவில் தண்ணீரில் ஊற வைத்திருந்து காலையில் பிசைந்து வடிகட்டிக் கொடுத்தால் மலக்கட்டு நீங்கும்.

23. கரிசாலை, கொடுப்பை இவற்றை எந் நோய்க்கு எவ்வாறு பயன்படுத்துவாய்?

**கரிசாலை (கரிசலாங்கண்ணி):—**

1. மஞ்சள்கரிசலாங் கண்ணியின் இலையைஉலர்த்திச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 2 சிட்டிகை தேனிலாவது நெய்யிலாவது வெந்நீரிலாவது சாப்பிட்டு வந்தால் இரத்தம் விருத்தியாகும்.

2. கரிசலாங்கண்ணிச் சாற்றுடன் சமன் நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி ஒரு தேக்கரண்டி வீதம் நாள்தோறும் காலையில் சாப்பிட்டுவரக் காச நோய் குணமாகும்.

3. கரிசலாங்கண்ணி இலைச்சாறு, பச்சை நெல்லிக்காய்ச்சாறு, நல்லெண்ணெய் இவற்றைச் சமமாக எடுத்துக் காய்ச்சித் தலைக்குப் பூசி வந்தால் உடல் வெப்பம், கண் எரிச்சல், செவி நோய், கண் காசம் முதலியன நீங்கும்.

4. கரிசலாங்கண்ணி இலையுடன் சமன் மிளகு சேர்த்தரைத்து நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சித் தலை முழுகிவரக் காமாலை நோய் நீங்கும்.

கொடுப்பை (பொன்னாங் கண்ணி) :-

1. பொன்னாங் கண்ணி இலையை நெய்யில் வதக்கி 5 மிளகு சேர்த்துத் துவையல் செய்து உண்டுவர ஆண்மை மிகும்; விந்து உற்பத்தியாகும்.

2. நாள்தோறும் காலையில் பொன்னாங்கண்ணி இலை ஒரு பிடி சாப்பிட்டு வந்தால் கண் எரிச்சல் நீங்கும்; விந்து உற்பத்தியாகும்.

3. பொன்னாங் கண்ணி இலையைப் பொரியல் செய்து சோற்றில் இட்டுப் போதுமான நெய்சேர்த்து உண்டு போகித்தால் போக சக்தி மிகும். உணவு சீரணமான பின் போகிக்கவேண்டும்.

4. பொன்னாங் கண்ணிச்சாறு 1 லிட்டர், நல் லெண்ணெய் 1 லிட்டர் எடுத்துக் கலந்து இதில் அதி மதுரம், கருஞ்சீரகம் செங்கழு நீர்க்கிழங்கு, கோஷ்டம் வகைக்கு 15 கிராம் எடுத்துப் பால் விட்டரைத்துக் கலந்து மெழுகுபதத்தில் தைலம் காய்ச்சித் தலை முழுகி வந்தால் உட்சுரம், உடல் வெப்பம், கண் எரிச் சல் முதலியன நீங்கும்.

## 24. உப்பிலாங் கொடியைக் குழந்தை களின் எந்நோய்க்குப் பயன்படுத்து வாய்?

இது குழந்தைகளின் மாந்தத்தைப் போக்கக் கூடியது.

மாந்தத்தினால் குழந்தைகளுக்குப் பேதியாகும் போது இடுப்பில் இதைச் சுற்றிவைத்தால் பேதிநின்று விடும் என்பர்.

## 25. சய நோய்க்கு மருந்துகள் யாவை?

### பவழ பற்பம்

35 கிராம் பவழத்தைப் பழச் சாற்றில் 3 நாள் ஊறவைத்தெடுத்துக் கழுவி இலந்தை இலை யை அரைத்துக் கவசம் செய்து 7 புடம் செய்து

காயவைத்து 50 வரட்டியில் புடம் போடவும். சுண்ணும்பாகும். அதைப் பீங்கானில் போட்டுப் பசும் பால் விட்டுக் கலக்கி வெயிலில் வைத்துக் காய வைத்துப் பத்திரப் படுத்தவும்.

அனுபானம் : நெய், தேன்,
தீரும் நோய் : சயம், ஈளை, இருமல், நீர்ச்சுரப்பு.
பத்தியம் : இச்சாபத்தியம்.

## தாளக செந்தூரம்

சுத்தி செய்த தாளகச் சூரணம் 35 கிராம், சுத்தி செய்த சிலாசத்துச் சூரணம் 35 கிராம்.

இவற்றைக் கல்வத்திலிட்டுச் செம்பரத்தி இலைச் சாற்றினல் மூன்று நாள் அரைத்து முசையில் வைத்து மூடி 5 சீலமண் செய்து 5 வரட்டியில் புடமிட்டெடுக்கவும். இப்படி 7 முறை புடமிட்டால் தாளகம் செந்தூரமாகும்.

அனுபானம் :

1, சேத்தும சயம் — ஆடாதோடை இலைச் சாறு
2. ரத்த சயம் — நெருஞ்சிவேர் ரசம்
3. சுவாச சயம் — கடுககாய்ச் சூரணம்
4. காச சயம் — திப்பிலிச் சூரணம்
5. வெகு மூத்திரம் — பருத்தி விதைச் சூரணம்
6. விக்கல் வாந்தி — வெண்ணய்,

26: வாய்வுக்கு நீர் செய்யும் பரிகாரம் யாது? விளக்கு.

ஐங்கூட்டு வாத எண்ணெய்

| | | |
|---|---|---|
| (1) வேப்பன் எண்ணெய் | 1 | லிட்டர் |
| (2) புங்கன் எண்ணெய் | 1 | ,, |
| (3) நல்லெண்ணெய் | 1 | ,, |
| (4) விளக்கெண்ணெய் | 1 | ,, |
| (5) புன்னை எண்ணெய் | 1 | ,, |

| | |
|---|---|
| (1) வெள்ளுள்ளி | (7) ஓமம் |
| (2) வசம்பு | (8) கிராம்பு |
| (3) காயம் | (9) சதகுப்பை |
| (4) சுக்கு | (10) கடுகுரோகணி |
| (5) மிளகு | (11) சித்திர மூலவேர்ப் பட்டை |
| (6) திப்பிலி | |

இவைகள் வகைக்கு 20 கிராம், சுத்தி செய்த நேர்வாளம் 40 கிராம்.

செய்யும் விதம் :- எண்ணெய் வகைகளை ஒன்ருய்க் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். மற்றச் சரக்குகளைக் காடிவிட்டு அரைத்து எண்ணெயில் கலந்து கடுகு பதத்தில் காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: ஓர் உச்சிக் கரண்டி அளவு காலையில் உட்கொள்ள வேண்டும்.

தீரும்நோய்: மேகம், திமிர் வாதம், ஊது வாய்வு, புற இசுவு, நடுக்கு வாதம், வாய்வுகள், மேக நீர்க்கட்டிகள்.

பத்தியம்: புளியில்லாத ரசம், கத்தரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, அவரைப் பிஞ்சு இவைகளின்பொரியல். இந்த எண்ணெய் பேதியாகும். பேதியாகிற வரை ரசம் அல்லது சோற்றில் ரசம் விட்டுக் கரைத்துச் சோற்றைப் பிண்டி எடுத்து விட்ட ரசம் இவற்றைச் சாப்பிடவேண்டும். பேதியான பின் சோறு சாப்பிடலாம். மாலையில் குளித்துத் தனியாவைப் பொடித்துக் குடிநீரிட்டுப் பனங் கற்கண்டு கலந்து சாப்பிடவேண்டும்.

பேதியாகா விட்டால் ரசம் சர்ப்பிட்டால் பேதியாகும். பேதியாகுமுன் சோறு சாப்பிட்டால் வாந்தியாகிவிடும்.

வெளி மருந்தாகும் விதம்: வாய்வினால் வீக்கம், கைகால் இசிவு, வாய்வினால் வலி இவைகளுக்கு இந்த எண்ணெயைப் பூசி நன்றாய்த் தேய்த்து நெருப்பனலில் அல்லது வெயிலில் நன்றாய்க் காய்ச்சவேண்டும். இதனால் மிகுந்த பயன் உண்டு.

இதற்குப் பத்தியம் தேவையில்லை.

பயன்: சாப்பிடக் கசப்பாக இருந்தாலும் துர்நீரையும், மேக நீரையும் போக்கும். வாய்வைப் போக்குவதில் நிகரற்றது. கசப்பினால் சாப்பிடாவிட்டாலும் மேலுக்குப் பூசித் தேய்க்க வாய்வுகள் பறந்தோடும்.

குறிப்பு: இந்த எண்ணெய் முறை அகத்தியர் இரத்தினச் சுருக்கத்தில் இருக்கிறது. நான் இதைக் கையாண்டு பயன் கண்டிருப்பதால் என் அனுபவத்

தையும் சேர்த்து இங்கு எழுதியிருக்கிறேன். கீழ் தொடர் எண் 27 இல் காணும் மருந்துகளையும் வாய் வுக்குப் பயன்படுத்தலாம்.

## 27. பட்ச வாதத்திற்குப் பரிகாரம் யாது?

ஒரு கை அல்லது ஒரு கால் வாய்வினால் இயல் பாக இயங்காமல் இருப்பது பட்ச வாதம் அல்லது பாரிச வாய்வு எனப்படும். வாய்விற்கும் இதற்கும் தொடர்புண்டு.

### 1. மூசாம்பர மெழுகு

| | கிராம் | | கிராம் |
|---|---|---|---|
| உயர்ந்த மூசாம்பரம் | 100 | லவங்கம் | 6 |
| சடா மாஞ்சில் | 6 | மிளகு | 6 |
| அசாளுன் | 6 | பெருலவங் | |
| | | கப்பட்டை | 6 |
| ருமஸ்தகி | 6 | கஸ்தூரி | 1 |
| குங்குமப் பூ | 6 | தேன் | 200 |

முதலில் தேனைக் காய்ச்சி அழுக்கு நீக்கிச் சுத்தம் செய்து வைத்துக் கொள்ளவேண்டும். மற்ற மருந்துப் பொருள்களைத் தனித்தனி இடித்து வஸ்திர காயம் செய்து அளவுப்படி நிறுத்தெடுத்து யாவற்றையும் தேனிலிட்டுக் கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்து வாயகலமான கண்ணாடிப்பாத்திரத்தில் பதனப்படுத்த வேண்டும்.

அளவு: 3 அல்லது 4 குன்றி எடை எடுத்துச் சுக்குத்தூள் அல்லது பனை வெல்லத்தில் வைத்துச் சாப்பிட வேண்டும்.

தீரும் நோய்: பாரிச வாய்வு, வாய்கோணல், முகம் கோணல், காக்கை வலி, கை கால் முடக்கல், சன்னி இவைகள் தீரும்; மலம் உதையும்.

பத்தியம்: நோய்க்கேற்றவாறு பத்தியம் வைக்க வேண்டும்.

மேற்பூச்சு: கை கால் முடக்கல், வாதப் பிடிப்பு, வாய்வினுல் உடலில் குத்தல் குடைச்சல் உள்ள இடங்களில் இம்மருந்தை நீரில் குழைத்துப் பூசிக் காய்ச்ச நோய்கள் நீங்கும்.

## 2. மெழுகு தைலம்

| | | | |
|---|---|---|---|
| தேன் மெழுகு | 1400 கிராம் | நெல்லி கந்தகம் | 35 கிராம் |
| லவங்கம் | 35 ,, | கடுகு | ½ லீட்டர் |
| கருஞ்சீரகம் | 140 ,, | பூண்டுதிரி | ,, |
| வெட்டிவேர் | 18 ,, | சோத்துப்பு | 1¾ ,, |
| பெருங்காயம் | 140 ,, | குராசானி ஓமம் | ½ ,, |
| வசம்பு | 70 ,, | செங்கல்(அ) இரும்பு சிட்டத்தூள் | 1 ,, |
| லவங்கப்பட்டை | 35 ,, | கோழி முட்டை | 10 |
| தாளிசபத்திரி | 35 ,, | சாதிக்காய் | 4 |
| கோரைக் கிழங்கு | 18 ,, | | |

முதலில் உப்பை முறத்தில் பரப்பித் தேன் மெழுகை உருக்கி அதன்மேல் தெளித்து வைத்துக்கொள்ள வேண்டும். முட்டைகளை வேகவைத்து மஞ்சள் கருவை மட்டும் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். சீரகத்தை ஆய்ந்து அதையும், பூண்டு, திரியையும்.

கிராம்பையும் இடிக்காமல் வைத்துக் கொள்ளவேண்டும். மற்ற சரக்குகளை இடித்துத்தூள்செய்து கொள்ள வேண்டும். பிறகு யாவற்றையும் ஒன்ருய்ச் சேர்த்து ஒரு புதுத் தோண்டிக்குள் போட்டு, இத்தோண்டியின் வாயைப் பொருந்தும்படியான வாயையுடைய வேருெரு தோண்டி தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். இத்தோண்டி, சரக்குகள் போட்டிருக்கும் தோண்டியை விடச் சற்றுச் சிறியதாய் இருக்கவேண்டும். இச்சிறிய தோண்டியின் ஒரு பக்கத்தில் துளை செய்து இத்தோண்டியைச் சரக்குத்தோண்டியின் வாய்மேல் கவிழ்த்து மூடி வாய்கள் பொருந்தப் பார்த்து 5 சீலைமண்கெட்டியாகச் சுற்றிக் காயவைக்க வேண்டும். பிறகு சரக்குள்ள தோண்டியை அடுப்பின் மீது சாய்த்துச் சிறிய தோண்டி கங்கடுப்பின் மீது இருக்கும்படியாகவும் அதன் மீதுள்ள துளை கீழ்நோக்கி இருக்கும்படியாகவும் வைத்துத் தீயிட்டெரிக்க வேண்டும். துளைக்கு நேராகக் கீழே ஒரு பீங்கான் பாத்திரம் அல்லது கண்ணுடிப் பாத்திரம் வைக்கவேண்டும்.

தோண்டிகளுக்குச் சூடேறியதும் ஒரு துணியை எட்டாக மடித்து நீரில் நனைத்துச் சிறிய தோண்டியின் மேல் போட வேண்டும். இவ்வாறே மாற்றி மாற்றிப் போட்டுக் கொண்டு வரவேண்டும். இவ்வாறு செய்து வந்தால் துளையின்மூலம் தைலம் அடியில் உள்ள பீங்கான் பாத்திரத்தில் விழும். அதை எடுத்துக் கண்ணுடிப் புட்டியில் பத்திரப்படுத்த வேண்டும். இவ்வாறு தோண்டிகளால் தைலம் இறக்

குவதற்குப் பதிலாக வாலை இருந்தால் வாலையில் தைலம் இறக்கலாம்.

பயன் படுத்தும் முறை: பாரிச வாய்வு, வாய்வு, பிடிப்பு, சூலை முதலியன உள்ள இடத்தில் இத்தைலத்தைத் தேய்த்து வந்தால் நோய்த் துன்பம் குறைந்து வரும். பாரிச வாய்வுக்கு 7 நாள் வரை தேய்த்து வரவேண்டும். நோய் அதிகமாக இருந்தால் ஒரு குச்சியால் தைலத்தைத் தொட்டு எடுத்து ஒரு வெற்றிலையில் குறுக்கு நெடுக்காகக் கோடு போட்டு மென்று தின்ன வேண்டும். இதனுல் எப்படிப்பட்ட வாதரோகமும் தீரும்.

பத்தியம்: நோய்க்கு ஏற்றவாறு பத்தியம் வைக்க வேண்டும்.

குறிப்பு: இம்மருந்தைப் பலவீதமான வாத ரோகங்களுக்குப் பயன்படுத்தலாம்.

28. கண்ணீர் வடிதல், எரிதல் இவற்றைப் போக்க என்ன பரிகாரம் செய்வாய்?

பக்கம் 210 தொடர் எண் 23 இல் உள்ள பொன்னுங்கண்ணித் தைலத்தால் தலை முழுகி வந்தால் கண்ணீர் வடிதல், கண் எரிதல் நீங்கும்.

29. கண்குத்தல், சிவப்பு இவற்றிற்குப் பரிகாரம் யாது?

ஒரு கோழி முட்டையை வேக வைத்து. நீள வாட்டத்தில் அறுத்து, மஞ்சள் கருவை நீக்கி, ஒரு கண்

ணுக்கு ஒன்ருக வைத்துத் துணியால் கட்டி வைக்க வேண்டும். இவ்விதம் இரவில் 3 நாள் செய்யக் கண் குத்தல், சிவப்பு தீரும்.

திரிபலை வகைக்கு ஒன்று எடுத்து, அவற்றுடன் ஒரு பிடி புளிய இலை போட்டு இடித்து 1 லிட்டர் தண்ணீர்விட்டுப் பாதியாகச் சுண்ட வைத்து மேற்படி கியாழத்தில் துணியை நனைத்துக் கண்ணைக் கழுவி வந்தால் கண் சிவப்பு மாறும். திரிபலைகளின் கொட்டைகளை நீக்கி இடிக்க வேண்டும்.

## 30. நீரழிவிற்குத் தக்க மருந்து யாது?

### 1. அப்பிரகச் செந்தூரம்

கிருஷ்ண அப்பிரகம் (கறுப்பு அப்பிரகம்) 350 கிராம் எடுத்து உரலில் போட்டு நன்ருய் இடித்து, இவ்வெடைக்குச் சமமாகப் பனை வெல்லமும் வெடியுப்பும் எடுத்து யாவும் ஒன்ருகச் சேர்த்து நீர்விட்டு ஒரு சாமம் (3 மணி நேரம்) விடாமல் அரைத்து, ஒரு ஓட்டில் ஒரே வில்லையாகத் தட்டிக் காய வைத்து, மேலோடு மூடி 5 சீலைமண் செய்து கசபுடம் போட வேண்டும். இதனல் அப்பிரகம் பளபளப்பு நீங்கிப் பால்போல் வெளுத்திருக்கும்.

இதனைக் கல்வத்தில் போட்டு எருக்கம் பாலால் ஒரு சாமம் அரைத்து முன்போல் வில்லை தட்டி வெயிலில் காயவைக்க வேண்டும். இதனை மறுநாள் முன்போல் எருக்கம் பாலால் ஒரு சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைக்க வேண்டும். இப்படியே 40 நாள் வரை செய்ய வேண்டும்.

41 ஆவது நாள் முன் போலவே அரைத்து ஓட்டில் வில்லை தட்டிக் காய வைத்து மேலோடு மூடி 7 சீலை மண் செய்து கசபுடம் போடவேண்டும். இவ்விதம் 51 புடம் போட்டால் அப்பிரகம் அருணனைப் போல் சிவந்திருக்கும். இதை நன்ருய் அரைத்துச் சோதித்துக் கண்ணுடிப் புட்டியில் பதனம் செய்ய வேண்டும்.

துணை மருந்து. ஆவாரைச் சமூலம் 350 கிராம், அமுக்குராக் கிழங்கு 350 கிராம், சீரகம் 100 கிராம் இவற்றை இடித்துச் சூரணமாக்கி வெருகடி (ஐந்து விரல் கொள்ளுமளவு) எடுத்து அதில் ஒரு குன்றி மணி எடை செந்தூரம் வைத்துப் பசும் வெண்ணெய் இட்டு இழைத்துக் காலை மாலை இரு வேளையாக ஒரு மண்டலம் (40 நாள்) சாப்பிட வேண்டும்.

தீரும் நோய்: நீரிழிவு, மதுமேகம், மேகம் 21 முதலியன நீங்கும்.

பத்தியம்: இச்சாபத்தியம்.

## 2. மூலிகை மருந்து

கீழாநெல்லி சமூலம் 24 காசு எடை, மிளகு 12 காசு எடை எடுத்து ஒரு லிட்டர் தண்ணீர்விட்டு எட்டில் ஒன்ருகச் சுண்டவைத்துக் கொஞ்சம் மிளகைப் பொடித்துப் போட்டுக் காலை மாலை குணமாகும் வரை சாப்பிட வேண்டும்.

31. பீனிசத்திற்குத் தக்க பரிகாரம் யாது?

| | |
|---|---|
| (1) பேய்ப் பீர்க்கன்காய்ச் சாறு | 1 லிட்டர் |
| பசு மஞ்சள் சாறு | ½ லிட்டர் |
| இளநீர் | ¼ லிட்டர் |
| நல்லெண்ணெய் | ⅛ லிட்டர் |
| வேப்பன் எண்ணெய் | ⅛ லிட்டர் |
| வெள்ளுள்ளி | 35 கிராம் |
| வசம்பு | 20 கிராம் |

வெள்ளுள்ளியையும் வசம்பையும் அரைத்துமற்ற வற்ரோடு கலந்து மணல் பதத்தில் காய்ச்சித்தலைக்குத் தேய்த்து முழுகிவர வேண்டும். தலைக்குத் தேய்த்துக் கொள்ளும்போது மூக்கிலும் விடவேண்டும்.

தீரும் நோய் : நவபீனிசம்.

பத்தியம் : இச்சாபத்தியம்.

(2) பத்துக் கொறட்டைப் பழத்தைச் சாறு பிழிந்து ஒரு சாண் அகலமுள்ள துணியை அதில் நனைத்துக் காயவைக்க வேண்டும். இப்படி 5 முறை செய்யவேண்டும். பிறகு அத்துணியைச் சுருட்டிக் கொளுத்தி அணைத்துப் புகையை முகரவேண்டும். இப்படி ஒன்றுவிட்டு ஒரு நாள் காலை மாலை செய்து வரவேண்டும்.

தீரும் நோய் : தலையின் தொடர்பானநோய், மண்டையிடி. தும்மும்போது சளி விழுதல், இரத்த பீனிசம், சிரைப் பீனிசம், சல பீனிசம், சுக்கில பீனிசம் முதலியன.

32 மூன்று தோடங்களையும் சமனப்படுத்தும் சுவைகள் யாவை ?

இனிப்பு, புளிப்பு, உப்பு இம்மூன்று சுவைகளும் வாதத்தைச் சமநிலையில் வைக்கும்.

துவர்ப்பு, இனிப்பு, கசப்பு இம்மூன்று சுவைகளும் பித்தத்தைச் சம நிலையில் வைக்கும்.

காரம், துவர்ப்பு, கசப்பு இம்மூன்று சுவைகளும் கபத்தைச் சமநிலையில் வைக்கும்,

33. பித்தத்தை அதிகரிக்கச் செய்யும் புளிப்புச் சுவையுள்ள நெல்லிக்காய், எலுமிச்சம் பழம், புளிப்பு மாதுளை முதலியன பித்தத்தைச் சமனப்படுத்துவதுஎவ்விதம் ?

இப்பழங்களின் சுவை புளிப்பாயினும் சீரண காலத்தில் இனிப்பாக மாறுவதால் பித்தத்தைச் சமனப்படுத்தும்.

34, நெல்லிக்காய் எவ்வெச் சுவையால் மூன்று தோடங்களையும் நீக்குகிறது?

நெல்லிக்காய் புளிப்பினல் வாய்வை நீக்கும்; இனிப்பினலும் சீதக்காலும் பித்தத்தை நீக்கும்; துவர்ப்பினல் கபத்தை நீக்கும்.

35. சன்னிக்குத் தரும் மருந்துகள் யாவை? அவற்றுள் ஒன்றைச் செய்யும் முறையைக் கூறுக.

சன்னி தீர்வதற்கேற்றவாறு செய்யப்படும் பவள பற்பம், சண்டை மாருதச் செந்தூரம், லிங்க செந்தூரம், பஞ்சபாண செந்தூரம்(போகர் முறை), வீரக் கட்டு, தாளகக் கட்டு, லிங்கக்கட்டு முதலியவை சன்னியைத் தீர்க்கும் மருந்துகளாகும்.

வீரக்கட்டு

| | | |
|---|---|---|
| துருசு வராக னெடை | | $1\frac{1}{2}$ |
| படிகாரம் | ,, | $1\frac{1}{4}$ |

இரண்டையும் தூய்செய்து மூன்று பங்காக்கி வைத்துக்கொள்ள வேண்டும். அடுப்பின் மீது ஒரு ஓடு வைத்து நன்றாய்க் காயவைத்து மேற்படி ஒரு பங்குத்தூளை அவ்வோட்டின் மீது வைத்து எரியும் சமயத்தில் அதில் ஒரு வராகனெடை சுத்தி செய்த வீரத்தைப் போட்டுப் புரட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு மற்ற இரண்டு பங்கு தூளையும் இவ்வாறே செய்ய வேண்டும். பிறகு ஒரு வராக னெடை குடத்தால் மேற்படி வீரக்கட்டியைக் கவசித்துக்கொளுத்தினால் வீரம் உருகி மணிபோலாகும்.

இவ்வீரக் கட்டைச் சன்னி, சைத்தியம், சீதள சம்பந்தமான ரோகங்கள் இவைகளுக்குத் தாய்ப்பால் அல்லது தேனில் அல்லது தக்க அனுபானங்களில் காடுக்கலாம்.

36. டைபாயிடு என்ற சுரம் தமிழில் எவ்வாறு வழங்கப்படுகிறது? அச்சுரத்திற்கு நீ கொடுக்கும் மருந்தும், நடத்தும் விதமும் யாவை ?

டைபாயிடு என்பது சித்தர் மருத்துவமான தமிழ் மருத்துவத்தில் சன்னிபாத சுரம் என்று வழங்கப்படுகிறது.

இந்தச் சுரம் விடாமல் அடித்துக் கொண்டிருக்கும் 21 நாள் வரை சுரமிருக்கும். நாக்கின் அடியில் புண்கள் இருக்கும். முதலில் சுரத்தைச் சோதித்து மருந்து கொடுக்கவேண்டும்.

1. மருந்து, தொடர் எண் 5 இல் கூறப்பட்டிருக்கும் கியாழத்தைக் கொடுத்து வந்தால் இச்சுரம் நீங்கும். காலைமாலை 7 நாள் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு வேளையும் புதிதாகக் கியாழம் போட்டுக் கொள்ளவேண்டும்.

2. லிங்கம் — லவங்கம்
கவுரி — அக்கல்காரம்
வெள்ளைப்பாஷாணம் — அதிமதுரம்
தாளகம் — மைசாட்சி
மிருதார் சிங்கி

இவைகள் வகைக்கு 5 கிராம் எடுத்துச் சுத்தி செய்ய வேண்டியவைகளைச் சுத்தி செய்துகொள்ள வேண்டும். லவங்கத்தை மேலுள்ள இதழ் போன்றவற்றை நீக்கி நிறுத்துக் கொள்ளவேண்டும்.

பிறகு கல்வத்தில் இட்டு இஞ்சி ரசத்தில் தனித் தனியாக அரைத்துப் பின்பு யாவற்றையும் சேர்த்து இஞ்சி ரசத்தாலேயே ஒரு சாமம் அரைக்கவேண்டும். பின்பு முருங்கைப்பூ ரசத்தில் ஒரு சாமமும், தும்பைப் பூ ரசத்தில் ஒரு சாமமும், பூண்டு தைலத்தில் ஒரு சாமமும் அரைத்துக் கடுகுக்குச் சற்றுப்பெரிதாய் மாத் திரை செய்து நிழலில் உலர்த்தி எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

அளவு : 1 மாத்திரை (காலையில் ஒன்று மாலை யில் ஒன்று வீதம் 3 அல்லது 5 நாள்)

அனுபானம் : தாய்ப்பால். சன்னிக்கு இஞ்சி ரசத்தில் கொடுக்கவேண்டும்.

பத்தியம் : உப்பிட்ட கஞ்சி. சன்னிக்கு நெல் பொரியைக் கஞ்சிட்டுக் கொடுக்கவேண்டும்.

குறிப்பு : சுரம் நிற்கும் வரை உப்பிட்ட கஞ்சி யையே கொடுத்து வரவேண்டும். சோறு கொடுத் தால் சுரம் நிற்காது; நின்ற சுரமும் மீண்டும் தலை காட்டும். இச்சுரமுள்ளவர்கள் எழுந்து நடமாடுதல் ஆகாது; படுக்கையிலேயே இருக்க வேண்டும். மலம் போகாமல் இருந்தால் நேர்வாளம் கலந்த மருந்து எது வும் கொடுக்காமல் சுரத்தைத் தணிப்பதும் மலம் போகக்கூடியதும், நேர்வாளம் இல்லாததுமான மருந் தைக் கொடுக்கலாம். சுரத்தின் நிலையறிந்து சாத்துக் குடி பழம் கொடுத்து வந்தாலும் மலம் போகும்.

37. கபரோக நிவாரணிகள் யாவை ?

கத்தூரி, வெள்ளைப் பூண்டு, வேப்பெண்ணெய், சித்தரத்தை, பேரரத்தை, குங்குமப்பூ, நெல்லிமுள்ளி, வால்மிளகு, திப்பிலி, கோஷ்டம், மிளகு, ஓமம், கடுக்காய், காக்கணம், சடாமாசி, கருஞ்சீரகம், செந்தட்டி, நன்னாரிவேர், லவங்கம், அத்திவிதை, அரசன் விதை முதலியன கபரோக நிவாரணிகளாகும்.

38. நேர்வாள மருந்து கொடுத்துப் பேதி நிற்கவில்லையென்றால், என்ன பரிகாரம் செய்வாய் ?

1. மோரும் சோறும் கொடுக்க நின்றுவிடும்.

2. சாணியைத் துணியில் வைத்துப் பிழிந்து அதில் 1 அவுன்ஸ் கொடுக்க நின்றுவிடும்.

3. ஆவாரம் வேர்ப்பட்டை ஒரு பிடி, முருங்கை யீர்க்கு ஒரு பிடி, வெங்காயம் இரண்டு எடுத்துச் சிதைத்துக் கஷாயமிட்டுப் பனங்கற்கண்டு கலந்து கொடுத்தால் பேதி நிற்பதோடு, பேதி அதிகமானதால் உண்டான கடுப்பு, வெட்டை முதலியன தீரும்.

4. மஞ்சளை அரைத்து வசம்பிற்குக் கவசமிட்டுக் கருகும்படி சுட்டுக் கரியாக்கித் தேனில் இழைத்துக் கொடுக்க நேர்வாளத்தினால் நிற்காதபேதி, வாந்தி, வயிற்று வலி முதலியன நீங்கும்.

39. நவ மூலங்களுக்குப் பொதுவான பரிகாரம் யாது?

| | |
|---|---|
| காட்டுக் கருணை (உலர்ந்தது) | 50 கிராம் |
| காராக் கருணை ,, | 50 ,, |
| விரல் கருணை ,, | 50 ,, |
| புளி நரளை ,, | 50 ,, |
| மருள் (ஜாங்கு மட்டை) கிழங்கு ,, | 50 ,, |
| குமரி (சோற்றுக் கற்றாழை) வேர் ,, | 50 ,, |
| மாம் பருப்பு ,, | 50 ,, |
| சுக்கு | 50 ,, |
| சித்திர மூல வேர்ப் பட்டை (சுத்தி செய்தது) | 50 ,, |
| கடுக்காய்த் தோல் | 50 ,, |
| சரக்கொன்றைப் புளி | 50 ,, |
| கோரைக்கிழங்கு | 50 ,, |
| பிரண்டை | 50 ,, |
| நெல்லி வற்றல் | 50 ,, |
| சீரகம் | 50 ,, |

இவைகளில் கொன்றைப் புளி தவிர மற்றவற்றைத் தனித்தனியாகக் காயவைத்துத் தனித்தனியாக இளவறுப்பாய் வறுத்துத் தனித்தனியாக இடித்துச் சலித்து, யாவற்றையும் ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். 1400கி(1வீசை) பனைவெல்

லம் எடுத்து ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்துக் காய்ச்சி வடிகட்டி மறுபடியும் அதைக் காய்ச்சிப் பாகு பதம் வந்ததும் அதில் சூரணத்தைக் கொட்டிக்கொன் றைப்புளியையும் கலந்து கிண்டி 140 கிராம் நெய் சேர்த்து நன்றாய்ப் பிசைந்து வைத்துக் கொள்ளவும். இளக்காக இல்லாவிட்டால் சிறிது தேன் சேர்த்துப் பிசைந்து கொள்ளவும்.

அளவு: கழற்சிக் காய் அளவு காலை, மாலை.

தீரும் நோய்: நவ மூலங்களும் குணமாகும்.

நாக பற்பம், கூர்மபற்பம் இவற்றையும் தர லாம்.

40. மூலநோய் உள்ளவர்களுக்கு மலச்சிக் கல் ஏற்பட்டால், மலத்தை வெளிப் படுத்த என்ன மருந்து தருவாய்?

ஆறு சீயக்காயை எடுத்து இரவில் ½ லிட்டர் நீரில் போட்டு நாலில் ஒன்றாகச் சுண்ட வைத்து மறுநாள் காலையில் பிசைந்து வடி கட்டிக் காலையில் உட்கொள் ளப் பேதியாகும்; சூடு செய்யாது.

41. மூல எரிச்சலுக்கும் ஆசனக் கடுப்பிற் கும் வெளிமருந்து யாது?

4 பிடி ஆமணக்கு இலையையும், 3 பெரிய வெங் காயத்தையும் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி விளக் கெண்ணெய் விட்டு வதக்கிச் சூடச்சூட எடுத்து ஒரு

துணியில் வைத்து ஆசனத்தில் ஒற்றடம் கொடுத்து அதை ஆசனத்திலேயே கட்டி வைத்தால் ஆசனக் கடுப்பு, குடைச்சல், குத்தல், நமைச்சல், எரிச்சல் இவை போகும். இவ்வாறு இரவில் செய்ய வேண்டும்.

42. படைகளுக்குப் பரிகாரம் யாது?

1. தகர விதையைப் பழச்சாறு விட்டரைத்துப் பத்துப் போட்டுவரக் குணமாகும்.

2. நிலவாகை வேரின் பட்டையை உரித்துப் பழரசம் (எலுமிச்சம் பழரசம்) விட்டரைத்துப் பத்துப் போடலாம்.

43. பரியாரிப் படைக்கு மருந்து யாது?

தாடி மீசை முதலான இடங்களில் அழற்சியினால் ஏற்படும் படைக்குப் பரியாரிப்படை என்று பெயர்.

ரோஜனம் 60 கிராம், வெண்காரம் 30 கிராம், குழாய் கந்தகம் 20 கிராம், சீனா கற்கண்டு 5 ”

இவைகளை வெள்ளாட்டுப் பாலில் அரைத்து வில்லை தட்டி நிழலில் உலர்த்தி வைத்திருந்து நல்ல நீர் விட்டு இழைத்துப் பூச உதிர்ந்து போகும்.

மற்றப்படைகளும் குணமாகும்.

44. குட்ட நோய்க்கு மருந்துகள் யாவை? அவற்றுள் ஒன்றின் செய்முறையை விளக்குக.

காங்கேயர் எண்ணெய், கெந்தி பற்பம், தாமிர பற்பம், கெந்தி மெழுகு, இரச கெந்தி மெழுகு, பறங்கிப்பட்டைச் சூரணம், மகாவல்லாதி லேகியம், கந்தக ரசாயனம், சேருங்கொட்டை லேகியம் முதலியன குட்டநோயைத் தீர்க்கும்.

## கந்தக ரசாயனம்

நெல்லிக்காய் கந்தகம் 220 கிராம் எடுத்து வெள்ளாட்டுப் பாலில் சுத்திசெய்து, வெயிலில் உலர்த்த வேண்டும். பிறகு கரும்புப் பாலிலும், சீந்தில் கொடிச் சாற்றிலும் முறையே தனித் தனியாகச் சுத்தி செய்து வெயிலில் உலர்த்த வேண்டும். பிறகு ஒருநாள் பசு நெய்யில் ஊரவைத்து உலர்த்த வேண்டும். பிறகு,

நொஞ்சில் சாறு — கரிசாலைச் சாறு
நிலைப்பனைக்கிழங்குச் சாறு — தாழம்பூச் சாறு
அதிமதுரக்கியாழம் — கடம்புசக்கைச் சாறு
கோஷ்டக் கியாழம்

இவற்றில் முறையே ஒவ்வொரு நாள் சுத்தி செய்யவேண்டும். ஒவ்வொன்றிலும் சுத்தி செய்தானதும் முன்போலவே உலர்த்த வேண்டும்.

திப்பிலி — தான்றிக்காய்
மோடி — நெல்லி வற்றல்
லவங்கம் — சுக்கு
இருநாகப்பூ — மிளகு
கடுக்காய் — திப்பிலி
வாய்விளங்கம்

இவைகளைத் தனித் தனியாக இடித்து வகைக்கு 20 கிராம் நிறுத்தெடுத்து ஒன்ருய்க் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு 220 கிராம் நல்ல வெல்லம் எடுத்துப் பாகுசெய்து அதில் கந்தகச் சூரணத்தையும் கடைச் சரக்குச் சூரணத்தையும் சிறுகச் சிறுக இட்டுக்கிண்டிப் பசும்நெய் விட்டுப்பிசைந்து ரசாயனபாகமாகச் செய்து எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அளவு: காலை மாலை ஒருவேளைக்கு நெல்லிக்காய் அளவு ஒரு மண்டலம் (48 நாள்) சாப்பிடவேண்டும்.

தீரும் நோய்: வாதக் கிரந்தி, சூலை, 18 விதக் குட்டம், தோலைப் பற்றிய வியாதிகள், திமிர் குட்டம், 84 வாதம், 20 பிரமேகம், 16 வித மூத்திரக் கிருச்சினம், கண்டமாலை, காது ரணம், லிங்க விரணம், யோனி விரணம் முதலியன நீங்கும்.

## 45. கணத்திற்குத் தக்க மருந்து யாது?

| | |
|---|---|
| கரிசாலைச் சாறு | கோவைச் சாறு |
| | புளியாரைச் சாறு |
| கொடுப்பைச் சாறு | கற்பூரவல்லிச் சாறு |
| குமரிச் சாறு | வெள்ளை வெங்காயச் சாறு |

இவைகள் வகைக்கு $\frac{1}{2}$ லிட்டர்

| | |
|---|---|
| சாதிக்காய் | பெருஞ்சீரகம் |
| அமுக்கனுங் கிழங்கு | வெந்தயம் |

| | |
|---|---|
| சாபத்திரி | லவங்கப்பத்திரி |
| மாசிக்காய் | லவங்கப்பட்டை |
| கடுக்காய்ப் பூ | பூண்டு |
| | கோஷ்டம் |

இவைகள் வகைக்கு 4 கிராம்

கடைச் சரக்குகளை நீர் விட்டு அரைத்துப் பசும் பால் 1 லிட்டரில் கரைத்து அதனுடன் 1 லிட்டர் விளக்கெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து அதில் கோரோசனை, குங்குமப்பூ, சாதிக்காய் இவைகள் வகைக்கு 3 கிராம் தூள்செய்து போட்டுக் கலக்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

அளவு : ஓர் உச்சிக்கரண்டி வீதம் காலையில் மட்டும்.

தீரும் நோய் : கணவெட்டை, கணசுரம், கர்ப்ப வெட்டை, வெப்பம், கணபாண்டு, மாந்தம், உப்புசம், இரணம், நீரிழிவு, வெளுத்த உடல்.

46. மாந்தத்திற்குக் கியாழம் ஒன்றும், குளிகை ஒன்றும் கூறி அவற்றின் செய்முறைகளைக் கூறுக.

மாந்தக் கியாழம்

| | |
|---|---|
| உத்தாமணி இலை | பொடுதலை |
| வேலிவேர் | முருங்கைப்பட்டை |
| நொச்சியிலை | நுணா ஈர்க்கு |

இவைகளைச் சமன்கொண்டு சட்டியில் இட்டு வறுத்து 1 லிட்டர் நீர்விட்டு அதில் ஓமம், சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு இவைகள் வகைக்கு 5 கிராம் எடுத்து இடித்துத் தூள்செய்து ஒரு துணியில் முடிந்து போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து அதில் ஒரு சங்கு அளவு எடுத்துக் கீழ்க்காணும் மாந்த மாத்திரையில் ஒன்று இழைத்துக் கொடுக்கவும். 3 நாள் காலையில் மட்டும் கொடுக்கவும்.

## மாந்த மாத்திரை

| | |
|---|---|
| கடுகு ரோகணி | 40 கிராம் |
| இலுப்பைப் பூ | 40 ,, |
| சுத்தி செய்த வாளம் | 40 ,, |

இம்மூன்றையும் குமரிக் கிழங்குச் சாற்றால் 3 சாமம் அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து வெயிலில் உலர்த்தி எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அளவு: 1 மாத்திரை

அனுபானம்: மாந்தக் கியாழம் அல்லது இஞ்சிச் சாறு. பேதியாகி மாந்தம் குணமாகும்.

குறிப்பு: குமரிக் கிழங்கின்மீது செம்மண் பூசிய துணியைச் சுற்றி அனலில் காட்டிப் பிழிந்தால் சாறுவரும்.

குமரிக் கிழங்கு=சோற்றுக் கற்றாழைக் கிழங்கு.

## 47. ஆண்தோடக் குறியாது? அதற்குப் பரிகாரம் யாது?

### ஆண்தோடக் குறி

படுக்கையிலிருந்து எழுந்து வந்த ஆண் பார்த்த தால் உண்டாகும் தோடம் ஆண்தோடமாகும். இதன் குறிகள்: குழந்தையின் கழுத்துக் குறுகும்; சில சமயங் களில் பலமாக அழும்; வயிறு பொருமும்; பறவையின் குரல்போல் அழும்; குடித்த பாலை வாந்தியெடுக்கும்; உச்சியில் பள்ளம் விழும் அல்லது மேடு இருக்கும்.

### பரிகாரம்

குட்டி விளா இலையும் சிறிது வசம்பும் சேர்த்து அரைத்து அந்தக் கற்கத்தை அடையாகத் தட்டி உச்சி யில் வைத்துக் கட்ட வேண்டும். இவ்விதம் இரவில் 3 நாள் செய்வது போதுமானது.

## 48. கரப்பானுக்குப் பொதுமருந்து யாது?

| | |
|---|---|
| வசம்பு | குப்பை மேனிவேர் |
| பூதகரப்பான்பட்டை | மிளகரணை வேர் |
| பெருங்காயம் | வெங்காயம் |
| சிறுகுறட்டை | காட்டுமொச்சை |
| கிறுகாஞ்சொரி | பெருமருந்து |
| | பற்பாடகம் |
| புனலித்தண்டு | பொங்குரும்பை |
| கருஞ்சீரகம் | சத்திச்சாரணை |

| | |
|---|---|
| பொன் முசுட்டை வேர் | ஓமம் |
| நன்னாரி வேர் | கௌரிபாஷாணம் |
| கொடிவேலி வேர் | (சுத்தி செய்தது) |

இவைகள் வகைக்கு 5 கிராம் எடுத்து நீர் விட்டரைத்து 1 லிட்டர் பசு நெய்யுடன் சேர்த்துக் களிம் பேருத உலோக பாத்திரத்தில் இட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வடித்து வைத்துக்கொள்ளவும்.

அளவு: நாள்தோறும் காலையில் ஓர் உச்சிக் கரண்டி அளவு.

அனுபானம்: பசுவின் பால்

தீரும் நோய். எல்லா விதமான கரப்பான்களும் நீங்கும்.

பத்தியம்: இச்சாபத்தியம். ஆனால் இரணங்களுக்கு ஆகாத பண்டங்களை நீக்கவேண்டும்.

49. குழந்தைகளுக்கு வரும் செங்கிரந்தி, கருங்கிரந்திகளுக்கு என்ன வைத்தியம் செய்வாய்?

| | |
|---|---|
| சுரையிலைச்சாறு | 400 கிராம் |
| விளக்கெண்ணெய் | 400 ,, |

இவற்றை ஒன்று கலந்து அதில்

முக்கத்தாரி விளா
செங்கத்தாரி வொகளன்
பூவரசு கல்யாண முருக்கன்

இவைகளின் பட்டை வகைக்கு 10 கிராம்.

பெருங்கிழங்கு கன்னியாகுமரி
கோழி அவரை

| | | |
|---|---|---|
| இவற்றின் வேர் வகைக்கு | 5 | கிராம் |
| வெற்றிலைக் காம்பு | 2 | ” |
| கள்ளிக் கொழுந்து | 2 | ” |
| குப்பை மேனிக் கொழுந்து | 2 | ” |
| தும்பையீர்க்கு | 2 | ” |
| கருஞ்சீரகம் (ஆய்ந்தது) | 2 | ” |
| பூண்டு திரி | 20 | ” |
| பனைவெல்லம் | 40 | ” |

இவற்றைப் பஞ்சுபோல் இடித்துக் கலந்து மெழுகு பதத்தில் காய்ச்சி வடித்து வைத்துக்கொள்ளவும்.

செங்கிரந்தி, கருங்கிரந்தி உள்ள குழந்தைகளுக்கு நாக்கில் தடவி வரவேண்டும்.

கர்ப்ப காலத்தில் தாய்மார்களுக்கு 7 ஆம் மாதம் முதல் வாரத்திற் கொருநாள் உச்சிக்கரண்டி அளவு இதை உள்ளுக்குக் கொடுத்துவந்தால் மேற்கண்ட நோய்கள் வாரா.

50. கக்குவான் நோய்க்குக் காரணங்கள் யாவை? அதற்கு என்ன வைத்தியம் செய்வாய்?

பாலின் தோடத்தினாலும், சலதோடத்தினாலும் புளிப்புள்ள உணவுகளை அதிகம் உண்பதாலும் வாயு மிகுதிப்பட்டு மார்பில் இருக்கின்ற கபத்தை இளக்குந் தருணத்தில் கக்குவான் நோய் உண்டாகும். இது 90 நாள் வரை குழந்தைகளை வாட்டும். இது ஓர் ஒட்டு வாரொட்டி நோயாகும். இருமும் பிள்ளைகளின் காற்று வாடை பட்டாலும் இந்நோய் ஒட்டிக்கொள்ளும்.

## மருந்து

தூதுவளைவேர் மண்புழு
கொன்றைப்பட்டை ஈத்தின்னி வெளவால்
ஆவாரம் பட்டை

இவைகளைச் சமமாக எடுத்து நல்லெண்ணெயில் போட்டுப் பதமாகக்காய்ச்சி வைத்துக்கொள்ளவேண்டும்.

அளவு: காலையில் மட்டும் ஓர் உச்சிக் கரண்டி அளவு 7 நாள் கொடுக்க வேண்டும்.

## 51 இளம்பிள்ளை வாதத்திற்குப் பரிகாரம் யாது?

முடக்கொத்தான் இலை ஒருபிடி
கழற்சி (கெச்சைக்காய்) இலை ,,
பிளகரணை இலை ,,

இவற்றை இடித்துச் சாறு பிழிந்து ஆறுபலம் விளக்கெண்ணெயில் கலந்து பதமாகக் காய்ச்சி வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்த எண்ணெயில் ஓர் உச்சிக்கரண்டி அளவு எடுத்து அதில் உப்பில் எரித்த பூரப்பதங்கம் ஓர் குன்றி மணிஎடை சேர்த்துக் கொடுத்துவரத் தீரும்.

அல்லது 'மருந்து தொடர் எண் 26-இல்' உள்ள வாய்வு எண்ணெயை வலியுள்ள கைகால்களில் பூசி நன்றாகத் தேய்த்து, கரி நெருப்பு அனலில் காய்ச்சினால் உடனே வலி நீங்கும்.

அல்லது செந்தாமரைப் பூ கியாழத்தைக் காலை மாலை ஒரு வேளைக்கு ஓர் அவுன்சு வீதம் உள்ளுக்குக் கொடுத்து உடம்பைப் பிடித்துச் சூடேற்றி வரவேண்டும்.

52. தெற்கத்திக் கணைக்குப் பரிகாரம் யாது?

இது இளைப்பு, வலிப்பு, சன்னி இவற்றோடு வரும். இவை ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை. இந்நோய்க் குணத்திற்கு 'நோய்கள் தொடர் எண் 42' நோக்குக.

| | |
|---|---|
| ஓமம் | கோழி முட்டையின் மஞ்சள் கரு |
| வெள்ளைப்பூண்டு | வசம்பு |
| முருங்கைப் பட்டை | கடுக்காய் |

இவைகள் வகைக்கு 20 கிராம் எடுத்து ஒரு துணியில் மேற்கூறியபடி வரிசையாக வைத்துக் கடைசியாக 2 கிராம் சுத்தி செய்த பூரம் வைத்துச் சுருட்டி மடித்து மெல்லிய கம்பியை அதன்மேல் குறுக்கும் நெடுக்குமாகச் சுற்றி ஒரு கனமுள்ள கம்பியால் அதைக் குத்தித் தூக்கி 100 கிராம் வேப்பெண்ணெய் எடுத்துத் துணியின்மீது சிறிது சிறிதாக விட்டு எரித்துக் கீழே சொட்டும் எண்ணெயைப்

பிடித்து வைத்துக் கொள்ளவேண்டும். இதில் ஒரு காசெடை (ஒரு விராகனெடை) எடுத்து நாக்கில் தடவி வந்தால் இந்நோய் நீங்கும்.

53. அசீரண வாயுவுக்குப் பரிகாரம் யாது?

உணவு செரியாமல் வாய்வு தோன்றுமானால் உடல் அசதியாக இருக்கும்; நடந்தால் பெருமூச்சு வாங்கும்; உடல் நைந்து போனதைப்போல் தோன்றும். இதற்குச் சீரணமாகத் தக்க மருந்துகள் கொடுக்கவேண்டும். ஓமக்குடிநீர், அஷ்ட சூரணம் (மருந்து தொடர் எண் 1.) முதலியவற்றைக் கொடுக்கலாம். அல்லது, லங்கணம் பரம ஔஷதம்' என்றபடி 'பசியெடுக்கும் வரை சாப்பிடாமல் இருந்தால் இந்நோய் நீங்கிவிடும்.

54. புருஷதனம் நீங்க என்ன பரிகாரம் செய்வாய்?

ஆண்களுக்கு மார்பு பெண்களுக் இருப்பது போல் தோன்றுவது புருஷதனமாகும். இதற்குக் கொட்டைக் கரந்தை இலையைப் பழரசத்தால் அரைத்து நெல்லிக்காய் அளவு 7 நாட்கள் வரை காலையில் உண்டுவர நீங்கும்.

55. பிரசவ கால வலிப்புக்களுக்குச் செய்யும் பரிகாரம் யாது?

பொரித்த வெங்காரத்தூள் 10 நெல் எடை, கருவாப்பட்டைத்தூள் (லவங்கப்பட்டை) 10 நெல்எடை

எடுத்து இடித்து வாயிலிட்டு நீர் கூட்டி விழுங்க வேண்டும். இது ஒரு வேளைக்கு. இவ்வாறு 6 மணி நேரத்திற்கு ஒரு முறை கொடுத்துவரக் குணமாகும்.

### 56. கர்ப்பிணியின் விக்கலுக்கு மருந்து யாது ?

அரிசி திப்பிலி, கடுக்காய் இவைகள் வகைக்கு 2 கிராம் எடை எடுத்துக் கியாழமிட்டு வடிகட்டி அதனுடன் இஞ்சிச்சாறு ஓர் உச்சிக் கரண்டி, பசும் பால் ஓர் உச்சிக்கரண்டி கலந்து கொடுக்கத் தீரும்.

### 57. கர்ப்பிணியின் சுரத்திற்கு மருந்து யாது ?

| | |
|---|---|
| நன்னாரி வேர் | சீந்தில் கொடி |
| பேரு முட்டிவேர் | சுக்கு |
| வட்டத்திருப்பி | கொத்துமல்லி |

இவைகள் வகைக்கு 5 கிராம் எடுத்து இடித்துக் கியாழமிட்டுக் கொடுக்கத்தீரும். இது ஒரு வேளைக்கு.

### 58. கர்ப்பிணியின் வாந்திக்கு மருந்து யாது ?

கொத்துமல்லியை அரிசி கழுவிய நீரில் அரைத்து அத்துடன் சர்க்கரை கலந்து கொடுத்தால் கர்ப்பிணியின் வாந்தி குணமாகும்.

### 59. கர்ப்பிணியின் வயிற்று வலிக்கு மருந்து யாது ?

நன்னாரிவேர் விலாமிச்சம் வேர்
பாவட்டம் வேர்ப்பட்டை சுக்கு
வெட்டி வேர்

இவைகள் வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து இடித்து ½ லிட்டர் தண்ணீரில் இட்டு நாலில் ஒன்றாய்க் கியாழமிட்டுக் கொடுத்தால் வயிற்றுவலி நீங்கும்.

## 60. கர்ப்பிணிக்குப் பேதியாக என்ன மருந்து கொடுப்பாய்?

கர்ப்பிணிக்கு நேர்வாளம் கலந்த கடுமையான மருந்து எதுவும் பேதியாகத் தரக்கூடாது.

1. திராட்சைக் கியாழத்தில் சிவதை வேரின் மேல் தோல் சூரணம் 1 தேக்கரண்டி கலந்து கொடுத்தால் வெப்பமில்லாமல் பேதியாகும்.

2. சிவதை வேர்ப்பட்டை சூரணத்தைப் பாலில் கலந்து சாப்பிட்டாலும் பேதியாகும்.

3. காய்ந்த திராட்சை, கடுக்காய்த்தோல் இவை சமன் எடுத்து நன்றாய் இடித்துக் கியாழமிட்டுச் சாப்டாலும் பேதியாகும்.

4. சூரத்து நிலாவிரை இலையை அரைத்து நெல்லிக்காய் அளவு இரவு சாப்பாட்டிற்குப் பின் வெந்நீரில் சாப்பிட்டால் காலையில் பேதியாகும்.

## 61. சூதகச் சிக்கலைப் போக்க என்ன மருந்து தருவாய்?

(1) கருஞ்சீரகம் 20 கிராம் எடுத்து வறுத்து நன்ருய்ப் பொடி செய்து, 60 கிராம் பனைவெல்லம் சேர்த்து மீண்டும் நன்ருய் இடித்து மெழுகுபோல் செய்து வைத்துக் கொண்டு வேளைக்குப் பத்து கிராம் வீதம் காலை மாலை கொடுத்து வரக்குணமாகும்.

இவைகளை முறைப்படி கல்வத்தில் இட்டுத் துளித்துளியாகத் தேன் விட்டு மெழுகு பதத்தில் அரைத்துக் கொள்ளவேண்டும்.

அளவு : தேற்ருங் கொட்டை அளவு

அனுபானம் : பனைவெல்லத்தில் பொதிந்து காலை மாலை இருவேளையும் கொடுக்க வேண்டும்.

தீரும் நோய் . சூதகச் சிக்கல், சூதக வயிற்று வலி, சூதக வாய்வு, சூதகக் கட்டி, பிரசவித்த பெண் களுக்குக் காணும் சூதகச் சிக்கல் முதலியன.

## 62. சூதகம் அதிகம் போவதை நிறுத்த என்ன செய்வாய்?

(1) நாவல் பட்டையில் நிசித் தண்ணீர் விட்டு இடித்து ஆழாக்குச்சாறு எடுத்துக் காலையில் குடிக்கக் கொடுக்க வேண்டும். முதல் நாளில் நிற்கா விட்டால் மறுநாளும் கொடுக்கவேண்டும்.

(2) திரிபலை — நெற்பொரி
தேவதாரு — அருகன்வேர்
வசம்பு — சிற்ருமுட்டி
ஆடாதோடை இலை

இவைகளை ஓரளவாய் எடுத்து இடித்துக் கியாழமிட்டு வடிகட்டி அதில் தேன்விட்டுக் கொடுக்கச் சூதகம் அதிகம் போதல், பெரும்பாடு முதலியவைநீங்கும்.

63. இறந்த பிண்டத்தை வெளிவரச் செய்யும் பரிகாரம் யாது?

இந்துப்பு 4 சிட்டிகை, பெருங்காயம் 5 கிராம் இவ்விரண்டையும் 2 அவுன்சு புளித்த காடியில் அரைத்துக் கொடுக்க வயிற்றில் இறந்த பிண்டம் வெளி வரும்.

64. கர்ப்பப் பாட்டுக்குச் சாதகமாக என்ன செய்வாய்?

(1) முடக்கொத்தான் இலையைப் பஞ்சுபோல் இடித்து அடிவயிற்றில் கட்டலாம். அல்லது அதன் சாற்றைப் பூசி வைக்கலாம், பிள்ளை பெற்றபின் வயிற்றைக் கழுவ வேண்டும்.

(2) கொன்றை வேரைக் காடி விட்டரைத்து உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

65. தலைப்பேன் போகச் செய்யும் பரிகாரம் யாது?

காட்டுச் சீரகத்தைப் பழச்சாறு விட்டரைத்துத் தலையில் பூசி வைத்தால், பேன், ஈர் இவைகள் சாகும்; சொறி சிரங்கு போகும்.

66. அபான வாயுவை நிறுத்த என்ன செய்வாய்?

அடுப்புக் கரித்தூள் 4 சிட்டிகை எடுத்துச் சர்க்கரை கலந்து சில நாட்கள் வரை காலை மாலை இரு வேளையும் சாப்பிட்டு வர நிற்கும்.

67. சன்னிக்கு இலகு வைத்தியம் யாது?

(1) இஞ்சி, முருங்கைப்பட்டை, வெள்ளைப்பூண்டு, கடுகு இவற்றைச் சமனெடையாக எடுத்துப் பஞ்சு போல் இடித்துக் காலின் பெரு விரலில் கட்டிவைக்க ஒரு நாழிகைக்குள் சன்னி சாதகத்திற்கு வரும்.

(2) வசம்பு, கத்தூரி இரண்டும் தூள் செய்து பொட்டணம் கட்டி மோந்தால் சன்னி நீங்கும்.

68. ஆசனக்கடுப்பிற்கு மருந்து யாது?

(1) துத்தி இலையைக் கியாழமிட்டுப் பாலும், சர்க்கரையும் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் ஆசனக் கடுப்பு மலச்சிக்கல் இவை போகும்.

(2) சோறு வடித்ததும் கலத்தில் போட்டு அதன் மேல் 20 துத்தியிலையைப் போட்டு அதன் மேல் நெய் விட்டுப் பிசைந்து முதலில் நாலைந்து கவளம் உண்ண நீங்கும்.

(3) ஆமணக்கு இலையை நறுக்கிச் சமனெடை வெங்காயம் நறுக்கிச் சேர்த்து விளக்கெண்ணெய் விட்டு வதக்கி இரவில் ஆசனத்தில் வைத்துக் கட்ட ஆசனக் கடுப்பு, எரிச்சல், குத்தல், குடைச்சல் இவை போகும்.

69. சிறுநீர் இரத்தம்போல் இறங்குவதற்கு என்ன பரிகாரம் செய்வாய்?

கீழாநெல்லிச் சமூலத்தைப் பாலவிட்டு அரைத்து அழாக்குப் பசும் பாலில் கலந்து காலையில் சாப்பிடக் குணமாகும். முதல் நாளில் குணமில்லாவிட்டால் மறு நாளும் சாப்பிடவும்.

70 இரத்த மூலத்திற்கு நீ கொடுக்கும் மருந்து யாது?

பிஞ்சு கடுக்காய் 20 கிராம் எடுத்து விளக்கெண் ணெய்விட்டு வறுத்து அதைவிளக்கெண்ணெய் சிறிது சிறிதாக விட்டு மைபோல் அரைத்துக் குழம்பாகச் செய்யவேண்டும்.

இரவில் சாப்பிட்டுப் படுக்கப் போகும் போது ஓர் உச்சிக் கரண்டி வீதம் சாப்பிட்டு வரவேண்டும்.

பத்தியம்: காசினிக் கீரையைப் பச்சைப்பயறு டன் வேகவைத்துக் கடைந்து அதை இரவிலும் பகல் உணவிலும் சேர்த்துக்கொள்ள வேண்டும். காரம் குறைவாய் இருக்கவேண்டும்.

# 10. மருந்து கொடுக்கும்போது கவனிக்க வேண்டியவை

1. ஒரு கர்ப்பிணிக்கு மருந்து கொடுப்ப தில் கவனிக்க வேண்டுவன யாவை?

கர்ப்பிணியான 7 ஆவது மாதத்திற்குள் பேதி மருந்து கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் நேர்

வாளம் கலந்த மருந்தோ மற்ற கடுமையாகப் பேதியாகும் மருந்தோ கொடுக்கக் கூடாது. கொடுத்தால் சிலருக்குக் கர்ப்பச்சிதைவுக்கும் காரணமும் ஆகலாம். ஆதலால், கூடாகாத படியுள்ள மருந்துகளை அதிகமாய்ப் பேதியாகாதபடி கொடுக்கவேண்டும். 7வது மாதத்திற்குப் பிறகு நேர்வாளம் கலந்ததாக இருந்தாலும் கடுமையாக பேதியாகாதபடி கொடுக்க வேண்டும்.

கஷ்ட பிரசவத்தை நீக்கக் கர்ப்ப சஞ்சீவி எண்ணெய் முதலிய மருந்துகளை 7 ஆவது மாத முதல் மாதம் ஒரு முறையாகக் கொடுத்து வருவது நலம்.

கர்ப்ப காலத்தில் வாந்தியாவதுண்டு. வாந்தியை நிறுத்தப் பொது மருந்துகளைக் கொடுக்காமல் கர்ப்பிணியின் வாந்தியை நிறுத்துவதற்குரிய மருந்துகளைக் கொடுக்க வேண்டும். மருந்து தொடர் எண் 15, 58 ஐப் பார்க்கவும்.

## 2. பேதி மருந்து கொடுப்பதில் கவனிக்க வேண்டுவன யாவை ?

வைத்தியக் கலை கூறியுள்ள பேதி மருந்தின் அளவு முற்காலத்தில் மக்களுக்குப் பொருத்தமாகும். தற்காலத்திய மக்கள், முற்காலத்திய மக்களைக் காட்டிலும் பலக்குறைவுள்ளவர்களாக இருப்பதால் உடல் நிலைக்கு ஏற்றபடி அளவைக் குறைத்துக் கொடுக்க வேண்டும்.

அளவைக் குறைத்துக் கொடுப்பதிலும் கவனிக்க வேண்டுபவை பல உண்டு. சிலக்குக் குறைந்த அள

வுள்ள மருந்தும் அதிகமாகப் பேதியாகலாம்; சிலருக்கு அதிக அளவுள்ள மருந்தும் சில தடவைகளே பேதியா கலாம். ஆதலால் உடலின் தன்மையைக் கேட்டு நேர் வாள பேதி மருந்தைக் கொடுக்க வேண்டும். மற்றும் காலம், நோயின் தன்மை. உடல் நிலை இவற்றை அறிந் தும் கொடுக்க வேண்டும். ஒரு மருந்தினுல் பேதி அதி கமானுல் பேதியை நிறுத்தும் முறையை வைத்தியர் கள் அறிந்திருக்க வேண்டும். பேதியதிகமானுல் நிறுத் தும் முறையை அறிவதற்கும், சூடு அதிகமானுல் அதைப் போக்குவதை அறிவதற்கும் மருந்து தொடர் எண் 38 ஐக் கவனிக்கவும்.

தற்காலத்தில் எளிய பேதி முறைகள் பல உள் ளன. அவற்றை வைத்தியர்கள் அறிந்திருப்பது நலம்.

பேதி மருந்து கொடுத்துப் பேதியாகா விட்டாலும் மருந்து வாந்தியில் வந்துவிட்டாலும் அன்று மீண்டும் பேதி மருந்து கொடுக்கக் கூடாது. ஆனுல், மருந்தின் வீறு தணிய உபசாந்தியாகக்கியாழம் முதலியவைகளைக் கொடுக்கலாம்.

வயிற்றைக் கலக்கிய பிறகும் பேதியாகாமல் இருந்தால், வசம்பைக் கியாழமிட்டுக் கொடுக்கலாம். இதனுல் பேதியாகாமையால் உண்டான தீங்கு படிப் படியாகக் குறையும்.

### 3. மருந்தின் ஆற்றலை அனுசரித்து மருந்துகளைக் கொடுப்பதில் அளவை

## களைப்பற்றி அறிய வேண்டுவன யாவை ?

காலதேச வர்த்தமானத்திற்கு ஏற்றவாறு மருந்தின் அளவைகளைக் கவனித்துத் தர வேண்டும். அவ்வளவைகளாவன :

(1) மூலிகை சம்பந்தமான சூரணங்களை வேளைக்கு இரண்டு வராகனெடை கொடுக்க வேண்டும்.

(2) இரசம் கெந்தகம் சேர்ந்த செந்தூரம் ஒரு வேளைக்குச் சிறு குன்றிமணி அளவு கொடுக்கப்பட வேண்டும்.

(3) தாளகம் பூரம் சேர்ந்த இரசகெந்தி செந்தூரமும் மேற்கண்ட அளவே கொடுக்கப்பட வேண்டும்.

(4) இரசம், கெந்தி, தாளகம், பூரம் இவைகளின் தனித்தனி செந்தூரங்கள் உளுந்து அளவு கொடுக்கப்பட வேண்டும்.

(5) இரசம் கெந்தி இவற்றோடு வீரம், வெள்ளை சேர்ந்த செந்தூரங்கள் உளுந்து அளவு கொடுக்கப்பட வேண்டும்.

(6) கல்மதம், பவளம், மான்கொம்பு, சிலாசத்து, பவளம், ஆமை ஓடு, சங்கு இவற்றின்பற்பம் வேளைக்கு அரைப் பணவெடை (2 குன்றி மணி எடை) வீதம் கொடுக்கப்பட வேண்டும்.

(7) படிகாரம், எவாச்சாரம்,சோற்றுப்பு, வெடியுப்பு, வெங்காரம், நவாச்சாரம், அன்னபேதி, கரு

டக்கல். இவற்றின் பற்பமோ, செந்தூரமோ ஒரு வேளைக்கு ஒரு டணவெடை ($3\frac{3}{4}$ குன்றிமணி எடை) கொடுக்கப்பட வேண்டும்.

(8) அயம், மண்டூரம், காந்தம் இவற்றின் செந்தூரங்கள் ஒரு வேளைக்கு $1\frac{1}{4}$ குன்றிமணி வீதம் கொடுக்கப்படவேண்டும்.

(9) அயக்காந்தச் செந்தூரத்தோடு வீரம், பூரம், கெந்தி, தாளகம், ரசம் இவைகள் சேர்ந்திருந்தால் ஒரு குன்றிமணி அளவு கொடுக்கப்படவேண்டும்.

(10) கருவங்கம், வெள்வங்கம், நாகம் முதலியவைகளின் பற்பமோ, செந்தூரமோ வேளைக்கு ஒரு உளுந்து அளவு கொடுக்கப்படவேண்டும்.

(11) நாகம், கருவங்கம், வெள்வங்கம் இவற்றின் சுண்ணங்கள் ஒரு வேளைக்கு ஓர் உளுந்து அளவு கொடுக்கப்படவேண்டும்.

(12) தங்கம் வெள்ளி, இவற்றின் சுண்ணங்கள் ஒரு வேளைக்கு ஓர் அரிசி எடை கொடுக்கப்படவேண்டும்.

4. அபினியைக் குழந்தைகளுக்குக் கொடுப்பதில் கவனிக்க வேண்டியது யாது?

சீதபேதி, இரத்த பேதியை நிறுத்த அபினியைக் கொடுப்பதுண்டு. ஆயினும், இவற்றைக் குழந்தைகளுக்குக் கொடுத்தால் பிற்காலத்தில் உடலுக்குத் தீங்கை விளைவிக்கும்.

5. நோயாளிக்கு மருந்து கொடுக்கு முன் வைத்தியன் எதில் தெளிவடைய வேண்டும்? ஏன்?

ஒரு நோயாளியை வைத்தியன் அஷ்ட பரீட்சை மற்றசோதனை இவற்றால் ஆராய்ந்து நோய் இன்னதென்றும் அது தோன்றிய காரணம் இன்னதென்றும் முதலில் அறிய வேண்டும். நோய் இன்னதென்று அறிந்துவிட்டால் நோய் தீரும் என்று முடிவு கட்டி விடலாம். பிறகே தக்க மருந்து யாது என்று அறிந்து கொடுக்கவேண்டும். ஒரு மருந்தைக் கொடுத்தால் வேறு பிணி உண்டாகுமானால் அம்மருந்து எவ்வளவு சிறந்ததாயினும் அதை மீண்டும் கொடுக்கக்கூடாது.

6. எந்த நாளில் மருந்து உட்கொள்ளத் தொடங்கலாம்? எந்த நாளில் தொடங்கக் கூடாது?

ஞாயிற்றுக் கிழமை, செவ்வாய்க்கிழமை, வியாழக் கிழமை ஆகிய நாட்களில் மருந்து உட்கொள்வது சிறந்தது. திங்கள் புதன், சனி ஆகிய நாட்களில் மருந்து உட்கொள்ளக்கூடாது. வெள்ளிக்கிழமையில் மருந்துண்ணத் தொடங்கினால் பிணி மிகுதிப் படுமென்று கூறுவர்.

# 11. சோதனை

1. அயச்செந்தூரம், வங்க பற்பம், தாமிர பற்பம் இவை உலோகச் சத்தில்லாமல் முடிந்துள்ளதை அறியச் செய்யும் சோதனை யாது?

அயச்செந்தூரம் : இதை நீரின்மீது போட்டால் மேலே மிதக்குமாயின் உலோகச் சத்தில்லை என்று அறியலாம். செந்தூரம் தண்ணீருக்குள் சென்றால் உலோகச் சத்துள்ளது என்று அறியவேண்டும். தண்ணீருக்குள் சென்றதை விரலால் தடவிப் பார்த்தால் செந்தூரமாகாத இரும்புத் துகள்கள் விரலில் தட்டுப் படும்.

வங்க பற்பம் : இதைச் சிறிதளவு கரண்டியில் இட்டுச் சிறிது எண்ணெய் சேர்த்து நன்றாகக் காய்ச்சி அறிந்து கொள்ளலாம். எவ்வாறெனில், அடியில் ஈயம் தங்கியிருந்தால் உலோகச்சத்துள்ளது என்று அறிய வேண்டும். ஈயம் இல்லாவிட்டால் உலோகச் சத்தில்லாமல் பற்பமானது என்று அறியலாம்.

தாமிர பற்பம் : ஒரு வாழைப் பழத்தை உரித்துச் சிறிது துளைசெய்து அதில் சிறிதளவு தாமிர பற்பத்தைப் போட்டுவைக்க வாழைப் பழம் கட்டையைப் போல் கடினமானதாகி விட்டால் பற்பம் சரியாக முடிந்துள்ளது என்றும், அப்படிப் பட்ட பற்

பம் மேக நோயைக் (குட்ட ரோகத்தை) குணப்படுத்தும் என்று கூறுவர்.

2. அஷ்ட பரீட்சைகள் யாவை? விவரம் கூறு:

| | | | |
|---|---|---|---|
| (1) | நாடி | (5) | விழி |
| (2) | ஸ்பரிசம் | (6) | நிறம் |
| (3) | நாக்கு | (7) | மலம் |
| (4) | மொழி | (8) | சிறுநீர் |

ஆகியவைகளின் பரீட்சைகளாகும்

(1) நாடி: நாடியை, நாம், மனித சரீரத்தில் பத்து இடங்களில் உணரலாம். அவை:

| | | | |
|---|---|---|---|
| 1. | குதச்சந்து | 6. | காது |
| 2. | காமியம் | 7, | புருவம் |
| 3. | உந்தி | 8. | உச்சி |
| 4. | மார்பு | 9. | மூக்கு |
| 5. | கண்டம் | 10. | (மணிக்கட்டு) கரம் |

–இவைகளில் எளிதாக நாடியை உணரக் கரமே சிறந்ததாகும்.

இயல்பாக ஆண்களுக்கு வலக் கரத்திலும் பெண்களுக்கு இடக்கரத்திலும் நாடியை உணர முடியும். நாம் ஒரு நோயாளியைச் சோதித்து நாடியை உணரும் போது மணிக்கட்டுக்குக் கீழ் சுமார் ஒரு அங்குலம் இடம் விட்டு, நமது விரல்களை அழுத்திப் பார்த்தால் நாடி புலப்படும். ஆள் காட்டி விரலில் தோன்றுவது வாதநாடி என்றும், நடுவிரலில், தோன்றுவது பித்த

நாடி என்றும், மோதிரவிரலில் தோன்றுவது கப நாடி என்றும் உணருகிறோம்.

மனிதன் வியாதி அற்ற நிலையில் வாதம் ஒன்றென்றும் பித்தம் அரையென்றும் கபம்கால் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

(2) ஸ்பரிசம் (தொட்டு உணருதல்): உடம்பு மிதச்சீதோஷ்ணமாயிருந்தால் வாத தோஷம், உஷ்ணமாயிருந்தால் பித்த தோஷம்; குளிர்ச்சியாய் இருந்தால் கபதோஷம். இவைகள் ஒன்றோடு ஒன்று கலந்திருந்தால் தொந்த தோஷம்.

(3) நாக்கு: நாவானது முள்போன்றும் கறுத்து வெடித்தும் இருந்தால் வாத தோஷம்; மஞ்சள் அல்லது சிவப்பு நிறத்துடனிருந்து புண்கள் போல் தடித்துக் காணப்பட்டால் பித்ததோஷம். வெளுத்தும் தடித்தும் வழுவழுப்பாயும் இருந்தால்கபதோஷம். மேலும், நாக்கு நீண்டும் பல நிறமாயும் இருந்தாலும், சொள்ளு வடிந்து கொண்டிருந்தாலும், பேச முடியாமலும் சுவை அறிய முடியாமலும் இருந்தாலும் அசாத்தியரோகம் எனப்படும்.

(4) மொழி: குரலோசை சமநிலையிலிருந்தால் வாத தோடம்; உரத்தும் பலத்தும் காணப்பட்டால் பித்த தோடம்; மெலிந்தும் ஓசை குறைந்தும் காணப்பட்டால் கபதோடம்; இவைகளின் கலப்பு தொந்த தோடம் எனப்படும்.

(5) விழி: விழியானது கறுத்தும் நீர்ததும்பியும் இருந்தால் வாததோடம்; மஞ்சளுடன் சிவப்புக்

கலந்த நிறமாயும் கண் கூச்சமுடையதாகவும் இருப்பின் பித்த தோடம்; வெண்மையாகவும் நீர் கோத்துக் கொண்டு மங்கலாகவும் இருந்தால் கபதோடம். இவைகளின் கலப்பு தொந்ததோஷம்.

(6) நிறம்: தேகம் கறுத்திருந்தால் வாத தோடம்: மஞ்சள் அல்லது சிவந்த நிறத்துடனிருந்தால் பித்த தோடம்; வெளுத்திருந்தால் கபதோடம். இவைகளின் கலப்பு தொந்த தோடம். உடல்பல நிறமாகக் காணப்பட்டால், சன்னி பாதம் எனப்படும்.

(7) மலம்: மலம் கருமை நிறமுடனிருந்தால் வாத தோடம்; மஞ்சள் அல்லது சிவந்த நிறத்துடனிருந்தால் பித்த தோடம்; வெளுத்தும் சீதங்கலந்த நுரையுடனும் இருந்தால் கபதோடம். இம்மூன்றும் கலந்த நிறத்துடனிருந்தால் தொந்த தோடம்.

(8) சிறுநீர்: மூத்திரம் இளஞ்சிவப்புடன் சிறுத்துக் கடுத்து இறங்குமாயின் வாததோடம்; மஞ்சள் நிறத்துடன் அற்பமாய்க் கடுத்துத் துளித்துளியாய் விழுமாயின் பித்த தோடம்; சிறிது வெளுத்த நிறத்துடன் அதிகமாய் இறங்கினல் கபதோடம். நீரானது இளங் கருப்பாகவோ புகை நிறமாகவோ இருப்பின் வாத பித்தம் என்றும். அதுவே ஷிகுறிகளுடன் நுரை ததும்பியுமிருந்தால் வாதகபமென்றும், அதுவே மேற்கண்ட குறிகளுடன் சிறிது மஞ்சள்நிறம் கொண்டிருந்தால் பித்த கபமென்றும் சொல்லப்படும்.

## குழந்தைகள் நோயை அறியும் விதம்

1. குழந்தைகள், உடலில் எந்த இடத்தைப் பல தடவை தொடுகிறதோ எந்த இடத்தைத் தொட்டால் வீறிட்டு அழுகிறதோ அந்த இடத்தில் நோய் உண்டென்று அறியவேண்டும்.

2. கண்களைப் பலதடவை மூடிக்கொண்டால் தலையில் நோய் என்று அறியவேண்டும்.

3. மலமூத்திரக் கட்டு, சக்கல், தனத்தைக் கடித்தல், குடலில் இரைச்சல், வயிறுப்பல், முதுகை வளைத்தல், பக்கங்களில் எடுத்துப்போடுதல் இவைகள் இருந்தால் வயிற்றில் நோய் என்று அறியவேண்டும்.

5. பயப்படும்படி பல தடவை திசைகளைப் பார்த்தால் அடி வயிறு, குய்யம் இவைகளில் நோய் உண்டென்று அறிய வேண்டும்.

3. சிறுநீரின் நிறச் சோதனையை விளக்குக.

சிறுநீரின் இயற்கை நிறம் மங்கின மஞ்சள். அதாவது வைக்கோலின் நிறமாகும்.

(1) சிறு நீரானது வெண்மையாகவும் மஞ்சளாகவும், அதிகமாயும் இருந்தால் சுரநோய் என்று சொல்லப்படும்.

(2) நீரானது சிவப்பு நிறமாய் இருந்தால் தீர்க்கரோகம் எனப்படும்.

(3) சிறுநீர் கறுப்பு நிறமாய் இருந்தால் அசாத்திய ரோகம் எனப்படும்.

(4) சிறுநீர் சவ்வீர நிறமாக இருந்தால் சாத்திய நோய் என்று சொல்லப்படும்.

(5) சிறுநீர் சுத்த தண்ணீர் போலவும் படிக நிறமாகவும் இருந்தால் அஜீரண நோய் எனப்படும்,

(6) சிறு நீர் மஞ்சள் நிறத்துடன் காணப்பட்டால் பித்தத்தொடர்பான நோய் எனக் கூறப்படும்.

(7) சிறுநீர் இளங்கறுப்பு நிறமாயும் புகை நிறமாயும் காணப்படின் கபநோய் எனப்படும்.

(8) சிறுநீர் ஊர்த்துவ பாகத்தில் மஞ்சள் நிறமாயும் அதோ பாகத்தில் சிவந்த நிறமாயும் இருப்பின் சன்னிபாதம் எனப்படும்.

(9) சிறு நீரில் இரத்தம் கலந்திருந்தால் அதிசார நோய் எனப்படும்.

(10) சிறுநீா நெய்த்துளிகள் போல் இருப்பின் பெரும்பாடு அல்லது மகோதர நோய் எனப்படும்,

(11) நீரில் வசம்பின் மணமும் தயிரைப் போல் திடமாயும் இருந்தால் ஆமவாதம் அ..லது கீல் வாதம் எனப்படும்.

(12) நீரானது குங்கும நிறமாயிருப்பின் வாத சுரமென்று சொல்லப்படும்.

[13] நரம்புத் தொடர்பான வியாதிகளில் சிறுநீர் தெளிவாக அதிகமாகப் பிரியும்.

[14] சிறுநீர் மஞ்சள் நிறமாய் அதில் வண்டலும் இருந்தால் பித்த ஈரல் தொடர்பான வியாதியாகும்.

[15] சிறுநீர் விழுந்த இடத்தில் சுண்ணும்புத் தண்ணீர் போன்று பால் நிறமாய் இருந்தால் நீரிழிவு வியாதியாகும். அதில் எறும்பு மொய்த்தால் சர்க்கரை வியாதி [மதுமேகம்] என்று அறிய வேண்டும்.

4. சிறுநீரின் நெய்க்குறிச் சோதனையை விளக்குக.

ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் சிறு நீர் கொஞ்சம் எடுத்து, சூரிய வெப்பம் படும்இடமாகவும் காற்று வீசாத இடமாகவும் உள்ள இடத்தில் வைத்து அதில் நல்லெண்ணெய்த் துளிகளை விட்டுச் சோதனை செய்வதுசிறுநீரின் நெய்க்குறிச் சோதனையாகும். சிறு நீரில் விட்ட எண்ணெய்த்துளி பாம்பைப்போல் நீண்டால் வாத நோய்: மோதிரம் போல் இடை விட்டுப் பரவினுல் பித்த நோய்; எண்ணெய் சிறிதும் பரவாமல் முத்துப் போல் நின்ருல் கபநோய்; பாம்பிலே மோதிரமும் மோதிரத்தில் பாம்பும், பாம்பிலே முத்தும்—ஆக இரண்டிரண்டு குறிகள் காட்டினுல் தொந்த ரோகம் எனப்படும்.

சிறு நீரில் விட்ட எண்ணெய்த்துளி வட்டவடிவமாகத் தோன்றி மெதுவாகப் பரவி வந்தால் அந்நோயாளியைப் பற்றிப்பயமில்லை; வேகமாகப் பொங்கி நீர் முழுவதும் பரவினுல் அந்நோயாளிக்கு இவ்வுலகில் எந்த மருந்தும் இல்லை.

5. நாக்கின் பலவிதச் சோதனைகளை விளக்குக.

(1) நோயில்லா நிலையில்நாக்குசுத்தமாக இருக்கும்.

2. ஜீரணக் கோளாறில் நாக்கில் புண்கள் இருக்கும்.

3. வயிற்று வியாதிகளில் நாக்கு சிவப்பு நிற மாக இருக்கும்.

4. மலச்சிக்கலின் போது நாக்கில் மாவுபோல் வெண்மை படிந்திருக்கும்.

5. ஜன்னிபாத சுரத்தில் நாக்கு உலர்ந் திருக்கும்.

6. பித்த சால் தொடர்பான வியாதிகளிலும் பித்த சுரங்களிலும் உதடுகளும், நாக்கின் ஓரங்களும் காய்ந்திருக்கும்,

7. இரத்த ஓட்டம் சரியாக இல்லாவிடில் நீல நிறமாக இருக்கும்.

### 6. மஞ்சள் காமாலை நோயை அறிவது எப்படி?

முக்கிய குறிகள்: பலக்குறைவு, ருசியின்மை, உடல் எரிச்சல், கை கால் அசதி, நடந்தால் பெரு மூச்சு, நீர் மஞ்சள் அல்லது சிகப்பும் மஞ்சளும் கலந்த நிறமாய்ப் போதல், கண் மஞ்சள் நிறமாதல் முதலி யனவாகும். மற்றவைகளை நோய்கள் தொடர் எண் 11இல் காண்க.

## 12. முறிவுகள்

### 1. ரசம் சம்பந்தப்பட்ட மருந்துகளால் உண்டாகும் கோளாறுகள் யாவை? அவற்றிற்கு முறிவு யாது?

ரசம் சம்பந்தப்பட்ட மருந்துகளால் பல் ஈறுக ளில் விரணம், வாயில் உமிழ்நீர் ஊரல், தொண்டை விழுங்க முடியாமல் அடைத்துக் கொள்ளுதல் போன் றவை ஏற்படும்.

இதற்கு முறிவு: அறுகம் வேரையும் மிளகை யும் சேர்த்து எட்டொன்ருய்க் குடிநீரிட்டு அதில் சிறிது வெண்ணெய் சேர்த்துக் காலை மாலை இரு வேளை கொடுத்துவர நஞ்சு முறியும். காட்டுச்சுரை ஓட்டுக்கரியைச் சிறிதளவு புளிப்பு மோரில் கலந்து கொடுத்தாலும் குணமாகும்.

## 2. வீரத்தால் உண்டாகும் கோளாற்றை யும் அதன் முறிவையும் கூறுக.

கோளாறுகள்: ரச தோஷங்களுடன் வாந்தி யும் உண்டாகும்.

முறிவு: கோழிமுட்டை வெண்கருவில் பாலோ அல்லது தண்ணீரோ சேர்த்துச் சிறிது சிறிதாகக் கொடுத்துவர நஞ்சு முறியும். மேலும் அவுரியின் சாற்றைப் பாலில் கலந்து கொடுத்தாலும் குண மாகும்.

## 3. பூரத்தால் உண்டாகும் கோளாற்றை யும் முறிவையும் கூறு.

கோளாறுகள்: ரச தோஷங்களுடன் பேதியும் காணும்.

முறிவு: படிகார பற்பம், காசுக்கட்டி இதில் ஏதாவது ஒன்றை எடுத்து மோர் (அ) பழச்சாறு கலந்துகொடுக்க நஞ்சு முறியும். அவுரிவேரின் கற்கம் அல்லது குடிநீரும் தரலாம்.

## 4. துருசிஞல் உண்டாகும் கோளாறுகளை யும் அதன் முறிவையும் கூறுக.

துருசிஞல் வாந்தி உண்டாகும்.

முறிவு: பழச்சாற்றுடன் தேனும் தண்ணீரும் கலந்து கொடுக்க நஞ்சு முறியும்.

5. சத்துமடியாத தாளக மருந்தினல் உண்டாகும் தீங்குகளையும் முறிவை யும் கூறுக.

தீங்கு: சத்து மடியாத தாளகம்சேர்ந்த மருந்து களை உட்கொண்டால் வாந்தி, பேதி, சுரம் காணும்.

முறிவு: மிளகு சேர்த்த குடிநீர் (அ) அவுரி வேர்க் குடிநீர் (அ) சுண்ணும்புத் தெளிவு நீர் கொடுக்கக் குணமாகும்.

6. வெள்ளைப்பாடாணத்தால் உண்டா கும் கோளாறுகளையும் அதன் முறி வையும் கூறுக?

சரிவரச் சுத்தி செய்யாத வெள்ளைப்பாடாணம் கலந்த மருந்துகளை உட்கொண்டால் வாந்தி, நீர் நீராகப் பேதி, வயிற்றுவலி, உடல் எரிவு, மயக்கம் முதலியன ஏற்படும்.

முறிவு: அவுரிவேர், மிளகு சமனெடை சேர்த் துக் குடிநீரிட்டுக் கொடுக்கக் குணமாகும்.

7. சத்துமடியாத தாமிரமருந்தால் உண் டாகும் கோளாறுகள் யாவை? முறிவு யாது?

சத்து மடியாத தாமிர மருந்து உடல் குத்தலை உண்டாக்கும்; இரத்தத்தை நீற்றும்; இரத்த கனத் தைக் குறைக்கும்.

முறிவு: பழச்சாற்றில் சுக்குப் பொடி போட்டுக் கொடுக்க நஞ்சு முறியும்

8. சத்து மடியாத வங்க மருந்துகளால் உண்டாகும் தோடங்கள் யாவை! முறிவு யாது?

சத்து மடியாத வங்க மருந்துகளால் பல் ஈறு களில் கருமை நிறமுண்டாகும். மேலும் தொண்டையின் ஓரங்களில் கரும் புள்ளிகளைக் கொண்ட இரத்தத் தடிப்புகள் உண்டாகும்.

முறிவு: கரும்புச்சாறு அல்லது கருப்புப் புல்லாஞ்சிச் சாறு கொடுக்க நஞ்சு முறியும்,

9. கல் சுண்ணும்பால் உண்டாகும் கோளாறு யாது? அதன் முறிவு யாது?

கல் சுண்ணும்பால் வாய், நாக்கு, வயிறு விரணப் படும்.

முறிவு: மஞ்சள் குடிநீர் அல்லது தேங்காய்ப் பால் கொடுக்கக் குணமாகும்.

10. நேர்வாளத்தால் உண்டாகும் கோளாறுகளையும் முறிவையும் கூறுக.

சரியாகச் சுத்தி செய்யாத வாளம் சேர்ந்த மருந்துகளை உட்கொள்வதால் வாந்தி, பேதி, மயக்கம், மூர்ச்சை, வயிற்றுவலி முதலியவை ஏற்படும்.

முறிவு: சீரகத்தை எலுமிச்சம் பழத்துடன் சேர்த்துக் கியாழம் போட்டுக் கொடுக்கலாம்; அல்லது வசம்பைச் சுட்டுச் சாம்பலாக்கித் தேனில் குழைத்துக் கொடுக்கலாம்; மோரும் தரலாம்.

11. சேராங்கொட்டையால் உண்டாகும் கோளாறுகளையும் முறிவையும் கூறுக.

சேராங்கொட்டையால் பட்ட இடத்தில் தடித்து வீக்கம் ஏற்படும்; விரணம் உண்டாகும்; மயக்கம், உப்பிசம், மேல்மூச்சு முதலியவைகள் ஏற்படும்.

முறிவு : உள்ளுக்குப் புளி இலைச்சாறு கொடுத்து, வெளி இரணத்திற்குப் புங்கன் பாலைத் தடவ இரணம் ஆறும்:

12. வசநாபியால் உண்டாகும் தீங்கையும் முறிவையும் கூறுக.

இது வாந்தி, குடல்புண், மயக்கம், மூர்ச்சை முதலியனவற்றை உண்டாக்கும்.

முதலில் சிற்றாமணக்கு எண்ணெய் கொடுத்து பிறகு பேதியைக் கட்டும் மருந்துகளையும் தேங்காய்ப் பால் முதலிய இரணத்தை ஆற்றும் பொருள்களையும் கொடுக்கலாம்.

13. கள்ளி வகைகளால் உண்டாகும் கோளாறுகளையும், முறிவையும் கூறுக.

கள்ளி வகைகளால் வாந்தி, பேதி வலி உண்டாகும். வாய், குடல் முதலியன புண்ணாகும். மயக்கம் மூர்ச்சை இவை ஏற்படும்.

முறிவு : மேல் (தொடர் எண் 12ல்) வசநாபிக்குக் கூறப்பட்ட முறிப்புகளைக் கொடுக்கலாம்.

14. அலரி, எட்டி, ஊமத்தம்—இவற்றால் உண்டாகும் கோளாறுகளையும் முறிவையும் கூறுக.

அலரி : இதனால் வாந்தி, விக்கல், வயிற்று நோக்காடு இவை உண்டாகும்.

முறிவு : கடுக்காய்க் குடிநீர் அல்லது கடுகுக் கற்கம் கொடுக்கக் குணமாகும்.

எட்டி : இதனால் இசிவு, பேதி, மயக்கம் உண்டாகும்.

முறிவு: நாவல்பட்டைக் குடிநீர் கொடுக்கக் குணமுண்டாகும்.

உன்மத்தம்: இதனுல் மயக்கம், நாவறட்சி, சித்தப் பிரமை, கண்மணி விரிதல் முதலியன உண்டாகும்.

முறிவு: பழச்சாறு கொடுக்கக் குணமாகும்.

15. அபினியால் உண்டாகும் கோளாறு களையும் முறிவையும் கூறுக.

அபினியால் கண்மணி சுருங்கும், மயக்கம், மூர்ச்சை, தலைவலி, தலைகனத்தல் ஏற்படும்.

முறிவு: வெங்காயச்சாறு, பழச்சாறு, நெய் முதலியன கொடுக்கலாம்.

16. பாஷாண வேகந்தீர என்ன கொடுக்க வேண்டும்.

வெற்றிலையும் மிளகும் சேர்த்துக் குடிநீரிட்டுக் கொடுக்கலாம். அவுரி வேரின் குடிநீரும் தரலாம். கருவேலன் கொழுந்தைத் தயிரிலரைத்தும் கொடுக்கலாம்.

17. மருந்து சாப்பிட்டதால் உண்டான தீமையைக் குறைக்க என்ன செய்ய வேண்டும்?

ஆவாரம் வேர்ப்பட்டை—ஒரு பிடி
வெங்காயம் பெரியது —ஒன்று
முருங்கையீர்க்கு —ஒரு பிடி

இவற்றை இடித்துக் கியாழமிட்டுப் பனங்கற்கண்டு கலந்து கொடுக்க மருந்து சாப்பிட்டதால் உண்டான கடுப்பு, பேதி, இரத்தக் கடுப்பு முதலியன நீங்கும்.

18. அவபத்தியம் செய்து கை கால் வீங்கியதற்குளென்ன பரிகாரம் செய்வாய்?

| | |
|---|---|
| அமுக்கரா | 25 கிராம் |
| கோரைக்கிழங்கு | ,, |
| டமாசு | ,, |
| சந்தனத் தூள் | ,, |
| விஷ்ணு கிரந்தி | ,, |
| மிளகு | ,, |
| நெல்லிப் பருப்பு | ,, |
| சுரைக்கொடி | 45 கிராம் |
| நீர்முள்ளி இலை | 1 பிடி |
| கரிசலாங்கண்ணி இலை | ,, |
| வரமுள்ளி இலை | ,, |

அடியில் சொன்ன மூன்றுவிதப் பச்சிலைகளையும் சட்டியில் போட்டுச் சாம்பலாக்கிக்கொள்ள வேண்டியது. மற்ற தினுசுகளை இடித்துத் தூள் செய்து யாவும் ஒன்றாய்ச் சேர்த்துப் பத்துப் பாகமாக்கி ஒரு பாகத்தைச் சட்டியிலிட்டு 1 லிட்டர் நீர்விட்டு மந்தாக்கினியாக எரித்துக் கால் லிட்டராகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டிக் கொடுக்கவும். ஷை கியாழத்திலிருக்கும் கடுகை வீக்கத்தின் பேரில் பூசவும். பத்தியம் புளி கூடாது. வீக்கம் நீங்கும். சாதாரண வீக்கத்திற்கும் மேற்படி கியாழம் கொடுக்கலாம்.

# 13. இலகு வைத்தியம்

## 1. இலகு வைத்தியத்தின் அவசியம் யாது?

அவசரமான சமயங்களில் இலகுவான பரிகாரமும், நோய் தீர்க்கக் கூடிய செயல்களும் பயனளிக்கக் கூடும். சில ஆபத்துக்களும் இதனால் நீக்கக் கூடும். உயிர் பிழைக்கச் செய்யவும் கூடும். இலகு வைத்தியம்

விட முண்டவர்களுக்கு விடத்தின் வேகத்தைத் தணித்துத் தக்கதொடர்பான மருத்துவர் வரும்வரைக் கும் தீங்கில்லாமல் இருக்கச் செய்யப் பெரிதும் பயன் படும். மேலும் மருத்துவர் இல்லாத ஊர்களில் இது பெரிதும் பயன்படுவதாகவும் முக்கியமானதாகவும் கருதப்படுகின்றது.

2. மூக்கிலிருந்து வரும் இரத்தத்தை நிறுத்த என்ன செய்வாய்?

நெற்றியில் பனிக்கட்டி வைத்துக் கட்டலாம். ஈரத் துணியை மூக்கின் மீது போட்டு வைக்கலாம்.

3. கையில் வெட்டுப்பட்ட இடத்தி லிருந்து வரும் இரத்தத்தை நிறுத்த என்ன செய்வாய்?

துணி, அல்லது பஞ்சை நீரில் நனைத்துப் பிழிந்து வெட்டுப்பட்ட இடத்தில் வைத்து விரலால் சிறிது நேரம் வரை அழுத்திக்கொண்டிருந்தால் இரத்தம் வருவது நின்று விடும்.

4. கீழ்க் காண்பவற்றிற்கு என்ன இலகு வைத்தியம் செய்வாய்?

கீழ்க்காண்பவை என்பதை அறியப் பக்கம் 31 வினா 4ஐ நோக்குக.

(1) நீரில் மூழ்கிச் சுவாசமில்லாமல் போதல்: சுவாசம் இல்லாமல் இருப்பவனைப் படுக்க வைத்துக் கைகளை மேலும் கீழுமாக ஆட்டிக் கொண்டிருந்தால் சுவாசம் வரும். அப்பொழுது விலாப் புறங்களில் சிறிது சிறிதாக அழுத்திப்பிடித்து விடவேண்டும். இவ்வாறு செய்யும்பொழுது நாக்கை வெளியில் இழுத்துப் பிடித்துக்கொண்டிருந்தால் விரைவில் பயன்கிடைக்கும்.

(2) மயக்கம்: முதலில் மன உறுதியுடன் இருக்கச் செய்ய வேண்டும். இதனால் மயக்கத்தை எளிதில் நீக்க முடியும். மயக்கம் வந்தவுடன் நோயாளியைத் தரையில் படுக்கவைக்க வேண்டும். தலையைப் பின்புறம் சாய்த்துக் கால்கள் சற்று உயரமான இடத்தில் இருக்கும்படி செய்ய வேண்டும். பின்பு முகத்தின் மீது குளிர்ந்த நீரைத் தெளிக்க வேண்டும். இதனாலும் மயக்கம் தெளியாவிட்டால் ஒரு குச்சியில் துணி சுற்றி, எண்ணெயில் தோய்த்துக் கொளுத்தி அணைத்துப் புகையை நாசியினுள் செலுத்த வேண்டும்.

மயக்கம் நீடித்துக் கைகால்கள் குளிர்ந்துவந்தால் சூடுண்டாகும்படி ஒற்றடம் கொடுக்கலாம். தவிட்டு ஒற்றடம் நல்லதாகும். உடலில் எங்காவது இரத்தம் வரக்கண்டால் ஒற்றடம் கொடுக்கக் கூடாது.

சுண்ணாம்பும், நவாச்சாரமும் சேர்த்து நசியம் செய்தாலும் மயக்கம் தீரும்.

(3) இரத்தம் தலையிலேறுதல்: இந் நோயாளிகள் குறட்டை விடுவது போன்று சுவாசமிடுவர். வாய் கோணும்; நினைவு குறைந்திருக்கும்.

தலை உயரமாக இருக்கும்படி படுக்கவைத்துத் தலையில் பனிக்கட்டி வைத்துக்கட்டவேண்டும் காலடிகளில் ஒற்றடம் கொடுத்துச்சூடேற்றலாம். எளிதாகச் சுவாசம் விடும்படிச் செய்ய வேண்டும். இவ்வாறு செய்யின் தலையில் ஏறின இரத்தம் இறங்கும்.

(4) காக்காய் வலி: இது திடீரென்று உண்டாகும். இவ்வலியின் போது நினைவிருக்காது. கைகால்கள் அடித்துக்கொள்ளுதல், பொருத்தமில்லாத முணு முணுப்பு அல்லது கீச்சிடுதல், வாயில் நுரை வருதல், நாக்கைக் கடித்துக்கொள்ளுதல் முதலியன நிகழும்; பிணமுகம் காட்டும். கற்பூரமும் பெருங்காய

மும் சமனையச் சேர்த்துக்கொடுத்தால் இது சிறிது நேரத்தில் நின்றுவிடும். அதுவரை கை கால்களை அடித் துக் கொள்ளாமல் இருக்கும்படி செய்ய வேண்டும். பற்களுக்கிடையில் ஏதாவது வைத்து நாக்கைக் கடித் துக் கொள்ளாமல் இருக்கச் செய்ய வேண்டும். கை கால்களை அடித்துக்கொள்ளும்போது அடிபடுமாத லால் அருகில் அம்மி, நாற்காலி முதலியன இல்லாத இடத்தில் கிடத்தி வைக்கவேண்டும். வெள்ளை வெங் காயச் சாற்றை 7 தடவை காதில் விட்டாலும் வலி நிற்கும். அயச் செந்தூரம் கொடுத்தால் இது அறவே நின்று விடும்.

(5) வாந்தி பேதி: மிளகு, கற்பூரம் ஆகிய இவற்றை ஓரளவாக எடுத்து முந்திரிப் பழச்சாற்றில் போட்டுப் பூமியில் 40நாள் புதைத்துவைத்து எடுத்து மிளகு கியாழத்தில் இரண்டு துளி கொடுக்கக் குண மாகும்.

நாள்பட்ட கருப்பஞ்சாற்றைக் கொடுத்தாலும் இது குணமாகும்.

(6) தேள் கொட்டு: 1. அலரிப்பாலில் எருக்கம் பால் விட்டால் மெழுகுபோல் வரும். அது கெட்டியானதும் தட்டையுள்ள உருண்டையாகச் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். அதை அனலில் காட்டித் தேள் கொட்டிய விடத்தில் வைக்கத் தேள் விடம் நீங்கும்

2. பொட்டாசியம் பெர்மாங்கனேட், தார்டாரிக் ஆசிட் இவ்விரண்டையும் தனித்தனியாகத் தூள் செய்து கண்ணாடிப் புட்டியில் வைத்திருந்து தேள் கொட்டிய விடத்தில் ஒவ்வொன்றிலும் சிறிதளவு வைத்துத் தண்ணீர் விட்டால் பொங்கும். பிறகு விட மிறங்கும். மருந்து வைத்த இடத்தில் சிறிது புண்ணா கும். பிறகு அதை ஆற்றிக்கொள்ள வேண்டும்.

(7) இரத்தம் பீறிட்டு வருதல் : இரத்தம் வருமிடத்தைக் கையால் அழுத்தினால் இரத்தம் நின்று விடும். இரத்தக் குழாய் வெட்டுப்பட்டிருந்தால் இதில் பயன் ஏற்படாது. ஆதலால் எதிர்பார்த்த பயன் கிட்டவேண்டுமாயின் இரத்த ஓட்டத்தைக் கவனித்து ஒரு கட்டுப் போடவேண்டும்.

அசுத்த இரத்தக் குழாய்களிலிருந்து இரத்தம் இருதயத்தை நோக்கிச் செல்கிறது. சுத்த இரத்தக் குழாய்களின் மூலம் இரத்தம் இருதயத்திலிருந்து உடலின் பல உறுப்புகளை நோக்கிப் பாய்கிறது. ஆதலால் முழங்கைக்குக் கீழ் அசுத்த இரத்தக் குழாயிலிருந்து இரத்தம் வருமானால் மணிக்கட்டில் கட்டு கட்ட வேண்டும். சுத்த இரத்தக் குழாயிலிருந்து இரத்தம் வருமானால் புஜத்தில் கட்டுகட்ட வேண்டும். இவ்வாறு செய்தால் இரத்தம் நின்றுவிடும். ஆயினும் இரத்தம் வருமிடத்தை நீரில் நனைத்த பஞ்சால் அழுத்திப் பிடித்துக்கொண்டிருக்க வேண்டும்.

அசுத்த இரத்தக் குழாயிலிருந்து வரும் இரத்தம் சிறிது கருப்பாக இருக்கும். மற்றும் நீரோட்டம் போன்று தொடர்ந்து இரத்தம் வரும். சுத்த இரத்த குழாயிலிருந்து வரும் இரத்தம் மிகுந்த சிவப்பாக இருக்கும். துள்ளுவது போன்று வெளிப்படும்.

(8) இரத்த வாந்தி : தொண்டைப் புண், வயிற்றுப் புண், உருக்கி நோய், ஈரல் வீக்கம் இவற்றால் வாய் மூலம் இரத்தம் வருவதுண்டு.

இப்படிப்பட்ட நோயாளியை நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் படுக்கவைக்க வேண்டும். தலையணை கூடாது. பேச்சுக் கொடுக்கக் கூடாது. இளநீர் குடிக்கக் கொடுக்கலாம். அல்லது பாலில் ஐஸ்போட்டுக் குடிக்கக் கொடுக்கலாம். துணியை நீரில் நனைத்து மார்பின்மீது போட்டு வைக்கலாம்.

(9) தீப்புண் : வெள்ளைக் குங்கிலியம் 35 கிராம் எடுத்துத் தூள் செய்து 20 கிராம் நெய்யைக் காய்ச்சி அதில் மேற்படி தூளைப்போட்டுக் காய்ச்சினால், குங்கிலியம் உருகிக் கரையும். பாதியளவு நீர் உள்ள ஒரு பாத்திரத்தில் அக்கரைசலை வடிகட்டி விட்டு மத்தினால் கடைய வேண்டும். இப்படி நீரை மாற்றி மாற்றி 3 அல்லது 4 தடவை கடைந்தால் வெண்ணெய் போன்று குங்கிலியம் மேலே மிதக்கும். அதை எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு தீப்புண், எண்ணெய்ப்புண் உள்ள இடத்தில் அப்பினால் எரிச்சல் நிற்கும். கொப்புளம் உண்டாகாது; புண் ஏற்பட்டாலும் விரைவில் குணமாகும்.

(10) உடைகளில் தீப்பிடித்தல் : உடையில் தீப்பிடித்ததும் எங்கும் ஓடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உடனே தரையில் படுத்துப் புரளும்படி சொல்ல வேண்டும்; அல்லது புரட்ட வேண்டும். தடிப்பான துணி அல்லது கம்பளத்தை உடலின் மீது போட்டுச் சுற்ற வேண்டும். இப்படிச் செய்வதால் தீ உடலின் மற்ற இடங்களுக்குப் பரவாமல் தடுக்க முடிவதோடு தீயை அணைக்கவும் காரணமாகும்.

குழந்தை இருக்கக் கூடிய அறையில் தீப்பிடித்தால் ஈரத்துணியை முகத்தின்மேல் போட்டுக்கொண்டு தரையில் ஊர்ந்து அல்லது நகர்ந்து சென்று நீரில் நனைத்த கம்பளம் அல்லது துணியால் குழந்தையைப் பொதிந்துகொண்டு வெளியே வரவேண்டும்.

# 14, விடம்

1. பாம்பு விடங்களுக்குப் பயன்படும் மூலிகைகள் எவை? அவற்றை எவ்வாறு பயன்படுத்துவாய்?

(1) ஆகாச கருடன் கிழங்கைக் காயவைத்துத் தூள் செய்து திரிகடி சூரணத்தை வெந்நீரில் கொடுக்க வேண்டும்.

(2) குப்பமேனி இலையைக் கொஞ்சம் எடுத்து அதில் ஒரு க்ரெயின் சோற்றுப்பைச் சேர்த்துக் கசக்கிச் சாற்றை இரு கண்களிலும் விட வேண்டும். கண் சிவந்தால் தாய்ப்பால் விடலாம். சோற்றுக்கற்றாழையின் சோற்றை 7 முறை தண்ணீரில் கழுவிக் கண்களில் கட்டி வைக்கச் சிவப்பு மாறும்.

(3) சிரியாநங்கை என்னும் செடியின் இலையைக் காயவைத்துத் தூள்செய்து வைத்திருந்து திரிகடி அளவு வெந்நீரில் கொடுக்கலாம்.

(4) கடிபட்ட இடத்திற்கு மேல்பிகுவாகக் கயிற்ருல் கட்ட வேண்டும். பிறகு வேருெரு கனமான கயிறு எடுத்து மேலே கட்டிய இடத்திலிருந்து கடிபட்ட இடத்தை நோக்கி நெருக்கமாகச் சுற்றிக் கொண்டே வரவேண்டும். அதனுல் பாம்பு கடித்த இடத்தில் இரத்தம் இரங்கி அவ்விடம் தடிப்பாகும். அப்பொழுதுகண்ணுடி உடைத்த துண்டால் கடிபட்ட இடத்தில் சிறிது கீர இரத்தம் கருநிறமாய் வெளிப்படும். பிறகு தக்க மூலிகைகளைக் கொடுக்கலாம்.

(5) பாம்பு கடித்ததற்கு அவசர சிகிச்சையாகத் தும்பை இலையை அரைப்பிடி அளவெடுத்து மென்று தின்றுவிட்டால் விடத்தால் ஆபத்துண்டாகாது. பிறகு எந்த விதமான வைத்தியமும் செய்து கொள்ளலாம்.

குறிப்பு: பாம்பால் கடியுண்டவர்களை 12 மணி நேரம் அவசியம் தூங்கவிடக் கூடாது.

2. கொல்லும் விடங்கள் யாவை? அவற்றிற்குப் பொதுவான பரிகாரம் எது?

கொல்லும் விடங்கள் : (1) அரளிவேர், (2) எருக்கன் பால், (3) வீரம், (4) பூரம், (5) நாபி, (6) எலி பாஷாணம், (7) மயில்துத்தம், (8) ஊமத்தம் விதை, (9) குண்டுமணிப் பருப்பு.

பரிகாரம் : பன்னிரண்டு மொச்சைக் கொட்டையை அரைத்து ஓர் ஆழாக்கு நீரில் கலக்கி உள்ளுக்குக் கொடுத்தால் வாந்தியின் மூலம் விடம் வெளிப்பட்டு விடும். கடுகை அரைத்துத் தண்ணீரில் கலக்கிக் கொடுத்தாலும்வாந்தியாகி விடம் வெளிப்பட்டுவிடும். பின்பு நஞ்சு முறிவுக்கு உரிய பொருள்களைக் கொடுக்கலாம்.

மிளகுப் பொடி, தேன், சுக்கு, நல்லெண்ணெய், வெற்றிலைச்சாறு முதலியவை பொதுவான முறிவுகளாகும்.

### 3. தேள் கொட்டுக்குப் பரிகாரம் யாது?

பக்கம் 266ஐ நோக்குக.

### 4. தேனீ கொட்டுக்குப் பரிகாரம் யாது?

தேனீ கொட்டிய விடத்தில் நன்றாய்க் கசக்கினால் விடம் வெளிவந்து விடும். பிறகு மேனிச்சாற்றில் சிறிதளவு சுண்ணாம்பு கலக்கிக் கொட்டுவாயைச் சுற்றிலும் அகலமாகப் பூசிவைத்தால் வீக்கம் நீங்கி விடும்.

### 5. பூச்சி கடிகளால் உண்டாகும் தடிப்புக்குப் பரிகாரம் யாது?

அவுரி இலைச் சாற்றை யெடுத்துத் தடிப்புள்ள இடத்தில் காலை மாலை பூசி வைக்கவேண்டும். இரவில் குப்பைமேனிச் சாற்றில் உப்புக் கலந்து பூசிவைக்க வேண்டும்

6. பூரான், செய்யான் கடிகளுக்குப் பரிகாரம் யாது?

குப்பைமேனிச் சாற்றில் சுண்ணும்பு கலந்து பூசிவைக்கக் குணமாகும்.

7. அக்கினித் திராவகம் (நைட்ரிக் ஆசிட்) சாப்பிட்டதற்குப் பரிகாரம் யாது?

அக்கினித் திராவகம் சாப்பிட்டவர்களுக்கு வாந்தியை உண்டுபண்ணும் மருந்து எதுவும் கொடுக்கக் கூடாது. முட்டையின் வெள்ளைக்கரு, கூவை மாப்பொடி. ஒலிவ (ஆலிவ்) எண்ணெய், பால் போன்றவற்றுள் ஏதாவது ஒன்றைக் கொடுத்து வந்தால் திராவகத்தின் வேகம் தணியும்.

8. எரி மருந்து சாப்பிட்டதற்குப் பரிகாரம் யாது?

காடி, பழச்சாறு இவற்றுள் ஏதாவது ஒன்றைக் கொடுத்தால் எரிச்சல் தணியும். பிறகு பால். முட்டையின் வெள்ளைக்கரு, கூவை மாப்பொடி இவற்றுள் ஏதாவது ஒன்றைக் கொடுக்கலாம்.

9. கார உப்புக்கள் சாப்பிட்டதற்குப் பரிகாரம் யாது?

கார உப்புக்கள் சாப்பிட்டதால் வேக்காடு ஏதுமில்லாதிருப்பின் வாந்தி வர மருந்து கொடுக்கலாம். பிறகு பால், முட்டையின் வெள்ளைக்கரு முதலியவற்றைக் கொடுக்கலாம்

10 பிராந்தி மயக்கத்திற்குப் பரிகாரம் யாது?

முதலில் வாந்தி எடுக்க மருந்து கொடுக்கவேண்டும். பேதியாகவும் மருந்து கொடுக்கலாம். சிரசில்

குளிர்ந்த ஜலம் விட்டுக் கை, கால்களுக்கு வெந்நீர்ப் பை ஒற்றடம் கொடுக்கலாம். காப்பியும் கொடுக்கலாம். ஆனால் உறங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**11. நவாச்சாரம் உட்கொண்டதால் உண்டாகும் தீங்கு யாது? பரிகாரம் யாது?**

தீங்கு : வாயிலும் வயிற்றிலும் வேக்காடு உண்டாகும்; இரத்த வாந்தி உண்டாகும்; பேச முடியாது.

பரிகாரம் : பழச்சாறு, காடி, ஒலிவ எண்ணெய் இவற்றுள் ஏதாவது ஒன்றைக் கொடுக்கலாம்.

**12. வாந்தி உப்பு உண்டாக்கும் தீங்கு யாது? பரிகாரம் யாது?**

தீங்கு : வாந்தியுண்டாகும்; தொண்டைகட்டும்; பேதியாகும்; தாகம், மயக்கம் உண்டாகும்; கை கால் இசிவு ஏற்படும்; உடலில் கொப்புளங்கள் உண்டாகும்.

பரிகாரம் : காப்பி, ஒலிவ எண்ணெய், பால் இவற்றைத் தரலாம்.

**13. சிறு பாம்பு கடிக்குச்செய்யும் பரிகாரம் யாது?**

சிறு குறிஞ்சான் வேரை வெந்நீரில் அரைத்துக் காலை மாலை மூன்று நாள் உண்ணவேண்டும். பத்தியம் உப்பாகாது. மறுபத்தியம் மூன்று நாள். உப்பைவறுத்துப்போட்டுக்கொள்ளவேண்டும். ஏழாவது நாள்; நீராட்டவேண்டும். மருந்து சாப்பிடும்போது குப்பைமேனிச் சாற்றில் சுண்ணாம்பு கலந்து தடிப்புள்ள இடத்தில் பூசி வைக்கலாம்.